## மேனிலை ஆசிரியர் பனுவல்

# தமிழ்

வகுப்பு

XII

Higher Secondary Teacher Text
Tamil
standard XII

கேரள அரசு
கல்வித்துறை

தயாரிப்பு
**மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT), கேரளம்**
**2015**

## HandBook workshop Participants

### Members

**Alipathumma. K,** Kumuli, Idukki

**Jasmine J.,** GTHSS., Chalai, TVM.

**Dr. Karunanidhi M.,** GTHSS., Chalai, TVM.

**Singh M.B,** HSA, (Rtd), GTHSS., Chalai, TVM.

**Dr. Manickaraj K.,** Asst. Prof., University College, TVM.

**Dr. Shanthi P.,** Asst. Prof., University College, TVM.

### Experts

**Dr. Doctor Nazeemdeen,** Prof., (Rtd), Kerala University, TVM

**Dr. Gomathy Nayagam E.,** Guest Lecturer, University of Madras, Chennai.

**Dr. Kanchana,** Prof. & Head (Rtd), University of Kerala, TVM.

**Dr. Nainar M.,** Reader (Rtd), University College, TVM.

**Dr. Parasuraman, T.,** Prof. PILC, Pondicherry.

**Dr. Rajaram S.,** Prof. (Rtd), Tamil University, Thanjavur.

**Dr. Ratnasabapathy P.,** Prof. (Rtd), Chennai.

**Dr. Sethupandian,** Prof., M.K. University, Madurai.

**Dr. Veerappan P.,** Prof. (Rtd), NCERT, Mysore.

**Dr. Vijayalakshmi T.,** Asst. Prof. University of Kerala, TVM.

### Academic Co-ordinator

**Dr. Sahayadhas D.,**
Research Officer, SCERT., Thiruvananthapuram.

*Prepared by:* State Council of Educational Research & Training (SCERT)
Poojappura, Thiruvananthapuram -12, Kerala. E-mail:scertkerala@gmail.com

*Type setting by:* SCERT Computer Lab.

©
Government of Kerala
Education Department
2015

அன்பான ஆசிரியர்களே,

சமூகம் என்பது ஓர் அறிவுசார் அமைப்பு என்ற நிலையில் இக்காலகட்டத்தின் சவால்களை எதிர்கொள்ளப் பாடஏற்பாட்டை நவீனப்படுத்த வேண்டியது மிகவும் தேவை. அறிவு என்பது சமூக மாற்றத்திற்கு உட்பட்டதாகும். அறிவு மண்டலங்களில் ஏற்படும் மாற்றங்களை உட்கொண்டு காலந்தோறும் வளர்ச்சி அடையும் பாட ஏற்பாட்டினால் மட்டுமே ஒரு சமூகம் முன்னேற இயலும். மேனிலை வகுப்புகளைப் பொறுத்தவரையில் சமகால நிகழ்வுகளோடு தொடர்புடையதும், மேனிலை மாணவர்களின் பண்புகளைக் கருத்தில் கொண்டதுமான பாடஏற்பாட்டில் மாற்றம் நடந்து வருகிறது. உயர் கல்விக்கான அடிப்படை என்ற நிலையில் மேனிலைக் கல்வியை உலகத்தரம் வாய்ந்ததாக மாற்றுவதே இன்றைய கல்வி முறையின் இலட்சியம். அதற்கேற்ப, பதினொன்றாம் வகுப்பிற்கான பாடஏற்பாடும் பாடநூலும் புத்தாக்கம் பெற்றுள்ளன. அறிவைப் பெறுவது என்பதற்கு மாறாக அறிவை உருவாக்கிக் கொள்வது என்னும் கொள்கையைக் கொண்டது நமது பாடஏற்பாடு என்பதை நீங்கள் அறிவீர்கள்.

இன்றைய கற்றல்முறை செயல்பாடு அடிப்படையிலானது; செயல்முறை தொடர்புடையது; கற்றலை உறுதிப்படுத்துவது. இவற்றிற்கெல்லாம் மேலாகக் கற்றல் அடைவுகளை மாணவர் பெறுவதற்கு இன்று நாம் அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளோம். பல்வேறு மொழிக்கூறுகளை அறிதல், அவற்றைப் பயன்படுத்தும் திறன் பெறுதல், காலந்தோறும் ஏற்பட்ட இலக்கியப் போக்குகளை அறிதல் முதலானவை மேனிலை மொழிப்பாடங்களின் நோக்கங்களாகும்.

பாடஏற்பாட்டின் அடிப்படையில் இவ்வெல்லா நோக்கங்களையும் கொண்டு பாடநூல் மட்டும் சிறப்பாக அமைந்தால் போதாது; அதை மாணவருக்குக் கற்பிப்பதிலும் மிகுந்த கவனம் செலுத்தப்பட வேண்டும். இதற்கு உதவும் வகையில் இவ்வாசிரியர் பனுவல் உருவாக்கப்பட்டுள்ளது. இப்பனுவல் உருவாக்குவதற்கு உறுதுணையாக இருந்த ஆசிரியப் பெருமக்களின் பணி பாராட்டுவதற்குரியது. மேனிலை ஆசிரியருக்கு இது ஒரு கைவிளக்காக உதவும் என நம்புகிறேன்.

வாழ்த்துகளுடன்...

**முனைவர் எஸ். இரவீந்திரன் நாயர்**

**இயக்குநர்**

எஸ்.சி.இ.ஆர்.டி.

# உள்ளடக்கம்

1. பாடஏற்பாடு - பொது அணுகுமுறை ............................ 5

2. மதிப்பீட்டு அணுகுமுறை ............................ 22

அலகு

1. வயலும் வாழ்வும் ............................ 35

2. கலையும் பண்பாடும் ............................ 58

3. அறிவியல் தமிழ் ............................ 76

4. என்றும் நலமுடன் ............................ 98

5. சமூக சீர்திருத்தம் ............................ 115

பின்னிணைப்பு ............................ 132

# மேனிலை வகுப்புப் பாடஏற்பாடு
# பொது அணுகுமுறை 2013

## முகவுரை

மறுமலர்ச்சிப் பரம்பரையும் இலவசமும் அனைவருக்கும் சார்ந்ததுமான பொதுக் கல்வியை வழிக் கேரளம் ஓர் அறிவுசார் சமூகமாக மாறியுள்ளது. பாடத்திட்டச் சீரமைப்பின் வழியாகவும் படைப்பு சார்ந்த ஈடுபாட்டின் வழியாகவும் சிறந்த கல்வி நம்மால் அடைய முடிந்தது. இத்தகைய ஈடுபாடுகள் கேரளத்தின் கல்வி நிலையை தேசிய அளவில் புகழுடையதாக மாற்றியது.

20 ஆம் நூற்றாண்டின் முதல் பத்து ஆண்டுகளிலேயே சமூகத்தில் உள்ள எல்லாக் குழந்தைகளையும் பள்ளிக்கூடத்திற்கு வரவழைக்க நம்மால் முடிந்தது. அனைவருக்குமான இலவசக் கல்விக்குத் தேவையான முயற்சிகளும் எல்லா நிலைகளிலும் நடந்துள்ளன. அரசின் இடையீடு, மிஷனரிகளின் செயல்கள், சமூக மாற்ற அமைப்புகள் முதலானவை பொதுக் கல்வியின் முன்னேற்றத்திற்குக் காரணமாக அமைந்துள்ளன. சுதந்திரத்திற்குப் பின் வந்த டாக்டர் இராதாகிருஷ்ணன் குழு அறிக்கை முதல் 2005-இல் தேசியப் பாடத்திட்டச் சட்ட அமைப்பு வரையிலான தேசிய அறிக்கைகளும் அணுகுமுறைகளும் கேரளத்தின் பாட ஏற்பாடு மாற்றங்களுக்கு வழிகோலின.

டாக்டர் இலக்ஷ்மணசாமி முதலியார் தலைமை வகித்த உயர்நிலைக் கல்விக் குழு உயர்நிலைக் கல்வியின் முக்கியத்துவத்தைக் குறிப்பிட்டது. டாக்டர் டி.எஸ்.கோத்தாரி தலைமையிலான குழு சமர்ப்பித்த கல்வியும் தேசிய வளர்ச்சியும் என்ற அறிக்கை ஆரம்பக் கல்வி முதல் உயர்நிலைக் கல்வி வரையிலான நிலைகளில் உட்படுத்தப்பட்டது. இக் குழு முதன்முதலாக 10 + 2 + 3 என்ற நிலையை அறிமுகப் படுத்தியது. 1986 இல் தேசியக் கல்வித் திட்டம் இதை அங்கீகரித்தது. இதன் அடிப்படையில்தான் கேரளத்தில் மேனிலைக் கல்வி நடைமுறைக்கு வந்தது. ஆசிரியர் மைய முறையிலிருந்து முற்றிலுமாக வேறுபட்ட குழந்தை மையச் செயல்முறையிலான பாட ஏற்பாட்டுச் சீர்திருத்தம் 1990-இல் அமைக்கப்பட்டது.

2005-இல் தேசிய பாடஏற்பாடு சட்டக்கூடு (National Curriculum Framework-2005) இந்திய கல்வியில் அனேக மாற்றங்களுக்குத் தொடக்கமிட்டது. தொடர்ந்து NCF-2005 இன் அடிப்படையில் பல பாடங்களில் NCEFT-பாடநூல்கள் தயாரித்தார்கள். கேரளத்தில் NCF-2007 உருவாக்கியதோடு பாடஏற்பாடு சீர்திருத்தம் உயர்நிலை வரை கொண்டு வரப்பட்டது. 2009 இல் கல்வி உரிமைச் சட்டமும் மேனிலையோடு தொடர்புடைய P.O.J.லப்பா குழு அறிக்கையும் சீர்திருத்தத்திற்காக அரசு நியமித்த டாக்டர். P.K.அப்துல் அசீஸ் குழு அறிக்கையும் பாட ஏற்பாடு சீர்திருத்தம் தேவையானதென்று குறிப்பிடுகின்றன.

கேரளக் கல்வித்துறை வரலாற்றில் சிறப்பானதொரு காலகட்டமாகும் மேனிலையின் தொடக்கம். P.D.C-யை உயர்கல்வித் துறையில் இருந்து வேறுபடுத்திப் பொதுக் கல்வியின் பகுதியாக இணைத்ததோடு கல்வி பரந்துபட்டது. கேரளத்தில் 1990 ஆம் ஆண்டு மேனிலை இயக்குநர் (H.S.E.D) பணியிடம் உருவாக்கப்பட்டது 31 அரசு உயர்நிலைப் பள்ளிகள் மேனிலையாக உயர்த்தப்பட்டதோடு மேனிலை வகுப்புகள் தொடங்கப்பட்டன. கோழிக்கோடு பல்கலைக்கழகத்தின் P.D.C பாட அமைப்பின் மொழிப் பாடநூல்களும் NCERT-யின் பிற பாடநூல்களையும் பின்பற்றிக் கேரளத்தில் மேனிலைப்பாட ஏற்பாடு தொடங்கப்பட்டது.

1990-களில் கற்றலிலும் கற்பித்தலிலும் முழுமையான மாற்றம் ஏற்படுத்திக்கொண்டு புதிய பாட ஏற்பாடு ஆரம்பநிலையில் கொண்டுவரப்பட்டது. இதற்கேற்ப செயல்பாட்டு முறையும், செயல்முறைக்கு உட்பட்ட குழந்தை மையக் கல்வியும் தொடர் மதிப்பீட்டு முறையும் தர நிர்ணய முறையும் நடைமுறைப்படுத்தப்பட்டன. தொடர்ந்து இம்முறை மேனிலையிலும் கொண்டுவரப்பட்டது. ஆனால், முழுமையான பாடஏற்பாட்டு முறை மேனிலைகளில் உட்படுத்தப்படவில்லை. SCERT-யின் தலைமையில் சில பாடங்களுக்குப் பாடநூல்களும் எல்லாப் பாடங்களுக்கும் ஆசிரியர் கையேடும் வினாத்தொகுப்பும் வெளியிடப்பட்டன.

2007-இல் நடைமுறைக்கு வந்த ஒற்றைச் சாளர முறை மேனிலைக்கல்வி நுழைவினை எளிமைப்படுத்தியது. இந்த ஆய்வின் பலனாகத் தேர்வுமுறை, பாடநூல் தேவை, ஊக்கத்தொகை, இணையவழிப் பரிமாற்றம் (Online Transfer) முதலானவற்றின் செயல்முறை மேனிலை அமைப்பைச் சிறப்புடையதாக்கியது.

பல்வேறு வகையிலானதும் புதுமையானதுமான பாடங்கள் தேர்வு செய்வதற்கான வாய்ப்புகளைக் கேரளத்திலுள்ள மேனிலைக் கல்வித்திட்டம் தருகிறது. தேசிய பாடத்திட்டச் சட்டக்கூடு 2005 முன்வைப்பதைவிட அதிகமான சிறப்புப் பாடங்களைக் கொண்டு அமைவது கேரளப் பாட ஏற்பாடு என்பது பெருமையுடையதாகும். முதல் மொழிப் பாடமாக ஆங்கிலமும் இரண்டாம் மொழிப் பாடமாக 12-மொழிகளில் ஏதாவது ஒரு பாடமும் தேர்வு செய்வதற்கான வாய்ப்பு

மாணவனுக்குக் கிடைக்கின்றது. அறிவியலில் 10உம் வணிகவியலில் 4உம் மானுடவியலில் 32உம் உட்பட்ட 46 பிரிவுகள் உள்ளன. கலைப்பாடத்திற்குத் தனிப் பள்ளிகள் செயல்பட்டுவருகிறது.

மேனிலைத் துறையில் சிறப்பானதொரு கல்வி தருவதற்கு அனைத்து ஆசிரியர்களுக்கும் சீர்திருத்தப் பயிற்சி அரசு நடைமுறையில் கொண்டு வந்துள்ளது. கற்றல் கற்பித்தல் முறையில் இப்பொழுது உள்ள பிரச்சினைகள் கலந்துரையாடல் செய்வதற்கும் பாடச் செயல்கள் உருவாவதற்கும் ஆசிரியர் கூட்டங்கள் உதவுகின்றன.

### பாட ஏற்பாட்டுச் சீரமைப்பின் முக்கியத்துவம்

அறிவு என்பது அடிக்கடி ஏற்படும் மாற்றத்திற்கு உட்படும் பகுதியாகும். அறிவு மண்டலத்தில் ஏற்படுகின்ற மாற்றங்களை உட்கொண்டும் முக்கிய பகுதிகளை உட்கொண்டும் காலந்தோறும் வளர்ச்சியடையும் பாடஏற்பாட்டிற்கு முன்னேற இயலும். இந்த மாற்றமே கேரளப் பள்ளிக்கூடப் பாடஏற்பாட்டைப் பிற இந்திய மாநிலங்களிலிருந்து வேறுபடுத்துகிறது.

மேல்நிலை வகுப்புகளில் செயல்பாட்டு அடிப்படையிலான கற்றல் முறை தற்சமயம் உள்ளது என்றாலும் ஒன்றிணைந்த பாடஏற்பாட்டு மாற்றம் நடைபெறவில்லை. சமகால நிகழ்வுகளோடு தொடர்புடையதும் மேல்நிலை மாணவர்களின் பண்புகளை கருத்தில் கொண்டதுமான பாடஏற்பாட்டு மாற்றம் இப்போது நடந்து வருகிறது. உயர்கல்விக்கான அடிப்படை என்ற நிலையில் மேல்நிலைக் கல்வியை உலகத் தரம் வாய்ந்ததாக மாற்றுவதே இக்கல்வி முறையின் இலட்சியமாகும். உலகளாவிய தரம் என்பது ஏதேனும் ஒரு நாட்டிலுள்ள கல்வியின் தரமன்று. மேல்நிலைக் கல்வியை நிறைவு செய்யும் மாணவனுக்கு உலகத்தின் எவ்விடத்திலும் வாழ்க்கை அமைத்துக் கொள்வதற்கான திறன் கிடைக்க வேண்டும். அன்றாட வாழ் வியல் தேவைகளுக்கும் வாழ்வியல் முறைகளுக்குமான திறன்களைப் பெறுவதற்கான அறிவு, அனுபவம் இவற்றின் மொத்தத் தொகையே பாட ஏற்பாடாகும். உலக அளவில் அறிமுகப்படுத்திய சிறந்த கற்றல், கற்பித்தல் மாதிரிகள் நமது மாணவர் களுக்கு கிடைக்கச் செய்தல் வேண் டும். அதற்கான முயற்சி என்ற நிலை யில் ஒருங்கிணைந்த பாட ஏற்பாட்டு மாற்றமே நடைமுறைப்படுத்தப்படு கிறது. பாட ஏற்பாடு கால கட்டத் திற்கு ஏற்ப நவீனப்படுத்தி நடைமுறைப்படுத்த வேண்டும் என்பது பாடஏற்பாட்டு மாற்றத்தோடு தொடர்புடைய அரசு ஏற்படுத்திய சிறப்புக் குழுவால் பரிந் துரைக்கப்பட்டுள்ளது. மேலும் கல்வி உரிமைச் சட்டத்தில் உள்ள பாடஏற்பாடு, மதிப்பீடு என்பவற்றோடு தொடர்புடைய சட்டங்கள் பாடஏற்பாட்டு சீரமைப்பில் உட்படுத்த வேண்டியது மிக அவசியமாகும்.

**கல்வி உரிமைச் சட்டம் – 2009**
**பிரிவு – 29 (அத்தியாயம் – 5)**
**பாட ஏற்பாடும் மதிப்பீட்டுச் செயல்முறை வரிசையும்**

1. ஆரம்பக் கல்விக்கான பாட ஏற்பாடும் மதிப்பீட்டுச் செயல்முறை வரிசையும் அரசு அறிக்கை மூலம் குறிப்பிடும் ஒரு கல்வி அமைப்பினால் செயல்படுத்தப்பட வேண்டும்.
2. கல்வி அதிகார நிலை 1 ஆம் துணைப் பிரிவின் படி பாடத்திட்டத்தையும் மதிப்பீட்டையும் செயல்முறை வரிசையையும் செயல்படுத்தும்போது கீழே வருவனவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

(a) அரசியலமைப்பில் வலியுறுத்தப்படுகின்ற மதிப்புகளுக்குப் பொருத்தமாக அமைதல்.
(b) மாணவர்களின் பன்முக வளர்ச்சி.
(c) மாணவர்களின் அறிவையும் திறனையும் புலமையையும் படிப்படியாக வளரச் செய்தல்.
(d) உடல்-உளத் திறமைகளின் முழு வளர்ச்சி.
(e) மாணவ மாணவிகளுக்கு நெருக்கமானதும் குழந்தை மைய மானதுமான செயல்பாடுகள், கண்டுபிடிப்புகள், ஆராய்ச்சிகள் இவற்றின் மூலம் கற்றல்.
(f) கற்பிக்கும் மொழி மாணவரின் தாய்மொழியில் அமையவேண்டும்.
(g) பயம், மனதைத் தாக்கும் சூழல், ஆதங்கம் போன்றவற்றிலிருந்து மாணவர்களை விடுவித்து, சுதந்திரமாகக் கருத்தை வெளியிட மாணவர்களுக்கு உதவ வேண்டும்.
(h) அறிவைப் பெறுவதற்கும் அதைப் பயன்படுத்துவதற்குமான குழந்தையின் திறனை முழுமையாகவும் தொடர்ந்தும் மதிப்பிடுதல்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகளை உறுதி செய்யும் வகையில் பாட ஏற்பாடு அமைய வேண்டும். இந்தப் பின்புலங்களின் அடிப்படையில்தான் பாடஏற்பாட்டின் சீரமைப்பை நோக்க வேண்டும்.

### கேரளப் பள்ளிப் பாட ஏற்பாடு – (2013) – சிறப்பம்சங்கள்

- மாணவர்களை மையமாகக் கொண்ட இப்பாட ஏற்பாடு செயல்திறனும் சிந்தனை ஆற்றலும் மதிப்பும் / தகுதியும் கொண்டதாகும்.
- கொள்கைப்பிடிப்பிலும், சிந்தனைத் திறனிலும் சமூகத்தின் உணர்ச்சிப் பாங்கினடிப்படையில் கற்போன் பெறவேண்டிய கற்றல் அறிவுக்கு முக்கியத்துவம் அளிக்கிறது.
- தகுதியிலும் மனோநிலையிலும் கற்போன் அடைய வேண்டிய திறன்களுக்கு முக்கியத்துவம் அளிக்கிறது
- அறிவு உருவாக்கம் எனும் கொள்கையைக் கொண்ட பாடத்திட்டம்

- பகர்தல் செயல்பாடுகளில் வேறுபட்ட பொருத்தமான கற்றல் வழிமுறைகளைக் கடைபிடிக்க ஆசிரியருக்கு முழு உரிமை
- கற்றல் பயன், கருத்தாழம், மாணாக்கர்களின் கற்றல் தரம் போன்றவை கண்டறிந்து, பல்வகை கற்றல் – கற்பித்தல் அணுகுமுறைகளைக் கடைபிடித்தற்கான உத்தி, கண்டுபிடித்தல், கருத்து உருவாக்க முறை (concept attainment model), தூண்டிச் சிந்திக்கச் செய்தல் (Inductive method), சிந்தனையை சிந்திக்கச் செய்யும் திறன் பெறல் (Meta cognition), கூட்டுறவுக்கல்வி (Co-operative learning) இணைந்து கற்றல் (Collaborative learning), பிரதிபலிப்புச் சிந்தனை பெறல் (Reflelective learning) முதலியவற்றிற்குத் தனிநபராகவும் குழுக்களாகவும் வாய்ப்பு அளிப்பதில் கவனம் செலுத்தப்படுகிறது.
- அனைவருக்கும் இலவசமும் கட்டாயமுமான கல்வி கிடைக்க வேண்டியது போலவே மாணவர்களின் கற்றல் பயன் உறுதி செய்யப்படுகிறது.

> ஐந்தாண்டுகளுக்கு மேலாக நடைமுறையில் உள்ள பாடஏற்பாடும் பாடத் திட்டமும், பாடநூல்களும் உடனடியாக SCERT-இன் தலைமையில் சீரமைக்க வேண்டும்.
> Prof. P.O.J. Labba Committee

> ஓர் அறிவுசார் சமூகம் என்ற நிலையில் காலகட்டத்தின் சவால்களை எதிர் கொள்ளப் பாடஏற்பாட்டை அடிப் படையில் மறுபரிசீலனை செய்ய வேண்டியதும் நவீனப்படுத்த வேண்டி யதும் அவசியமாகும்.
> Dr. P.K.Abdul Azees Committee

- தொடக்கக் கல்வி முதல் மேல் நிலைப் பள்ளிக் கல்வி வரை கருத்தில் கொண்ட பாடஏற்பாடு.
- தகவல் தொழில் நுட்பம் (ICT) தனிப் பாடமன்றிப் பாடங்களோடு தொடர்புபடுத்திக் கருத்துப்பரிமாற்றம் மேம்படுவதற்கான ஓர் அம்சமாகப் பயன்படுத்த வேண்டும்.
- மாற்றுத்திறனாளிகளான மாணவர்களுக்குப் பொருத்தமானதும் கற்றல் அணுகுமுறையைக் கடைபிடித்து மதிப்பீடு உருவாக்கப்படுகிறது
- கற்றலின் அடிப்படையிலான முழுமையான நிரந்தரத் தொடர் மதிப்பீடு (CCE) உறுதி செய்யப்படுகிறது.
- ஆரோக்கிய – விளையாட்டுக் கல்வி, கலை, கைவினை கற்றல் (work experience) போன்றவை கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது
- மேல்நிலைப் பள்ளித் தலத்தில் காலகட்டத்திற்குப் பொருத்தமான பாடநூல்கள் உருவாக்கப்படுகின்றன.
- கல்வி உரிமைச் சட்டத்தினடிப்படையில் உரிமையிலூன்றிய கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது
- ஆசிரியர்கள் ஒரு இணைப் பாதுகாவலன் எனும் மனநிலைக்கு உயர்ந்து, மாணாக்கர்களுக்குப் பள்ளியிலும், வகுப்பறையிலும் பாதுகாவலரும், நிழல் தருவோருமாக மாறிட வாய்ப்பளிப்பதே இப்பாட ஏற்பாடு.
- ஆசிரியர் கடைபிடிக்கவேண்டிய கோட்பாட்டிற்கு (Code of Professional ethics for School Teachers) உறுதுணை செய்கிறது
- புதுக்காலகட்டத்தின் சோதனைகளைச் சாதனையாக்குவதில் கற்றல் நுணுக்கங்கள் பெறப்படுகின்றன.
- மனிதாபிமானம் கொண்ட தலைமுறையை உருவாக்குவதில் பெரும்பங்கு வகுக்கின்றன.
- நடுநிலையும், சமத்துவமும் உறுதி செய்யப்படுகின்றன.
- இயல்பான கற்றலை உறுதிப்படுத்த மாணவர்களின் உடல், மன அளவிலும் செயல்பாட்டு முறையிலும் பன்முக வளர்ச்சியை இலக்காகக் கொண்டு அறிவு, எண்ணம், செயல் இவற்றிற்கு ஏற்ற பாடஏற்பாடு (Curriculum for the harmony of Head, Heart and Hand) அமைய வேண்டும்.

### பாட ஏற்பாட்டு அணுகுமுறை

கல்வி தொடர்பான உளவியல் மற்றும் தத்துவக் கோட்பாடுகளின் புதிய சிந்தனைகளை உள்வாங்கி நமது பாடஏற்பாடு மேம்படுத்தப்பட்டுள்ளது. தேசிய பாட ஏற்பாட்டுச் சட்டம் (NCF) 2005 முன்வைத்துள்ள அறிவு உருவாக்கக் கொள்கையே கேரளப் பள்ளிப் பாடஏற்பாடு 2013க்கும் அடிப்படையாக உள்ளது. அறிவு உருவாக்கக் கொள்கைப்படி கற்றல் என்பது அறிவின் உருவாக்கமாகும்.

ஐம்புலன்களின் வாயிலாகச் சுற்றுப்புறத்திலிருந்து படிப்பதற்கான பிறவித் திறன்களுடன்தான் ஒரு குழந்தை பிறக்கின்றது. உலகத்தைப் புதிய முறையில் காண்பதற்கும் புரிந்துகொள்வதற்கும் ஈடுபடுவதற்கும் மதிப்பீடு செய்வதற்குமான வாய்ப்புகள் பள்ளிக்கூடத்தில் நடைபெறும் முறைசார்ந்த கல்வியின் வழியாகக் குழந்தைக்குக் கிடைக்கின்றது. பாட ஏற்பாட்டுப் பரிமாற்ற அணுகுமுறையின் சிறப்புகள் என்னென்னவாக இருக்க வேண்டும்?

- செயல்பாடு அடிப்படையிலானது
- செயல்முறை தொடர்புடையது
- கல்வியை உறுதிப்படுத்துவது
- கற்றல் அடைவுகளைப் பெறுவதற்குப் போதுமானது
- சுற்றுச்சூழலுடன் இணங்கியது
- வளர்ச்சித் துறைகளைக் கருத்தில் கொள்வது

- கற்போரின் இயல்புக்கு ஏற்றது
- கற்றலுடன் மதிப்பீடும் ஒருங்கிணைந்து செல்வது

அறிவு உருவாக்கக் கொள்கையின் அடிப்படையிலான கற்றல் முறையே பாட ஏற்பாட்டிற்கு ஆதாரமானது. கற்போரின் இயல்பான அறிவையும் கருத்துச் சூழலையும் கருத்தில்கொண்டு, முறையான கற்றல் செயல்பாடுகளைத் திட்டமிடுவதன் வாயிலாகச் சுயமான அறிவை உருவாக்கமுடியும் என்பது இவ் வணுகுமுறையின் தனித்தன்மையாகும்.

**கற்றல் அனுபவங்கள்**

வேறுபட்ட வாழ்க்கைச் சூழல்களிலிருந்து வருகின்ற மாணவர்கள் ஏற்கனவே பெற்றுள்ள அறிவு, திறன், ஆர்வம் என்பன வேறுபட்டவை. இவ் வேறுபாட்டை உள்வாங்கிக் கொண்டு, தனிமனித வேறுபாடுகளையும் பன்முக அறிவையும் கருத்தில்கொண்டு கற்றல் அனுபவங்களை ஏற்படுத்துவது என்பது முக்கியமானது.

**கல்விச் சூழல்**

மாணவனின் ஆர்வத்தையும் வளர்ச்சியையும் கருத்தில்கொண்டு அவர்கள் வித்தியாசமான கற்றல் செயல்பாடுகளில் ஈடுபடுவதற்கு இயல்கின்ற முறையில் வகுப்பறைகளை ஒழுங்குபடுத்த வேண்டிய செயல்பாடுகள் மாணவ, மாணவிகளை மையமாகக் கொண்டு அமைய வேண்டும். அதற்கு உதவுகின்ற ஒரு கல்விச் சூழலைத்தான் உருவமைக்க வேண்டும். கல்விச் சூழலில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியையும் மேம்பாட்டையும் கருத்தில் கொண்டு, மாணவர்களை மையமாகக் கொண்டதும் செயல்பாடுகள் அடிப்படையிலானதும் சூழலுக்குப் பொருத்தமானதுமான கற்றல் உத்திகளை மேற்கொள்வதற்கான சுதந்திரம் ஆசிரியர்களுக்கு உரியது.

**கற்றல் செயல்முறை**

- ஒவ்வொரு மாணவனும் அவனது முன்அனுபவங்களுடன் தொடர்புபடுத்தியே அறிவை உருவாக்குகின்றான். (Knowledge construction)
- தனிமனித நிலையிலும் சரியான சமூக ஈடுபாட்டின் வழியாகவும் அறிவு உருவாக்கம் நடைபெறுகின்றது.
- வேறுபட்ட கற்றல் முறைகள் (Learning styles), கற்றல் வேகம் (Learning pace) ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு ஐம்புல அனுபவங்களின் (Multi sensory experiences) வழியாகக் கற்பவை கற்றலைப் பயன்மிக்கதாக்குகின்றன.
- சேர்ந்து கற்றல் மற்றும் கூட்டுறவு அடிப்படையிலான கற்றல் சூழ்நிலைகள் வழியாகவும் கற்றல் மேலும் பயனுள்ளதாகின்றது.
- கற்றல் கருவிகள் (Learning materials) ஆர்வமூட்டுபவையாகவும் பயனுள்ளவை யாகவும் இருக்க வேண்டும்.
- கற்றல் அனுபவங்களைச் சுழற்சி (Spiralling) முறையில் வெளிப்படுத்துவதன் மூலமும் கற்றல் சிறப்புடையதாகின்றது.
- கற்றல் செயல்பாடுகளுக்குப் பொருத்தமான நெகிழ்ந்த மனநிலை (Flexibility) உள்வாங்கும் திறன் ஆகியவற்றை உறுதிப்படுத்துவதன் வாயிலாக வேறுபட்ட கற்றல் தேவையுள்ளவர்களையும் ஆர்வமுள்ளவர்களையும் கண்டறியலாம்.
- கற்றல் அடைவுகளை (Learning outcome) உறுதிப்படுத்தும் கற்றல் அனுபவங்கள் ஒவ்வொரு மாணவனுக்கும் கிடைக்க வேண்டும்.
- கற்றலும் மதிப்பீடும் இணைந்து நடக்க வேண்டும்.
- உள்ளடக்கம் (content), மாணவனின் கற்றல் தேவைகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு பொருத்தமான கற்றல் முறைகளையும் உத்திகளையும் பயன்படுத்தும்போது எல்லோருக்கும் குறிப்பிட்ட கற்றல் அடைவுகளைப் (Learning outcome) பெற முடியும்.
- ஒவ்வொரு மாணவனுடையவும் ஒருங்கிணைந்த வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டே கற்றல் செயல்முறைகளைத் தீர்மானிக்கவேண்டும்.

**கற்றல் அடைவுகள்**

கேரளப் பள்ளிப் பாட ஏற்பாடு 2013இன் ஒரு பகுதியாக ஆர்.டி.இ. முறைப்படி கற்றல் அடைவுகள் என்னும் கருத்து அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. கற்பித்தல், கற்றல், மதிப்பீடு ஆகியவற்றைத் துல்லியமாகவும் பயன்பாட்டு நிலையிலும் திட்டமிடக் கற்றல் அடைவுகள் தொடர்பான அறிவு இன்றியமையாதது. பாட ஏற்பாட்டை உருவாக்கும்போது பள்ளிக் கல்வியின் வெவ்வேறு கட்டங்களில் மாணவர்கள் அடையவேண்டிய இலக்குகளாக நாம் கருதுபவைதாம் கற்றல் அடைவுகள், ஒரு குறிப்பிட்ட பாடத்தில் மாணவ மாணவிகள் அடையவேண்டிய அறிவு, திறன், ஆர்வம், மனநிலை, ஈடுபாடு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட நுண்மையான கருத்துகள்தாம் கற்றல் அடைவுகள். இவற்றுள் சில குறுகிய காலஅளவில் அடையக் கூடியனவும் வேறுசில நீண்ட காலஅளவில் அடையக் கூடியனவுமாகும். இவ்வாறாக மாணவ மாணவிகளிடம் உண்டாக வேண்டிய மாற்றங்களை முன்னராகவே நிச்சயிக்க நம்மால் இயலும். பள்ளிக் கல்வியின் வெவ்வேறு கட்டங்களில் மாணவர்கள் பெறவேண்டிய அறிவுகளும் எண்ணங்களும் திறன்களும்தாம் கற்றல் அடைவுகள். அலகுநிலைக் கற்றல் அடைவுகளின் வழியாக ஆண்டு இறுதியிலும் பள்ளிக்கட்டத்தின் இறுதியிலும் பெறுகின்ற கற்றல் அடைவுகளாக இவை வளர்ச்சி பெறவேண்டும்.

உற்றுநோக்கல் வாய்ப்பும் அளவிட முடிகின்றதுமான செயல்பாடுகளின் அடிப்படையில் மட்டுமே கற்றல் அடைவுகளைத் தேர்வு செய்ய வேண்டும். ஒவ்வொரு அலகிற்கும் வகுப்பிற்கும் மற்றும் கட்டத்திற்கும் இறுதியில் மாணவர்கள் பெறவேண்டிய அறிவு, திறன்கள், மதிப்பீடுகள், மனநிலைகள் ஆகியவற்றைப் பெற்றுள்ளார்களா என்பதை மதிப்பிடக் கற்றல் அடைவுகளின் பகுப்பாய்வால் இயலும். அதாவது கற்றல் அடைவுகளை அடிப்படையாகக் கொண்டு துல்லியமாகவும் தெளிவாகவும் மதிப்பீட்டுச் செயல்பாடுகளைத் திட்டமிட முடியும்.

கற்றல் அடைவுகள் எளிமையும் தெளிவும் அறிவுப்பூர்வமானவையாகவும் இருத்தல் வேண்டும். ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் குழப்பத்தை ஏற்படுத்தாத வண்ணம் கற்றல் அடைவுகளைக் குறிப்பிடல் வேண்டும். மாணவனால் என்னென்ன செய்யமுடியும் என்பவற்றைக் குறிப்பிடுபவைதாம் கற்றல் அடைவுகள் என்ற நிலையில், மாணவனின் பார்வையிலிருந்து கற்றல் அடைவுகளைத் தேர்வு செய்ய வேண்டும். அதாவது கற்றல் அடைவுகள் மாணவர்களை மையமாகக் கொண்டு அமைதல் வேண்டும்.

கற்றல் அடைவுகள் உள்ளடக்கம், செயல்முறைகள், திறன்கள், மதிப்பீடுகள், மனநிலைகள் ஆகியவை உள்ளடங்கியவையாக இருக்கவேண்டும். மாணவ மாணவியரின் வெளியீட்டுத் திறன்கள் என்ற நிலையில் இது ஆசிரியரின் சமூகக் கடமையையும் பொறுப்பையும் உறுதிப்படுத்துகின்றது. மாணவ மாணவியரின் கற்றல்நிலை தொடர்பாகப் பெற்றோர்களுக்கு ஆர்வமும் அறிவும் இருக்க வேண்டும். கற்றல் அடைவுகளை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான கூடுதல் கற்பித்தலும் தொடர் மதிப்பீட்டுச் செயல்பாட்டின் பகுதியாக நடைமுறைப்படுத்த வேண்டும். சுருங்கக் கூறின் கற்றல் அடைவுகளை வகுப்பறைச் செயல்பாடுகளுடனும் மதிப்பீட்டு அணுகுமுறையுடனும் தொடர்புபடுத்த வேண்டும். பாட ஏற்பாட்டின் பயன்தக்கப் பரிமாற்றத்தின் வாயிலாக எல்லா மாணவ மாணவியரின் கற்றல் அடைவுகளையும் உறுதிப்படுத்த இயல வேண்டும். மேம்பட்ட கல்விக்கு இது இன்றியமையாததாகும்.

### கருத்துப் பரிமாற்றத் தொழில் நுட்பம்

அறிவின் உருவாக்கத்திலும் பரிமாற்றத்திலும் கருத்துப் பரிமாற்றத் தொழில் நுட்பம் முக்கிய பங்கு வகிக்கிறது. கருத்துச் சேகரிப்பு வழியாகவும் பகுப்பாய்வின் மூலமும் வேறுபட்ட வெளியீட்டின் வாயிலாகவும்தான் இது சாத்தியமாகிறது. மேனிலைக்கல்வியில் எந்த ஒரு பாடத்தையும் பரிமாற்றம் செய்வதற்குக் கருத்துப் பரிமாற்றத் தொழில் நுட்பத்தின் (ICT) வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம். இதன் மூலம் மாணவர்கள் ICT திறன்களைப் பெறுகின்றனர் என்பதை உறுதிப்படுத்தவும் இயலும்.

### தேவை

பாடப்புத்தகத்தினுடையவும் உள்ளடக்கப் பரிமாற்றத்தினுடையவும் எல்லைகளைத் தாண்டிச் செல்ல தகவல் தொழில்நுட்பத்தால் (ICT) இயலும். கற்றல் செயல்பாடுகளை ஏற்றெடுத்துச் சிறப்பான முறையில் நடைமுறைப் படுத்துவதற்கும் முக்கியமானதும் பொருத்தமானதுமான கருத்துச் சேகரிப்பிற்கும் உயர்ந்த நிலையிலான வெளியீட்டிற்கும் மேன்மையான உற்பத்திப் பொருட்கள் தயாராக்குவதற்கும் மாணவர்களுக்குத் தகவல் தொழில்நுட்ப ICT வாய்ப்புகள் மிகவும் பயன்படும். உண்மையில் ஊன்றி நிற்பதும் சிக்கலானதுமான செயல்பாடுகள் பல நேரங்களிலும் நடைமுறைப்படுத்த முடியாமல் ஆகும்போது 'Virtual Lab' இன் உதவியை நாடலாம். அவ்வாறாக வகுப்பறைகள் அதிநவீன (ஸ்மார்ட்) அறைகள் என்பதற்கு மேலாக சோதனைக் கூடங்களாக உயரவும் செய்யும். ஒவ்வொரு பாடத்துடனும் (Subject) தொடர்புடைய அறிஞர் பெருமக்களுடன் விவாதம் செய்வதற்கும் அதாவது பாடப்பொருளில் பல்வேறு நிலைகளைப் புரிந்துகொள்வதற்கும் Video conferencing Social Media முதலான அமைப்புகளை மாணவர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். மேலும் வாழ்க்கைச் சூழலின் வெவ்வேறு தேவைகளைப் (இணையவழி விண்ணப்பம் (Online application), தேர்வுகள், நேர்முகங்கள், பல்வேறு சேவைகள்) பெறுவதற்கும் தகவல் தொழில்நுட்பம் (ICT) பெரிதும் உறுதுணையாகும்.

### பொருத்தம் (இயைபு)

காட்சி, கேள்வி ஊடகங்கள் பயன்தக்க கற்றல் கருவிகளாகும். மாணவர்களின் படைப்புத் திறனையும் புத்தியின் பன்முகத்தன்மையையும் ஊக்குவிக்க ICT யால் இயலும். ஆர்வம் மற்றும் ஊக்கத்தின் வாயிலாகக் கற்றலில் ஈடுபாட்டை ஏற்படுத்தலாம். ஐம்புல உணர்வில் குறைபாடுகள் உடையவர்களுக்கு இவ்வாய்ப்பு மிகவும் உறுதுணையாக அமையும். கேள்வி மூலமும் காட்சி மூலமும் செய்திகளைக் கூடுதலாகத் தெரிந்துகொள்ள ICT பயன்படும். வேறுபட்ட கற்றல் அனுபவங்களை ஏற்படுத்துவதற்கும் இது மிகவும் உதவிபுரிகின்றது.

### வாய்ப்புகள்

- எண்ணியல் வடிவிலும் (Digital) அசைவு முறையிலும் பாடப்புத்தகங்கள்
- கற்றல் செயல்பாடுகளுக்குத் தேவையான கூடுதல் விபரங்களும் வெளியீடுகளும் அசைவுப்படங்களும் (Animation).
- ஒவ்வொரு பாடப்பொருளுடனும் தொடர்புடைய, உலகத்தின் எந்தப் பகுதியிலிருந்தும் கிடைக்கக் கூடிய மிகவும் புதியதும் முக்கியமானதுமான செய்திகள் கிடைக்கின்றன.
- இணைய வழித் தேர்வுகளுக்கும் (online tests) சுய மதிப்பீடுகளுக்கும் மேம்படுத்தலுக்கும் தேவையான வாய்ப்புகள்
- வினாத்தாள் மாதிரிகளும் விடைக் குறிப்புகளும்

- விக்டேர்ஸ் போன்ற தொலைக்காட்சி சேனல்களின் பயன்பாடு
- வாழ்வியல் திறன்கள், மதிப்பீடுகள், மனநிலைகள் போன்றவற்றை வளப் படுத்தவும் மன அழுத்தத்தைத் தவிர்ப்பதற்குமான ‘இன்டராக்டிவ்’ நிகழ்ச்சிகள்
- கட்டுப்பாடும் சட்டத்தின் அடிப்படையிலுமான WiFi வளாகங்கள்
- முழுமையான ஒரு கல்வி Portal உருவாக்கிக் கொண்டும் பள்ளிக்கூடத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்திக் கொண்டும் ஆசிரியர்களை வலுவடையச் செய்தும் தகவல் தொழில் நுட்பத்தின் பயன்பாட்டை அதன் உச்சத்தில் கொண்டு செல்ல வேண்டியது காலகட்டத்தின் தேவையாகும்.

**நம்பகத்தன்மை**

கருவிகளின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்த வேண்டியுள்ளது. அரசுத் துறை இணையத்தளங்கள் (சைட்டுகள்), கல்வி தொடர்பான வலைதளங்கள், போர்ட்டல்கள், புளோக்குகள் (வலைப்பூக்கள்), சமூக இணைய தளங்கள் (Social Networks) ஆகியவற்றிலிருந்து கிடைக்கும் செய்திகளின் உறைவிடங்களையும் உண்மைத் தன்மையையும் உறுதிப்படுத்திய பின்னரே அவற்றைப் பயன்படுத்த வேண்டும்.

வகுப்பறைப் பரிமாற்றத்திற்குப் பயன்படுத்துகின்ற கற்றல் கருவிகளின் பயன்பாட்டையும் உறுதிப்படுத்த வேண்டும். இத்தகைய கருவிகள், அவை செயல்படுவதற்கு உகந்த மென்பொருட்கள் (Software) ஆகியவை எளிதில் கிடைப்பனவும் பயன்படுத்துவதற்குத் தகுந்தனவும் தகவல் தொழில்நுட்பச் சட்டங்கள் (I.T) பின்பற்றுவனவாகவும் இருக்க வேண்டும்.

ICT வாய்ப்புகளைப் பயன்படுத்தும்போது மாணவனின் வயது, மனநிலை, தவறான பாதையை நோக்கிச் செல்லும் தன்மை ஆகியவற்றையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

**கலைக்கல்வி**

மனிதன் ஒரு சமூக விலங்கு என்ற நிலையில் மனித வாழ்க்கையின் முன்னோக்கிய பயணத்திற்கு இரசிப்புத் தன்மை கொண்ட அனுபவங்கள் உருவாக்குவதன் ஒரு பகுதியாகவே கலைகள் தோன்றின.

வாழ்க்கையின் பல்வேறு கட்டங்களில் ஏற்படுகின்ற அனுபவங்கள் மனித மனங்களில் உணர்ச்சிகளின் அலைகள் எழுப்பவும் அவற்றிலிருந்து இரசித்து மகிழும்படியான அனுபவங்கள் உருவாகவும் செய்கின்றன. ஆதிகாலம் தொடங்கி தோன்றிவரும் கலைவடிவங்கள் அனைத்துமே காட்சியாகவும் கேள்வியாகவும், மனித மனங்களைச் சீர்படுத்தி வாழ்க்கையில் புத்துணர்வைத் தருபவையாகவும் இருந்தன. இது கலைகளின் ஒரு தனித்தன்மை என்றே கூறலாம். ‘Literature, Music and the Arts all are necessary for the development of a student to form and integrate total personality’ என்பது கலைகள் குறித்த தாகூரின் கருத்தாகும். சமூக முன்னேற்றத்திற்காகப் பாடுபட்ட மகாத்மாக்கள் எல்லோரும் கலைகளைப் பற்றி இவ்வாறெல்லாம் குறிப்பிட்டுள்ளனர்.

- படைப்புத்திறன், உற்றுநோக்கும் ஆர்வம், போலச் செய்யும் திறன், கற்பனை ஆற்றல், பரந்துபட்ட அறிவு போன்ற கலைக்கல்வி மாணவ, மாணவிகள் வளர்ச்சியடைய இன்றியமையாததாகின்றது.
- எல்லா நிலைகளிலுமுள்ள அறிவு வளர்ச்சிக்கு ஊக்கமூட்டும் கற்றல் வாய்ப்புகள் இதன் மூலம் மாணவர்களுக்குக் கிடைக்கவும் செய்யும்.

மாணவர்கள் பெற்றுள்ள படைப்புத் திறன்களை வளரச் செய்தல், கலை மற்றும் இலக்கியம் குறித்த விரிவான ஒரு பார்வையை உருவாக்கல் ஆகியவற்றையே மேனிலைக் கலைக் கல்வி நோக்கமாகக் கொண்டுள்ளது. கூடவே கலை, இலக்கியத் துறைகளில் மேற்படிப்புக்கும் ஆராய்ச்சிக்குமான ஆர்வத்தையும் ஊக்கப்படுத்தவேண்டும். உற்றுநோக்கும் ஆற்றல், ரசிப்புத் தன்மை, போலச் செய்யும் திறன் போன்றவற்றை மாணவர்களிடையே வளர்த்து எடுக்கக் கலைக் கல்வி மிகவும் தேவையாகின்றது. வித்தியாசமான சிந்தனைகள், வேறுபட்ட கருத்தாடல்கள் போன்றவற்றை உருவமைக்கவும் சமூக ஈடுபாட்டை உறுதிப்படுத்தவும் கற்றலைக் கூடுதல் பயனுடையதாக்கவும் கலைக்கல்வி உறுதுணையாகின்றது. மாணவர்களைச் செயல்திறன் மிக்கவர்களாக்கவும் உற்சாகமும் ஊக்கமும் உடையவர்களாக்கவும் சரியான திசையில் அவர்களை வழிநடத்திச் செல்லவும் கலைகள் தொடர்பான செயல்பாடுகள் உதவுகின்றன.

**உடல் நலம் – விளையாட்டுக் கல்வி**

2001 உலக சுகாதார அமைப்பின் (W.H.O) அறிக்கையின்படி இந்தியாவில் பெரும்பான்மையான இளைஞர்களும் வாழ்க்கைமுறை நோய்களுக்கு ஆளாகியுள்ளனர். கேரள அரசின் கணக்குப்படி 2008-09 கல்வியாண்டில் 16,28943 மாணவர்களுக்கு இடையே நிகழ்த்திய விளையாட்டுத்திறன் ஆய்வில் 20% த்திற்குக் கீழ் உள்ளவர்கள் மட்டுமே தகுதி உடையவர்களாகக் கண்டுபிடிக்கப் பட்டனர். இவ்விரு உண்மைகளுமே வருத்தத்திற்குரிய ஒரு சமூக நிலையையே சுட்டிக்காட்டுகின்றன. உடல், உள மற்றும் ஆன்மீக பலத்தின் முழுமைத் தன்மையையே உடல்நலம் என்னும் சொற்றொடர் பொருள்படுத்துகின்றது. அதனால்தான் உடல் நலம் என்பது ஒரு தனிமனிதனின் நிலைபேற்றிற்கு இன்றியமையாததாகின்றது. சரியான முறையிலான உடல்நல – விளையாட்டுக் கல்வியைச் செயல்படுத்துவதன் வாயிலாக இத்தகைய இடையூறுகளைத் தவிர்க்க இயலும். விளையாட்டுத் திறன்களை வெளிப்படுத்தும் மாணவர்களை அறிவியல்பூர்வமான பயிற்சியின் வாயிலாகச் சிறந்த விளையாட்டு வீரர்களாக மாற்றுவதற்கான செயல்முறை மிகக்

குறைவான மாணவர்களுக்கு மட்டுமே அளிக்கவேண்டிய செயல்பாடாகும். ஆனால் பொதுச் சமூகத்தில் அனைத்து நபர்களுக்கும் அவர்களின் நிலைபேற்றிற்குத் தேவையான உடல்நலம் உறுதிப்படுத்த வேண்டும். இதன் பொருட்டு உடல்நல – விளையாட்டுக் கல்வியைத் தொடக்கக் கல்வி முதல் அறிவியல் முறையிலும் முழுமையாகவும் அளிக்கவேண்டும். அதற்குத் தேசிய பாட ஏற்பாட்டுச் சட்டகம் – 2005 உடல் நலம் – விளையாட்டுக் கல்வி தொடர்பாக முன்வைத்துள்ள தேவை அடிப்படையிலான அணுகுமுறை, ஒருங்கிணைந்த அணுகுமுறை ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.

உள்ளடக்க மண்டல அறிவுடன் வெளியீட்டுத் திறனும் உடல் ஆரோக்கியமும் மதிப்பிடப்பட வேண்டும். கேரளப் பள்ளிப் பாட ஏற்பாடு 2013 குறிப்பிடுகின்ற தொடக்கக் கல்வியில் ஆரம்பமாகும் உடல்நல – விளையாட்டுக் கல்வி மேனிலை வகுப்பை அடையும்போது முழுமை யடைகின்றது. உடல்நலம் மற்றும் விளையாட்டுக் கல்வித் துறையில் ஆற்றலும் திறனும் பெற்றிருக்கும் மாணவர்களுக்குச் சர்வதேச வாய்ப்புகளைப் பயன்படுத்தும் முறையில் கற்றல் செயல்பாடுகளைத் திட்டமிடவேண்டும். இதுவரையிலும் பெற்ற விளையாட்டுத் திறனும் பயிற்சி மேன்மையும் உள்ளடக்கம் தொடர்பான அறிவும் உடல்வளர்ச்சியுடன் வளர்கின்றன. உடல்நிலை மாற்றங்களை அறிவியல் பூர்வமாகப் புரிந்துகொள்வதற்கு உடல்நலம் மற்றும் விளையாட்டுக் கல்வி முக்கியத்துவம் அளிக்கின்றது.

**உடல்நலம் – விளையாட்டுக் கல்வியின் முக்கிய நோக்கங்கள்**

- உயிர்ப் பாதுகாப்பு செயல்பாடுகளில் சூழ்நிலைக்கு ஏற்ப ஈடுபடுவதற்கான அறிவியல்பூர்வமான திறன் அடைவது.
- போதைப் பொருட்கள் பயன்பாட்டின் பக்கவிளைவுகளைக் கண்டடைவது.
- உடலுறவு நலன் பற்றிய சரியான விழிப்புணர்வு உருவாக்குவது.
- விளையாட்டுகளில் பெற்ற திறன்களில் கூடுதல் ஆற்றல் பெறுவதற்கு அறிவியல்பூர்வமாகப் பகுப்பாய்வு நடத்துவது.
- பெரும் விளையாட்டுகளில் திறன் பெறுவது.
- சுய பாதுகாப்பில் நடைமுறைப் பயிற்சி பெறுவது.
- உடற்பயிற்சி முறைகளின் வாயிலாக சுவாச முறையிலும் இருதய – தமனி முறையிலும் ஏற்படும் மாறுதல்களைப் பற்றிய அறிவைப் பெறுவது.
- ஆக்கிரமிப்பு, கட்டுப்படுத்தப்பட்ட ஆக்கிரமிப்பு போன்றவற்றைப் புரிந்துகொள்வது.
- பாதுகாப்பும் பயன்மிக்கதுமான உடற்பயிற்சி முறைகளை மேற்கொள்வது.
- விளையாட்டு மதிப்பீடுகள் தொடர்பான அறிவைப் பெறுவது.

**செயல்முறைக் கல்வி**

கண்டறிவு, கேட்டறிவு, செய்தறிவு ஆகியவற்றின் இணைவின் வாயிலாக மாணவர்களிடையே அறிவின் உருவாக்கம் சாத்தியமாகின்றது. அனுபவம் மற்றும் தேடல் முறையிலான கற்றல் முறையே இன்று நடைமுறையில் உள்ளது. உணர்ச்சி மற்றும் அறிவுசார் மண்டலங்களின் இணைவும் வளர்ச்சியும் கைவரப் பெருவதற்குச் செயல்முறைக் கல்வி இன்றியமையாதது.

மாணவர்கள் பள்ளிக்கூடத்தின் உள்ளேயும் வெளியேயும் தீவிரமாக ஈடுபடவும் தமது சிந்தனைத் திறனைப் பயன்படுத்தித் தேடவும் பகுத்தாயவும் செய்கின்ற சூழல் உருவாகவேண்டியதுண்டு. எனவே கற்போருக்கு நம்பிக்கையும் செயல் அனுபவமும் தன்னிறைவும் பெறுகின்ற நிலையில் செயல்பாடுகள் அடிப்படையிலான பாட ஏற்பாடும் அதைப் பரிமாற்றம் செய்வதற்கு உகந்த கற்றல் செயல்பாடுகளும் நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளது.

**பணி அனுபவக் கல்வியின் முக்கிய இலக்குகள்**

- மனிதவள மேம்பாடு
- தேசிய முன்னேற்றம்
- தொழில் ஆர்வம்
- உற்பத்தித்துறையில் தன்னிறைவு
- சமத்துவ தனிமனித மேம்பாடு
- மதிப்பீடுகளும் மனநிலைகளும் வளர்த்தல்

போன்றவைகளைப் பணி அனுபவக் கல்வியின் இலக்குகளாக ஒருங்கிணைத்துக் கூறலாம்.

**உட்படுத்திய கல்வி** (Inclusive Education)

வகுப்பறையில் எல்லா மாணாக்கர்களையும் உட்படுத்திக் கொண்டும், யாரையும் புறக்கணிக்காமலும் ஒரு கற்றல் சூழலை உருவாக்க வேண்டும். நமது பள்ளிக்கூடங்களில் எல்லாப் பிரிவினருக்கும் தனிக் கவனமும், கற்றல் உதவியும் அளித்துச் சமச்சீரான தரமான கல்வி (Equitable Quality Education) உறுதி செய்யப்பட வேண்டும்.

**தனிக்கவனமும் கற்றல் உதவியும் பாதுகாப்பும் தேவைப்படுவோர் யார்?**

(அ) சமூகப் பொருளாதாரக் காரணங்களால் புறக்கணிக்கப்பட்டவர்களின் குழந்தைகள் மிகவும் வறுமையில் வாடுபவர்கள், ஆதிவாசிகள், பெண் குழந்தைகள், தாழ்த்தப்பட்ட பிரிவைச் சார்ந்தவர்கள், வெளிநாட்டிலிருந்து குடியேறியவர்கள், நிலையாகத் தங்கும் வசதியில்லாத பிரிவினர்கள் போன்ற பல்வேறு பிரச்சினைகளை அனுபவிப்பவர்கள் அனைவரும் இதில் அடங்குவர்.

இவ்வாறான குழந்தைகளின் குறைகளையும் குறைபாடுகளையும் கண்டறிந்து அவர்களை அங்கீகரித்து மதித்து நடப்பதாக நமது அணுகுமுறை இருக்க வேண்டும். பள்ளிகளில் குழுச் செயல்பாடுகள் மூலமாக இவர்களின் பிரச்சினையை ஓரளவு தீர்க்க இயலும்.

(ஆ) உடல் – உளக் குறைபாடுகளைக் கொண்ட மாணவர்கள்

உடல் – உள்ளக்குறைபாடுகள் உள்ளவர்களுக்கும், கற்றலில் சிரமம் அனுபவிக்கும் மாணவர்களிடையேயும் சிறப்புக் கவனம் (Special Educational Needs) செலுத்தப்பட வேண்டும். கேட்கும் தன்மை குறைவு, பார்வைத் திறன் குறைவு, புத்திக்குறைவு, கை மற்றும் கால் ஊனத் தன்மை, கற்றலில் பின்தங்கிய நிலை, ஆட்டிசம், செரிபிரல் பால்சி, பன்முகக் குறைபாடு, மனநிலை பாதிக்கப்பட்ட மாணவர்கள், கவனக் குறைவுள்ள மாணவர்கள் போன்றவர்களெல்லாம் இதில் உட்படுத்தப்படுவர்.

இக்குறைபாடுடையவர்களுக்காகப் பாடத்திட்டத்தின் பரிமாற்ற வேளையில் கையாளப்படவேண்டியவை எவை எவை?

- கற்றல் தேவைகள், ஆர்வம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு கற்றல் செயல்பாடுகளைத் திட்டமிடுதல்.
- கற்றல் செயல்பாடுகளில் எல்லா மாணவர்களும் பங்கேற்கும் வகையில் பாடத்திட்டம் சீரமைக்கப்படவேண்டும்.
- பல்வேறான கற்றல் வேகம், கற்றல் முறை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு ஐம்புலன்களுக்குட்பட்ட அணுகுமுறை (Multisensory Approach) நடைமுறைப் படுத்தல்.
- குறை நீக்கும் செயல்பாடுகள் (Remedial Practices), ஊக்கச் செயல்பாடுகள் (Enrichment Practices) போன்றவற்றை ஒவ்வொரு மாணவனுக்கும் தேவைக்கேற்பத் திட்டமிட்டுச் செயல்படுத்துதல்.
- பல்வேறு மதிப்பீட்டு வாய்ப்புகளை நெகிழ்வுத் (Flexibility) தன்மையுடன் செயல்படுத்தல்.
- சிறப்பு வள ஆசிரியர்கள் மற்றும் வல்லுனர்களின் உதவியை உறுதி செய்தல்.
- மாணவனின் கல்வி, பாதுகாப்பு ஆகியவற்றில் பெற்றோரின் தொடர்ச்சியான உதவியை உறுதிசெய்தல்.

மேற்கூறிய இரு பிரிவுகளிலுள்ள மாணவர்களைத் தவிர சிறப்புக் கவனமும் பாதுகாப்பும் கிடைக்க வேண்டிய மாணவர்களே தனிப்பட்ட திறனும் புத்திக் கூர்மையும் மிகுந்த மாணவர்கள் (Gifted Children). எல்லாப் பிரிவிலுள்ள மாணவர் களையும் கவனத்தில் கொண்டு இயன்றவரை பள்ளிச் செயல்பாடுகளையும் சூழல்களையும் சிறப்பாக அமைக்கவேண்டும்.

**மேன்மைகள், மனநிலைகள், கடமையுணர்வு போன்றவற்றை வளர்க்க உதவும் மண்டலங்கள்**

மாணவர்கள் மானிட மதிப்பீடுகள் பற்றியும், அரசியலமைப்பின் மேன்மைகள் பற்றியும் விழிப்புணர்வு உடையவர்களாக வளரவேண்டும். சமூக வாழ்க்கையை ஊக்குவிக்கும் மனநிலையை உருவாக்குதல், சமூகக் கடமையுணர்வை வளர்த்தல் போன்றவைகள் பாடத்திட்டத்தில் முக்கியமாக உட்படுத்த வேண்டிய பகுதிகளாகும். இவைகளை வளரச் செய்ய மேற்கூறிய கருத்து மண்டலங்களில் விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது.

**மக்களாட்சி உணர்வு**

பல்வேறு பாடங்களின் உள்ளடக்கத்தைத் தேர்வு செய்யும் போது மக்களாட்சி தொடர்பான கண்ணோட்டத்தைக் கருத்தில் கொள்ளவேண்டும். கற்றல் செயல்பாடுகளின் திட்டமிடுதலிலும், பரிமாற்றச் செயல்களிலும் மக்களாட்சி அணுகுமுறை அமையவேண்டும். மக்களாட்சி முறையிலான வகுப்பு, பள்ளி (மக்களாட்சி அரங்குகள்), மக்களாட்சி வாழ்க்கை அணுகுமுறை போன்றவை வழியாக மக்களாட்சி உணர்வு உருவாக்குதல் என்பது பாடத்திட்டத்தின் இலக்காகும்.

**அரசியலமைப்பின் மேன்மைகள்**

நமது அரசியலமைப்பு கூறும் மேன்மைகளும் இலக்குகளும் பாடத்திட்டத்தில் பிரதிபலிக்க வேண்டும். அரசியலமைப்பு மேன்மைகளை மாணவர்கள் அடைவதற்கு ஏற்ப உள்ளடக்கத்தையும் பாட ஏற்பாட்டுப் பரிமாற்றச் செயல்பாடுகளையும் தேர்வு செய்ய வேண்டும்.

**மதச் சார்பற்ற மனநிலை**

மதச்சார்பற்ற மனநிலையை வளர்க்க உதவக் கூடிய பாட மண்டலங்களை உள்ளடக்கத்தில் சேர்ப்பதுடன், அதற்கு உதவும் வகையிலான பரிமாற்ற முறையைக் கையாளவும் வேண்டும்.

**பொறுமைத் தன்மை**

கருத்து வேறுபாடு கொண்டவர்களோடும் சகிப்புத்தன்மை காட்ட வேண்டும் என்ற அடிப்படைக் கொள்கையைப் பாடத்திட்ட இலக்காகக் கொள்ளவேண்டும்.

**படைப்பாக்கச் சிந்தனைகள்**

மாணவ மாணவிகளிடையே படைப்பாக்கச் சிந்தனைகளையும் தேடல் ஆர்வத்தையும் வளர்க்க வேண்டியுள்ளது. பாட ஏற்பாட்டின் உள்ளடக்கத்திலும் கற்றல் உத்திகளிலும் படைப்பாக்கம் தொடர்பான தேடல்களுக்கு வாய்ப்புகள் இருக்கவேண்டும். பன்முக அறிவின் (Multiple Intelligence) பல்வேறு நிலைகளையும் கருத்தில் கொள்ளவேண்டும்.

**பண்பாடு மற்றும் பாரம்பரியத்தோடு ஆதரவு**

நமது பண்பாட்டு பாரம்பரியத்துடனும் வரலாற்றுடனும் ஆதரவு காட்டும் மனப்பாங்கை உருவாக்குவது பாட ஏற்பாட்டின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும்.

**சமத்துவம் என்னும் கருத்து**

பல்வேறு சூழ்நிலைகளிலும் கற்றல் செயல்பாடுகளிலும் துல்லியம், சமத்துவம் ஆகியவற்றை உறுதிப்படுத்துவது இன்றியமையாததாகும்.

**தலைமைப் பண்பு**

புதிய நூற்றாண்டின் சவால்களை எதிர்கொள்வதற்கும் வாய்ப்புகளைப் பயன் படுத்துவதற்கும் உதவும் தலைவர்களை உருவாக்குவதற்குத் தேவையான கற்றல் உத்திகளை மேம்படுத்த வேண்டியுள்ளது. வகுப்பறைச் செயல்பாடுகளில் எல்லா மாணவர்களுடையவும் பங்களிப்பை உறுதிப்படுத்தவும், தலைமைப் பண்புகளை வளர்ப்பதற்கான வாய்ப்புகளை உருவாக்கவும் வேண்டும்.

**வாழ்வியல் திறன் கல்வி** (Life Skill Education)

அன்றாட வாழ்வில் தனிமனிதர்களுக்கு உண்டாகும் பிரச்சினைகளையும் இடையூறுகளையும் எதிர்கொள்வதற்கு உதவும் பண்பினையும் வாழ்வியல் முறைகளையும்தாம் வாழ்வியல் திறன் என்கிறோம். சுயம் அறிதல் (Self Awareness) கருணை உள்ளம் (Empathy), கருத்துப் பரிமாற்றத்திறன் (Commucation Skill), தனிமனிதத் தொடர்பு (Interpersonal Relationship) படைப்பாக்கச் சிந்தனைகள் (Creative Thinking), விமர்சன பூர்வமான எண்ணங்கள் (Critical Thinking). தீர்மானங்கள் எடுத்தல் (Decision Making) பிரச்சினைகளுக்குத் தீர்வு காணல் (Problem Solving). உணர்ச்சிவசப்படுவதைத் தவிர்த்தல் (Coping with emotions), மன அழுத்தங் களிலிருந்து விடுபடுதல் (Coping with Stress) ஆகியவை முக்கியமான வாழ்வியல் திறன்களாகும். மாணவர்களின் வாழ்க்கைச் சூழல்களுடன் தொடர்புபடுத்தி இத்துறை சார்ந்த கூறுகளைப் பாடஏற்பாட்டில் உட்படுத்த வேண்டியுள்ளது. வாழ்க்கையை நம்பிக்கையுடன் அணுகுவதற்கும் முன்னேறுவதற்கும் இத்தகைய திறன்கள் மாணவர்களுக்குப் பெரிதும் துணைபுரியும்.

**குடிமகன் கடமை**

நாட்டிற்கு மக்களிடம் என்பது போலவே குடிமக்களுக்கு நாட்டிடமும் சில கடமைகள் நிர்வகிக்கப்பட வேண்டியுள்ளன. நாட்டின் வளர்ச்சியை மனிதவள மேம்பாட்டுடன் தொடர்புபடுத்திக் காண்கின்ற இன்றைய காலகட்டத்தில் குடிமகன் என்ற உணர்வுடைய ஒரு மக்கள் சமூகத்தை உருவாக்கி எடுப்பதே கல்வியின் முக்கிய நோக்கம். ஒரு சுதந்திர சமூக உருவாக்கத்துடன் அமைதியும் ஒழுங்கும் கடமை உணர்வும் கொண்ட ஒரு சமூகத்தின் உருவாக்கத்திற்காகக் குடிமக்களைத் தயாராக்க வேண்டியது கல்வி முறையின் ஓர் இலக்காகும்.

**முதியவர்களிடம் ஆதரவு**

முதியவர்களிடம் ஆதரவு காட்டுவது என்பது பண்பாட்டுப் பரிமாற்றத்தின் அடித்தளம் என்றே கூறலாம். எல்லாப் பண்பாடுகளுமே முதியவர்களுக்கு உரிய முன்னுரிமையும் ஆதரவும் வழங்குவதுண்டு. வாழ்க்கை அனுபவங்களின் ஒரு சேகரிப்புக் கருவூலம் என்பதுதான் முதியவர்களின் முக்கியத்துவம். அனுபவங்களின் பட்டறையில் வடிவம்கொண்ட அறிவுகள் புதிய தலைமுறைக்குப் பகிர்ந்தளிப்பதாலேயே பண்பட்ட வாழ்க்கை தொடர்ச்சியானதும் பாரம்பரியம் மிக்கதாகவும் அமைகின்றது.

இன்றைய கேரளச் சூழலில் முதியவர்களிடம் காட்டவேண்டிய ஆதரவு, வழிமாறிச் செல்கின்றதோ என்ற அச்சம் இல்லாமல் இல்லை. அன்போடும் கருணையோடும் உள்ள ஈடுபாடுகளின் வாயிலாக முதிர்ந்தவர் களிடம் ஆதரவு காட்டுவதற்கு மாணவர்களைத் தூண்டும் கூறுகள் பாட உள்ளடக்கத்தின் ஒரு பகுதி ஆகவேண்டும்.

**மனித உரிமைகள்**

மனிதர்கள் என்ற நிலையில் பெருமையுடன் வாழ்வதற்கான தனிமனிதர்களின் உரிமைகளே மனித உரிமைகள். ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை அறிவிப்பின் மூலம் சர்வதேச அங்கீகாரம் பெற்ற மனித உரிமைகளுக்குப் பாட ஏற்பாடு உருவாக்கத்தின் போதும் பரிமாற்றச் செயல்பாடுகளின் போதும் முக்கியத்துவம் அளித்தாக வேண்டும்.

**மாணவர் உரிமைகள்**

மாணவ மாணவியரின் எல்லாவிதமான உரிமைகளையும் பாதுகாக்க வேண்டியது நமது கடமையாகும்.

### சுற்றுச்சூழல் விழிப்புணர்வு

இயற்கை மற்றும் இயற்கைப் பாதுகாப்பு தொடர்பான அடிப்படை எண்ணங்களைத் தொடக்கக்கல்வியிலேயே உட்படுத்த வேண்டும். தனிமனிதத் தூய்மையைப் போலவே முக்கியத்துவம் வாய்ந்ததுதான் சுற்றுப்புறத் தூய்மை என்பதையும், தூய்மை உணர்வு மக்கள் கடமைகளின் அடிப்படைக் கூறுகளில் ஒன்று என்பதையும் மாணவர்களுக்கு எடுத்துரைக்க வேண்டும். இயற்கையும் இயற்கை வளங்களும் மனிதனின் தேவைகளுக்கானவை மட்டுமல்ல, இயற்கை சமன்பாட்டில் ஏற்படும் மாற்றம் எதிர்காலத்தில் பல்வேறு தீய விளைவுகளுக்குக் காரணமாகும் என்னும் மனநிலையையும் மாணவர்களிடையே வளர்க்க வேண்டும். இயற்கைப் பாதுகாப்பும் சுற்றுப்புறத் தூய்மையும் ஓர் அடிப்படைத் தேவையாகக் கருத்தில் கொண்டு, அதற்குத் தகுந்த செயல்பாடுகளை நடைமுறைப்படுத்த வேண்டும்.

### நீர் அறிவு

நீரின் ஆதாரங்கள், நீர்ப்பாதுகாப்பு, நீர் மாசடைதலைத் தவிர்க்க வேண்டியதன் தேவை ஆகியவற்றைப் புரிந்துகொண்டு, நீர் விலைமதிப்பற்றது என்னும் விழிப்புணர்வு மாணவர்களுக்கு ஏற்படவேண்டும். அத்துடன் நீர் விநியோகத்தின் போது கவனத்தில் கொள்ளவேண்டிய நுணுக்கங்களைக் கண்டறிவதற்கான வாய்ப்பையும் பாடஏற்பாட்டில் வழங்கவேண்டும்.

### அமைதிக் கல்வி

தனிப்பட்ட நிலையிலும் பிறரோடும் சுற்றுச் சூழல்களோடும் அமைதியாகவும் நல்லுறவுடனும் ஈடுபடுவதற்கான திறனையும் மதிப்பீட்டையும் மனநிலையையும் வளரச் செய்வதே அமைதிக் கல்வியின் அடிப்படை. போராட்டங்களையும் போராட்டங்களுக்கு வழிவகுக்கும் சூழ்நிலைகளையும் தவிர்த்து, அமைதிக்கும் நல்லுறவுக்கும் வழிவகுக்கும் வாய்ப்புகளைப் பாடஏற்பாட்டின் வேறுபட்ட பாடப்பொருட்களின் வழியாக அறிமுகப்படுத்துவது அமைதிக் கல்விக்கு இன்றியமையாததாகும்.

### சட்ட அறிவு

சட்டங்கள் தொடர்பான அறிவும் விழிப்புணர்வும் ஒரு மக்களாட்சி நாட்டுக் குடிமக்களுக்கு இன்றியமையாதவை. சட்ட அறிவை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான பாடப்பகுதிகள் பொருள் அடிப்படையில் உட்படுத்த வேண்டியது காலத்தின் கட்டாயம் என்றே கூறலாம். சட்ட உதவி அமைப்பு, சட்டமன்றங்கள், 'சட்டகிளினிக்குகள்', சட்ட விழிப்புணர்வு என்று பல்வேறு விதமான செயல்பாட்டுத் திட்டங்களைக் குறித்துத் திட்டமிடவேண்டும்.

### சைபர் அறிவு

தகவல் தொடர்பின் தவறான பயன்பாடும், குற்றங்களும் அன்றாடம் பெருகிவருகின்றன. இத்தகைய தவறான செயல்பாடுகளிலிருந்து மாணவர்களைத் தடுத்து நிறுத்துவதற்கான விழிப்புணர்வூட்டும் பாடப்பகுதிகளைப் பாடத்திட்டத்தில் உட்படுத்தவேண்டும். இணையம், சமூக வலைத்தளங்கள், மின்னஞ்சல் போன்றவற்றின் பயன்பாட்டைக் குறித்து தெளிவானதும் சரியானதுமான அறிவைத் தரவேண்டும். சைபர் குற்றங்களுக்கான தண்டனையைக் குறித்தும் இணைய தளப் பயன்பாடு குறித்தும் விழிப்புணர்வடையச் செய்யப் பாட ஏற்பாடு வாய்ப்பளிக்க வேண்டும்.

### ஊடக விழிப்புணர்வு

ஊடகங்களின் வழி நடத்தலுக்கு ஆளாகும் நிலையில் நமது சமூகம் மாறியுள்ளது. காட்சி ஊடகங்களைத் தவிர்த்துள்ள ஒரு வாழ்க்கையைக் கனவு கூடக் காண முடியாத நிலையில் ஊடகங்கள் அன்றாட வாழ்க்கையை ஆட்கொண்டுவிட்டன. காட்சி ஊடகங்கள் மாணவர்களிடம் அதிக அளவு தாக்கம் செலுத்தியுள்ளன. எனவே விமர்சன முறையிலான ஊடக விழிப்புணர்வுக்கு உதவுகின்ற பல்வேறு கூறுகளைப் பாடஏற்பாட்டு உள்ளடக்கத்தில் உட்படுத்தவேண்டியுள்ளது.

### நிலையான வளர்ச்சி

பூமி மனிதனுக்கு மட்டும் உரிமையுடையதல்ல என்னும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வைப் பாட ஏற்பாட்டில் பகிர்ந்தளிக்க வேண்டும். சுற்றுச்சூழல் தொடர்பான சவால்கள் பற்றியும், சுற்றுச்சூழல் வீழ்ச்சிக்குக் காரணமாகின்ற மனிதனின் ஈடுபாடுகள் குறித்தும், சுற்றுச்சூழலைத் தீவிரமான விபத்துகளிலிருந்து எவ்வாறு பாதுகாக்கலாம் என்பது பற்றியும் அறிந்துகொள்வது மிகவும் அவசியம். இது காலத்தின் தேவையும் ஆகும். சுற்றுச்சூழல் பாதுகாப்பையும் வளர்ச்சித் திட்டங்களையும் எவ்வாறு இணைத்துக் கொண்டு செல்லலாம் என்னும் தேடலும், நிலையான வளர்ச்சி குறித்த கண்ணோட்டமும் பாடஏற்பாட்டில் கட்டாயம் இடம்பெற வேண்டும். ஒரு முழுமையான சுற்றுச்சூழல் விழிப்புணர்வை உருவாக்குவது என்பது பாட ஏற்பாட்டின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும்.

### குமரப்பருவக் கல்வி

குழந்தைகள் மனவியல் நிபுணர்களுடையவும் உடல் நலப் பாதுகாப்புத் தொண்டர்களுடையவும் மருத்துவர்களுடையவும் ஆசிரியர்களுடையவும் ஒருங்கிணைந்த முயற்சியின் வழியாகக் குமரப்பருவக் கல்விக்குத் தேவையான உள்ளடக்க மண்டலங்களை வெவ்வேறு பாடப்பொருளுடன் சேர்ப்பதற்கான வாய்ப்புகளையும் ஆராய வேண்டியுள்ளது. மாணவர்களின் உடல்நலம், உடல் தூய்மை ஆகியவை தொடர்பான ஐயங்களையும் தெளிவின்மையையும் அறிவியல் பூர்வமாக நீக்க வேண்டியுள்ளது.

**நுகர்வோர் கலாச்சாரம்**

நுகர்வோர் கலாச்சாரத்தின் தீய விளைவுகள் தொடர்பானவற்றைத் தொடக்கக்கல்வி நிலையிலிருந்தே பாடஏற்பாட்டில் உட்படுத்தியாக வேண்டும். நுகர்வோர் என்னும் நிலையில் நமது உரிமைகளும் நுகர்வோர் சட்டங்களும் ஒரு பாடப் பொருளாகவே இடம்பெற வேண்டும்.

**போதைப் பொருள் எதிர்ப்பு மனநிலை**

மது, போதைப் பொருட்கள், புகையிலை போன்றவற்றின் பயன்பாடு புதிய தலைமுறையின் உடல்நலத்தைக் கெடுக்கிறது என்னும் உண்மையை நாம் கண்டறிய வேண்டும். வரும் தலைமுறையைப் போதைப் பொருளின் தீய வலைக்குள்ளிருந்து காப்பாற்றியாக வேண்டும். இதற்காகப் போதைப் பொருள் பயன்பாட்டினால் உண்டாகும் உடல் – உள கெடுதல்களையும் விபத்துகளையும் வெளிப்படுத்தும் படங்கள், சிற்றறிக்கைகள், காட்சிகள் போன்றவற்றை உள்ளடக்கத்தில் உட்படுத்த வேண்டும். போதைப் பொருள் எதிர்ப்பு மனநிலையை உருவாக்குவதே இவற்றின் அடிப்படை நோக்கம்.

**ஆண் – பெண் நீதி**

பாடஏற்பாடு ஆண் – பெண் சமத்துவத்தையும் நீதியையும் உறுதிப்படுத்த வேண்டும். ஆண் – பெண் வேறுபாடு பாட ஏற்பாட்டில் எந்தக் காரணத்தைக் கொண்டும் இடம் பெறக் கூடாது. பாடப்புத்தகப் படங்களில்கூட ஆண் – பெண் நீதியைக் கட்டாயமாகக் கடைபிடிக்க வேண்டும். கற்றல் செயல்பாடுகளை ஏற்றெடுத்து நடைமுறைப்படுத்தும்போது ஆண் – பெண் நீதியை உறுதிப் படுத்துவது ஆசிரியரின் கடமையாகும்.

**சேமிப்புப் பழக்கம்**

தொடக்கக் கல்வி நிலையிலிருந்தே சேமிப்புப் பழக்கத்தின் அடிப்படைப் பாடங்களை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டும். சேமிப்புப் பழக்கத்தின் பெருமையையும் முக்கியத்துவத்தையும் தெளிவுபடுத்த வேண்டும். சேமிப்புப் பழக்கத்தை நடைமுறைப்படுத்துவதற்கான செயல்பாடுகளையும் மேற்கொள்ள வேண்டும்.

**சாலைப் பாதுகாப்பு**

சாலைகளில் பின்பற்ற வேண்டிய சட்டங்கள், சாலை விபத்துகளைத் தவிர்ப்பதற்கான ஆலோசனைகள், செயல்பாடுகள் ஆகியவை எல்லாம் சாலைப் பாதுகாப்பின் கூறுகளாகும். சாலை என்பது ஒரு பொது இடம் என்பதையும் நமக்கு உள்ளதைப் போன்றே பிறருக்கும் சாலைகளைப் பயன்படுத்துவதற்கான உரிமை உண்டு என்பதையும் குறித்த உணர்வு ஒவ்வொருவருக்கும் கிடைக்கச் செய்யவேண்டும். சாலைப் பாதுகாப்புத் தொடர்பான செயல்பாடுகளுக்கும் முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.

பாட ஏற்பாட்டின் இயல்பான பரிமாற்றத்தில் சாலைப் பாதுகாப்புத் தொடர்பான கற்றல் அனுபவங்கள் வேண்டும். அவற்றை உறுதிப்படுத்தவும் வேண்டும். பல்வேறு பாடப்பொருள்களின் உள்ளடக்கம் தொடர்பான கருத்துகளைத் தேர்வு செய்யும்போதும் கற்றல் செயல்பாடுகளை வரிசைப்படுத்தும்போதும் சாலைப் பாதுகாப்பிற்கும் தேவையான வாய்ப்பு அளிக்க வேண்டும். கற்றல் – கற்பித்தல் செயல்முறைகளைக் கடந்து செல்லும்போது இத்தகைய கருத்துகளுடன் தொடர்புடைய அறிவு, திறமை, மனநிலை ஆகியவற்றிற்கும் முக்கியத்துவம் அளிக்கவேண்டும். இந்த இலக்குகளை அடைய முடிந்ததா என்பதைத் தொடர் மதிப்பீட்டுச் செயல்பாடுகள் வாயிலாகப் பரிசோதிக்கவும் இயலவேண்டும். வெவ்வேறு மன்றங்களின் செயல்பாடுகள், SPC, NCC, Scout & Guides, JRC, கலை – இலக்கிய மன்றம் போன்ற அமைப்புகள், மதிப்பீடுகள், மனநிலைகள், கடமை உணர்வு ஆகியவற்றை வளர்ப்பதற்கான அரங்கங்கள் ஆக வேண்டும்.

**உரிமை அடிப்படையிலான கல்வி** (Right Based Education)

மாணவர்களின் உரிமைகளை நிர்ணயிக்கவும் சர்வதேச அளவில் நடைமுறைப்படுத்தவும் யுனெஸ்கோ முக்கிய நடவடிக்கைகள் எடுத்துள்ளது. இதைத் தொடர்ந்து பல்வேறு நாடுகளில் மாணவர்களின் உரிமைப் பாதுகாப்புத் தொடர்பான பலவிதமான சட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இந்தியாவில் தேசியக்கல்வி உரிமைச் சட்டம் – 2009 நடைமுறைப்படுத்தியது முக்கியமான ஒரு மைல்கல் ஆகும். மாணவர்களின் எல்லாவித உரிமைகளையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு முதியோர்களாகிய நமது கடமையாகின்றது. கல்வி உரிமைகள் பற்றிக் கூறும்போது அவற்றை முக்கியமாக மூன்று மண்டலங்களாகப் பிரிக்கலாம்.

- பங்களிப்பு (Participation)
- வாய்ப்பு (Provision)
- பாதுகாப்பு (Production)

தமக்குக் கிடைக்கின்ற உரிமைகள் குறித்த மாணவர் சிந்தனை எவ்வாறு அமையும்?

**பங்களிப்பு**

- மாணவர்களுடன் தொடர்புடைய எல்லாத் தீர்மானங்களிலும் எனது கருத்தும் ஆராயப்படுவதுண்டு.
- தீர்மானங்களில் எனது எண்ணங்களுக்கும் முக்கியத்துவம் தரப்படுவதுண்டு

- எனது திறமைகளையும் நிலைமைகளையும் கண்டறிந்து அதற்கேற்பத் தரும் செயல்பாடுகளில் பங்குபெறுவதற்கான வாய்ப்பு எனக்கும் கிடைக்கின்றது
- எனது திறமைகளை வளப்படுத்துவதற்கும் எல்லைகளைத் தாண்டிச் செல்வதற்கும் இயல்கின்ற கற்றல் செயல்முறைகளில் ஈடுபட என்னால் முடிகின்றது
- எனது கருத்துகளுக்குத் தகுந்த மதிப்பு கிடைப்பதுண்டு
- எனக்கும் எனது நண்பர்களுக்கும் வகுப்பறையில் நடைபெறும் செயல்பாடுகளில் தீவிரமான பங்களிப்பு கிடைப்பதுண்டு
- எனது திறமைகளை வெளிப்படுத்த எனக்கு வாய்ப்புகள் கிடைக்கின்றன

**வாய்ப்பு** (Provision)

- தேவையான கல்வித் தரம் உடையவர்களும் காலத்திற்கேற்ப தமது அறிவை மேம்படுத்துகின்றவர்களுமான ஆசிரியர்களின் சேவை எனக்குக் கிடைக்கின்றது
- அனுமதிக்கப்பட்டுள்ள முழு நேரமும் கற்றல் அனுபவங்கள் கிடைக்கின்றன
- உடல் – உள வளர்ச்சியை ஊக்கப்படுத்துவதற்கு உகந்த வகுப்பறைச் சூழல் எனக்குக் கிடைக்கின்றது
- கற்றல் செயல்பாடுகளுக்குத் தேவையான கற்றல் கருவிகள் தேவையான நேரங்களில் கிடைக்கச் செய்வதற்கு என்னுடைய ஆசிரியரால் முடிகின்றது
- கலை மற்றும் விளையாட்டு மேம்பாட்டிற்குத் தேவையான கருவிகளும் வாய்ப்புகளும் எனக்குக் கிடைப்பதுண்டு
- எதிர்காலத்தில் வேலை கிடைப்பதற்கான வழிமுறைகளும் அறிவுரைகளும் கிடைக்கின்றன

**பாதுகாப்பு**

- பள்ளிக்கூடத்தின் உள்ளேயும் வெளியேயும் எவ்விதமான உயர்வு தாழ்வும் அனுபவப்படுவதில்லை.
- என்னை எவர் ஒருவரும் அவமதிப்பது கிடையாது
- உடல் – உள ரீதியில் எவரும் என்னைத் தாக்குவதில்லை
- எவ்வித பயமும் இன்றி ஆசிரியர்களுடன் பழக என்னால் இயல்கிறது
- மாணவன் என்றாலும் எனக்கும் சில அந்தரங்கங்கள் உண்டு என்பதை அனைவரும் அங்கீகரிக்கின்றனர்
- பள்ளியிலும் வீட்டிலும் நான் மிகவும் பாதுகாப்பாக உள்ளேன் என்பதில் நான் உறுதியாக இருக்கின்றேன்
- உடல் – உள ரீதியில் நான் அனுபவப்படும் இடையூறுகளிலிருந்து விடுபடவும் ஆற்றல் பெறவும் தேவையான வாய்ப்புகள் பள்ளியில் கிடைக்கின்றன.

இவையெல்லாம்தாம் மாணவர்களின் உரிமைகள் என்றாலும், இவற்றை உறுதிப்படுத்த என்னால் என்னென்ன செய்ய முடிந்தது? இனி நான் என்னென்ன செய்யவேண்டும்? என்பது குறித்து ஒவ்வொரு ஆசிரிய, ஆசிரியையும் சிந்தித்தாக வேண்டும்.

**நெறிப்படுத்துதல்** (Mentoring)

தேசிய கல்வி உரிமைச் சட்டம் ஆசிரியரை / ஆசிரியையை ஒரு நெறியாளராகவே கருதுகின்றது. பள்ளியின் முழுமையான வளர்ச்சிக்கு நெறியாளருக்குப் பெருமையும் முக்கியத்துவமும் உண்டு.

கல்விச் செயல்முறையின் முக்கிய கூறான ஆசிரியர் – மாணவர் உறவில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டுள்ளது. அறிவை விநியோகிக்கும் ஓர் ஆளாக அல்ல; மாணவர்கள் அறிவைப் பெறுவதற்கான வேறுபட்ட வாய்ப்புகளை ஒருங்கிணைக்கும் ஒருவராகவும் ஆசிரியர் செயல்பட வேண்டும்.

உண்மையில் பள்ளிக்கூடம் என்பதும் ஒரு வீடுதான். ஆசிரியர்களே பெற்றோர்கள். மாணவர்களுக்கு வீட்டிலிருந்து கிடைக்கவேண்டிய அன்பு, ஆதரவு, பாதுகாப்பு உணர்வு, அங்கீகாரம் போன்றவை கூடியும் குறைந்தும்தான் கிடைக்கின்றன என்னும் எண்ணம் ஒவ்வொரு ஆசிரியருக்கும் ஆசிரியைக்கும் ஏற்பட வேண்டும். இதனைக் கண்டடைந்து ஒவ்வொரு மாணவருக்கும் தக்கவாறு இவற்றைக் கொடுக்கும்போதுதான் அவர்களின் பொறுப்பு முழுமையடைகின்றது. அப்போதுதான் பள்ளி வீடாகின்றது.

அன்பு, ஆதரவு, பாதுகாப்பு உணர்வு, அங்கீகாரம் ஆகியவற்றை அளித்து ஒரு சக பெற்றோராகவும் கற்றல் அடைவுகளைப் பெறுவதற்கான உதவியாளராகவும் மாறும்போதுதான் அவர் புதிய காலகட்டத்தின் ஆசிரியர் / ஆசிரியையாக மாறுகிறார்.

நெறிப்படுத்தல் காரணமாக வழிகாட்டுதல், அறிவுரை, உதவி, மேம்படுத்து வதற்கான வாய்ப்பு முதலானவை மாணவ மாணவிகளுக்குக் கிடைக்கின்றன. ஆசிரியர் என்பதற்கு மேலாக அனுபவம் மிக்க மூத்தவர் என்ற நிலையிலும் மாணவர்களிடம் பழக வேண்டும். கற்பித்தலுக்குத் தேவையான உதவிகளும் கலந்துரையாடல் களும் எல்லாம் இதன்

ஒரு பகுதிதான். மாணவர்களிடையே மறைந்து கிடக்கும் திறன்களை வெளிக் கொணர ஒரு நல்ல நெறியாளரால் இயலும் என்பது உண்மை.

நெறிப்படுத்தல் வழியே :

- ஆசிரியருக்கும் மாணவருக்கும் சிறந்த கல்வி அனுபவங்கள் கிடைக்கின்றன
- ஆசிரியர்களுடையவும் மாணவர்களுடையவும் அறிவு மண்டலம் வளர்ச்சி பெறுகிறது
- மாணவருக்கும் பள்ளிக்கூடத்திற்கும் இடையேயான உறவு வலுவடைகிறது
- மாணவனின் கற்றல் வளர்ச்சியும் தனிமனித வளர்ச்சியும் உறுதிப்படுத்தப்படுகின்றன.
- சேர்ந்து சிந்திக்கவும், தீர்மானங்கள் எடுக்கவும் செயல்பாடுகளில் ஈடுபடவும் இயல்கின்றது
- பெற்றோர்களுக்கும் பள்ளிக்கூடத்திற்கும் இடையேயான உறவு வலுவடையவும் மாணவரின் கற்றல் தரத்தை அறிந்துகொள்ளவும் இயல்கிறது.
- கலை – உடல் நலம் – விளையாட்டு – பணி அனுபவக் கல்வி மண்டலங்களில் மாணவர்களின் பங்களிப்பையும் மதிப்பீட்டையும் சக்திப்படுத்துகின்றது.

மாணவனின் கற்றல் ஆர்வத்தையும் தனிமனித வளர்ச்சியையும் வேகப்படுத்துவதற்கான தீர்வுகாண் செயல்முறையையும் தொடர் மதிப்பீட்டு முறையையும் நடைமுறைப்படுத்த உதவுகின்ற ஒரு செயல்பாடாக நெறிப்படுத்தல் வளர்ச்சியடைய வேண்டும். நெறிப்படுத்தல் அனுபவங்களுடன் தொடர்புடைய குறிப்புகளைத் தொகுப்பில் உட்படுத்த வேண்டும். பள்ளியிலுள்ள அனைத்து ஆசிரியர்களும் சக பெற்றோராக அதாவது நெறியாளராகச் செயல்படவேண்டும். எல்லா மாணவர்களுக்கும் நெறியாளரின் பயன்கள் கிடைக்கவேண்டும். வகுப்பிலுள்ள மாணவர்களைச் சிறு குழுக்களாக்கி, ஒவ்வொரு குழுவினுடையவும் முன்னேற்றத்தை உறுதிப்படுத்த ஒவ்வொரு ஆசிரியருக்கும் பொறுப்பு அளிக்கலாம்.

**ஆசிரியர்கள் தொழில் ரீதியாகக் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள்**

(Code of Professional Ethics for School Teachers)

**1. மாணவர்களோடு ஆசிரியருக்குள்ள பொறுப்புணர்வுகள்**

**(ஆசிரியரின் கடமைகள்)**

1.1. எல்லா மாணாக்கர்களோடும் அன்பும் அரவணைப்பும் காட்ட வேண்டும்

- எல்லா மாணவர்களோடும் பாகுபாடு காட்டாது சமமாகப் பழகுதல் வேண்டும்.
- கல்வியில் பின்தங்கிய மாணவர்களிடம் தனிக் கவனம் செலுத்துதல் வேண்டும்.
- மாணவர்களிடம் தன்னம்பிக்கை, ஆர்வம், எதிர்பார்ப்பு போன்றவற்றை வளர்க்கும் விதத்தில் நடந்துகொள்ள வேண்டும்.

1.2. ஜாதி, மதம், இனம், பொருளாதார நிலை, மொழி, ஆண் – பெண் (பாலின) வேறுபாடு, பிறந்த இடம் போன்றவைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் நேர்மையுடன் பாரபட்சம் பார்க்காமல் நடந்துகொள்ளுதல் வேண்டும்.

- ஆசிரியர்கள் ஜனநாயகக் கொள்கை, பொறுமை, சமூக நீதி மீதான நம்பிக்கை ஆகியவற்றை மாணவர்களுக்கு ஏற்படுத்த வேண்டும்.
- ஆசிரியரின் தனிப்பட்ட நம்பிக்கைகள் அரசியலமைப்புச் சட்டத்திற்கு எதிராக இருந்தால் அது பள்ளிக்கூட நடைமுறைகளைக் கடுமையாகப் பாதிக்கும்.

1.3 மாணவர்களின் உடல், மன உணர்வு, பண்பாடு, சமூக, ஆன்ம வளர்ச்சிக்கேற்ற சூழலை உருவாக்குதல்

- மாணவர்களின் உடல், மன சமூகத்திறன்கள் முழு வளர்ச்சி அடையும் காலம்தான் பள்ளிப் பருவகாலமாகும்.
- கல்வியால் அறிவுமண்டலம் மட்டும் வளர்ச்சி அடைந்தால் போதாது
- முழுமையான தனிமனித வளர்ச்சியே கல்வியின் நோக்கமாகும்

1.4. பள்ளி வாழ்க்கையில் எல்லா நிலைகளிலும் மாணவர்களின் தனித்துவத்திற்கு மதிப்பளிக்கப்படுகிறது

- மனிதன் என்ற நிலையில் ஒரு மாணவனின் ஜனநாயக உரிமைகளும் கௌரவமும் பாதுகாக்கப்பட வேண்டும்.
- ஆசிரியரிடமிருந்து உருவாகும் மோசமான செயல்கள் மாணவனின் தன்மானத்திற்கு இழுக்கு ஏற்படுத்தி கற்றலைப் பாதிப்படையச் செய்கிறது.
- பள்ளியின் எல்லாச் செயல்பாடுகளிலும் அனைத்து மாணவர்களின் முழுமையான ஈடுபாட்டை உற்சாகப்படுத்த வேண்டும்.
- ஐக்கிய நாட்டு சபை (ஐ.நா சபை) அங்கீகரித்து இந்தியா ஒப்புதல் செய்த மாணவர்களின் உரிமை குறித்த விளம்பரத்தையும், மாணவர்களின் உரிமைப் பாதுகாப்பு ஆணையத்தின் அறிக்கையையும் ஆசிரியர்கள் புரிந்துகொண்டு அதற்கேற்பச் செயல்பட வேண்டும்.
- பள்ளிகளில் ஒழுக்கம், கட்டுப்பாடு ஆகியவற்றை நடைமுறைப் படுத்துவதற்காக உருவாக்கிய சட்டங்கள் மாணவர்களின் உரிமைகளை மறுக்கக் கூடியதாக அமையக் கூடாது.

1.5. மாணவர்களின் உடல், உளத் திறன்களும், சிறப்புத் திறன்களும் வெளிப்படும் வகையில் திட்டமிட்டு ஒழுங்குபடுத்திய செயல்பாடுகளை வடிவமைக்க வேண்டும்.

- ஒவ்வொரு மாணவனின் கற்றல் அடைவுகள் மட்டுமின்றி மாணவனின் திறன்களையும் சிறப்புத் திறன்களையும் தெரிந்துகொள்வதே ஆசிரியரின் முக்கியக் கடமையாகும்.
- மாணவர்களின் எல்லாவித திறமைகளும் வளர்வதற்குத் தேவையான செயல்பாடுகள் உண்டாக வேண்டும்.

1.6. அரசியலமைப்புச் சட்டம் எடுத்துரைக்கின்ற மதிப்புகளையும் மனப்பான்மைகளையும் உட்கொள்ளும் விதத்தில் பாடத்திட்ட ஏற்பாட்டுப் பரிமாற்றம் அமைய வேண்டும்.

- ஜனநாயகம், மத நல்லிணக்கம், சமத்துவம், நீதி, சுதந்திரம் ஆகிய அரசியலமைப்பு மதிப்புகள் பாட ஏற்பாட்டின் முக்கியக் கூறுகளாக அமைவன.
- அரசியலமைப்பில் குடிமகன்களின் கடமைகளைப் பற்றிக் கூறும் பிரிவு 51 அ-வைப் புரிந்துகொண்டு, அதில் அ முதல் ஓ வரையுள்ள பிரிவுகளைப் புரிந்துகொண்டும் அவற்றின்படி செயல்பட வேண்டும்.

1.7. மாணவர்களின் தேவைக்கேற்ப ஆசிரியர் – ஆசிரியையின் கற்பித்தல் முறை புனரமைக்கப்படுகிறது

- தொடர் மதிப்பீட்டின் அடிப்படையில் மாணவர்களின் தன்மை, பெற்ற அடைவு, விருப்பம், கற்கும் முறை முதலியவற்றைக் கருத்தில்கொண்டு கற்பித்தல்.
- உத்திகளில் தேவையான மாற்றங்களைத் தொடர்ந்துமேற்கொள்ள வேண்டும்.

1.8. மாணவர்களின் தனிப்பட்ட தகவல் இரகசியங்களைப் பாதுகாத்து அந்தத் தகவல்களைச் சட்டரீதியாகப் பயன்படுத்துகின்றவர்களுக்கு மட்டும் தெரிவித்தல்.

- ஒரு ஆலோசகராகச் செயல்படும் ஆசிரியருக்கு மாணவர்களின் தனிப்பட்ட தகவல்களைத் தெரிந்துகொள்ள முடியும்.
- இந்தத் தகவல்களைக் குழந்தைகளின் நன்மைக்காக மட்டும் அறிவு பூர்வமாகப் பயன்படுத்த வேண்டும்.

1.9. மாணவர்களைப் பயமுறுத்துதல், உடல் ரீதியாகத் தண்டனை அளித்தல், மன ரீதியாகவும், உணர்வு ரீதியாகவும் துன்புறுத்துதல் போன்ற செயல்களில் ஈடுபடக்கூடாது.

- மாணவர்களைப் பாலியல் கொடுமைகளிலிருந்தும் புறக்கணிப் பிலிருந்தும் சுரண்டல்களிலிருந்தும் பாதுகாக்கும் கடமை ஆசிரியருக்கு உண்டு.
- தண்டனை அளித்தால் மாணவர்கள் நன்றாகப் படிப்பார்கள் எனும் தவறான கருத்தை மாற்ற வேண்டும்.
- இவ்வாறான சூழலில் குழந்தைகளுக்குக் கிடைக்கும் சட்டப் பாதுகாப்பு பற்றி ஆசிரியர்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

1.10. எவ்விதமான பாலியல் கொடுமைகளிலிருந்தும் குழந்தைகளைப் பாதுகாக்க வேண்டும்.

- பாலியல் கொடுமைகள் உடல் காயங்களை மட்டுமின்றி நீண்டகாலம் நிற்கும் மனக்காயங்களையும் ஏற்படுத்துகின்றன.
- வேலை செய்யும் இடங்களிலும் பள்ளிகளிலும் நடக்கும் பாலியல் கொடுமைகளுக்கு எதிராக இந்திய உச்ச நீதிமன்றமும் தேசியக் குழந்தைகள் பாதுகாப்புச் சட்டமும் (National Children Production Rule) விதித்துள்ளவற்றை ஆசிரியர்கள் மதித்து நடக்க வேண்டும்.

## 2. பெற்றோர்களிடமும் சமூகத்தோடும் உள்ள கடமைகள்

2.1. பெற்றோர்களுடன் அன்புடனும் ஆதரவுடனும் தொடர்பு கொள்ள வேண்டும்.

- மாணவர்களைப் பற்றி நன்றாகத் தெரிந்துகொள்ள ஆசிரியர்கள் மாணவர்களின் பெற்றோர்களிடமும் நண்பர்களிடமும் நல்ல உறவுகளை வளர்க்க வேண்டும்.
- ஆசிரியர்களுக்கும் பெற்றோருக்கும் இடையேயுள்ள சிறந்த தொடர்பு மாணவனுக்கு ஆசிரியருடன் கூடுதலாக நெருங்க உதவும்.
- பெரும்பாலான பெற்றோர்களும் தங்களுடைய குழந்தைகளின் பள்ளிச் செயல்களைப் பற்றி ஆசிரியர்களிடமிருந்து தெரிந்துகொள்ள ஆவலாக இருப்பார்கள்.
- மாணவர்களின் வளர்ச்சிக் கட்டத்தில் ஏற்படும் தவறுகளையும் மேன்மைகளையும் பெற்றோர்களோடு பகிர்ந்துகொள்ளும்போது பெரிய ஆபத்துகளைத் தவிர்க்க முடியும்.

2.2. மாணவர்களின் தன்மானத்திற்குத் தீங்கு விளைவிக்கும் எந்தச் செயலிலும் ஈடுபடக் கூடாது.

- பிற மாணவர்களின் முன்னிலையில் எந்தவொரு மாணவனையும் அவனது கௌரவத்தைப் பாதிக்கும் வகையில் பேசக்கூடாது.
- அதுபோலவே பெற்றோர்களின் கௌரவத்தையும் பாதிக்கும் வகையில் நடந்துகொள்ளக் கூடாது.
- ஏதாவது ஒரு பிரிவைச் சார்ந்த மாணவர்களின் சூழலைப் (சாதி, மத, பொருளாதார) புகழ்வது பிற மாணவர்களிடம் தாழ்வு மனப்பான்மையை ஏற்படுத்தும்.

2.3. மாணவர்களிடையே இந்தியாவின் பண்பாட்டைக் குறித்துப் பெருமைப்பட அபிமான உணர்வு வளர்க்க முயற்சி செய்தல்.

- பலவிதப் பண்பாடு, மொழி, மதம், நம்பிக்கை கொண்ட நாடே இந்தியா. இது ஒவ்வொரு வகுப்பிலும் பிரதிபலிக்க வேண்டும்.
- இந்தியாவில் வேற்றுமையில் ஒற்றுமை கடைபிடிக்கப்படுகிறது.
- பரஸ்பர சகிப்புத் தன்மையும் எல்லாக் கலாச்சாரங்களையும் மதிக்கும் மனப்பான்மையும் வேண்டும்.
- இந்தக் கொள்கைகள் பாடத்திட்டத்தின் மூலம் வளரச் செய்ய முயல வேண்டும்.

2.4. பல்வேறு பிரிவினரிடையே ஏற்படும் எதிர்ப்பை உருவாக்கும் செயல்களைத் தவிர்க்க வேண்டும்.

- வகுப்பறையில் எல்லா மதத்தினரையும் நம்பிக்கைகளையும் மொழிகளையும் சமமாக மதிக்கும் விதத்தில் செயல்பாடுகளை அமைக்க வேண்டும்.
- தேசிய ஒற்றுமையை அடிப்படையாகக் கொண்டு முதலில் இந்தியன் பின்னரே ஒரு பிரிவின் உறுப்பினர் என்ற எண்ணத்தை உருவாக்க வேண்டும்.
- ஏதாவது ஒரு பிரிவினரின் விளம்பரத்திற்காகப் பள்ளி / வகுப்பறையைப் பயன்படுத்தக் கூடாது.
- தற்கால சமூக அரசியலைப் பற்றி உரையாடும்போது ஆசிரியர் / ஆசிரியை ஏதாவது ஒரு பிரிவினருக்காகப் பேசக் கூடாது.

### 3. ஆசிரியர் என்ற தொழிலோடும், சக ஆசிரியர்களோடும் ஆற்ற வேண்டிய கடமைகள்.

3.1. தொழில் திறன் வளரத் தொடர்ச்சியாக முயற்சி செய்ய வேண்டும்.

- ஒரு மாணவனுக்கு நிரந்தரமாகக் கற்பிக்க முயலும் ஆசிரியரும் அதேபோன்று கற்க வேண்டும்.
- எப்போதும் வளர்ந்து கொண்டிருக்கும் அறிவு மண்டலங்களைக் குறித்தும் கற்பிக்கும் முறைகளைக் குறித்தும் தகவல்களைத் திரட்டிச் செயல்படுத்த வேண்டும்.
- எங்கிருந்தெல்லாம் தமக்குப் புதிய அறிவுகள் கிடைக்குமென்று விசாரிப்பது ஆசிரியரின் தலையாய கடமையாகும்.

3.2. பிற ஆசிரியர்களோடும் மற்றுள்ளவர்களோடும் கருத்துப் பரிமாற்றம் நடத்த வேண்டும்.

- கல்வி தொடர்பான உணர்வு உருவாக்குவதற்கு அனைத்து ஆசிரியர்களுக்கும் தன்னாலான படைப்புகளை உருவாக்கும் வண்ணம் ஒரு சந்தர்ப்பத்தை உருவாக்க வேண்டும்.
- இவ்வாறான உணர்வு உருவாக்கத் திட்டமிடலும், பயனுள்ள ஒத்துழைப்பும் ஆசிரியர்களிடம் உருவாக வேண்டும்.
- பள்ளிக்கூடத்திலுள்ள எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வுகாண்பதற்கு அனைத்து ஆசிரியர்களும் ஒன்று சேர்ந்து கலந்துரையாடித் தீர்மானம் எடுக்கவும் செயல்படவும் வேண்டும்.
- ஆசிரியர்கள் மட்டுமின்றிப் பள்ளிக்கூடத்திலுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முன்வருபவர்கள் அனைவரையும் ஒன்று சேர்த்தல் வேண்டும்.

3.3. சக ஆசிரியர்களோடு பெருமையோடும் மரியாதையோடும் பழக வேண்டும்.

- பள்ளியிலுள்ள அனைத்து ஆசிரியர்களிடமும் அவர்களின் கல்வித் தரத்தையோ அவர்கள் கற்பிக்கும் பாடத்தையோ கருத்தில் கொள்ளாமல் பெருமையோடும் மதிப்போடும் பழகுதல் வேண்டும்.

3.4. ஆசிரியர்கள் தனியாக டியூசன் நடத்துதல் தனியார் நிறுவனங்களில் கற்பித்தல் போன்ற செயல்களில் ஈடுபடுவதில்லை

- ஆசிரியர்கள் தனியாக டியூசன் நடத்துவது அவருடைய பள்ளிக்கூடச் செயல்பாடுகளைப் பாதிக்கின்றது.
- சொந்தச் செயலை மேம்படுத்துவதற்கான நேரம் இல்லாமல் போகிறது.
- சொந்த மாணவர்களுக்குத் தனியாக டியூசன் கொடுக்கும்போது பள்ளிக்கூடத்தின் அடிப்படைத் தத்துவங்களுக்கு எதிராகச் செயல் படுவது போன்று ஆகிறது.

3.5. தன்னுடைய செயல்களிலும் தீர்மானங்களிலும் ஆதிக்கம் செலுத்தி விடுவார்கள் என்பதால் ஆசிரியர்கள் எந்தவிதமான பரிசுகளோ வேறு உதவிகளோ வாங்குவதில்லை.

- பலனை எதிர்பார்த்துக் கொடுக்கப்படும் விலை உயர்ந்த பரிசுகளை ஆசிரியர்கள் மாணவர்களிடமிருந்தோ பெற்றோர்களிடமிருந்தோ வாங்கக் கூடாது.

3.6. பிற ஆசிரியர்கள் குறித்தோ பெரிய அதிகாரிகள் குறித்தோ தேவை யில்லாமல் குற்றம் கூறுவதில்லை.

- ஒருவருக்கொருவர் குறை கூறுகின்ற வழக்கம் ஆசிரியர்களிடையில் தேவையற்றதாகும்.
- பிற ஆசிரியர்களுக்கு எதிராக நிரூபிக்க முடியாத குற்றங்களைக் கூறுதல் கூடாது.
- ஏதாவது ஒரு ஆசிரியர் / ஆசிரியையிடம் தவறு தென்படுமெனில் அதனை மூத்த ஆசிரியர்களின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும்.

3.7. பிற ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் இவர்களின் முன்னிலையில் சக ஆசிரியரைக் குறை கூறுவதில்லை.

- ஆசிரியர்கள் குறித்து வேறுபட்ட கருத்துகள் இருக்கலாம். ஆனால் அவற்றை வெளிப்படுத்தும் முறை சரியானதாக இருக்க வேண்டும்.
- பிற ஆசிரியர்கள் கற்பிக்கும் முறையைக் குறை கூறும் விதத்தில் பேசக் கூடாது.

3.8. பிற ஆசிரியர்களின் கற்பித்தல் முறைகளை மதிக்க வேண்டும்.

- சிறப்பாகக் கற்பிப்பவர்களின் செயல்பாடுகளை முறைப்படுத்தவும், அப்படிப்பட்ட சிறப்பை உட்கொள்ளவும் வேண்டும். ஆனால் அவற்றை கண்மூடித்தனமாக ஏற்றுக்கொள்ளக் கூடாது.

3.9. பிற ஆசிரியர்கள் குறித்த தனிநபர் விபரங்களை இரகசியமாக வைக்கவும், சட்ட ரீதியாகத் தேவைப்படும் போது மட்டும் வெளிப்படுத்தவும் வேண்டும்.

- ஏதாவது தேவைக்காகச் சேகரிக்கின்ற சக ஆசிரியர்களின் தனிநபர் விவாதம் இரகசிய குணம் உடையதெனில் அவைகளைச் சட்டரீதியான செயல்களுக்கு மட்டுமே வெளியிடுதல் வேண்டும்.

**கற்பித்தல் கையேடு** (Teacher Planner)

கற்பித்தல் கையேடு என்பது அன்றாடப் பாடத்திட்டக் கையேடாகும். கற்றல் அடைவுகளை இலட்சியமாகக் கொண்டு பாடநூலிலும், ஆசிரியர் பனுவலிலும் கொடுக்கப்பட்டுள்ள செயல்பாடுகள் தன்னுடைய வகுப்பறையில் உள்ள மாணவர்களுக்கு ஏற்றவாறு மாற்றங்கள் செய்தும், கூடுதல் சேர்த்தும் செயல்படுத்தியும் சிறப்படைய வேண்டும்.
கற்றல் செயல்பாடுகளுடன் மதிப்பிடலையும் ஒன்று சேர்த்துத் திட்டமிட்டுச் செயல்பக்கத்தில் எழுதவேண்டும். தொடர் மதிப்பீட்டின் வழியாகக் கிடைக்கின்ற விவரங்களை அடையாளப்படுத்துவதே மதிப்பீட்டுப் பகுதியில் அமைய வேண்டும். அடுத்துவரும் ஒரு வாரத்திற்குத் தேவையான கற்பித்தல் கையேட்டைப் பள்ளி வளக்குழு (SRG) பாடக்குழு (Subject Council) இவற்றில் வெளியிடுவது நன்று. ஒரு வார காலத்திலுள்ள மதிப்பிடுதல் பகுதியிலுள்ள விவரங்களை அடிப்படையாக்கி ஆசிரியர் ஒரு சிறு பிரதிபலிப்புக் குறிப்பு (Reflection Note) தயாராக்கவும். வளக்குழுவில் (SRG) விவாதிக்கவும் செய்யலாம். இந்தக் குறிப்பின் அடிப்படையில் ஆசிரியரின் தொடர் திட்டமிடல் குறிப்பு தயாராக்க வேண்டும்.

ஆசிரியர் திட்டமிடல் மாதிரி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

**ஆசிரியர் திட்டமிடல்**

அலகின் பெயர் :

நாள் :

தேவைப்படும் நேரம் :

கற்றல் அடைவுகள் :

கருத்துகள் :

திறன்கள் :

மொழி உண்மைகள்
(மொழிக்கு மட்டும்) :

மொழி வெளியீட்டு வடிவங்கள்
(மொழிக்கு மட்டும்) :

மதிப்புகள், மனப்பாங்குகள் :

கற்றல் கருவிகள் :

எதிர்பார்க்கும் படைப்புகள் :

| செயல்முறைப் பக்கம் | மதிப்பீட்டுப் பக்கம் |
|---|---|
| செயல்பாடுகளும் மதிப்பிடலும் அடங்கிய செயல்முறை | மதிப்பிட்ட தகவல்களை இங்கு எழுத வேண்டும் |

**பிரதிபலிப்புச் சிந்தனைகள்** (Reflections)

**எனது கண்டுபிடிப்புகளும் பகுத்தறிவுகளும்**
(கற்றல் செயல்பாடுகளின் மதிப்பிடல், செயல்வழி கிடைத்த விபரங்களின் அடிப்படையில்)

-
-
-

தொடர்செயல்பாடுகளும் தீர்வு காணும் செயல்பாடுகளும் குறிப்பு

-
-
-
-

# மதிப்பீட்டு அணுகுமுறை

பள்ளிக்கல்வி இயல்பாகவும் தொடர்ச்சியாகவும் நடைபெறவேண்டிய செயல்முறையாகும். கல்வி திறம்பட அமைய வேண்டுமாயின் கற்றல் அனுபவங்கள் இலக்கை அடிப்படையாகக் கொண்டும் கற்றல் அடைவுகளை மையமாகக் கொண்டும் அமைய வேண்டும். கற்றல் செயல்முறைகளின் வாயிலாக அடையவேண்டிய திறன்களும் எண்ணங்களும் தொடர்பாகக் கற்பிப்போருக்கும் கற்போருக்கும் இடையே தெளிவான ஒரு விழிப்புணர்வு ஏற்பட வேண்டும். ஒவ்வொரு பாடப்பகுதியுடனும் தொடர்புகொண்டு பெறவேண்டிய கற்றல் அடைவுகளை (Learning Outcomes) முன்கூட்டியே கண்டடைந்து கற்றல் செயல்பாடுகளைத் திட்டமிடல் வேண்டும். இவற்றை வாழ்க்கைச் சூழல்களுடன் தொடர்புபடுத்தி வெளிப்படுத்தவும் வேண்டும்.

பெற்ற திறன்களும் எண்ணங்களும் (முடிவுகளும்) கற்றல் அடைவுகளை உறுதிப்படுத்த எந்த அளவுக்குப் போதுமானவை? கற்றல் அடைவுகளை அடையாதவர்கள் இனி யாரேனும் உண்டா? இனி அளிக்க வேண்டிய தொடர் அனுபவங்கள் எவையாக இருக்க வேண்டும்? அவற்றை எவ்வாறு அளிக்கலாம்? இத்தகைய சிந்தனைகள் மதிப்பீட்டின் ஒரு பகுதியாக ஆசிரிய ஆசிரியைகளுக்கு ஏற்பட வேண்டும்.

பாடப்பகுதியின்/அலகின் பரிமாற்றத்திற்குப் பின் 'என்னென்ன கற்றல் அடைவுகளை அடைந்துள்ளனர்' என்பதை மதிப்பிடும் செயல்முறையை 'கற்றலை மதிப்பிடுதல்' (Assessment of learning) எனக் கூறுவர். கற்றலுக்குப் பின்னுள்ள மாணவ மாணவியரின் மேன்மை, கற்றல் நிலை ஆகியவை இங்கு மதிப்பீட்டிற்கு உட்படுத்த வேண்டும். இது மதிப்பீட்டின் ஒரு கட்டம் மட்டுமேயாகும்.

கற்றலை உறுதிப்படுத்துவதற்கான மதிப்பீட்டிற்குத்தான் அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். கற்றல் நடைபெறும் வேளையில் அதன் மேன்மைக்காக ஆசிரியரோ சக மாணவர்களோ நடத்துகின்ற வெவ்வேறு ஈடுபாடுகள் உண்டாகலாம். கற்றலுடன் நடைபெறும் இத்தகைய ஈடுபாடுகளும் பின்னூட்டம் வழங்கலும் மதிப்பீட்டின் இன்னொரு கட்டமாகும். இதனைக் 'கற்றலுக்கான மதிப்பீடு' (Assessment for Learning) என்பர். இம் மதிப்பீட்டைக் கற்றலின் முன்னேற்றத்திற்காகத் தொடர்ந்து நடத்த வேண்டும். மேலும் இது கற்றல் செயல்பாடுகளுடன் ஊடும் பாவுமாக அமைதல் வேண்டும்.

கற்றலின் வாயிலாகப் பெற்ற கோட்பாடுகளையும் முடிவுகளையும் விமர்சன அடிப்படையில் பரிசோதனை செய்வதற்கும் மாற்றங்களை உட்கொள்வதற்கும் வேண்டிய திருத்தல் செயல்முறையும் உண்டு. இதனைச் சுயமதிப்பீடாகக் கருதலாம். இவ்வாறாகச் சுயமதிப்பீட்டின் வாயிலாகவும் கற்றல் சாத்தியமாகின்றது. இதனை 'மதிப்பீடே கல்வி' (Assessment as Learning) எனக் குறிப்பிடுவர். இதன் வாயிலாகச் சிறப்பான முறையில் எவ்வாறு கல்வி கற்கலாம் என்னும் விழிப்புணர்வு மாணவனுக்கு ஏற்படுகின்றது. (Learning to Learn)

கற்றல் கூடுதல் திறம்பட அமைய 'கற்றலுக்கான மதிப்பீடு', 'மதிப்பீடே கற்றல்' ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும். கற்றல் பயன்தக்க முறையில் அமைவதற்கான மதிப்பீட்டுச் செயல்முறைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கின்ற ஓர் அணுகுமுறையையே மேற்கொள்ள வேண்டும்.

கற்றல் அடைவுகளை உறுதிப்படுத்தும் நிலையிலான கற்றல் அணுகுமுறையை மேற்கொள்ளும்போது அதற்குத் தகுந்த மதிப்பீட்டு அணுகுமுறையையும் மேற்கொள்ள வேண்டும். எனவே கற்றல் அடைவுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கின்ற ஒரு மதிப்பீட்டு அணுகுமுறை (Outcome focused Assessment approach) நமக்குத் தேவையாகின்றது. கற்றல் அடைவுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து உருவமைக்கும் கற்றல் செயல்பாடுகளில் மாணவனின் ஆக்கப்பூர்வமான பங்களிப்பை உறுதிப்படுத்த வேண்டும். மாணவனுக்கும் ஆசிரியருக்கும் பெற்றோருக்கும் ஒரே போல் கற்றல் அடைவுகள் குறித்த எண்ணம் ஏற்படுதல், மதிப்பிடப்பட வேண்டியவை குறித்த தெளிவு பெறுதல், கற்றல் அடைவுகளை உறுதிப்படுத்த முன்னோக்கிச் செல்லுதல், மாணவர்களை மையப்படுத்தல், சமூகப் பிரச்சினைகளைக் கண்டறிவதற்கான திறன் பெறுதல், ஆக்கபூர்வமும் விமர்சன பூர்வமும் உத்திபூர்வமுமான சிந்தனைகளை ஊக்கப்படுத்தல் ஆகியவை கற்றல் அடைவுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும் கற்றல் முறையின் சிறப்புத் தன்மைகளாகும்.

### தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு (CCE)

கற்போரில் தொடர்ந்து நடைபெறும் ஒரு செயல்முறைதான் கல்வி. எனவே திறன்களும் முடிவுகளும் ஒரு மாணவன் அல்லது மாணவி எந்த அளவுக்குப் பெற்றுள்ளார் என்பதைப் பரிசோதிக்கும் மதிப்பீடும் தொடர்ச்சியாக நடைபெற வேண்டும். மாணவனின் அறிவுசார் மற்றும் சமூக மண்டல ஈடுபாட்டை மதிப்பீடு செய்வதையே முழுமையான மதிப்பீடு என்கிறோம். இவ்வாறாகத் தொடர் மதிப்பீட்டையும் முழுமையான மதிப்பீட்டையும் மேற்கொள்ளவேண்டும்.

### தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டின் (CCE) மண்டலங்கள்

இரண்டு மண்டலங்களில் CCE நடைபெற வேண்டும்.

1. அறிவுசார் மண்டலம்
2. சமூக - உணர்வு மண்டலம்

### அறிவுசார் மண்டலத்தின் வளர்ச்சி குறித்த மதிப்பீடு

மேனிலை வகுப்புப் பாடப் பொருட்களான மொழி, அறிவியல் பாடங்கள், மானுட – வணிகப் பாடங்கள், உடல்நலம் மற்றும் விளையாட்டுக் கல்வி ஆகியவை அறிவுசார் மண்டலத்தில் உட்படுகின்றன. ஒவ்வொரு பாடத்திலும் பெற்ற கற்றல் அடைவுகள் மதிப்பிடப் படவேண்டும். இங்கு மூன்று நிலைகளிலான மதிப்பீடுகள் பரிந்துரை செய்யப்படுகின்றன.

1. தொடர் மதிப்பீடு (CE)
2. பருவ மதிப்பீடு (TE)
3. செய்முறை மதிப்பீடு (PE)

### தொடர் மதிப்பீடு (CE)

மூன்று முறைகளிலான தொடர் மதிப்பீடுகள் பரிந்துரை செய்யப்படுகின்றன.

- கற்றல் செயல்முறைகளின் மதிப்பீடு
- படைப்புத் தொகுப்பு (Portfolio) — மதிப்பீடு
- அலகுவாரியான மதிப்பீடு

### கற்றல் செயல்முறைகளின் மதிப்பீடு

கற்றல் அடைவுகளைப் பெறுவதற்குக் கற்போரும் கற்பிப்போரும் வெவ்வேறான செயல்பாடுகளைத் திட்டமிடுகின்றனர். செயல்பாட்டில் மாணவரின் பங்கேற்பு, மாணவரின் செயல் மற்றும் வெளியீட்டுத் திறன், மாணவரின் படைப்புத்திறன் முதலான திறன்களை எந்த அளவுக்கு அடைந்துள்ளனர் முதலானவற்றை ஆசிரியர் மதிப்பீடு செய்யவேண்டும். கீழ்வரும் குறிப்புகளை மதிப்பீட்டிற்குப் பயன்படுத்தலாம்.

1. செயல்பாடுகளில் பங்கேற்பு
2. கருத்துமுடிவு
3. திறன்கள் பெறுதல்
4. செயல்திறன்/வெளியீட்டுத் திறன்
5. பதிவு செய்தல்/தயாராக்குதல்

செயல்முறைகளை மதிப்பீடு செய்யும்போது, ஒவ்வொரு மதிப்பீட்டுக் குறிப்பையும் அடிப்படையாகக் கொண்டு மதிப்பீடு செய்யவேண்டும். எடுத்துக்காட்டாக செயல்பாடுகளில் பங்கேற்பு என்னும் குறிப்பை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீடு செய்யும்போது மிகச் சிறப்பாகப் பங்கேற்றவர், சராசரியாகப் பங்கேற்றவர், மேலும் மேன்மை பெற வேண்டியவர்கள் எனக் குறிப்பிடும் வகையிலான குறிப்புகள் ஆசிரியர் திட்டக் குறிப்பேட்டின் (Teacher Planner) மதிப்பீட்டுப் பக்கத்தில் இருக்கவேண்டும். ஒரு பருவத்திற்குள்ளாக எல்லா மாணவர்களையும் செயல்முறையின் ஒரு பகுதியாக மதிப்பீடு செய்து பதிவு செய்ய வேண்டும்.

செயல்முறை மதிப்பீட்டில் – சுய மதிப்பீடு, ஒருவருக்கொருவர் மதிப்பீடு, ஆசிரியர் மதிப்பீடு ஆகியவற்றிற்கு வாய்ப்பளிக்க வேண்டும்.

தொடர் மதிப்பீட்டின் பகுதியாக வெவ்வேறு பாடங்களில் (Subjects) கற்றல் செயல்முறைகளை மதிப்பிடுவது எவ்வாறு என்று பார்ப்போம்.

- **செயல்பாட்டில் பங்கேற்பு**
  - செயல்பாட்டை ஏற்றெடுத்தாரா?
  - தனிப்பட்ட முறையில் செய்ய முயற்சி செய்தாரா?
  - குழுவில் ஆக்கபூர்வமாக ஈடுபட்டாரா?
  - கருத்துகளைப் பகிர்ந்து கொண்டாரா?
  - பிறரது பங்கேற்பை ஊக்கப்படுத்தினாரா?
- **கருத்து முடிவு**
  - உள்ளடக்கம் தொடர்பான கருத்து
  - அறிவு உருவாக்கக் கட்டங்கள்
  - கருத்தை உள்வாங்கும் திறன்
  - கருத்துகளைப் பயன்படுத்தும் திறன்
  - இவற்றில் மாணவரின் மேன்மை

- **திறன்கள் பெறுதல்**
  - செயல்முறைத் திறன்களை அடைவதற்கான முன்தீர்மானங்கள் எந்த அளவுக்கு அமைந்தன?
  - நிச்சயிக்கப்பட்ட செயல்முறைகளை அடைய இச்செயல்பாட்டின் மூலம் இயன்றதா?
  - திறன்களைப் பெறாதவர்களுக்கு எவ்வகையான அதிகச் செயல்பாட்டைக் கொடுக்கலாம்?
- **செயல்பாட்டுத்திறன் / வெளியீட்டுத் திறன்**
  - தனிநிலைச் செயல்பாட்டிற்குப் பின்னும் குழுச் செயல்பாட்டிற்குப் பின்னும் கண்டடைந்தவற்றை வெளியிட முயற்சி செய்தாரா?
  - கண்டடைந்ததை உத்திபூர்வமாக வெளியிடவும் நியாயப்படுத்தவும் இயன்றதா?
- **பதிவு செய்தல்/தயாராக்குதல்**
  - செயல்பாடுகளின் வழியாகக் கடந்து சென்றபோது தேவையான பதிவுசெய்தல்கள் நடத்தியுள்ளாரா?
  - பதிவு செய்தவை பிறருக்குப் புரியும்படியாக அமைந்துள்ளனவா?
  - பதிவு செய்தலில் வரிசை முறையும் ஒழுங்கு முறையும் காணப்படு கின்றனவா?
  - தனிப்பட்ட நிலையிலும் குழுக் கலந்துரையாடலுக்குப் பின்னும் பொதுக் கலந்துரையாடலுக்குப் பின்னும் பதிவு செய்தல்கள் நடத்தியுள்ளாரா?

**தொடர் மதிப்பீட்டின் ஒரு பகுதியாக மொழிப் பாடத்தில் கற்றல் செயல்முறையை மதிப்பீடு செய்வது எவ்வாறென்று பார்ப்போம்.**

மொழிப் பாடத்தில் உள்ளடக்கம் தொடர்பான கருத்து கிடைக்கின்றது என்பது போலவே முக்கியத்துவம் வாய்ந்ததுதான் வெளியீட்டு வடிவம் தொடர்பான அறிவும் மொழித்திறன்களின் வளர்ச்சியும். அவ்வாறென்றால் குறிப்புகளின் அடிப்படையில் எவ்வாறு செயல்முறைகளை மதிப்பீடு செய்யலாம் என்பதைப் பார்ப்போம்.

- **பங்கேற்பு**

  கற்றல் செயல்பாடுகளில் மாணவனின் ஆர்வம், குழுச் செயல்பாட்டில் பங்கேற்பு போன்றவற்றை இதில் கருத்தில் கொள்ள வேண்டும்.

- **கருத்து முடிவு**

  மொழியின் உள்ளடக்கம் தொடர்பான எண்ணங்கள் வெளியீட்டு வடிவத்தின் அமைப்பு, பண்பு நிலை குறிப்புகள், வேறுபட்ட மொழிக்கற்றல் உறைவிடங்கள் வாயிலாக அறிவை உருவாக்கும் முறை, மொழியடிப்படையிலான திறன் போன்றவற்றில் மாணவன் எந்த நிலையில் உள்ளான் என்பதைத்தான் ஆசிரியர் இங்கு மதிப்பிட வேண்டும்.

- **திறன்கள்**

  கேள்வி, உரையாடல், வாசிப்பு, எழுத்து, படைப்பு முதலான திறன்களை அடைவதற்கான மண்டலங்களில் மாணவனின் முன்னேற்றத்தை மதிப்பிட்டு, பின்னூட்டம் அளிக்கின்றனர். இங்கு வேறுபட்ட மொழி வெளியீட்டு வடிவங்கள், மொழியின் தன்மைகள், கருத்துப் பரிமாற்றம் ஆகியவற்றிலும் மாணவனின் செயல் திறன்களைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

- **செயல் / வெளியீடு**

  ஒரு மொழியில் கருத்து வெளியீட்டிற்கு வேறுபட்ட வழிகள் உள்ளன. மாணவனின் எழுத்தாற்றலைப் போலவே பிற மொழிவெளியீடுகளையும் (பாராயணம், பாடுதல், நடிப்பு, படம் வரைதல், உரையாடல், சரியான உச்சரிப்பு, தெளிவு ஆகியவற்றையும்) கருத்தில் கொண்டே ஆசிரியர் இங்குப் பின்னூட்டம் அளிக்க வேண்டும்.

- **பதிவு செய்தல் / தயாராக்குதல்**

  செயல்பாட்டின் வழியாகக் கடந்து சென்றபோது தேவையான பதிவு செய்தல்கள் நடத்தியுள்ளனரா? பதிவு செய்தவை பிறருக்குப் புரியும்படியாக உள்ளனவா? பதிவு செய்தல்களில் ஒழுங்குமுறை காணப்படுகின்றதா? தனிப்பட்ட நிலையில் எழுதியுள்ளாரா? வகுப்பறைக் கலந்துரையாடலுக்குப் பின் குழுவில் மேம்படுத்தப்பட்டுள்ளதா? தவறில்லாமல் எழுதுவதற்கு மாணவர்களால் இயல்கின்றதா? என்பவற்றை யெல்லாம்தாம் ஆசிரியை மதிப்பீடு செய்ய வேண்டும்.

கற்றல் செயல்பாடுகளை நுணுக்கமாகத் திட்டமிடுவதற்கும் தொடர் மதிப்பீடு அறிவியல் பூர்வம் ஆக்குவதற்குமாக Teacher Planner தயாராக்க வேண்டும்.

**(1) Teacher Planner விளக்கங்கள்**

(i) கற்றல் அடைவுகள்

(ii) கருத்துகள்/முடிவுகள்

(iii) திறன்கள்

(iv) மதிப்புகள்/மனநிலைகள்

(v) கற்றல் கருவிகள்

(vi) எதிர்பார்க்கும் உற்பத்திப்பொருட்கள்

(vii) பிரிவேளைகள்

(viii) செயல்பாடுகளும் மதிப்பீடும் உள்ளடங்கிய செயல்முறைப் பக்கமும் மதிப்பீட்டு விபவரங்கள் பதிவு செய்த மதிப்பீட்டுப் பக்கமும்.

கற்றல் செயல்பாடுகளின் திட்டமிடல், மதிப்பீட்டுச் சூழல்கள், உத்திகள், கருவிகள் ஆகியவை Teacher Planner –இல் இருக்க வேண்டும். ஒரு கருத்து, வேறுபட்ட கருத்துகள், ஒரு கற்றல் அடைவு ஆகியவற்றை மையப்படுத்தியோ அல்லது அலகை முழுமையாகக் கண்டோ Teacher Planner ஐத் தயாராக்கலாம்.

**(2) பாடப்பொருள் அடிப்படையிலான செயல்பாட்டுக் குறிப்பேடு (Activity Log) தொடர்பான விளக்கங்கள்**

அறிவுசார் மண்டலத்தின் மதிப்பீட்டிற்கு அடிப்படையாகக் கொள்ள வேண்டிய முக்கியமான ஓர் ஆவணம்தான் மாணவனின் செயல்பாட்டுக் குறிப்பேடு (Activity log). கற்றல் செயல்முறைகளுக்கு ஏற்ப வேறுபட்ட செயல்பாடுகளை முழுமைப் படுத்துவதற்குச் செயல்பாட்டுக் குறிப்பேடு உதவிக்கரமாக அமையும். மாணவனின் படைப்பாற்றல், சிந்தனைச் செயல்கள், மொழித்திறன், சமூக – உணர்வு நிலைகள் போன்றவை செயல்பாட்டுக் குறிப்பேட்டில் பிரதிபலிக்க வேண்டும். பாடப்பகுதியைப் பரிமாற்றம் செய்வதற்கான வெவ்வேறு உத்திகள், அவற்றை முழுமையடையச் செய்வதற்காக மாணவர் மேற்கொள்ளும் ஆயத்தங்கள், செயல்பாடுகளின் பல்வேறு கட்டங்களில் ஈடுபாடு முதலான எல்லா விபரங்களும் செயல்பாட்டுக் குறிப்பேட்டில் இருக்க வேண்டும். செயல்பாட்டின் வழியாக உருவான உற்பத்திப் பொருட்கள் தொடர்பான விளக்கங்களைக் குறிப்பிடுவதும் செயல்பாட்டுக் குறிப்பேட்டில்தான். கற்றல் செயல்பாட்டை வலுப்படுத்துவதற்கு ஆசிரியர் அளிக்கும் அதிக விபரங்களும் செயல்பாட்டுக் குறிப்பேட்டில் குறிப்பிடலாம்.

கால அடிப்படையில் அடைவுகளை மதிப்பீடு செய்து, கற்றல் முன்னேற்றத்திற்குத் தேவையான அறிவுரைகளும் உதவியும் ஆசிரியை அளிக்க வேண்டும். அலகு முடியும்போது அந்த அலகின் கற்றல் அடைவுகளை மாணவர் பெற்றுள்ளாரா என்பதை மதிப்பீடு செய்வதற்கான ஓர் ஆவணமாகச் செயல்பாட்டுக் குறிப்பேடு மாறவேண்டும்.

கருத்துத் தெளிவு உடையதும் சூழ்நிலைகளுக்கும் கருத்துகளுக்கும் பொருத்தமான குறிப்புகள் உள்ளதும் சுய சிந்தனைகளை உள்வாங்குவதும் வெளிப்படுத்துகின்றதுமாக இருக்க வேண்டும் செயல்பாட்டுக் குறிப்பேடு. செய்திகளைப் புரிந்துகொண்டு தனது நிலையில் வெளிப்படுத்த வேண்டும். செயல்பாட்டுக் குறிப்பேட்டிற்கு முழுமையும் தொடர்ச்சியும் இருக்க வேண்டும்.

**படைப்புத் தொகுப்பு மதிப்பீடு** (Portfolio)

கற்றல் செயல்பாடுகளின் வழியாகக் கடந்து செல்லும்போது உருவாகும் எல்லா உற்பத்திப் பொருட்களுடையவும் (படைப்புகள்) ஒரு தொகுப்புத்தான் படைப்புத் தொகுப்பு (Portfolio). கற்றல் தொடர்பாக மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பின்னூட்டம் அளிப்பது என்பதுதான் படைப்புத் தொகுப்பின் நோக்கம்.

படைப்புத் தொகுப்பில் உள்ளடங்க வேண்டியவை

- செயல்பாட்டுக் குறிப்பேடு (Activity Log)
- பிற கற்றல் சான்றுகள், படங்கள், சேகரிப்புகள், படைப்புகள், கற்றல் கருவிகள், ICT வாய்ப்புகள் வழியாக உருவாக்கிய படைப்புகள் முதலானவை.
- சுய படைப்புகள்
- பயிற்சித்தாள்கள்

படைப்புத் தொகுப்பின் மதிப்பீட்டிற்காகக் கீழ்வரும் குறிப்புகளைப் பயன்படுத்தலாம்.

- கருத்துத் தெளிவு
- முடிவுகளின் உள்வாங்கல்
- உகந்த வடிவமைப்பு
- முழுமை
- தனித்தன்மை (Originality)

**கற்றல் செயல்முறை மற்றும் படைப்புத் தொகுப்பின் மதிப்பெண் கணக்கிடும் முறை**

ஒவ்வொரு செயல்பாட்டையும் மேல் குறிப்பிட்டுள்ள குறிப்புகளைப் பயன்படுத்தி எல்லா மாணவர்களையும் மதிப்பிட்டு,

மதிப்பெண் பதிவு செய்ய வேண்டும் என்றில்லை. குறிப்புகளின் அடிப்படையில் ஒரு பருவத்தின் மொத்தச் செயல்பாட்டை மதிப்பீடு செய்தால் போதுமானது. Teacher Planner இல் உள்ள குறிப்புகள், செயல்பாட்டுக் குறிப்பேட்டில் பதிவு செய்தவை ஆகியவற்றின் அடிப்படையில் பருவ இறுதியில் இவற்றை ஒருங்கிணைத்து மிகுந்த பங்கேற்புத் தன்மை கொண்டவர்கள், சராசரி பங்கேற்புத் தன்மை கொண்டவர்கள், இனியும் மேம்பட வேண்டியவர்கள் என்றிவ்வாறு மதிப்பீடு செய்து 4/3/2/1 மதிப்பெண் வழங்கலாம். 5 குறிப்புகளையும் பரிசோதித்து ஒவ்வொரு குறிப்பிற்கும் மதிப்பெண் வழங்கும்போது அதிகபட்சமாக 20 மதிப்பெண் எனக் கொள்ளலாம்.

### அலகு மதிப்பீடு

ஓர் அலகில் வெவ்வேறு கற்றல் அடைவுகளுக்கான செயல்பாடுகள் பரஸ்பரத் தொடர்புடன் தரப்பட்டுள்ளன. இதற்கு ஒரு முழுமைத் தன்மை உண்டு. ஓர் அலகில் மாணவனின் கற்றலை மதிப்பிடுவதன் மூலம் இந்த முழுமைத் தன்மையையே (முழு கற்றல் அடைவுகளையும் கருத்தில் கொண்டு) மதிப்பிடுகிறோம். நடைமுறையிலுள்ள அலகு அடிப்படையிலான மதிப்பீட்டு முறைகளுக்கு மேலாக வாய்மொழி மதிப்பீடு, வினாடி வினா நிகழ்ச்சி, திறந்த நூல் மதிப்பீடு, வினாக்கள் உருவாக்கலும் விடைக்குறிப்புகள் கண்டடைதலும், புதிய படைப்புகளை மதிப்பிடுதல் ஆகியவற்றையும் அலகு மதிப்பீட்டின்போது கவனத்தில் கொள்ளலாம். குறிப்பிட்ட அலகின் கற்றல் அடைவுகளில் மாணவன் எந்த நிலையில் உள்ளான் என்பதைக் கண்டறிய உதவும் தரஅளவுகோல், சோதனைப் பட்டியல் போன்றவற்றையும் பயன்படுத்தலாம். அலகு மதிப்பீடு கற்றல் செயல்பாடுகளுடன் இயல்பாக நடக்க வேண்டும்.

அலகு மதிப்பீட்டின்போது செயல்பாட்டுக் குறிப்புகளின் அடிப்படையில் மதிப்பெண் வழங்கி, பருவ இறுதியில் அதற்குரிய படிவத்தில் அதனைப் பதிவு செய்ய வேண்டும். இதற்குப் பயன்படுத்திய அளவுகோலின் இயல்புக்குப் பொருத்தமான குறிப்புகளை ஆசிரியர் தயாராக்க வேண்டும். ஒரு பருவத்தில் ஒன்றிற்கு மேற்பட்ட அலகுகள் மதிப்பீடு செய்ய வேண்டி வரலாம் என்பதனால் அலகு மதிப்பீட்டின் சராசரியைத்தான் பருவ இறுதியில் சேர்க்க வேண்டும்.

### தொடர் மதிப்பீட்டு (CE) மதிப்பெண் காணும் முறை

ஒவ்வொரு பாடப் பொருளினுடையவும் கற்றல் செயல்முறை, படைப்புத் தொகுப்பு, அலகு மதிப்பீடு என்பவற்றில் ஒவ்வொன்றினுடையவும் அதிகபட்ச மதிப்பெண் 20 ஆகும். அவற்றின் சராசரியைக் கணக்கிட்டுப் பருவநிலை மதிப்பெண் பதிவு செய்யலாம். இதை ஒருங்கிணைத்துப் பதிவு செய்வதற்கு பின் இணைப்பு (annexure-1) படிவத்தைப் பயன்படுத்தலாம்.

### பருவ மதிப்பீடு (TE)

வகுப்பறைச் செயல்பாடுகளின் வழியாக ஒவ்வொரு மாணவனும் எந்த அளவுக்குக் கற்றல் அடைவுகளை அடைந்துள்ளான் என்பதை ஒவ்வொரு பருவத்தின் இறுதியிலும் மதிப்பிட வேண்டியது இன்றியமையாததாகும். மொழிப் பாடத்தைப் பொறுத்தவரை ஒரு பருவத்தில் எடுத்துக்கொண்ட அலகுகளின் கற்றல் அடைவுகளின் அடிப்படையில் வெளியீட்டு வடிவங்கள், மொழி இயல்புகள், மொழித் திறன்கள், என்னும் மண்டலங்களைக் கருத்தில் கொண்ட பருவ மதிப்பீடு நடத்தவேண்டும். உள்ளடக்கங்களுக்கும் திறன்களுக்கும் முக்கியத்துவம் அளித்துப் பன்முகத் தன்மை கொண்ட வினாமாதிரிகளை உட்படுத்தலாம். பிற பாடங்களுக்கு அலகு உள்ளடக்கத்தின் அடிப்படையில் பருவ மதிப்பீடு நடத்த வேண்டும். கற்றல் அடைவுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும் நிலையில் கருத்துகளையும் திறன்களையும் மதிப்பீடு செய்ய உதவும் வினாக்கள் தயார் செய்யலாம்.

ஒவ்வொரு அலகு / கருத்து மண்டலத்திற்கும் பல்வேறு நிலையிலான உளச் செயல்முறைகளுக்கும் (அறிவை உள்வாங்குதல்/முடிவை அடைதல், கருத்துகள்/முடிவுகள் என்பவற்றின் பயன்பாடு, பகுப்பாய்வும் முடிவு கண்டடைதலும், மதிப்பீடு, படைப்பு முதலான உளச் செயல்முறைகள்) சரியான முன்னுரிமை (Weightage) வழங்கி வினாவடிவமைப்பு (Blue print) தயாராக்கிப் பன்முகத் தன்மை கொண்ட வினாக்கள் உட்படுத்தப்பட்டுள்ளன என்பதை உறுதிப்படுத்திக் கொண்டு வினாத்தாள் தயாரிக்க வேண்டும். வினாக்களுக்கு உகந்த விடைக்குறிப்புகள் உருவாக்கி அவற்றின் அடிப்படையில் மதிப்பீடு செய்ய வேண்டும்.

### செய்முறை மதிப்பீடு (PE)

கற்றல் செயல்பாட்டின் ஒரு பகுதியாக நடக்கின்ற செய்முறைகள் அதன் பதிவுகள் ஆகியவை தொடர்ந்து நடைபெற வேண்டும். உள்ளடக்கம் தொடர்பாக நடக்க வேண்டிய செய்முறைகள் அந்தந்த உள்ளடக்கப் பரிமாற்றத்தின்போதே நடைபெற வேண்டும். இத்தகைய பதிவு செய்தல்களுக்கு செய்முறை நாளேட்டைப் பயன்படுத்தலாம்.

செய்முறை உள்ள பாடங்கள் தொடர்பான செய்முறைத் தேர்வுகள் இரண்டாமாண்டு இறுதியில் நடத்தப்பட வேண்டும். ஒன்றும் இரண்டும் வருடங்களுக்கான செய்முறைகளின் பதிவுகள் செய்யப்பட்ட செய்முறை நாளேடும் இரண்டாமாண்டு இறுதியில் நடத்தும் செய்முறைத் தேர்வும் புறத் தேர்வாளர்கள் பரிசோதித்து மதிப்பெண் வழங்க வேண்டும்.

### உடல் நல – விளையாட்டுக் கல்வி – மதிப்பீட்டு முறை

உடல்நலம் மற்றும் விளையாட்டுக் கல்வியை ஓர் அறிவுசார் பாடப்பொருள் என்ற நிலையில் 2014-15 கல்வியாண்டு முதல் கருதப்பட்டு வருகின்றது. மாணவனின் உடல் மற்றும் உள ரீதியான வளர்ச்சிகள் கூடுதலாக நடைபெறுவது குமரப் பருவத்திலாகும். உடல்நலப் பழக்க வழக்கங்கள் தொடர்பானதும், விளையாட்டுச் செயல்பாடுகளில் ஈடுபடுவதன்

தேவை தொடர்பானதுமான சரியான எண்ணங்களை அடைவதற்கான வாய்ப்பு அளிக்க வேண்டியுள்ளது. உடல்நல – விளையாட்டுக் கல்வியில் நடைபெறும் செயல்பாடுகள் மதிப்பிடப்படவேண்டும்.

இது தொடர்பான விளக்கங்கள் உடல்நல – விளையாட்டுக் கல்வி – மேனிலை வளநூலில் கொடுக்கப்பட்டுள்ளன.

**சமூக – உணர்வு மண்டலங்களின் மதிப்பீடு**

அறிவுசார் மண்டலத்தைப் போலவே முக்கியமானதுதான் சமூக – உணர்வு நிலை மண்டலங்களுக்கான மதிப்பீடும். அறிவதற்கான கல்வி, செய்வதற்கான கல்வி, சேர்ந்து வாழ்வதற்கான கல்வி, இருத்தலுக்கான கல்வி (Learning to know, Learning to do, Learning to live together, Learning to be) ஆகியவற்றுடன் தொடர்புடைய திறன்கள் இங்கு கருத்தில் கொள்ளப்படவேண்டும். சமூக – உணர்வு மண்டலங் களின் மதிப்பீட்டுடன் தொடர்புபடுத்திக் கீழ்வரும் திறன்கள் மதிப்பிடப்பட வேண்டும்.

1. கருத்துப் பரிமாற்றத் திறன் (Communication Skills)
2. தனிமனிதத் திறன் (Interpersonal Skills)
3. அனுதாபம் (Empathy)
4. உணர்ச்சிகளோடு பொருத்தப்படுதல் (Coping with Emotions)
5. மன அழுத்தங்களுடன் பொருத்தப்படுதல் (Coping with Stress)
6. பிரச்சினைத் தீர்வுத் திறன் (Problem solving Skill)
7. தீர்மானங்கள் எடுத்தல் (Decision Making)
8. விமர்சன பூர்வமான சிந்தனைகள் (Critical Thinking)
9. படைப்புத் திறன் (Creative Thinking Skills)
10. சுய விழிப்புணர்வு (Self - Awareness)

அறிவுசார் மண்டலங்களில் வெவ்வேறு பாடப்பொருள்களை நடத்தும் ஆசிரியரே இவற்றின் மதிப்பீட்டையும் நடத்த வேண்டும். அந்தந்தப் பாடப்பொருளின் செயல்முறை மதிப்பீட்டின் பகுதியாக இந்த மதிப்பீடும் நடத்தப்பட வேண்டும். இங்குச் செயல்முறைத் திறன்களை மதிப்பிடுவதுடன் மதிப்புகள்/மனநிலைகள் என்பவை உருவப்படுவதுடன் தொடர்புடைய மதிப்பீடும் நடக்க வேண்டும்.

சமூக – உணர்வு மண்டலங்களில் மாணவனின் மேன்மை தொடர்பான நற்பண்புகளைக் கண்டறிந்து பதிவு செய்தல் நடைபெற வேண்டும். ஒவ்வொரு மாணவனுடையவும் பண்புசார் திறன்களை ஊக்கப்படுத்தவும் வேண்டும். இம் மேன்மைகளை Teacher Planner-லும் ஒருங்கிணைத்த செய்திகளைப் பின் இணைப்பு 2-லும் பதிவு செய்ய வேண்டும்.

**கலை, சமூகம், பண்பாடு மற்றும் தொழில் முறையிலான திறன்கள்**

மேனிலைத் தலத்தில் மாணவனின் அனைத்து நிலையிலுமான வளர்ச்சியை உறுதிப்படுத்துவதற்காகக் கற்றலின் கூடவே ரசனைத் திறன்களும் படைப்பாக்கம் தொடர்பான ஆற்றல்களும் கலை ஆர்வங்களும் சமூகப் பண்பாட்டுச் செயல்கள் நடைமுறைப்படுத்துவதற்கான மனநிலையும் உருவப்படுத்த வேண்டும். மாதம் ஒரு முறையாவது இத்தகைய நிகழ்வுகளில் பங்குபெறுவதற்கான வாய்ப்பு கிடைக்க வேண்டும். இதன் பொருட்டு மேனிலைத் தலத்தில் கலையரங்கம், (Career Guidance) சமூகம் தொடர்பான செயல்கள் (NSS, NCC) பல்வேறு மன்றங்கள் போன்றவற்றைப் பயன்படுத்தலாம்.

மேனிலை வகுப்பில் படிக்கும் அனைத்து மாணவர்களும் ஏதேனும் செயல்பாட்டில் பங்கேற்பாளர்கள் ஆகவேண்டும். பங்கேற்பு தொடர்பான மாணவனின் திறமைக்குத் தனித்தரச் சான்றிதழ் வழங்கலாம்.

| | | |
|---|---|---|
| மிகவும் சிறந்த செயலுக்கு | - | (A) தரம் |
| சிறந்த செயலுக்கு | - | (B) தரம் |
| திருப்திகரமான செயலுக்கு | - | (C) தரம் |
| பங்கேற்பு மட்டும் | - | (D) தரம் |

**மதிப்பீடு – வருடாந்திர ஒருங்கிணைப்பு**

பருவ இறுதியில் கிடைக்கின்ற தொடர் மதிப்பீடு CE மதிப்பெண்களைக் கருத்தில் கொள்ளும்போது 3 பருவங்களிலும் மாணவனுக்குக் கிடைத்த அதிகபட்ச மதிப்பெண்ணே CE யின் வருடாந்திர ஒட்டுமொத்த மதிப்பெண். இதனைப் பின்னிணைப்பு – 2 படிவத்தில் இறுதி (Final) மதிப்பெண் என்ற கட்டத்தில் பதிவு செய்ய வேண்டும். மாணவனின் ஒவ்வொரு பாடப்பொருள் தொடர்பான இறுதி CE மதிப்பெண்தான் இது. இனி ஒவ்வொரு பாடப்பொருளுக்குமான பருவ மதிப்பெண்கள் (TE) கண்டறியவும், தொடர்ந்து CE, TE ஆகியவற்றின் மொத்த மதிப்பெண்ணைக் காணவும் வேண்டும். இதுதான் ஒரு மாணவனின் ஒரு பாடப் பொருளுக்கான மொத்த மதிப்பெண். செய்முறைகள் உள்ள பாடப்பொருள் தொடர்பான அந்த மதிப்பெண்ணையும் சேர்த்து மொத்த மதிப்பெண்ணைக் கணக்கிடலாம்.

மேனிலை பருவத் தேர்வு என்பது பொதுத் தேர்வு ஆனதால் TE யின் எழுத்துத் தேர்வு, செய்முறைத் தேர்வு ஆகியவற்றின் இறுதி மதிப்பெண்கள் பொதுத் தேர்வின் மதிப்பெண்ணாக இருக்கும்.

**மேனிலை வகுப்பு வெவ்வேறு பாடங்களின்**

**CE, TE மதிப்பெண் விளக்கம்**

| No | Part | Paper | Score | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | CE | TE | PE | Total |
| 1. | I | English | 20 | 80 | | 100 |
| 2. | II | 2nd Language | 20 | 80 | | 100 |
| 3. | III | Paper 1 (without practical) | 20 | 80 | | 100 |
| | | or | | | | |
| | | (with practical) | 20 | 60 | 20 | |
| 4. | | Paper 2 (without practical) | 20 | 80 | | 100 |
| | | or | | | | |
| | | (with practical) | 20 | 60 | 20 | |
| 5. | | Paper 3 (without practical) | 20 | 80 | | 100 |
| | | or | | | | |
| | | (with practical) | 20 | 60 | 20 | |
| 6. | | Paper 4 (without practical) | 20 | 80 | | 100 |
| | | or | | | | |
| | | (with practical) | 20 | 60 | 20 | |
| 7. | | Health & Physical Education | 20 | | 30 | 50 |

சமூக – உணர்வு மண்டலத் திறன்களில் ஒவ்வொரு மாணவனின் மிகுந்த திறனை அந்தந்தக் கட்டங்களில் குறிப்பிட வேண்டும். திறன்கள் சிறிதும் அடையாதவர் களை, திறன்கள் அடையவில்லை என்று குறிப்பிட வேண்டும்.

### தர நிர்ணய முறை

மேனிலை, வகுப்பில் அறிவுசார் பாடங்களின் மதிப்பீட்டிற்காக, 'தரமுறை' பயன்படுத்தப்படுகிறது. இதற்காக ஒன்பது புள்ளி முழுமைத்தர வரிசை (Nine Point Absolute Grading) முறை பின்பற்றப் படுகிறது. கீழ்வரும் பட்டியலை இதற்காகப் பயன்படுத்தலாம்.

| மதிப்பெண் விழுக்காடு | தரம் |
|---|---|
| 90 - 100 | A+ |
| 80 - 89 | A |
| 70 - 79 | B+ |
| 60 - 69 | B |
| 50 - 59 | C+ |
| 40 - 49 | C |
| 30 - 39 | D+ |
| 20 - 29 | D |
| Below 20 | E |

மாணவன் மேற்படிப்புக்குத் தகுதி பெறவேண்டுமென்றால் மேனிலை வகுப்பில் ஒவ்வொரு பாடத்திற்கும் CE + TE (பொதுத் தேர்வு) கணக்கிடும்போது குறைந்த அளவு D+ தரமாவது (30–39 விழுக்காடு) பெற்றிருக்க வேண்டும். இதனுடன் பொதுத் தேர்வுக்குத் (TE) தனியாகக் குறைந்த அளவு D+ பெற்றிருக்கவும் வேண்டும்.

இவ்வாறாக அறிவுசார் நிலையிலும் சமூக உணர்வு நிலையிலும் மாணவனின் திறன்களை மதிப்பிட்டுக் கற்றல் அடைவுகளை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ள இயலும். இந்த மதிப்பீடு தொடர்ச்சியாகவும்

முழுமையாகவும் நடைமுறைப்படுத்துவதற்கான ஒருமித்த முயற்சி மிகவும் தேவை. ஆசிரியர் தொகுப்பு மையக் கூட்டங்களின் (Cluster) வாயிலாக இத்தகைய மதிப்பீடுகளைக் கூடுதல் சிறப்பாக்கவும் நடைமுறைப்படுத்தவும் இயலும்.

மதிப்பீடு

அணுகுமுறை : கற்றல் அடைவுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும் அணுகுமுறை

தொடர்ச்சியும், முழுமையுமான மதிப்பீடு CCE

அறிவு மண்டலம்

- தொடர் மதிப்பீடு CE
  - கற்றல் செயல் முறையை மதிப்பிடுதல்
  - படைப்புத் தொகுப்பு மதிப்பீடு
  - அலகு அடிப்படையிலான மதிப்பீடு
- பருவ மதிப்பீடு TE
  - கருத்துகள், செயல்முறைகள், கற்றல் அடைவுகள் போன்றவற்றிற்கு முக்கியத்துவம் அளிப்பது.

சமூக உணர்வு மண்டலம்

1. கருத்துப் பரிமாற்றத் திறன்.
2. தனி மனிதத் திறன்.
3. அனுதாபம்
4. உணர்வுகளோடு பொருத்தப்படுதல்.
5. மன அழுத்தங்களுடன் பொருத்தப்படுதல்
6. பிரச்சினைத் தீர்வுத் திறன்
7. தீர்மானங்கள் எடுத்தல்.
8. விமர்சன பூர்வமான சிந்தனைகள்
9. படைப்புத் திறன்
10. சுய விழிப்புணர்வு

**CE, TE ஆகியவை ஒவ்வொரு பருவத்திலும் பதிவு செய்வதற்கான பாடப்பொருள் அடிப்படையிலான ஒருங்கிணைப்புப் படிவம்**

பருவம் : 1 / 2 / 3

பொருள் ................................................வகுப்பு..............................பிரிவு ..................

| எண் | மாணவர் பெயர் | தொடர் மதிப்பீடு | | | மொத்தம் தொடர் மதிப்பீடு | பருவ மதிப்பீடு மதிப்பெண் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | செயல்முறை | படைப்புத் தொகுப்பு | அலகு மதிப்பீடு | | | |
| | | | | | | | |

Annexure 2

Annual Consolidation Format - Higher Secondary Level

Class :                Division :

Year :

| No. | Name of Student | Term | Part I (language) | | | Part 2 (2nd language) | | | Part 3 | | | | | | | | | | | | | | | Socio-Emotional Skills |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | Paper 1 | | | Paper 2 | | | Paper 3 | | | Paper 4 | | | Health & Physical Edn. | | | |
| | | I | CE | TE | Total | CE | TE | Total | CE | TE | Total | CE | TE | Total | CE | TE | Total | CE | TE | Total | CE | TE | Total | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | II | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | III | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | Final Score | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |

## வருடப் பணிப்பகிர்வு
## வகுப்பு : 12 (தமிழ்)
## 2015 - 2016
## கற்பிக்கப்பட வேண்டிய அலகுகள்

| Term | Month | Units |
|---|---|---|
| முதல் பருவம் | June | அலகு 1 வயலும் வாழ்வும்<br>• ஏறுபூட்டி<br>• நம்ம நிலம்<br>• பசும் பூமி |
| | July | அலகு 2 கலையும் பண்பாடும்<br>• நாட்டார் பண்பாடு<br>• செவ்விலக்கியப் பண்பாடு |
| | August | • கூத்துக்கலை<br>முதல் நிலை மதிப்பீடு |
| இரண்டாம் பருவம் | Septermber | அலகு 3 அறிவியல் தமிழ்<br>• பழந்தமிழ்<br>• இளந்தமிழ் |
| | October | • வளர்தமிழ்<br>அலகு 4 என்றும் நலமுடன்<br>• நலம் நாடி |
| | November | • சுவரிருந்தால்<br>• ஆடுவோம் பாடுவோம் |
| | December | அலகு 5 சமூகச் சீர்திருத்தம்<br>• சுவடுகள்<br>இரண்டாம் நிலை மதிப்பீடு |
| மூன்றாம் பருவம் | January | • புத்துணர்வு<br>• எழுச்சி |
| | February | மீள்பார்வை |
| | March | ஆண்டு இறுதி மதிப்பீடு |

# கற்றல் அடைவுகள் (LOs)
# தமிழ்

## 1. வயலும் வாழ்வும்

1.1 திருக்குறள், முக்கூடற்பள்ளு கூறும் வேளாண்மையின் மகத்துவங்களைக் குறித்து கட்டுரை எழுதுகின்றனர்.

1.2 இலக்கியங்கள் கூறும் வேளாண் தொழிலின் மகத்துவம் அறிந்து கட்டுரை எழுதுகிறார்கள்.

1.3 பாடல்களை இரசித்துக் கவிதைக்கு நயம் பாராட்டிக் குறிப்புகள் எழுது கின்றனர்.

1.4 வேளாண் தொடர்பான படைப்பிலக்கியங்களில் வெளிப்படும் பிரச்சினைகளைப் பகுப்பாய்வு செய்து குறிப்புகள் எழுதுகிறார்கள்.

1.5 வேளாண் பிரச்சினைகளைக் கண்டறிய அனுபவங்களைச் சேகரிக்கிறார்கள்.

1.6 பரம்பரையான விவசாய முறைக்கும் இன்றைய விவசாய முறைக்கு மிடை யேயான ஒற்றுமை வேற்றுமைகளை ஒப்பீட்டுக் குறிப்புகளாக எழுதுதல்.

1.7 வேளாண் தொடர்பான பாடல்கள், உரைகள், கவிதைகளைப் படித்து விமர்சனக் குறிப்பு எழுதுவதுடன் சொந்தமாகக் கவிதை எழுதுகின்றனர்.

1.8 செய்திகள். தொகுத்து வேளாண் மலர் தயாரிக்கிறார்கள்.

1.9 வேளாண்மை தொடர்பான கண் காட்சி நடத்தி மலர் வெளியிடு கின்றனர்.

## 2. கலையும் பண்பாடும்

2.1 நாட்டார் வழக்காறுகளில் அமைந்த பண்பாட்டுக்கூறுகளை அறிந்து வெளியிடுகின்றனர்.

2.2 செவ்விலக்கியப் பண்பாட்டுடன் நாட்டார் இலக்கியப் பண்பாட் டினை ஒப்பிட்டுப் பேசுகிறார்கள்.

2.3 கதை, கட்டுரைப் பாடல்கள் போன் றவற்றை வாசித்து உணர்ந்து அவற்றின் அடிப்படையில் சிறு வினாக்கள் தயாரிக்கின்றனர்.

2.4 தமிழகப் பண்பாட்டுடன் கேரள சமகாலப் பண்பாட்டை ஒப்பிட்டும் வேறுபடுத்தியும் குறிப்புகள் எழுதுகிறார்கள்.

2.5 கலைகளில் சிறந்த சான்றோர்களை நேர்காணல் நடத்திக் கலைகள் குறித்த செய்திகளைத் தொகு கின்றனர்.

2.6 இசை வடிவம் அமைந்த நாடகத் தினை வசனவடிவில் வடிவமாற்றம் செய்கின்றனர். நடித்து வெளியிடு கின்றனர்.

2.7 கலைஞர்களின் வளர்ச்சிப் படி களை உற்றுநோக்கிப் பாராட் டுரை தயார்செய்கிறார்கள்.

2.8 கலைகள் பண்பாடு போன்றவை தொடர்பான நாடகங்கள் குறும் படங்கள் தயாரித்து வெளியிடு கின்றனர்.

## 3. அறிவியல் தமிழ்

3.1 பண்டைய இலக்கியங்களில் காணப் படும் அறிவியல் செய்திகளைத் தொகுத்து எழுதுகின்றனர்.

3.2 அறிவியல் கருத்தரங்கு நிகழ்வுகளில் பங்குபெற்று உரையாற்றக் குறிப்புகள் தயாரிக்கின்றனர்.

3.3 கவிதைகளை இரசித்து நயம் பாரட்டவும், அதைப் போன்ற ஒன்றைப் படைக்கவும் செய்கிறார்கள்.

3.4 இதழ்களில் வெளியிடும் வண்ணம் விமர்சனக் கட்டுரைகள் எழுது கின்றனர்.

3.5 தலைப்புகளுக்குத் தகுந்த செய்தி களைக் குறிப்பெடுக்கும் ஆற்றலும், பேச்சுத்திறனும் பெறுகின்றனர்.

3.6 பல்வேறு இலக்கிய மொழிநடைகள் அறிந்து வெளிப்படுத்துகின்றனர்.

3.7 பிறமொழிச் சொற்களுக்கு இணையான புதிய சொற்களைத் தொகுத்துத் தலைச்சொல் அகராதி தயாரிக் கின்றனர்.

3.8 அறிவியல் தமிழின் சிறப்பைப் பொது மக்களுக்கு உணர்த்திட விழிப்புணர்வு முகாம்கள் நடத்துகின்றனர். கருத் தரங்கம் நடத்துகின்றனர்.

## 4. என்றும் நலமுடன்

4.1 உணவு தொடர்பான பழமொழிகள், திருக்குறள் போன்றவற்றைத் தொகுக்கிறார்கள்.

4.2 உணவின் முக்கியத்துவம் குறித்தும், இன்றைய உணவுப் பழக்கம் குறித்தும் குறிப்புகள் எழுதுகிறார் கள்.

4.3 மாறிவரும் உணவுப் பழக்கவழக் கங்கள் பல நோய்கள் வருவதற்குக் காரணமாகின்றன என்பதை உணர்ந்து கட்டுரை எழுதுகிறார்கள்.

4.4 உடற்பயிற்சியின் அவசியத்தை அறிந்து விழிப்புணர்வு வாக்கியங்கள் தயார்செய்கிறார்கள்.

4.5 உடற்பயிற்சியின் அவசியத்தை உணர்த்தும் சொற்பொழிவு உரை தயாரிக்கிறார்கள்.

4.6 உடற்பயிற்சியின் சிறப்புகளையும் அவசியத்தையும் அறிந்து பத்திரிகைச் செய்தி உருவாக்குகிறார் கள்.

4.7 யோக குறித்தும் அதன் நன்மைகள் குறித்தும் அறிந்து ஈடுபடுகிறார்கள்.

4.8 நாட்டுப்புற விளையாட்டு குறித்த விளக்கக் குறிப்பு தயாரிக்கிறார்கள். நிகழ்த்துகிறார்கள்.

4.9 விளையாட்டில் சிறந்த வீரர்கள் குறித்த படத்தொகுப்பு மற்றும் செய்தித்தொகுப்பு உருவாக்கு கிறார்கள்.

4.10 உடல் நலனின் சிறப்புகளையும் அதனை வருமுன் காத்தலோடு பாதுகாக்க வேண்டும் என்பதனை உணர்ந்திடும் விதத்தில் விழிப்புணர்வு முகாம் நடத்துகின்றார்கள்.

## 5. சமூக சீர்திருத்தம்

5.1 சமூகச் சீர்திருத்தத்தைப் பற்றி விவாதிக்கின்றனர். அதில் ஈடுபட்ட பெரியோர்களின் செயல்களைத் தொகுத்து வெளியிடுகின்றனர்.

5.2 சமூகச் சீர்திருத்தத்தின் தேவையைத் தமக்குக் கிடைத்த செய்திகள், அனுபவங்கள் வாயிலாக விமர்சனக் கட்டுரையாக வெளியிடுகின்றனர்.

5.3 ஒடுக்கப்பட்டவர்களின் அவலநிலையை விமர்சித்தும் ஆய்வு செய்தும் கட்டுரை எழுதுகின்றனர்.

5.4 சமூக ஏற்றத்தாழ்வுகள் குறித்து விழிப்புணர்வு சொற்பொழிவு ஆற்றுகின்றனர்.

5.5 கேரளச் சமூகச் சீர்திருத்த வாதிகளைக் குறித்தான படங்கள், தகவல்கள் சேகரித்து விளக்கத் தொகுப்பு உருவாக்கு கிறார்கள்.

5.6 கவிதைகள் வெளிப்பட்ட சூழலைப்புரிந்து நயம் பாராட்டுகின்றனர்.

5.7 மறுமலர்ச்சி நாயகர்களைப் பற்றிய செய்திகள் சேகரிக் கிறார்கள், கட்டுரை எழுது கிறார்கள்.

5.8 பாடப்பகுதி சுட்டிக்காட்டும் நற்கருத்துகளை உள்வாங்கி செயல்படுகிறார்கள்.

# 1

# வயலும் வாழ்வும்

## அலகு அறிமுகம்

இந்திய நாட்டின் மிக முக்கியமான தொழில்களுள் ஒன்று உழவுத்தொழில். சங்க காலம் முதலே உழவுத் தொழிலின் மேன்மை குறித்து பல்வேறு இலக்கியங்கள் பேசி வருகின்றன. உழவுத்தொழிலுக்கும் இலக்கியங்களுக்கிடையே உள்ள தொடர்பை மாணவர்களுக்கு எடுத்துரைக்கும் வண்ணம் இவ்வலகு ஏறு பூட்டி, நம்ம நிலம், பசும் பூமி என மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

ஏறு பூட்டி எனும் பகுதியில் திருக்குறளில் உழவு எனும் அதிகாரமும் மண்நேசம் எனம் சிறுகதையும் ஒரு நாட்டுப்புறப்பாடலும் இடம்பெற்றுள்ளன. உழுதுண்டு வாழ்வதன் பெருமையும் உழவுத்தொழிலின் மகத்துவமும் பண்டைக்காலம் முதலே உழவுத்தொழிலில் தமிழர்கள் தனிக்கவனம் செலுத்தியிருந்தார்கள் என்பதும் உழவு என்றும் அதிகாரம் மூலம் புலப்படுகிறது. ‘மண்நேசம்’ எனும் சிறுகதையில் உழவுத்தொழிலையும் பிறந்த மண்ணையும் உயிருக்கும் மேலாக நேசிக்கும் பாட்டையா என்ற விவசாயியின் தியாக மனப்பான்மை சித்தரிக்கப்பட்டுள்ளது. அறிவியல் வளர்ச்சியின் காரணமாகப் புதிய இயந்திரங்கள் உபயோகித்தாலும் மண்ணை நேசிக்கும் மனிதமனம் இல்லையென்றால் அங்கு நல்ல விவசாயம் நடைபெறாது. பாமர மக்களிடமும் அருமையான கவிதைகள் பிறக்கின்றன என்பதற்குப் பயிர்த்தொழில் பாடல்கள் எனும் தலைப்பில் இடம் பெறும் நாட்டுப்புறப் பாடல்கள் சான்று பகர்கின்றன.

நம்ம நிலம் எனும் பகுதியில் இயற்கையின் மகத்துவத்தை எடுத்துரைக்கும் ஒரு புதுக்கவிதையும், ஒரு தேங்காய் விவசாயியுடனான நேர்முகமும் இடம்பெற்றுள்ளன. இன்றைய இரசாயன உரங்களும் புதிய கண்டுபிடிப்புகளும் நமது நிலத்தை எப்படியெல்லாம் புண்படுத்தி வருகின்றன என்று கூறி, நமது மூதாதையர் விவசாயம் செய்து மண்ணை எவ்வாறு பாதுகாத்தார்களோ அதேபோல் நாமும் நமது மண்ணைப் பாதுகாக்க வேண்டுமென்று புதுக்கவிதை எடுத்துரைக்கின்றது. இதேபோல் இன்றைய தேங்காய் விவசாயம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் அதற்கான தீர்வுகளையும் மதுரை மாவட்டத்தில் தேங்காய் விவசாயம் செய்து வரும் ஒருவருடனான நேர்காணல் தெளிவாக எடுத்துரைக்கின்றது.

பசும்பூமி எனும் பகுதியில் சுற்றுச்சூழலைக் காக்கும் ‘இயற்கை வேளாண்மை’ என்ற கட்டுரையும் பொங்கலோ பொங்கல் என்ற புதுக்கவிதையும் இடம்பெற்றுள்ளன. இயற்கை வேளாண்மையையும் நமது மரபுவழி வேளாண்மையையும் எடுத்துரைப்பதோடு ஓய்வு மனிதனுக்கு மட்டுமல்ல உணவு தரும் மண்ணுக்கும் வேண்டும் என்றும் இக்கட்டுரை கூறுகிறது.

தற்போதைய மாணவர்களுக்கு வேளாண்மையின் மகத்துவத்தையும் வேளாண்மைக்கும் இலக்கியத்திற்குமிடையேயுள்ள தொடர்பையும் எடுத்துக்கூறுவதற்கு இந்த அலகு உறுதுணைபுரியும் என்பதில் ஐயமில்லை.

## கற்றல் அடைவுகள்

- ❖ இலக்கியங்கள் கூறும் வேளாண் தொழிலின் மகத்துவம் அறிகிறார்கள். அதுகுறித்துக் கட்டுரை எழுதுகிறார்கள்.
- ❖ வேளாண் தொடர்பான படைப்பிலக்கியங்களில் வெளிப்படும் பிரச்சினைகளைப் பகுப்பாய்வு செய்து விமர்சனக் குறிப்பு எழுதுகிறார்கள்.
- ❖ நாட்டுப்புறப் பாடல்களில் அமைந்த செய்திகளை இரசித்து நயம் பாராட்டுகின்றனர்.
- ❖ சுற்றுப்புறத்தூய்மை மாசுக்கட்டுப்பாடு போன்றவை பற்றி விழிப்புணர்வு பெறுகிறார்கள். அவற்றை எழுத்துவடிவில் சுட்டிக் காட்டுகிறார்கள்.
- ❖ பயிரிடும் முறைகள் குறித்து ஒப்பீட்டுக்குறிப்புகள் எழுதுகிறார்கள்.
- ❖ வேளாண் தொடர்பான பாடல்கள், பழமொழிகள், செய்திகள் போன்றவற்றையும் படங்களையும் தொகுத்து வேளாண் மலர் தயாரித்து வெளியிடுகிறார்கள்.
- ❖ வேளாண்மை தொடர்பான கண்காட்சி நடத்தி, சமூக விழிப்புணர்வு ஏற்படுத்துகிறார்கள்.
- ❖ வேளாண் பிரச்சினைகளைக் கண்டறிய உதவும் அனுபவங்களைச் சேகரிக்கின்றனர்.

## மதிப்புகளும், மனப்பாங்கும்

- வேளாண்மையின் முக்கியத்துவத்தை உணர்ந்து வேளாண்மையில் ஈடுபடும் மனப்பாங்கு பெறுதல்.
- இயற்கை வேளாண்மைக்கும் நவீன கருவிகளைப் பயன்படுத்திச் செய்யப்படும் வேளாண்மைக்கும் இடையே உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை உணர்தல்.
- வேளாண்மைக்கும் இலக்கியத்திற்மிடையேயான தொடர்புகளை உணர்தல்.
- தமிழ் இலக்கியத்தில் இடம்பெறும் வேளாண் முன்னேற்றச் செய்திகளைப் புரிந்து கொள்ளல்.
- இரசாயண உரங்களால் மண் மற்றும் பயிரினங்கள் பாதிப்படைகின்றன எனும் செய்தியை உணர்தல்.

## பார்வை நூல்கள்

*திருக்குறள்*

*ஏர் எழுபது (கம்பர்)*

*முக்கூடற்பள்ளு*

*மூன்றாம் உலகப்போர் (கவிஞர் வைரமுத்து)*

*பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் பாடல்கள்*

*செம்மலர் - வேளாண் இதழ்*

*நெல்லைச் சிறுகதைகள் - தொகுப்பு கி.ராஜநாராயணன்*

*அப்துல் ரகுமான் - கவிதைகள்*

*மு. மேத்தா - கவிதை*

*தமிழச்சி தங்கப்பாண்டியன் - கவிதை*

அலகுச்சட்டம் (வயலும் வாழ்வும்) அலகு 1

| கருத்துகள்/திறன்கள் | கற்றல் செயல்பாடுகள்/ மதிப்பீடு | கற்றல் அடைவுகள் |
|---|---|---|
| வேளாண்மையைப் பாடுபொருளாகக் கொண்டும் இலக்கியங்கள் படைக்கப்படுகின்றன. | **கலந்துரையாடல் (குழுச்செயல்பாடு)**<br>திருக்குறள், முக்கூடற்பள்ளு போன்றவற்றில் வேளாண்மை குறித்த பகுதிகளைத் தொகுத்து அதில் கூறப்படும் வேளாண்மையின் கூறுகளையும் மேன்மைகளையும் குறித்து கலந்துரையாடுதல். தொகுத்து எழுதச் செய்தல். குழுச் செய்லபாடுகளின் அடிப்படையில் கருத்து, மொழிநடை இவற்றை ஆசிரியர் மதிப்பீடு செய்தல்.<br>**வேளாண்மை தொடர்பான பழமொழிகளைத் தொகுத்தல்**<br>மாணவர்களைத் தங்கள் பகுதியில் வழங்கி வரும் பழமொழிகளைத் தொகுக்கச் செய்தல். பழமொழிகள் கூறும் வேளாண் மரபுகளையும் உத்திகளையும் பாகுபாடு செய்கின்றனர். தனிநபர் அடிப்படையில் ஆசிரியர் மதிப்பீடு செய்தல்.<br>**மதிப்பீட்டுக் குறிப்புகள்**<br>கருத்துத் தொடர்பு, தரம், எண்ணிக்கை<br>**திறனாய்வுக் குறிப்புகள் தயாரித்தல்**<br>வேளாண்மையுடன் தொடர்புடைய கதைகளை மாணவர்களிடம் கூறச் சொல்லுதல். அக்கதைகளுடன் பாடப் பகுதியிலுள்ள மண்நேசம் சிறுகதையையும் வாசிக்கச் சொல்லுதல். கதையின் பாடுபொருள் பாத்திரபடைப்பு என்பவற்றை விவாதித்துக் குறிப்பேடுகளில் சிறுகுறிப்புகள் எடுக்கச் சொல்ல வேண்டும். தனிநபர் செயல்பாடுகளின் அடிப்படையில் ஆசிரியர் மதிப்பீடு செய்ய வேண்டும்.<br>**மதிப்பீட்டுக்குறிப்பு**<br>பாடுபொருள், பாத்திரப்படைப்பு, மொழிநடை<br>**வேளாண்மை தொடர்பான நாட்டுப்புறப் பாடல்களைத் தொகுத்தல்**<br>இணையம் (அல்லது) நூலகத்தின் உதவியுடன் வேளாண்மை தொடர்பான நாட்டுப்புறப்பாடல்களைத் தொகுக்கச் செய்தல். பாடப்பகுதியிலுள்ள நாட்டுப்புறப்பாடலை வகுப்பறையில் வாசிக்கச் செய்தல். முன்பு கொடுத்த | திருக்குறள், முக்கூடற்பள்ளு கூறும் வேளாண்மையின் மகத்துவங்களைக் குறித்து கட்டுரை எழுதுகின்றனர்.<br><br>இலக்கியங்கள் கூறும் வேளாண் தொழிலின் மகத்துவம் அறிந்து கட்டுரை எழுதுகிறார்கள். |

<table>
<tr><th>கருத்துகள்/திறன்கள்</th><th>கற்றல் செயல்பாடுகள்/ மதிப்பீடு</th><th>கற்றல் அடைவுகள்</th></tr>
<tr><td>இன்று விவசாயத்தில் ஈடுபடுவது விவசாயிகளுக்கு மகிழ்ச்சி தருவதாக இல்லை.</td><td>பாடலுடன் ஒப்பீடு செய்யச் சொல்லவும்.<br>நாட்டுப்புறப் பாடல்களின் சந்தத்தைச் சுட்டிக் காட்டித் தனித்தன்மைகளை விவாதித்தல்.<br>மதிப்பீட்டுக்குறிப்பு<br>ஒப்பீடு, ஓசை நயம், கருத்துத்தொடர்பு<br>நயம் பாராட்டல்<br>கம்பரின் ஏர் எழுபது செய்யுளை வகுப்பறையில் குழு அடிப்படையில் வாசித்துக் குறிப்புகள் எடுத்து நயம் பாராட்டச் செய்தல். குழு மதிப்பீடு<br>பத்திரிகைச் செய்திகளைச் சேகரித்து இதழ்களுக்கு அறிக்கை எழுதுதல்<br>இன்றைய விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைப் பற்றிய பத்திரிகைச் செய்திகளைச் சேகரிக்கச் சொல்லுதல். குழு அடிப்படையில் பிரச்சினைகளை விவாதித்தல். குறிப்புகள் எடுத்தல். பாடப்பகுதியிலுள்ள நம்மநிலம் கவிதையை வகுப்பறையில் வாசிக்கச் செய்தல். கவிதை கூறும் செய்திகளையும் நடப்பியல் பிரச்சினைகளையும் ஒப்பீடு செய்யச் சொல்ல வேண்டும்.<br>மதிப்பீட்டுக்குறிப்பு<br>செய்திகள், குறிப்புகள், ஒப்பீடு<br>நேர்முகம் நடத்துவதற்கான வினாநிரல் தயாரித்தல்<br>மாணவர்கள் தங்கள் வசிக்கும் பகுதியிலுள்ள விவசாயப் பிரச்சினைகளைக் கண்டறிந்து ஏதேனுமொரு விவசாயியுடன் நேர்காணல் நடத்துவதற்கான வினாநிரல் உருவாக்கச் சொல்லவும்.<br>மதிப்பீட்டுக்குறிப்பு<br>செய்திகள், பட்டியிடுதல், பிரச்சினைகளை எதிர் கொள்ளும் மனநிலை</td><td>பாடல்களை இரசித்துக் கவிதைக்கு நயம் பாராட்டிக் குறிப்புகள் எழுதுகின்றனர்.<br>வேளாண் தொடர்பான படைப்பிலக்கியங்களில் வெளிப்படும் பிரச்சினைகளைப் பகுப்பாய்வு செய்து குறிப்புகள் எழுதுகிறார்கள்.<br>வேளாண் பிரச்சினைகளைக் கண்டறிய அனுபவங்களைச் சேகரிக்கிறார்கள்.</td></tr>
</table>

<table>
<tr><th>கருத்துகள்/திறன்கள்</th><th>கற்றல் செயல்பாடுகள்/ மதிப்பீடு</th><th>கற்றல் அடைவுகள்</th></tr>
<tr>
<td>சுற்றுச் சூழலைக் காப்பதில் விவசாயத்திற்கு பெரும்பங்கு உண்டு</td>
<td>குழுவிவாதம்<br>குறுந்தகட்டின் உதவியுடன் பழைய மற்றும் புதிய விவசாய முறைகளை வகுப்பில் காண்பித்துக் குழுவிவாதம் செய்தல். களப்பயணம் மேற்கொள்ளல்.<br>மதிப்பீட்டுக்குறிப்பு<br>தரம் -தேர்வுமுறை<br>மொழிநடை– திட்டமிடல்<br>இணையதளப் பயன்பாடு<br>சுற்றுச்சூழல் மாசடைந்ததுடன் மக்களுக்கு ஏற்பட்ட நோய்களைச் சுட்டிக் காட்டும் படங்கள் மற்றும் குறும்படங்களைப் பதிவிறக்கம் செய்து கலந்துரையாடுதல்.<br>பாடப்பகுதியிலுள்ள சுற்றுச்சூழலைக் காக்கும் இயற்கை வேளாண்மை கூறும் கருத்துகளை வாசித்துக் குறிப்பு எடுத்தல்.<br>மதிப்பீட்டுக்குறிப்பு<br>கருத்துகள், மொழிநடை, பிரச்சினைகளை ஆழமாக வெளிப்படுத்தல்<br>கவிதை எழுதுதல்<br>பழநிபாரதியின் பொங்கலோ பொங்கல் கவிதையை வாசித்து விமர்சனக் குறிப்பு எழுதச் செய்தல்.<br>இதன் அடிப்படையில் விளைநிலங்கள் இயற்கை மாற்றங்களால் சீரழிந்து வருகின்றன எனும் பாடுபொருளை முன்வைத்து கவிதை எழுதச் சொல்ல வேண்டும்.<br>வேளாண்மை தொடர்பான கண்காட்சி நடத்தி மலர் வெளியிடுதல்<br>இவ்வலகின் வாயிலாகத் தொகுக்கப்பட்ட கவிதைகள், கட்டுரைகள், படங்கள், குறும்படங்கள் போன்றவற்றைப் பயன்படுத்தி குழு அடிப்படையில்</td>
<td>பரம்பரையான விவசாய முறைக்கும் இன்றைய விவசாய முறைக்கு மிடையேயான ஒற்றுமை வேற்றுமைகளை ஒப்பீட்டுக் குறிப்புகளாக எழுதுதல்.<br><br>வேளாண் தொடர்பான பாடல்கள், உரைகள், கவிதைகளைப் படித்து விமர்சனக் குறிப்பு எழுதுவதுடன் சொந்தமாகக் கவிதை எழுதுகின்றனர்.<br><br>செய்திகள். தொகுத்து வேளாண் மலர் தயாரிக்கிறார்கள்.</td>
</tr>
</table>

| கருத்துகள்/திறன்கள் | கற்றல் செயல்பாடுகள்/ மதிப்பீடு | கற்றல் அடைவுகள் |
|---|---|---|
| | வேளாண்மைக் கண்காட்சி நடத்துதல். வேளாண்மை மலர் வெளியிடுவதற்கான படைப்புகள் தொகுத்தல்.<br>**மதிப்பீட்டுக் குறிப்புகள்**<br>செய்திகளைத் திரட்டுதல், நிகழ்ச்சி ஒருங்கமைப்பு, சுயபடைப்பு, சமூக ஈடுபாடு இவற்றில் அடிப்படையில் குழு மதிப்பீடு செய்ய வேண்டும். | வேளாண்மை தொடர்பான கண் காட்சி நடத்தி மலர் வெளியிடு கின்றனர். |

## அலகுப்பகுப்பாய்வு

**நுழைவுச் செயல்பாடு (குழுக்கலந்துரையாடல்)**

உணவு உற்பத்தி செய்யப்பயன்படும் விளைநிலங்களின் தற்போதைய நிலையைப் பற்றி விவாதித்தல். சங்க காலம் முதல் இன்று வரையிலான இலக்கியங்களில் விவசாயம் குறித்த செய்திகளை அறிமுகப்படுத்தி ஆரம்பிக்க வேண்டும்.



### கலந்துரையாடல்

### கட்டுரை எழுதுதல்

ஆசிரியர் மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து ஒவ்வொருவரிடமும் திருக்குறள், ஏர் எழுபது, முக்கூடற்பள்ளு போன்ற இலக்கியங்களில் வேளாண்மை குறித்துப் பேசும் பகுதிகளைக் கொடுத்து வாசித்துக் கலந்துரையாடச் செய்தல் வேண்டும். கலந்துரையாடலின் போது நமது முன்னோர்கள் செய்த வேளாண்மையின் மகத்துவத்தை வெளிப்படுத்தும் வண்ணம் குறிப்புகள் தயார் செய்ய வேண்டும். குறிப்புகளின் அடிப்படையில் வேளாண்மையின் மகத்துவம் குறித்து கட்டுரை எழுதச் செய்ய வேண்டும். வலைச்சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள மதிப்பீட்டுக் குறிப்புகளின் அடிப்படையில் ஆசிரியர் மதிப்பீடு செய்ய வேண்டும்.

### திறனாய்வுக் கட்டுரை எழுதுதல்

வேளாண்மை தொடர்பான கதைகளை மாணவர்கள் திரட்டிவரச் சொல்ல வேண்டும். கதைகள் கூறும் மையக்கருத்தை குறிப்புகளாக எடுத்துக் கொண்டு கலந்துரையாடல். இதன் அடிப்படையில மண் நேசம் சிறுகதையை வகுப்பறையில் வாசிக்கச் செய்தல். கதையில் வரும் பாட்டையா கதாபாத்திரத்தின் பண்பு நலன்களை விளக்க வேண்டும். கதையின் பாடுபொருள் உணர்த்தும் இன்றைய வேளாண்மை பிரச்சினைகளையும் அதற்கான தீர்வுகளையும் சிறுகதை ஆசிரியர் முத்தானந்தம் வழி எடுத்துரைத்தல். இதன் மூலம் சிறுகதையின் பாடுபொருளை உணர்த்தும் வகையில் திறனாய்வுக் கட்டுரை எழுதச் செய்தல்.

**<u>துணைக்கருவிகள் (நூல்கள்)</u>**

- மண்நேசம் கதை
- ஏர்எழுபது
- விவசாயம் பற்றிய சிறுகதை
- திருக்குறள்
- முக்கூடற்பள்ளு
- மண்ணின் மாண்பு

| கற்றல் அடைவுகள் | மதிப்புகள் / மனப்பாங்குகள் |
|---|---|
| ❖ இலக்கியங்கள் கூறும் வேளாண் தொழிலின் மகத்துவம் அறிந்து கட்டுரை எழுதுகிறார்கள். | இலக்கியங்கள் கூறும் வேளாண்மை பிரச்சனையைப் புரிந்து தீர்வுகளைக் காணுதல். |

## நாட்டுப்புறப் பாடல்கள் - இரசனைக் குறிப்பு

இந்தியாவின் உயிர் நாடி கிராமங்கள்தான். கிராமங்களில் இருந்து தான் நமக்குத் தேவையான அனைத்து உணவுப்பொருட்களும் விளைவிக்கப்படுகின்றன. விவசாயிகள் தங்கள் உழைப்பின் போது களைப்பு தெரியாமலிருக்கப் பல்வேறு பாடல்களைப் பாடுதல் வழக்கம். பாடப்பகுதியிலுள்ள பயிர்த்தொழில் பாடல் கூறும் நிலத்தைப் பண்படுத்துதல், நாற்று நாடுதல், நெல் விளையும் அழகு, விளைந்த நெல்லின் வகைகள் போன்ற செய்திகளை மாணவர்களுக்கு உணர்த்தல். நாட்டுப்புறப் பாடல்களின் தனித்தன்மைகளை மாணவர்கள் எழுத வேண்டும்.

### துணைக்கருவிகள்

- பயிர்த் தொழில் பாடல்கள்
- ஏற்றப்பாட்டு
- ஏர்ப்பாட்டு

## நயம் பாராட்டல்

உலகப் புகழ்வாய்ந்த கம்பராமாயணத்தைப் படைத்த கம்பரின் விவசாய நூல் ஏர் எழுபது. கம்பரின் பாடல்களில் காணவரும் சொல்நயம், அணிநயம் எடுத்துரைத்தல். நல்ல முறையில் விவசாயம் நடந்தால் அங்கே பசி நடக்காது எனும் பொருள் நயத்தை எடுத்துரைத்து மாணவர்களுடன் கலந்துரையாடல். பாடப்பகுதியிலுள்ள கவிதையின் நயம் பாராட்டி எழுதச் செய்தல்.

### துணைக்கருவிகள்

- ஏர் எழுபது பாடல்,
- பயிர்த் தொழில் பாடல்கள்
- நாட்டுப்புற வேளாண்மை வழக்காறு,
- நயம் பாராட்டல் மாதிரி – அலகு 3

| கற்றல் அடைவுகள் | மதிப்புகள் / மனப்பாங்குகள் |
|---|---|
| ❖ நாட்டுப்புறப் பாடல்களை இரசித்து அதன் சிறப்பினை வெளிப்படுத்துகின்றனர். | நாட்டுப்புற பாடல்களின் அழகுணர்ச்சியை இரசித்தல். |

## இதழ் அறிக்கை எழுதுதல்

நூலகப் பயன்பாட்டின் மூலம் பத்திரிகைகளில் வெளியான விவசாயிகளின் பிரச்சினைகள் மற்றும் எதிர்கொள்ளும் சவால்களைப் பற்றிய செய்திகளைச் சேகரிக்கச் சொல்லுதல். இயற்கை வேளாண்மையைக் குறித்து ஆய்வு செய்பவர்களின் வாழ்க்கை வரலாற்றைப் பற்றி கலந்துரையாடல். பாடப்பகுதியில் இடம் பெற்றுள்ள நம்ம நிலம் கவிதையை வாசித்து, கவிதை சுட்டும் பிரச்சினையைக் குழு அடிப்படையில் விவாதித்தல். இதழ்களுக்கான அறிக்கை தயார் செய்தல்.

### துணைக்கருவிகள்

- நம்ம நிலம் கவிதை
- மூன்றாம் உலகப் போர் நாவல் பகுதி

## நேர்முகம் நடத்துவதற்கான வினாநிரல் தயாரித்தல்

**நேர்முகம் நடத்துவதற்கான குறிப்புகள்**

பாலக்காடு - நெல்

இடுக்கி - நல்லமிளகு / தேயிலை / காப்பி

திருவனந்தபுரம் - தென்னை / ரப்பர்

இன்று உலகளாவிய நிறுவனங்கள் நமது கிராமங்களுக்குச் சென்று நிலங்களையெல்லாம் குத்தகைக்கு எடுத்து இரசாயன உரங்களையிட்டுப் பயிர் செய்து அமோக விளைச்சலைப் பெற்று உணவு தானியங்களைப் பதுக்கி வைப்பதுடன் மட்டுமல்லாமல் எப்போது விலை கூடுகிறதோ அப்போது அவர்கள் பதுக்கி வைத்திருக்கும் சாதனங்களைச் சந்தைக்கு கொண்டு வந்து விற்பது பரவலாக் காணப்படுகிறது. இதுபோன்ற இக்கட்டானச் சூழ்நிலையிலும் உள்ளூர் விவசாயிகளும் விவசாயம் செய்து வருகின்றான். அவர்களுடன் நேர்முகம் நடத்துவதால் அவர்ளது பிரச்சினைகளை உலகு அறியச் செய்ய முடியும். பாடப்பகுதியிலுள்ள தேங்காய் விவசாயம் பற்றிய நேர்முகத்தை விளக்குதல். மாணவர்களிடம் தங்கள் வசிக்கும் பகுதியிலுள்ள ஏதேனுமொரு விவசாயியுடன் நேர்முகம் நடத்துவதற்கான வினாநிரல் தயாரிக்கச் சொல்லுதல்.

| கற்றல் அடைவுகள் | மதிப்புகள் / மனப்பாங்குகள் |
|---|---|
| ❖ வேளாண் பிரச்சினைகளைக் கண்டறிய அனுபவங்களைச் சேகரிக்கின்றனர். | ➥ உழைப்பால் முன்னேற்றம் அடைந்தவர்களைப் பாராட்டுதல். |

## ஒப்பீட்டுக் குறிப்பு

குறுந்தகட்டின் உதவியுடன் பழைய மற்றம் புதிய விவசாய முறைகளைக் காண்பித்து விவாதித்தல். நன்மை தீமைகளைப் பட்டியலிடுதல். பாடப்பகுதியிலுள்ள பயிரிடும் முறை குறித்து விளக்குத்ல். பழைய மற்றும் புதிய பரியிடும் முறைகளை ஒப்பீடு செய்து குறிப்பு எழுதுதல்.

### துணைக்கருவிகள்

- தேங்காய் வியாபாரியுடன் நேர்காணல்
- கலிப்பா
- மக்களின் மாண்பு

| கற்றல் அடைவுகள் | மதிப்புகள் / மனப்பாங்குகள் |
|---|---|
| ❖ ஒப்பீட்டுக் குறிப்பு எழுதுகின்றனர்.<br>❖ பாரம்பரிய விவசாய முறையுடன் இன்றைய விவசாய முறையை ஒப்பீட்டுக் குறிப்பு எழுதுகின்றனர். | ➥ பழைய மற்றும் புதிய விவசாய முறைகளைப் புரிந்து நன்மை தீமைகளை உணர்தல். |

## தொலைக்காட்சி உரை தயாரித்தல்

சுற்றுச்சூழல் எவ்வாறெல்லாம் பாதிக்கப்படுகிறது? அதைக் கட்டுப்படுத்துவதற்கான வழிவகைகள் யாவை? போன்ற வினாக்களை எழுப்பி விவாதித்தல். இயற்கை வளங்கள் உபயோகிப்பதால் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதோடு பூமியையும் பாதுகாக்கலாம் என்ற கருத்திற்கு கொண்டு வர வேண்டும். எண்டோ- சல்பான் உபயோகித்ததன் மூலம் ஏற்பட்ட சீரழிவுகளின் குறும்படங்கள், படங்களைக் காண்பித்து கலந்துரையாடல்.

சுற்றுச்சூழல் காக்கும் இயற்கை வேளாண்மை கட்டுரையை வகுப்பில் வாசிக்கச் செய்து குறிப்புகள் எடுத்தல். குறிப்புகளின் அடிப்படையில் இயற்கை வேளாண்மையும் சுற்றுச்சூழல் பாதுகாப்பும் எனும் தலைப்பில் தொலைக்காட்சி உரை எழுதுதல்.

### துணைக்கருவிகள்

- பொங்கலோ பொங்கல் கவிதை,
- சுற்றுச் சூழலைக் காக்கும் இயற்கை வேளாண்மை கட்டுரை

## கவிதை எழுதுதல்

நூலகம், இணையம் இவற்றின் துணையுடன் வேளாண்மை, சுற்றுச்சூழல் சீர்கேடு ஆகிய பொருண்மையில் கவிதைகள் திரட்டி விமர்சனக் குறிப்பு எழுதுதல். பாடப்பகுதியிலுள்ள பொங்கலோ பொங்கல் கவிதையை வாசித்து விமர்சனக் குறிப்பு எழுதுதல். சுயமாக கவிதை எழுதுதல்.

### துணைக்கருவிகள்

- பொங்கலோ பொங்கல் கவிதை, நம்ம நிலம் கவிதை
- மூன்றாம் உலகப்போர் நாவல் பகுதி

## வேளாண்மைக் கண்காட்சி நடத்துதல், மலர் வெளியிடுதல்

இவ்வலகின் வாயிலாகப் பெறப்பட்ட கருத்துகள், படங்கள், கவிதைகள், பாடல்கள், பழமொழிகள், குறும்படங்கள் போன்றவற்றைப் பயன்படுத்தி வேளாண்மைக் கண்காட்சி நடத்தி மலர் வெளியிடுதல். மாணவர்களைக் குழுக்களாகப் பிரிக்கவும். ஒவ்வொரு குழுவும் ஒவ்வொரு பகுதியைத் தயார் செய்யட்டும்.

| கற்றல் அடைவுகள் | மதிப்புகள் / மனப்பாங்குகள் |
|---|---|
| ❖ வேளாண்மை தொடர்பான கண்காட்சி மலர் வெளியிடுதல். | வேளாண்மையையும் சுற்றுச்சூழலையும் பாதுகாக்க வேண்டும் என்ற மனப் பான்மை பெறுதல். |

## வளப்பகுதி

### மண்ணின் மாண்பு

உழவு என்னும் அதிகாரத்தில் முத்தான பத்தே பாக்களில் உழவியலின் பெருமையை வடித்துக் கொடுத்திருக்கிறார் பொய்யாமொழியார். அவற்றில் ஒரு முத்துதான்

ஏரினும் நன்றால் எருஇடுதல்; கட்டபின்

நீரினும் நன்றுஅதன் காப்பு – (குறள் 1038)

உழுவது, உரமிடுவது. இந்த இரண்டில் எரு இடுதல் நல்லது. களை எடுத்தபின் நீர் பாய்ச்சுவது, காப்பது – இந்த இரண்டில் காப்பது மேல் என்கிறது இந்தக் குறள். வள்ளுவர் காலத்தில் செயற்கை உரங்கள் இல்லை. இயற்கையாகக் கிடைக்கும் பசுந்தாள் உரம், மாட்டுச்சாணம், ஆட்டுச்சாணம் ஆகியவைதான் கிடைத்தன.

பசுந்தாள் உரத்தில் மண்ணிற்கு வேண்டிய தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்து உள்ளன. மண்ணிலுள்ள நுண்ணுயிர்கள் பெருகத் துணையாகின்றன. இயற்கை உரங்கள், உழவர்களின் நண்பன் எனப்படும் மண்புழுக்கள் வாழ்ந்து வளமூட்ட எருக்கள் மிகவும் பயன்படுகின்றன.

வேளாண் துறையில் வழக்கிலிருந்த பழமொழிகள் இயற்கை எருக்களின் பயன்பாட்டை எடுத்தோதின.

'ஆடு கிடந்த இடத்தில் நெல்லை விதை என்பது ஒரு பழமொழி. ஆடுகளை நிலங்களில் கிடை வைத்தால், அவற்றின் கழிவுகள் உரமாகக் கிடைக்கும். அந்த இயற்கை உரத்தால், நெல் விளைச்சல் பெருகும் என்ற அனுபவ உண்மையை உணர்த்துகிறது இந்தப் பழமொழி. ஆடு கிடந்த இடத்தில் தான் நெல்லை விதைக்க வேண்டும், மாடு கிடந்த இடத்தில் கூடாது என்று பொருள் கொள்ளக் கூடாது. ஆட்டுத் தொழுவக் கழிவுகள் நாள்பட்டு மட்கிச் சத்தான இயற்கை உரமாகிறது என்பதைப் பண்டைய வேளாண் மக்கள் அனுபவத்தில் கண்டறிந்திருக்கிறார்கள் என்பதை இந்தப் பழமொழி தெளிவுபடுத்துகிறது.

பண்ணைக் கழிவுகளிலிருந்து மட்டுமல்லாமல் பசுந்தழைகளிலிருந்தும் சத்தான இயற்கை உரம் கிடைக்கிறது என்பதைப் பண்டைய மக்கள் அறியாதவர்கள் அல்லர். ஆவிரை என்பதொரு பசுந்தழை (ஆவிரை என்பதைத்தான் ஆவாரை என்று வழங்குகிறோம்). நல்ல நெல் விளைச்சலுக்கு ஆவிரை போட வேண்டும் என அறிவுறுத்துகிறது ஒரு பழமொழி. அதுதான் ஆடு பயிர் காட்டும்; ஆவிரை நெல்காட்டும் என்பது.

ஆட்டின் உரம் போட்ட இடத்தில் நல்ல பயிர் விளைச்சலும் ஆவிரைப் போட்ட நிலத்தில் நல்ல நெல் விளைச்சலும் கிடைக்கும் என்னும் அனுபவ உண்மையைப் படம் பிடித்துக் காட்டுகிறது இந்தப் பழமொழி.

பசுந்தழைகள், பண்ணைக் கழிவுகள் ஆகியவற்றைக் குழிகளில் இட்டுக் காற்றுப் புகாவண்ணம் நான்கு, ஐந்து, மாதங்கள் வரை மூடிவைத்து உரம் தயாரிக்கும் முறையை நம் முன்னோர் அறிந்திருந்தார்கள்.

### ஏற்றப் பாடல்கள்

'ஏற்றப் பாட்டிற்கு எதிர்ப்பாட்டு இல்லை' என்பது ஒரு பழமொழி. ஏற்றம் இறைப்போர் விடியற்காலையில் இனிய ஓசையில் பாடுகின்றனர். கேட்கக் கேட்க அப்பாடல்கள் இனிக்கின்றன. உழவர்களின் வாழ்க்கையை ஏற்றப் பாடல்கள் வண்ணம் ஓவியம் தீட்டி விளக்குகின்றன. கீழேயுள்ள ஏற்றப் பாடல்கள் செங்கற்பட்டு மாவட்டத்தில் வழங்குகின்றன.

மழை பெய்தவுடன் நிலத்தை உழவர்கள் உழத் தொடங்கி விட்டனர். முதலில் நாற்றுவிட நாற்றங்காலை நடவேண்டும். உழவர் குடியில் மூத்தவர் இளையவர்களுக்குக் கட்டளை இடுகிறார்.

*நாற்றங்காலாம் சேடை*

*பூட்டி வாடா ஏரை*

எந்த எந்த எருதுகளை அன்றைக்கு ஏர் பூட்ட வேண்டும் என்றும் மூத்தவரே கூறுகிறார்.

நல் எருது பில்லை
நடு செலம்புக் காளை
பப்பாளித் துவரை
பனங்காய்க் கறுப்பு
நாலு ஏரைப் பூட்டி
நாற்றங்காலை ஓட்டு

சேடை ஓட்டியபின் நிலத்தைச் சமப்படுத்த வேண்டும் அல்லவா? பரம்பு ஓட்டும் போது எருது என்ன செய்கிறது பார்ப்போம்.

சந்தனப் பரம்பரை
சாடுதாம் எருது

பரம்பு கூட சந்தன மரத்தில் செய்ததாம்! வலிமை மிக்க எருதுகளுக்குத் தாம் செய்யும் உழவு வேலை கடினமாகத் தோன்றவில்லை. அதனால் அவை பரம்பரையே சாடுகின்றன.

நாற்று வளர்கிறது. வளர்ந்த நாற்றைப் பறித்து நடுகின்றனர். நேற்று நட்ட நடவில் குறை இருக்கிறது. உழவர்களில் மூத்தவரே வேலையாளுக்கு இடும் கட்டளை இது.

நட்டுவாடா நடவை
வைத்துவாடா குறையை
வழியோரம் தளையை
நட்ட குறை நட்டு
வாங்கிப் போடா கூலி

(தளை - கழனி)

உழவர்கள் நெற்பயிரோடு தொய்யா மல்லியும் வாடா மல்லியும் நட்டுப் பயிர் செய்கின்றனர். எல்லாவற்றிற்கும் ஏற்றம் போட்டு நீர் இறைக்க வேண்டும். ஏற்றக்காரர்,

தொய்ய மல்லி நட்டேன்
துறையில் ஏற்றம் போட்டேன்
வாடா மல்லி நட்டேன்
வாய்க்கால் ஏற்றம் போட்டேன்

என்று களிப்போடு பாடுகின்றனர்.

ஏற்றம் இறைக்கத் தொடங்குமுன் உழவர்கள் தெய்வம் தொழுகின்றனர். வழிபடு தெய்வம் வந்து துன்பம் வாராமல் காத்து, அருள் புரிய வேண்டும் என்று வேண்டுகின்றனர். தாம் வழிபடும் தெய்வங்களும் தம்மோடு சேர்ந்து உழைக்க வேண்டும் என்று விரும்புகின்றனர்.

## நாட்டுப்புற வேளாண்மை வழக்காறுகள்

### பழமொழிகளில் வேளாண்மை

கிராமத்து மக்களின் வாழ்வியல் அனுபவம் மிகப்பெரியது. தான் பெற்ற அனுபவத்தைச் சம்சாரிகள் பழமொழிகள் வாயிலாகவும் விடுகதைகள் (அழிப்பான் கதை) வாயிலாகவும் பிறர்க்கு உணர்த்தினார்கள்.

நாட்டுப்புறங்களில் உலவி வரும் பழமொழிகள் மக்களால் மூத்தோர்சொல், முதுசொல், பழஞ்சொல் என்றெல்லாம் அழைக்கப்படுகின்றன. பழமொழியைக் குறிக்க முப்பத்து நான்கு சொற்கள் இருப்பதாகப் பெருமாள், பலநோக்கில் பழமொழிகள் என்னும் தம் நூலில் வகைப்படுத்தியுள்ளார்.

ந.வி. செயராமன், தங்கள் வாழ்வில் அறிந்த கருத்துகளைச் சந்த இனிமையோடு பட்டறிவுப் பிழியலாய்க்கூற, பின்னர் வந்தோர் முன்னோர் மொழியைப் பொன்னே போல் போற்றி இவை பழமொழிகளாய் உருக் கொண்டன எனக் குறிப்பிட்டுள்ளார்.

## பருவம்

பருவம் பார்த்துப் பயிர் செய்தலைப் பண்டைய வேளாண் பெருமக்கள் கடைப்பிடித்து வந்துள்ளனர். பருவம் குறித்த பல பழமொழிகள் வெவ்வேறு சூழலில் உருவாகியுள்ளதாக அப்பழமொழிகள் கூறும் கருத்துகள் வாயிலாக அறிந்து கொள்ள முடிகின்றது.

பருவத்தே பயிர் செய்

என்பது பொதுவாக எப்பயிர் இட்டாலும் பருவம் தப்பாமல் பயிரிட வேண்டும் என்பதைக் குறிக்கிறது. அவ்வாறு செய்யாவிட்டால் மகசூல் குறையும். பூச்சி நோய்த் தாக்குதல் அதிகரிக்கும். இது இன்றைய அறிவியல் காட்டும் உண்மை.

அதனடிப்படையில்

ஆடி விதை தேடி நடு

கால விளம்பனம் சாலவும் தீதே

(விளம்பனம் – தாமதம்)

காலம் போகும், வார்த்தை நிற்கும்

காற்றுள்ள போதே தூற்றிக் கொள்

என்ற பழமொழிகள் பட்டத்திலே பயிர் செய்யும் நிலையினை வலியுறுத்துகின்றன.

நெல்லுக்கான பட்டம்

நெல் பயிர் செய்தில் மிக நுணுக்குமான செய்தியாகும். விதைப்பு மற்றும் நடவிற்கான பட்டம் மட்டுமல்ல, நாளினைக் கூடக் குறித்துச் சென்றுள்ள செய்தி குறிக்கத்தக்கதாக உள்ளது.

ஆடி வெதப்பும்

புரட்டாசி நடவும் நல்லது

விதைப்பு ஆடியில் தொடங்கி நடவு புரட்டாசியில் முடிக்க வேண்டும் என்பதை உறுதிபடச் சொல்கிறது.

ஆடி புழுதி ஆவணி சேறு

என்று ஆடி மாதம் நன்கு புழுதிபட உழுது பண்படுத்தி ஆவணி மாதம் தொளி கலக்கி, பரம்படித்து, வயலாக்கி, சேறாக்குதல் வேண்டும் என்ற பொருள்பட அமைந்துள்ளது.

ஆயிரம் கலம் நெல்லுக்கு ஓர் அந்துப்பூச்சி போதும்

நெல் பயிரை நாசம் செய்யும் பூச்சி பற்றிய பழமொழி ஆகும்.

## மழைவளம்

பருவத்தில் மழையின் வருகை பற்றி,

அந்தி ஈசல் பூத்தால் அடைமழை அதிகரிக்கும்.

எறும்பு முட்டை கொண்டு திட்டையேறினா மழை பெய்யும்

கடுங்காற்று மழை கூட்டும்

காய்ந்த வானம் பேய்ந்தால் விடாது

என்ற பழமொழிகள் தெளிவுபடக் கூறுகின்றன.

பருவமழை பெய்யும் பொழுது பயிரினங்களும் உயிரினங்களும் தழைத்துச் செழித்து இருக்கும்.

### மாதமும் மழையும்

மாதந்தோறும் மழையின் வரவு எப்படி இருக்கும், எப்படி இருக்க வேண்டும் என்பதை,

அப்பிய மாசம் அட மழை
கார்த்திய மாசம் கன மழை
தை மழையோ நெய் மழை

என்று பழமொழிகள் கூறுகின்றன. இப்பழமொழிகள் ஐப்பசி, கார்த்திகை, தை மாதங்களில் மிகுதியான மழை இருக்கும் என்பதைக் கூறுகின்றன.

### விடுகதைகளில் வேளாண்மை

அழிப்பான் கதை என்னும் விடுகதைகளில், வேளாண் பொருள்கள் மறை பொருளாகி மூளைக்கு வேலையளிக்க முயலும் போது மர்மம் அவிழ்கிறது. விடுகதை என்பது விடை கண்டுபிடித்து விடுவிக்கப்பட வேண்டிய வினாவென்று கொள்ளலாம். விடுகதை, பொருளை நேரடியாகக் கூறாமல் மறைமுகமாகக் கூறிப் பொருண்மை மயக்கத்தினை ஏற்படுத்தவல்லது. விடுகதைகள் கூறுபவர்களிடம் இருந்து விடுகதைகள் கேட்பவர் மிகவும் ஊக்கத்துடன் தெரிந்து கொள்ள விழையும் போக்கும் வெளிப்படுத்துகின்றது.

வேளாண்மைப் பொருள் வெளிப்படல்

### நெல்

விருதுநகர் மாவட்டத்தில் வத்திராயிருப்புப் பகுதியில் நெல் சாகுபடி அதிக அளவில் நடைபெறுகிறது. அதே போன்று இராஜபாளைய வட்டம நக்கனேரி பகுதியிலும் நெல் சாகுபடி அதிக அளவில் நடைபெறுகிறது. நெல் பற்றிய விடுகதைகளும் அதிக அளவில் கிடைத்துள்ளன.

### நெல் நாற்று

நெல் நாற்று பற்றிய விடுகதை வழக்கில் உள்ளது

அம்மா அம்மா எங்கே போகிறாய்?
நேற்றுக் கழுத்தறுபட்டவனைப்
பிழைக்க வைக்கப் போகிறேன் – ஆ என்ன?

என்ற விடுகதையில் 'நெல் நாற்று' விடையாக வந்துள்ளது.

### சோளம்

நெல்லுக்கு அடுத்தப்படியாக விருதுநகர் மாவட்டத்தில் பல ஊர்களில் அதிகளவில் பயிரிடப்படுவது சோளம். இது பற்றிய விடுகதைகள் பல உள்ளன.

ஆறடி மனிதன் தலையில்
ஆயிரம் முத்துகள் – அது என்ன?

என்ற விடுகதையில் சோளப்பயிர் (சோளத்தட்டை) ஆறடி மனிதனையும் அவனுடைய தலையில் உள்ள முத்துக்கள் சோளக் கதிரிலுள்ள தானிய மணிகளையும் குறித்து நிற்கின்றது.

### வெண்டைக்காய்

வெண்டைக்காயின் உள்ளே முத்துக்கள் போன்று விதைகள் உள்ளடங்கியிருக்கும் தன்மையை,

பச்சைப் பெட்டிக்குள்
வெள்ளை முத்துக்கள்

என்ற விடுகதை குறிப்பிடுகின்றது.

### ஆமணக்கு

உழவர்கள் விளக்கு எரிப்பதற்குத் தேவையான எண்ணெய்யை ஆமணக்கு முத்துக்களிலிருந்து எடுத்துப் பயன்படுத்தி வந்துள்ளனர். ஆமணக்கு, விடுகதையிலும் வெளிப்படுகின்றது.

பச்சைப் பசேல் என்றிருக்கும் பாவக்காயும் அல்ல
உருக்கினால் நெய்வடியும் வெண்ணைய்யும் அல்ல அது என்ன?

பச்சையாக இருக்கும் ஆனால் பாவற்காய் போன்று இருக்காது. உருக்கினால் எண்ணெய் வரும், ஆனால் அது வெண்ணெய் ஆகாது என்று அதன் தன்மை பற்றிக் கூறுவது சிறப்பு.

### தென்னை

தென்னை மிகுதியாகப் பயிரிடப்பட்டு வரும் இடங்கள் இராஜபாளையம், வத்திராயிருப்பு வட்டங்கள் இவ்விரு வட்டங்களிலும் வாழக்கூடிய மள்ளர் இன மக்கள் தென்னையை மிகுதியாகப் பயிரிடுகின்றனர். தென்னை மிகுதியாகப் பயிரிடப்பட்டு வரும் பகுதிகளன்றி பிற பகுதிகளிலும் அதனைப் பற்றிய விடுகதைகள் மிக அதிகளவில் வழங்கி வருகின்றன.

### முடிவு

இவ் ஆய்வின் வாயிலாக விருதுநகர் மாவட்ட மள்ளர் குல மக்களிடையே வழங்கி நிலைத்து நிற்கக் கூடிய பழமொழிகள், விடுகதைகள் வேளாண்மைத் தொழிலின் நுட்பத்தினைப் போற்றி வந்துள்ள செய்திகளை நன்கு அறிந்து கொள்ள முடிகிறது.

### கலிப்பா

நாறுந் துழாயழகர் நாட்டிற் பழனமெல்லாம்
ஏறும் பயிர்தருநாற் றின்று நட வேணுமென்றே
தேறும் படியறிக்கை செய்து பண்ணை யாண்டவனார்
கூறும் பணிதலைமேல் கொண்டுபள்ளன் மீண்டானே.

### விளக்கவுரை

மணம் வீசும் துளசி மாலை அணிந்த திருமாலின் முக்கூடல் நாட்டில், வயல்களில் எல்லாம் வளர்கின்ற நாற்றினை நட வேண்டும் என்று பண்ணைக்காரருக்குப் புரியும்படி எடுத்துச் சொல்லிப் பண்ணைக்காரர் சொல்லும் கட்டளைகளை ஏற்றுப் பண்ணைப் பணியாளன் திரும்பினான்.

### நாற்றுப்பறித்தல்

முந்தித் தரிசை யடித்து மறித்து
முச்சா லடித்திட் டுழவு நாலும்
முழுவதும் உழுது திருந்தப் பரம்பு
அந்தத் தொளிக்குட் சமைந்த நாற்றை
அடுத்த வயலில் பிடுங்கி வேறே
அடுக்கி முடிந்து வட்ட வட்டங்க
ளாய்க் குவித்த பின்
வந்தித் தழகர் பதத்தைத் துதித்து
வகுந்து நாற்றை எடுத்து நெற்றியில்
வைத்து நாலு திசையும் நோக்கி
வாழ்த்திக் கும்பிட்டே
பந்திப் படுத்தி நிரையை வகுத்துப்
பரவை யொலிபோல் குரவை யெழுப்பி
பயிர் நெருங் காமல் கலந்து போகாமல்
பதியப் பதியும் பள்ளீரே.

### விளக்கவுரை

தரிசு நிலத்தை உழவு செய்து மூன்று சால்கள் அடித்து நான்கு உழவுகளையும் முடித்து வயல் சமதளமடைய மூன்று முறை பரம்படித்து, வயல் நடுவதற்காகப் பக்குவமாக வளர்ந்த நாற்றுகளைப் பறித்து முடிமுடியாகக் கட்டி வேறு வயலில் வட்டமாகக் குவித்து வைத்து, அழகரின் பாதங்களை வணங்கி நாற்று முடியை எடுத்து நெற்றியில் வைத்துக் கொண்டு நான்கு திசைகளையும் வணங்கி, நாற்று நடுபவர்களைப் பிரித்து நிறுத்தி நாற்றுகளைப் பகுத்துக் கொடுத்து; பறவைகள் ஒலி எழுப்புவது போல் குரவையிட்டு நாற்றுகளை இடைவெளி அதிகம் இல்லாமலும், நெருக்கமாக அமைத்து விடாமலும் நடுமாறு பள்ளன் பள்ளியர்களை நோக்கிக் கூறினான்.

## மூன்றாம் உலகப்போர்-கவிஞர் வைரமுத்து

என்னமோ விவசாய நாடு விவசாய நாடுன்னு சொல்றாகளே... உழுவ போறவன்தான் முன்னப்போறவன்... மத்தவகல்லாம் அவன் முதுக மோந்துபாத்துக்கிட்டே பின்ன போறவுகதான்னு பெருமை பேசறாகளே. நாங்க சேத்துல கால் வைக்கலேன்னா நீங்க சோகத்துல கை வைக்க மாட்டீகன்னு கண்டமேனிக்குக் கவி கட்டறாகளே. புட்டுப் பாத்தாவுல்லதெரியும். அத்திப்பழத்துல புழு எத்தன பூச்சி எத்தனைன்னு.

கருமாயப்பட்ட பொழுப்பய்யா கலப்பை புடிச்சவன் பொழப்பு. களத்துல செத்தவன் கணக்கிருக்கு; நெலத்துல செத்தவன் கணக்கிருக்கா நாட்ல?

கருத்தமாயி அவுக அப்பன் கதையக் கேட்டா இன்னைக்கும் அந்த ஊரு அழுகும்; உறவு அழுகும் தெரு அழுகும். திண்ணை அழுகும், ஊரக் கடந்து போற காத்து ஒரு ஓரமா ஒக்காந்து அழுதுட்டுத்தான் அடுத்த ஊரு போகும்.

அந்த ஊருல ஒரு பெரிய மனுசன் – சீனிச்சாமி – சத்தியவந்தன்; தர்மவான். தானுண்டு தன்வேலை உண்டு. வீடுண்டு. விவசாயம் உண்டுன்னு ஒதுங்கிப் பொழைக்கற ஆளு. பழி பாவத்துக்குப் பயப்படற உசுரு.

சின்னக் குடும்பம். கெணத்துல குதின்னா அதுல தண்ணி இருக்கா இல்லையான்னு பாக்காம கூடக் குதிக்கிற ஒரு பொண்டாட்டி. ரெண்டு பயக. பெரியவன் சுழியன். வாய்க்கு வெளிய முளைச்ச பல்லு மாதிரி அடங்காத பய. அருவகமாப் பெறந்த பொண்ணுக்கு அத்திப்பூவுன்னு பேரு வச்சுப் பொத்திப் பொத்தி வளத்து வந்தாக. மொதமொதலாப் பூ வெடுத்து நிக்கும் பாருங்க பூவரசங்குட்டி. அப்படிப் பளபளன்னு நிக்கிறா பதினாலு பதினஞ்சு வயசுல.

மூன்றரை ஏக்கரும் பதினாலு சென்ட்டு புறம்போக்கும்தான் பூர்வீகச் சொத்து.

காலுக்குப் பொத்துனா தலைக்குப் பத்தல. தலைக்குப் பொத்துன்னா காலுக்குப் பத்தலங்கற கதையா இழுத்துக்க பறிச்சுக்கன்னு போய்க்கிட்டிருக்கு அவுக பொழப்பு.

அப்பத்தான்...

கடன்ங்கற காத்து கருப்பு ஒண்ணு அடிச்சது சீனிச்சாமி குடும்பத்துல.

கடன்ங்கறது ஒண்ணும் குத்தமில்ல. ஊரு ஒலகத்துல உண்டானதுதான். உடம்பு உசுருங்கறதே ஒரு கடன்தானே! போறபோது பூமியிலேயே போட்டுட்டுப் போயிடறமா இல்லையா? கடன் வாங்குறவன் முயற்சி பண்றான். கடனைத் திருப்பிக் கட்டறான் பாருங்க. அவன்தான் முன்னேற்றான்.

விவசாயி பாவம் தங்கத்துல தார்க்குச்சியும் வைரத்துல கலப்பையும் வாங்கியா கடன்படுறான்?

வானமும் பூமியும் எப்பப்ப ஏய்க்குதோ அப்பப்பக் கடன்படுறான்.

ஒரு ஆடி மாசம் மழை பொத்துக்கிட்டுப் பேஞ்சிருச்சு. கண்ணைத் தொறந்திருச்சுரா சாமி ன்னு கலப்பையப் பூட்டிட்டாரு சீனிச்சாமி.

தகப்பனும் மக்களுமா மூணு ஏரு கட்டி உழுது போட்டாக; கடன் நடலாம்னு முடிவு பண்ணுனாக.

விதைக்கடலைக்குக் காசில்ல. நான் இருக்கேன் நான் இருக்கேன்னு கூப்புடுது காதுல ஆடுன பொண்டாட்டி தண்டட்டி. அடகு வச்சு கடலை நட்டாக. ஒரே மாசத்துல செம்மண்ணே தெரியமாக பசபசன்னு பச்சை கட்டி நிக்குது கடலைச் செடி.

புரட்டாசியில ஒரு மழை பேஞ்சாப் பூவெடுத்துரும். மழைய காணோம். நாக்கு நனைக்கவே எச்சி ஊறாத கெழடு மாதிரி உசுன்னு வத்தி நிக்குது கெணறு.

அண்ணாந்து பாத்து அண்ணாந்து பாத்து உருமா விழுந்து போச்சு மழை ஏச்சிருச்சு. புராட்டாசி கடைசிக்குக் காஞ்சு கருகிப் போக கடலைச் செடி. அரிச்சிப் போட்டா ஆடு திங்காது. குடலை காயப்போட்டுருச்சே கடலைச்செடின்னு எதுகை மோனையோ வருத்தப்பட்டதுதான் மிச்சம்.

ஐப்பசியில புடிச்சிருச்சு அடைமழை.

நச்சு மழையாப் பேஞ்சு உள் தண்ணி ஊறிப்போச்சு. கிறங்கி நின்னு கெணறு ஓரஞ்சாரம் ஒழுகுது. சலசலன்னு பேஞ்ச மழையில சலம் நிக்குது காடு கரையெல்லாம்.

நெல்லு நடலாம்னு நோங்கிட்டாரு சீனிச்சாமி. சகட்டு மேனிக்கு தொழி கலக்கி உழுது பரம்படிச்சிட்டாரு. தசகூலிக்கு என்ன பண்றது அடகு வச்சாரு அண்டாவ; பத்தல.

உன் கால் கொலுசக் கழட்டிக் கொடு தாயி! அப்பன் வட்டிபோட்டு வளவி தாரேன். அடுத்த நாளே அத்திப்பூவு கால்ல கெடந்த வட்டிக்கடைக்காரன் கையில கெடந்துச்சு.

நெல்லு நட்டாச்சு.

விடிஞ்சும் விடியாத செங்கருக்கல்ல, சேத்து மணமும் நாத்து மணமும் கலந்து வர்ற காத்து, மூக்கு ஏறி நெஞ்சுல எறங்கி இன்னும் ஒண்ணும் பாக்கி இல்லையேன்னு இருதயக் கூட்டுல எல்லா எடத்தையும் தடவிக்கொடுத்து இப்ப சந்தோசமான்னு கேட்டுட்டு உசுர ஒரு ஓரமாக உரசிக்கிட்டு வந்த வழியாத் திரும்பும் பாருங்க. அந்த ஒத்த

சொகத்துக்குத்தான இத்த பொழப்ப இறுக்கிப் புடிச்சு வெந்தும் வேகாமக் கெடக்கான் விவசாயி.

அடுத்த கண்டம் ஆரம்பமாயிருச்சு சீனிச்சாமிக்கு மார்கழி மாசத்துலேயே.

கடலைச் செடியக் காஞ்சு கெடுத்த சாமி, நெல்லுப் பயிரைப் பேஞ்சு கெடுத்திருச்சு.

பூமி தலைகீழாச் சுத்துதா? இல்ல சந்திரசூரியருக்குக் கிறுக்குப் புடிச்சிருச்சா?

மார்கழி மாசத்துல அந்தச் சவட்டு சவட்டிருச்சு மழை.

மழைன்னா மழை நிக்காத மழை; தெக்கு வடக்குத் தெரியாத மழை.

தலையாத்துல தண்ணி விழுந்து, மஞ்சளாறு பெருகி, மஞ்சளாறு ஓடிச் செங்குளத்துக் கம்மா பெருகி, அந்தத் தண்ணி ஓடி மத்துவார்குளம் மறுகா போயி, வத்தலக்குண்டு பெரிய கம்மா தள்ளாடி நிக்குது உடையலாமா வேணாமான்னு. பாவம் அதுக்கு முடிவெடுக்க முடியல. மண்டையில மண்ணு.

இந்த லட்சணத்துல என்னாகும் சீனிச்சாமி நட்ட நெல்லுநாத்து. தலை சாஞ்சு ஒடிஞ்சு சடைசடையா மெதக்குது தண்ணியில. தண்டழுகல் நோய் வந்து நட்ட நாத்தெல்லாம் செத்துப் போச்சு.

மழை அடிச்ச அடியில மண்ணுமேடு சரிஞ்சு ஒரு கமலைக் கல்லு உருவி ஓடி விழுந்து போச்சு கெணத்துக்குள்ள. குடும்பமே ஒடிஞ்சு ஒடுங்கி நிக்குது. ஓட்டுவீட்டுக் கூரையும் ஒரு ஓரமா அழுகுது.

பழைய இருங்கச் சோளத்தைத் தட்டோடுல போட்டு வறுத்து, உரல்ல போட்டு ஒருத்தியா நின்னு உலக்கை குத்திக் கஞ்சி காச்சி ஊத்திக் காப்பாத்துனா ஆத்தாக்காரி.

நொக்குப் பெத்து நொந்து நூலாப் போனவனுக்கெல்லாம் இந்த மாதிரி நேரத்துல ஒரே ஒரு ஆறுதல்தான் இருக்கு. ஊருக்குண்டானது நமக்கு.

இந்தா இந்தான்னு ஓடி முடிஞ்சுபோச்சு ஒரு வருசம்.

இப்ப மழையில்ல; ஆன கிணத்துல தண்ணி இருக்கு.

ஊர்ல ஆள் செத்துப் போச்சேன்னு அழுதுகிட்டா இருப்பான் வெட்டியான்? வெட்டியானும் வெவசாயியும் ஒண்ணுதான். யார் செத்தாலும் மண்ணத் தோண்டித்தான் ஆகணும்.

அடுத்த வெள்ளாமைக்கு ஆசை கொடுக்குது சீனிச்சாமிக்கு. முக்கி முக்கி யோசிச்சுக் கடைசியிலே கடன் வாங்கறதுன்னு முடிவு பண்ணிட்டாரு.

அந்தக் கடன்தான் அவர் பொழப்பையே பொளந்து போட்டுட்டுப் போன கோடாலி.

# மதிப்பீட்டுச் செயல்பாடுகள்

## அடைவு

**வேளாண் தொழிலின் மகத்துவம் அறிகிறார்கள். அதுகுறித்துக் கட்டுரை எழுதுகிறார்கள்.**

### ஒரு மதிப்பெண்

1. 'சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்' என்று வேளாண்மையின் மேன்மையைச் சுட்டும் நூல்.
   அ) ஏர் எழுபது ஆ) திருக்குறள்
   இ) திருவள்ளுவமாலை ஈ) நாலடியார்

2. கீழேக்குறித்தன எது பாரதியின் மொழி?
   அ) உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் ஆ) சிடின்றும் ஏற்பின்னது உலகம்
   இ) உழுவோர் உலகத்துக்கச்சாணி ஈ) உழுதுண்டுவாழ் வாழே வாழ்வோர்

3. திருக்குறலில் இடம்பெற்று வரி
   அ) உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் ஆ) அழவின்றி உலசில்லை
   இ) வானின்றி உழ்வில்லை வையத்து
   ஈ) உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்

### மூன்று மதிப்பெண்

1. வேளாண் தொழிலின் மகத்துவத்தை அறிந்து கொள்ள உங்கள் பகுதியிலுள்ள விவசாயி ஒருவரைப் பேட்டி காண்பதற்கான ஆறு வினாக்கள் அடங்கிய வினாநிரல் தயாரிக்கவும்.
2. உழவின் பெருமையை வள்ளுவர் கூறும் கருத்துகளோடு ஒப்பிட்டுச் சிறுகுறிப்பு வரைக.
3. வீட்டு மாடியில் விவசாயம் செய்வது பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதத்தில் அமைந்த பெட்டிச் செய்தி தயாரிக்கவும்.

### நான்கு மதிப்பெண்

1. காளமேகப் புலவரின் கவிதை வழி விவாசாயிகளின் மேன்மையை உரையாக எழுதுக.
2. மண்நேசம்- பாட்டையாவின் பண்புநலன் பற்றி குறிப்பெழுதுங்கள்.
3. உழவு பற்றிய திருக்குறளில் ஏதேனும் இரு குறளுக்குப் பொருள் எழுதுங்கள்.

### ஐந்து மதிப்பெண்

1. 'இன்றைய சூழலில் வேளாண்மையில் சிறந்து விளங்கும் நாடே ஏற்றம் பெறுகிறது'. இக்கூற்றை அடிப்படையாகக் கொண்டு பத்திரிகைத் தலையங்கம் ஒன்று எழுதுக.
2. வேளாண் முறைகளை அறிந்து கொள்வதற்காக உழவர் ஒருவரை பேட்டி காண்பதற்கான 10 வினாக்கள் அடங்கிய வினாநிரல் ஒன்று தயாரிக்கவும்.
3. தமிழ் இலக்கியங்களில் வேளாண்மைச் செய்திகள் என்ற தலைப்பில் வானொலி உரை தயாரிக்கவும்.

### எட்டு மதிப்பெண்

1. 'இலக்கியங்களில் வேளாண் செய்திகள்', கட்டுரை எழுதுங்கள்.

## அடைவு

**வேளாண் தொடர்பாகப் படைப்பிலக்கியங்களில் வெளிப்படும் பிரச்சினைகளைப் பகுப்பாய்வு செய்து விமர்சனக் குறிப்பு எழுதுகிறார்கள்.**

### ஒரு மதிப்பெண்

1. விஷமருந்துகளும் உப்பு உரங்களும் நம்ம நிலத்தைப் புண்ணாக்கி நிலத்தைக் குற்றுயிர் ஆக்கிவிட்டது. செயற்கை உரப்பாதிப்பைச் சுட்டும் கவிதை வரிகளுக்குரித்தான கவிஞர்.

அ) சமயவேல் ஆ) பழனிபாரதி

இ) முத்தானந்தம் ஈ) சுயம்புலிங்கம்

2. இயற்கை வேளாண்மை அழிந்து வருவதால் உண்டாகும் விளைவுகள்

1) நோய் எதிர்ப்பு சக்தி குறைகிறது, 2) ஆயுள் குறைகிறது 3) புதிய நோய் உண்டாகிறது, 4) இயற்கை மாசடைகிறது

அ) 1, 2 சரி ஆ) 2, 3 சரி

இ) 1, 3 சரி ஈ) நான்கும் சரி

3. நூலை ஆசிரியரோடு பொருத்தக் காட்டுக.

| | | |
|---|---|---|
| ஏரெழுபது | - | மு. சுயம்புலிங்கம் |
| நம்மநிலம் | - | கம்பர் |
| பொங்கலோ பொங்கல் | - | சா. முத்தானந்தம் |
| மண்நேசம் | - | பழநிபாரதி |

### மூன்று மதிப்பெண்

1. பூச்சிகளைக் கொல்லும் விஷமும்
களைகளைக் கொல்லும் விஷமும்
அழகு அழகான புட்டிகளில்

" கவிஞர் சுயம்புலிங்கம் உணர்த்தும் வேளாண் பிரச்சினைகளைப் பட்டியலிடுங்கள் உரக்கடைகளை அலங்க ரித்து

2. நும்பாடப் பகுதியில் வரும் மண்நேசம் கதையைப் படித்திருப்பீர்கள். அதை குறித்த ஒரு விமர்சனக் குறிப்பு தயாரிக்க.

3. நம் நம்முடைய
மூதாதையர் விவசாயத்திற்கு
திரும்ப வேண்டிய காலம் இது

- பாடலின் திரண்ட கருத்தைத் துணுக்குச் செய்தியாக எழுதுக.

4. சுயலாபத்திற்காக வயல் நிலங்களை அழித்து பலமாடிக் கட்டிடங்கள் கட்டுவதற்கெதிராகப் புகார் கடிதம் ஒன்று எழுதுக.

### நான்கு மதிப்பெண்

1. தென்னை விவசாயம் சந்திக்கும் பிரச்சினைகளைப் பற்றிப் பத்திரிகைச் செய்தி ஒன்று தயார் செய்க.
2. மண்நேசம் சிறுகதையின் மையக் கருத்தை அடிப்படையாகக் கொண்ட வானொலி உரை தயார் செய்க.
3. பார் நடக்கும் படை நடக்க மாட்டாதே எனும் கம்பரின் பாடலின் சொல்நயம் பாராட்டுக.

### ஐந்து மதிப்பெண்

1. இன்றைய சூழலில் வேளாண்மையில் சிறந்து விளங்கும் நாடே ஏற்றம் பெறுகிறது.
2. 'காலந்தோறும் தமிழ் இலக்கியங்களில் வேளாண் செய்திகள்' என்ற தலைப்பில் சிறுகட்டுரை எழுதுக.
3. 'பொங்கலோ பொங்கல்' கவிதையின் மையக்கருத்து வெளிப்படும் சூழலை விமர்சனக் குறிப்பாக எழுதுங்கள்.

### எட்டு மதிப்பெண்

1. காலநிலை மாற்றத்தாலும் வேளாண் தொழில் பாதிக்கப்படுகிறது கருத்தரங்கக் கட்டுரை எழுதுங்கள்.
2. தொழில்நுட்ப வளர்ச்சி வேளாண் தொழிலுக்கு நன்மையே / தீமையே. பட்டிமன்றக் குறிப்புகள் எழுதுங்கள்.

## அடைவு

**சுற்றுப்புறத்தூய்மை மாசுக்கட்டுப்பாடு போன்றவை பற்றி விழிப்புணர்வு பெறுகிறார்கள். அவற்றை எழுத்துவடிவில் சுட்டிக்காட்டுகிறார்கள்.**

### ஒரு மதிப்பெண்

1. மண் வளம் குறையக் காரணம் ...............

   அ) இயற்கை உரம்    ஆ) செயற்கை உரம்

   இ) பூச்சுக்கொல்லிகள்    ஈ) காலநிலை மாற்றம்

2. இயற்கை வழி வேளாண்மையில் பாதுகாக்கப்படுவது எது?

   அ) மண்வளம்    ஆ) பயிர் வளம்

   இ) நீர் வளம்    ஈ) மரப்பாதுகாப்பு

3. பச்சை மரங்களைக் குறைக்குப் படுவது...............

   அ) வெப்பம்    ஆ) காற்று

   இ) நீர்    ஈ) மாசு

4, ------------------ என்ற பூச்சிக்கொல்லி மருந்து இந்தியாவில் தடைசெய்யப்பட்டுள்ளது.

### மூன்று மதிப்பெண்

1. இயற்கை வேளாண்மையில் மண்வளம் பாதுகாக்கப்படும். -விமர்சனக் குறிப்பு எழுதுங்கள்
2. சுற்றுப்புறத்தூய்மைக்கு மரங்கள் மிகத் தேவை- சொற்பொழிவு தயார் செய்யுங்கள்.
3. இயற்கை செயற்கை உரங்களைப் பயன்படுத்துவதால் ஏற்படும் நன்மை தீமைகளை அறிவுறுத்தும் வகையில் பத்திரிகைச் செய்தி தயாரிக்கவும்.
4. 'இயற்கை வேளாண்மையும் சுற்றுச்சூழல் பாதுகாப்பும்' என்ற தலைப்பில் தொலைக்காட்சி உரைத் தயாரிக்கவும்.

## நான்கு மதிப்பெண்

1. மழையால் மட்டுமே விளையக்கூடிய பயிர்வகைகள் இன்று எதிர்கொள்ளும் பிரச்சினைகளைப் பட்டியலிடுக?
2. ஆழ்குழாய் கிணறுகள் வேளாண்மையை பாதிக்கிறது. அனுபவக் குறிப்பு/ நிகழ்வுக் குறிப்பாக எழுதுங்கள்.
3. பூச்சிக்கொல்லி மருந்துகள் பூச்சிகளை மட்டும் கொல்லவில்லை- மனித உரங்களையும் அழிக்கிறது. தலையங்கம் தயார் செய்யுங்கள்.

## ஐந்து மதிப்பெண்

1. இயற்கை உரங்களை எப்படியெல்லாம் உருவாக்கலாம் வேளாண்துறை அதிகாரியுடன் நேர்காணல் நடத்திட வினாக்கள் உருவாக்குங்கள்.
2. ‘பசும் பூமி’ எனும் தலைப்பில் கவிதை புனைக.
3. பசியால் குழிந்து
   எலி வளையாகிறது

   விவசாயக் கண்கள்”

   கவிதை வரிகளை விமர்சித்துக் குறிப்பெழுதுங்கள்.

## எட்டு மதிப்பெண்

1. வயல்கள் எல்லாம் வறண்ட நிலங்களாகும்.- திறனாய்வுக் கட்டுரை எழுதுங்கள்.
2. ஜூன்- 5 சுற்றுச்சூழல் தினக்கொண்டாட்டத்திற்காக நிகழ்ச்சி நிரல் தயாரியுங்கள். நிகழ்ச்சியில் உரையாற்ற உரைக்குறிப்பு உருவாக்குங்கள்.

## அடைவு

**வேளாண் தொடர்பான பாடல்கள், பழமொழிகள், செய்திகள் போன்றவற்றையும் படங்களையும் தொகுத்து வேளாண் மலர் தயாரித்து வெளியிடுகிறார்கள்.**

## ஒரு மதிப்பெண்

1. விவசாயம் தொடர்பான பழமொழி அல்லாதது.

   அ) ஆடிப்பட்டம் தேடி விதை ஆ) ஆற்றில் போட்டாலும் அளந்து போடு

   இ) காற்றுள்ள போதே தூற்றிக்கொள் ஈ) அகல உழுதாலும் ஆழ உழு.

2. ஏற்றப்பாட்டு என்பது நாட்டுப்புற மக்கள் .......................... பாடுவது.

   அ) நீர் இறைக்கையில் ஆ) விதை விதைக்கையில்

   இ) அறுவடை செய்கையில் ஈ) ஏர்பூட்டி உழுகையில் .

## மூன்று மதிப்பெண்

1. பசுமைப்புரட்சி என்றத் தலைப்பில் வேளாண் மலருக்கு ஒரு சிறுகட்டுரை எழுதுக.
2. வேளாண் தொடர்பான நாட்டுப்புறப் பாடல்கள் அழிந்து வரும் நிலையைச் சுட்டிகாட்டி வெளிநாட்டிலிருக்கும் நண்பனுக்குக் கடிதம் ஒன்று எழுதுக.
3. வேளாண் தொடர்பான மூன்று பழமொழிகள் எழுதுங்கள்.
4. நெற்பயிர் விவசாயப் படிநிலைகளை எழுதுங்கள்.

## நான்கு மதிப்பெண்

1. வேளாண் மலர் வெளியீட்டு விழாவிற்கு வருகை தர இருக்கும் சாதனையாளர்( தேங்காய் வளர்ச்சி பாண்டியராஜன் அவர்களுக்கு) பாராட்டுரை தயார் செய்யுங்கள்.
2. விவசாயத்தின் பெருமை விளங்கும் கவிதை எழுதி தலைப்பு கொடுங்கள்.
3. இயற்கை உரங்கள் பயன்படுத்திட விழிப்புணர்வு சொற்பொழிவு ஒன்று எழுதுங்கள்.

## ஐந்து மதிப்பெண்

1. “வாரிக்களத்தடிக்கும், வந்த பின் கோட்டை புகும்
   போரில் சிறந்த பொலிவாகும்- சீருற்ற
   செக்கோல் மேனி திருமலைராயன் வரையில்
   வைக்கோலும் மால்யானையாம்” - அணிநயம் பாராட்டி விளக்குங்கள்.
2. வேளாண் மலர் வெளியிட வகுப்பில் நடைபெற வேண்டிய முன் திட்டமிடலை விளக்கக் கட்டுரையாக எழுதுங்கள்.
3. ‘மண்நேசம்’ கதையில் வரும் பாட்டையாவின் கதாபாத்திரப் படைப்பை அமைப்பை விமர்சனம் செய்க.

## எட்டு மதிப்பெண்

1. படித்தவர்களுக்கும் வேளாண் தொழிலை விரும்பிச் செய்ய வேண்டும்- உங்கள் கருத்தினைக் கருத்தரங்கக் கட்டுரையாக எழுதுங்கள்.
2. வேளாண் தொழிலின் மகத்துவத்தை உணர்த்தும் சிறு கட்டுரையுடன் வேளாண்மலர் வெளியீட்டு விழாவை பத்திரிகைச் செய்தியாக எழுதுங்கள்.

2

# கலையும் பண்பாடும்

## அலகு அறிமுகம்

கலையும் பண்பாடும் என்னும் இவ்வலகு முதலாண்டின் தொடர்ச்சியாக அமைக்கப்பட்டுள்ளது. பல்வேறு பட்ட கலைகளும் அதன் தோற்றங்களும் வடிவமாற்றங்களும் நம் இரசனையின் வெளிப்பாடு. இவ்வலகில் பாமர மக்களின் பண்பாட்டையும், படிப்பறிவு மக்களின் பண்பாட்டையும் வெளிப்படுத்தும் நாட்டார் பண்பாடு, செவ்விலக்கியப் பண்பாடு என இரு பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன.

கூத்துக்கலை என்னும் பிரிவு இன்றைய திரைப்படங்கள், தொடர்கள், குறும்படங்கள் அனைத்துக்கும் வழிகாட்டியாக இருந்த கூத்தினை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்துகிறது. கதை, பாடல், நாடகம், கட்டுரை என்று பல்வேறு மொழி வடிவங்கள் இவ்வலகில் உட்படுத்தப்பட்டுள்ளன. பண்டைய மக்களின் பழக்க வழக்கங்களும், பண்பாட்டுக் கூறுகளும் கதையாகவும், பாடலாகவும் வெளிப்படுவதை உணரலாம்.

'வாய் மொழி இலக்கியங்களும் தமிழ்ப் பண்பாடும்' என்னும் கட்டுரை நாட்டுப்புற மக்களின் பண்பாடு, நம்பிக்கை போன்றவற்றை அறிமுகப்படுத்துகிறது. நன்மையே எப்போதும் வெல்லும் என்ற ஆழ்ந்த நம்பிக்கையை நாட்டுப்புறக்கதை நகைச் சுவையாகச் சொல்லிப்போகிறது. கதைப்பாடல்கள் பண்பாட்டுச் செய்திகளைச் சொல்லும் கருவூலங்களாக அமைகின்றன என்பதைக் காட்டிட மதுரையின் அழகை விளக்கும் கான்சாகிப் கதைப்பாடல் பகுதியும், நாட்டார் திருமணப் பண்பாடைக் கூறும் நாட்டுப்புறப்பாடல் ஒன்றும் இப்பிரிவில் உட்படுத்தப்பட்டுள்ளன.

சங்க இலக்கியத்தில் மக்களின் பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், மனப்பான்மைகள் போன்றவற்றை விளக்கும் கட்டுரை உட்படுத்தப்பட்டுள்ளது. அதைப் போன்று சங்க இலக்கியங்களில் காணும் நடுகல், வேலன் வெறியாட்டு போன்ற நம்பிக்கைகளும் எடுத்துக்காட்டாகக் கொடுக்கப்பட்டுள்ளன. இவ்விரு பிரிவுகளின் நோக்கம் மாணவர்கள் பண்டைய மக்களின் பண்பாட்டுச் சிறப்பைப் புரிந்து இன்றைய நிலையுடன் அவற்றை ஒப்பிட்டு அறிந்து கொள்ள வேண்டும் என்பதே. பண்பு வேறு பண்பாடு வேறு என்ற தெளிவான அறிவை மாணவன் பெற்றிட வேண்டும்.

கூத்துக்கலை என்ற பிரிவில் இன்குலாப் அவர்களின் குறிஞ்சிக்கூத்து என்ற நாடகத்தின் ஒரு பகுதி உட்படுத்தப்பட்டுள்ளது. பண்டைய நாடகங்கள் இசைவடிவிலே அமைந்திருக்கும் பாடல்களும் வசனங்களும் இசையாகவே வடிவமைக்கப்பட்டிருந்தது என்பதை இப்பகுதி மாணவர்களுக்கு உணர்த்தும்.

பெண்களால் மட்டும் ஆடப்படும் நங்கையர் கூத்து என்ற கேரளக் கலைவடிவமும் இவ்வலகில் அமைந்துள்ளது. பண்டைய இலக்கியங்களும் கலைகளும், பண்பாடும் ஒன்றுக்கொன்று இணைந்தே வளர்ந்தவை என்பதை இவ்வலகு எடுத்துக்காட்டுகின்றது. இவ்வலகின் மூலம் முன் வகுப்பில் கற்ற அனுபவத்தை மேலும் விரிவுபடுத்தவும், கலையும் பண்பாடும் மனிதனின் வாழ்வோடு இணைந்தவை என்பதை அறியவும் செய்கிறான் மாணவன்.

## கற்றல் அடைவுகள்

- நாட்டார் வழக்காறுகளில் அமைந்த பண்பாட்டுக் கூறுகளை அறிந்து வெளியிடுகிறார்கள்.
- செவ்விலக்கியங்கள் உணர்த்தும் பண்பாட்டினை உணர்ந்து தங்கள் படைப்புகளில் பதிக்கிறார்கள்.
- கலைகளில் சிறந்த சான்றோர்களை நேர்காணல் நடத்திக் கலைகள் குறித்த செய்திகளைத் தொகுக்கிறார்கள்.
- நாடகங்கள், குறும்படங்கள் போன்றவற்றைத் தயாரிக்கிறார்கள், வெளியிடுகிறார்கள்.
- நாட்டார் வழக்காறுகளில் அமைந்துள்ள இயல்பான சிந்தனையை அறிந்து அவ்விலக்கியங்கள் குறித்து சிறு கட்டுரை எழுதுகின்றனர்.
- செவ்விலக்கியப் பண்பாட்டுக் கூறுகளுடன் நாட்டார் இலக்கியப் பண்பாட்டுக்கூறுகளை ஒப்பிட்டுப் பார்க்கின்றனர்.
- பாடப்பகுதியை உள்வாங்கி சிறுவினாக்கள் உருவாக்குகின்றனர்.
- கேரளப்பண்பாட்டுடன் சமகாலத் தமிழகப்பண்பாட்டை ஒப்பிட்டுக் குறிப்புகள் எழுதுகின்றனர்.
- இசை நாடங்களை வசன நாடகங்களாக வடிவமாற்றம் செய்கின்றனர்.
- கலைஞர்களின் வளர்ச்சிப்படிகளை உற்றுநோக்கி பாராட்டுரை தயார் செய்கின்றனர்.

## மதிப்புகளும் மனப்பாங்கும்

- பாமர மக்களின் இயல்பான சிந்தனையை இரசித்துப் பெருமிதம் கொள்கிறான்.
- நாட்டார் வழக்காறுகளில் காணப்படும் கற்பனை, அழகுணர்ச்சி, நற்பண்புகள் போன்றவற்றைப் போற்றுகிறான்.
- அரும்பாடுபட்டு உழைத்த கலைஞர்களின் வரலாறு அறிந்து ஊக்கம் கொள்கிறான்.
- மேடைக்கூச்சம் (சபை பயம்) நீங்கித் திறன்களை வெளிப்படுத்தும் மனப்பான்மை பெறுகிறான்.
- சுயமாகப் புதிய படைப்புகளைப் படைக்க முடியும் என்ற தன்னம்பிக்கை பெறுகிறான்.
- தமிழர் பண்பாட்டின் சிறப்பினைத் தன்னம்பிக்கையுடன் பேசுகின்றனர்.

## பார்வை நூல்கள்

*நாட்டுப்புறத் திருமணப் பாடல்கள்*
*கான்சாகிபு கதைப் பாடல்கள்*
*நாட்டார் கதைகள்*
*அகநானூறு*
*புறநானூறு*
*குறிஞ்சிப் பாட்டு*
*சிலப்பதிகாரம்*
*குறிஞ்சிக் கூத்து ( முழுமை) இன்குலாப்*
*கேரளக்கலைகள்*

அலகுச்சட்டம் (கலையும் பண்பாடும்) — அலகு 2

| கருத்துகள்/திறன்கள் | கற்றல் செயல்பாடுகள்/ மதிப்பீடு | கற்றல் அடைவுகள் |
| --- | --- | --- |
| நாட்டார் இலக்கியங்களில் அக்காலப் பண்பாட்டுக்கூறுகள் வெளிப்படுகின்றன. | **கலந்துரையாடல்**<br>பகுத்தறிவு மிகுந்த காலத்திலும் மக்களிடையே நிலவி வரும் பல்வேறு வகையான நம்பிக்கைகள் பற்றிக் கலந்துரையாடல்.<br>**தொகுத்து எழுதுதல்**<br>நாட்டுப்புற இலக்கியப் பாடல்களைக் குறுந்தட்டின் உதவியுடன் ஒலிக்கச் செய்தல். அப்பாடல்கள் கூறும் பண்டைய மக்களின் வாழ்வியல் கூறுகளைத் தொகுத்து எழுதிடச் செய்தல். (குழுச்செயல்பாடு) பாடப்பகுதியில் அமைந்தள்ள 'வாய்மொழி இலக்கியங்களும் தமிழர் பண்பாடும்' எனும் கட்டுரைப் பகுதியில் இடம் பெற்றுள்ள பாடல்களில் கூறப்படும் பண்பாட்டுக் கூறுகளைக் குறிப்பேடுகளில் பட்டியலிடச் சொல்லுதல்.<br>**மதிப்பீட்டுக் குறிப்புகள்**<br>- தாலாட்டு, திருமணம், பிள்ளைப்பேறு என்ற தலைப்புகளில் வகைப்படுத்துதல்.<br>- பண்பாட்டுக் கூறுகளைக் கண்டறிதல்.<br>- தெளிவான மொழிநடை.<br>**சுற்றுலாக்கட்டுரை எழுதுதல் (பயணக் கட்டுரை)**<br>பாடப்பகுதியில் அமைந்துள்ள கான்சாகிபு கதைப்பாடலின் பகுதியாக வரும் மதுரை நகரின் அழகினை நன்கு பொருளறிந்து வருணித்துப் பயணக்கட்டுரையாக எழுதிடச் செய்தல். (தனிநபர் செயல்பாடு)<br>**மதிப்பீட்டுக் குறிப்புகள்**<br>- பயணக்கட்டுரை வடிவம்<br>- வருணனை<br>- மொழிநடை<br>- கருத்துத் தொடர்பு | நாட்டார் வழக்காறுகளில் அமைந்த பண்பாட்டுக்கூறுகளை அறிந்து வெளியிடுகின்றனர். |

| கருத்துகள்/திறன்கள் | கற்றல் செயல்பாடுகள்/ மதிப்பீடு | கற்றல் அடைவுகள் |
| --- | --- | --- |
| | **சிறுகட்டுரை எழுதுதல்**<br>பேராசையின் பரிசு எனும் கதையினை வாசித்துப் புரிந்து கொள்ளல். நாட்டுப்புறக் கதைகள் நற்குணங்களைப் போதிக்கின்றன என்பதைக் கலந்துரையாடல். பாமர மக்களின் இயல்பான சிந்தனையைக் கதைகள், கதைப்பாடல்கள் உணர்த்தும் விதத்தைச் சிறுகட்டுரையாக எழுதிடச் சொல்லுதல்.<br>**மதிப்பீட்டுக் குறிப்புகள்**<br>1. பொருத்தமான தலைப்பு<br>2. பாடப்பகுதிச் செய்திகளைக் கட்டுரையில் பயன்டுத்துதல் (தனிநபர் செயல்பாடு)<br>3. மொழி நடை<br>4. திறனாய்வு அணுகுமுறையுடனான கட்டுரை அமைப்பு (தனிநபர் செயல்பாடு) | |
| செவ்விலக்கியங்களில் பண்பாட்டுக் கூறுகள் வெளிப்படுகின்றன. | **சொற்பொழிவு உரை தயாரித்தல்.**<br>நாட்டார் பண்பாட்டில் அமைந்துள்ள வாழ்வியல் கூறுகளை அறிந்து அவற்றை செவ்விலக்கிய பண்பாட்டுடன் ஒப்பிட்டு விவாதித்தல். சங்க இலக்கியத்தில் தமிழர் பண்பாடு என்ற கட்டுரையை வாசித்துக் கலந்துரையாடிக் குறிப்புகள் தயாரிக்கின்றனர். இக்குறிப்புகளின் அடிப்படையிலும் கலந்துரையாடல் அடிப்படையிலும் தமிழர் பண்பாடு என்னும் தலைப்பில் உரையாற்றச் சொற்பொழிவு உரை ஒன்றை ஆசிரியர் உதவியுடன் தயாரிக்கிறார்கள். பேசுகிறார்கள்.<br>**மதிப்பீட்டுக் குறிப்புகள்**<br>சொற்பொழிவு வடிவம், பேச்சாற்றல், சான்றுகளுடன் அமைத்தல், மொழிநடை | செவ்விலக்கியப் பண்பாட்டுடன் நாட்டார் இலக்கியப் பண்பாட்டினை ஒப்பிட்டுப் பேசுகிறார்கள். |
| | **வினாடிவினாப் போட்டிகளுக்கான வினாக்கள் தயாரித்தல்**<br>சங்க இலக்கியத்தில் பண்பாடு என்ற கட்டுரைப் பகுதியில் இருந்து வினாடிவினா (ஒரு சொல்லை) நடத்துவதற்கான வினாக்கள் தயாரிக்கச் | கதை, கட்டுரைப் பாடல்கள் போன்றவற்றை வாசித்து உணர்ந்து அவற்றின் அடிப்படையில் சிறு வினாக்கள் தயாரிக்கின்றனர். |

| கருத்துகள்/திறன்கள் | கற்றல் செயல்பாடுகள்/ மதிப்பீடு | கற்றல் அடைவுகள் |
|---|---|---|
| | சொல்லுதல்.<br>குழுக்களாகப் பிரித்தும், தனிநபர் செயல்பாடாகவும் இச்செயல்பாட்டினை அளிக்கலாம்.<br>**மதிப்பீட்டுக் குறிப்புகள்**<br>வினா தன்மை, எண்ணிக்கை, தெளிவு, தரம்<br>**ஒப்பிட்டுக் குறிப்பு எழுதுதல்.**<br>சங்க கால இலக்கியங்களில் வெளிப்படும் பண்பாட்டுக் கூறுகளைப் பாடப்பகுதியுடன் விவாதித்து 'வேலன் வெறியாட்டு' என்ற நம்பிக்கையை இன்றளவும் நாம் கேரள மாநிலத்ததில் கண்டுவரும் வெளிச்சப்பாடு என்ற நம்பிக்கையுடன் ஒப்பிட்டு எழுதிடச் சொல்லுதல். இவ்வகையில் ஒப்பிடும் போது மாணவர்களுக்கு இருவகைப் பண்பாட்டினை அறியவும் ஒப்பிடவும் முடிகிறது. (தனிநபர்)<br>**மதிப்பீட்டு முறை**<br>விளக்கம், தொடர்புபடுதல், ஒப்பீட்டுக் குறிப்புகள் | தமிழகப் பண்பாட்டுடன் கேரள சமகாலப் பண்பாட்டை ஒப்பிட்டும் வேறுபடுத்தியும் குறிப்புகள் எழுதுகிறார்கள். |
| கூத்துக்கலை மக்கள் வாழ்க்கையுடன் நெருங்கிய தொடர்புடையது. | **நேர்காணல் நடத்துதல்**<br>கூத்துக்கலை என்னும் பகுதியில் அமைந்துள்ள குறிஞ்சிக் கூத்தினை வாசித்து அறிந்த மாணவர்கள் ஆசிரியருடன் இன்றைய நாட்டுப்புறக் கலைகளின் வீழ்ச்சியைக் குறித்து விவாதிக்கின்றனர்..<br>முன்வகுப்பு அனுபவத்துடன் ஏதேனும் ஒரு கூத்துக் கலைஞரை நேர்காணல் நடத்திட வினாக்கள் தயார் செய்கிறான். நேர்காணல் நடத்துகிறான். (தனிநபர்)<br>**மதிப்பீட்டுக் குறிப்புகள்**<br>வினா தன்மை, தெளிவு, தொடர்பு, மொழிநடை | கலைகளில் சிறந்த சான்றோர்களை நேர்காணல் நடத்திக் கலைகள் குறித்த செய்திகளைத் தொகுகின்றனர். |

| கருத்துகள்/திறன்கள் | கற்றல் செயல்பாடுகள்/ மதிப்பீடு | கற்றல் அடைவுகள் |
| --- | --- | --- |
| கலைஞர்கள், கடும் உழைப்பாலும், முயற்சியாலுமே முன்னேற்றம் அடைந்துள்ளனர். | **நாடகம் அரங்கேற்றல்**<br>இசை வடிவில் உள்ள நாடகத்தை வசன நடையில் மாற்றி, ஒவ்வொரு குழுவையும் வகுப்பில் நடிக்கச் செய்ய வேண்டும். குழுக்களில் சிறந்த நடிப்பாற்றல் வெளிப்படுத்தும் மாணவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.<br>(குழு செயல்பாடு)<br>**மதிப்பீட்டு குறிப்புகள்**<br>ஒற்றுமை, நடிப்பாற்றல், அமைப்பு, காட்சித் தெளிவு<br>**பாராட்டுரை தயார் செய்தல்**<br>நாடகமாக்கல் என்ற முந்தைய செயல்பாட்டின் தொடர்ச்சியாக விழாவுக்குச் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்ள இருக்கும் நங்கையர் கூத்துக்கலையில் சிறந்து விளங்கிய மார்கிசதி அவர்களுக்குப் பாராட்டுரை தயார் செய்து, பேசிடச் செய்ய வேண்டும். பாடப்பகுதியில் அமைந்துள்ள நங்கையர் கூத்து எனும் பாடம் பாராட்டுரை தயார் செய்ய மிக உறுதுணையாக இருக்கும். (தனிநபர்)<br>**மதிப்பீட்டு குறிப்புகள்**<br>உரை வடிவம், கருத்தாழம், மொழிநடை, பேச்சாற்றல்<br>**குறும்படம் தயாரித்தல்**<br>நாடகம் அரங்கேற்றும்போது அதை ஒளிப்பதிவாகச் செய்து வைத்துக்கொண்டு, மாணவர்கள் கலைகள் காலமாற்றங்களுக்கு ஏற்றவாறு மாறி வருவதைக் குறும்படமாகவோ ஆவணப்படமாகவோ தயாரிக்கச் சொல்லுதல்.<br>தேவையான எல்லா உதவிகளும் ஆசிரியர் அளிக்க வேண்டும். கதை, திரைக்கதை, வசனம், ஒளிப்பதிவு, காட்சியமைப்பு, பாத்திரத்தேர்வு, அலங்காரம், சூழல் போன்றவற்றை கலந்துரையாடிக் குறும்படம் எடுக்க உதவ வேண்டும்.<br>**மதிப்பீட்டுக் குறிப்புகள்**<br>– ஆர்வம், பங்களிப்பு, முயற்சி, தரம், கருத்து, நடிப்பு | இசை வடிவம் அமைந்த நாடகத்தினை வசனவடிவில் வடிவமாற்றம் செய்கின்றனர். நடித்து வெளியிடுகின்றனர்.<br><br>கலைஞர்களின் வளர்ச்சிப் படிகளை உற்றுநோக்கிப் பாராட் டுரை தயார்செய்கிறார்கள்.<br><br>கலைகள் பண்பாடு போன்றவை தொடர்பான நாடகங்கள் குறும் படங்கள் தயாரித்து வெளியிடுகின்றனர். |

# அலகுப்பகுப்பாய்வு

**நுழைவுச் செயல்பாடு (குழுக்கலந்துரையாடல்)**

கலையும் பண்பாடும் என்ற இவ்வலகு முன்வகுப்பில் படித்த அனுபவங்களை மேலும் வளப்படுத்த உதவும். நாட்டார் இலக்கியங்களில் காணப்படும் பண்பாட்டுக் கூறுகளை மாணவர் அறியச் செய்திட வேண்டும். அலகுக்குள் நுழையும் முன் மாணவர்கள் அறிந்துள்ள நாட்டுப்புற விளையாட்டைப் பாட வைக்கவோ, குறுந்தகட்டில் தாலாட்டு, விளையாட்டு, ஒப்பாரி, திருமணம் போன்றவற்றைப் பொருளாகக் கொண்ட நாட்டுப்புறப் பாடல்களை ஒலிக்கச் செய்யவோ வேண்டும். பாடல்களில் வெளிப்படும் பண்பாட்டுக் கூறுகளைக் குறித்துக் கலந்துரையாட வேண்டும்.

## தொகுத்து எழுதுதல்

நாட்டுப்புறப் பாடல்கள், கதைகள், கதைப்பாடல்கள் போன்றவற்றின் வாயிலாக அன்றைய மக்களின் பண்பாடு, கலை, பழக்க வழக்கங்கள் அறிய முடியும். நாட்டார் வழக்காறுகளில் இயல்பான சிந்தனைகளும் வெளிப்படும் 'வாய்மொழி இலக்கியங்களில் தமிழர் பண்பாடு' என்ற கட்டுரையை வாசித்து மாணவர்களுடன் கலந்துரையாட வேண்டும். மாணவர்களை சம எண்ணிக்கை உடைய குழுக்களாகப் பிரித்து கட்டுரையை நன்கு வாசித்து அதன் மூலம் அறிந்த பண்பாட்டுக் கூறுகளைப் பட்டியலிடச் செய்ய வேண்டும். ஒவ்வொரு குழுவிற்குத் தாலாட்டு, பிள்ளைப்பேறு, திருமணம் என்று தலைப்புகளில் மக்களின் பழக்க வழக்கங்களைப் பட்டியலிட்டு வாசிக்க செய்ய வேண்டும்.

ஒவ்வொரு குழுவும் வாசித்ததை வகுப்பில் கலந்துரையாடி மொத்தமாகக் குறிப்பேட்டில் தொகுக்கச் செய்ய வேண்டும். குழுக்கள் தோறும் அனைத்துக் கருத்துகளும் சென்று சேர்ந்துள்ளதா என்று ஆசிரியர் சோதித்து அறிய வேண்டும்.

**கலந்துரையாடலில்.....**

பாடல்களில் பயன்படுத்தப்பட்டுள்ள அறிவுரைகள்
- உவமைகள்
- இயல்பான சிந்தனைகள்
- வாழ்வியல் கூறுகள்
- பண்பாட்டுக் கூறுகள்
- பழக்க வழக்கங்கள் போன்றவை இடம் பெற வேண்டும்.

**துணைக்கருவிகள்**

- வாய்மொழி இலக்கியத்தில் தமிழர் பண்பாடு
- கட்டுரை
- திருமணப்பாடல்
- நாட்டுப்புறப் பாடல்கள்
- பழமொழிகள்

| கற்றல் அடைவுகள் | மதிப்புகள் / மனப்பாங்குகள் |
|---|---|
| ❖ நாட்டார் வழக்காறுகளில் அமைந்த பண்பாட்டுக்கூறுகளை அறிந்து வெளியிடு கின்றனர். | ↳ பாமர மக்களின் இயல்பான சிந்தனையை இரசித்தல். |

## சுற்றுலாக் கட்டுரை (பயணக்கட்டுரை) எழுதுதல்

'மதுரை நகரின் அழகு' கான்சாகிபு கதைப்பாடலின் ஒரு பகுதியாகும். நாட்டார் வழக்காறுகளில் கதைப்பாடலும் அவர்களது;க் சிந்தனையின் வெளிப்பாடே. தாம் போற்றி வணங்கும் வீரர்களை, தெய்வங்களை, அரசர்களை சிறப்பித்துப் பாடுவது பண்டைய வழக்கமாக இருந்துள்ளது. அப்பாடல்கள் பாடும் போதே கதை மாந்தர்களின் தோற்றம், வீரம், குலப்பெருமை அவர்கள் வாழ்ந்த நாட்டின் அழகு போன்றவையும் பாடல்களூடே இயல்பாக வெளிப்படும். மதுரையின் அழகும் அவ்வாறே இப்பாடலில் வருணனையுடன் வெளிப்படுகிறது.

பாடலை வாசித்துப் பாடி மகிழும் மாணவர்கள் மதுரையின் அழகினை தாம் நேரடியாகக் கண்டு வந்ததாகக் கருதி ஒரு பயணக் கட்டுரை எழுதச் செய்யலாம். பயணக்கட்டுரை இன்று ஒரு இலக்கிய வகையாகப் போற்றப்படுவதால், அத்தகைய ஒரு பயிற்சி மாணவர்களுக்கு அளித்திடல் நன்று.

ஆசிரியர் உதவியுடன் மதுரைக்கு புறப்பட்டுப் போவது முதல் திரும்பி வருவது வரைக் கண்ட, அனுபவித்த செய்திகளைக் கட்டுரையில் கற்பனையாக வெளிப்படுத்த வேண்டும். பயணக்கட்டுரை அமைய வேண்டிய வடிவம், முறை போன்றவற்றை ஆசிரியர் கற்பிக்க வேண்டும்.

தனிநபர் செயல்பாடாக இச்செயல்பாட்டினை மதிப்பிட வேண்டும்.

### துணைக்கருவிகள்

- ஏற்றப்பாட்டு, பயிர்த்தொழில் பாடல்கள், ஏர்ப்பாட்டு
- மதுரையின் அழகு கதைப்பாடல்
- கதைப்பாடல் விளக்கம்

## சிறுகட்டுரை எழுதுதல்

'பேராசையின் பரிசு' என்ற கதை நாட்டார் வழக்காறுகளில் மக்கள் கதைகூறும் வழக்கமுடையவர்களாக இருந்து வந்தனர் என்பதன் எடுத்துக்காட்டாக வைக்கப்பட்டுள்ளது. நன்மை நினைத்தால் நன்மை நடக்கும். வினை விதைத்தவன் விதை அறுப்பான் என்ற ஆழமான நம்பிக்கைகள் இன்றளவும் மக்களிடம் இருந்து வருகின்றன. அவற்றைக் கதைகளாகவும் பழமொழிகளாகவும், பாடல்களில் வெளிப்படுத்துகின்றனர். வாய்மொழி இலக்கியங்களில் கதைகள் மிக முக்கிய பங்கு வகிக்கின்றன. பாமர மக்களின் இயல்பான சிந்தனைகள் கதைகளின் வழி இயல்பாக வெளிப்படும். விலங்குகள், பறவைகள், வசிப்பிடம், நிலம், பொழுது, வாழ்க்கைமுறை, உயர்வு தாழ்வு, சாதி போன்றவை எல்லாம் கதைகளின் வழி நாம் அறியும் பண்பாட்டுக்கூறுகள். பேராசையின் பரிசு என்ற வாய்மொழிக் கதையும் பொறாமையால் ஏற்படும் விளைவுகளை எளிமையாக வெளிப்படுத்துகிறது..

- பாமர மக்களின் வாய்மொழி வெளியீட்டு வடிவங்கள்.
- இயல்பான சிந்தனைகள்
- பண்பாட்டுக்கூறுகள்
- இயற்கையுடன் இணைந்த வாழ்க்கை
- நம்பிக்கை போன்றவை கட்டுரையில் அமைய வேண்டும் என்ற குறிப்புகள் ஆசிரியர் அளிக்க வேண்டும்.

நாட்டுப்புறக் கதைகள், பாடல்கள், கதைப்பாடல்கள் போன்றவை பாமர மக்களின் இயல்பான சிந்தனையை வெளிப்படுத்துகின்றன என்பதை உணர்த்த சிறு கட்டுரையாக எழுதிடச் செய்ய வேண்டும்.

**துணைக்கருவிகள்**

- கதைப்பாடல், நாட்டுப்புறப்பாடல், பேராசையின் பரிசு கதை
- நாட்டுப்புறத் தாலாட்டுப் பாடல்கள்

| கற்றல் அடைவுகள் | மதிப்புகள் / மனப்பாங்குகள் |
|---|---|
| ❖ நாட்டார் வழக்காறுகளில் அமைந்துள்ள இயல்பான சிந்தனைகளைக் குறித்துச் சிறுகட்டுரை எழுதுகின்றனர். | பாமர மக்களிடம் கற்பனையும் அழகுணர்ச்சியும் அமைந்ததைப் போற்றுதல். |

## சொற்பொழிவு உரை தயாரித்தல்

பாடப்பகுதியில் அமைந்துள்ள சங்க இலக்கியத்தில் தமிழர் பண்பாடு என்ற கட்டுரையை வாசித்துக் கலந்துரையாடிக் குறிப்புகள் தயாரிக்கிறார்கள். இச் செயல்பாட்டின் மூலம் உருவாக்கிய குறிப்புகள் மற்றும் முந்தைய செயல்பாடுகளின் வழி கிடைத்த அனுபவங்களின் அடிப்படையில் தமிழர் பண்பாடு என்னும் தலைப்பில் உரையாற்ற சொற்பொழிவு உரை தயாரிக்கின்றனர். சொற்பொழிவின் வடிவம், அமைப்பு போன்றவற்றை ஆசிரியர் கவனிக்க வேண்டும்.

**துணைக்கருவிகள்**

- நாட்டார் இலக்கியம், சங்க இலக்கியத்தில் தமிழர் பண்பாடு பாடங்கள்.
- நாட்டுப்புறப் பாடல்கள்
- சொற்பொழிவுகளின் தொகுப்பு நூற்கள், குறுந்தட்டுகள்.

| கற்றல் அடைவுகள் | மதிப்புகள் / மனப்பாங்குகள் |
|---|---|
| ❖ கலந்துரையாடல், குறிப்புகள், கட்டுரைகள் போன்றவற்றின் அடிப்படையில் சொற்பொழிவு உரை தயாரித்துப் பேசுகின்றனர். | தமிழர் பண்பாட்டிடுச் சிறப்பின் நம்பிக்கை கொள்தல். |

## வினாடி வினாப் போட்டிக்கான வினாக்கள் தயாரித்தல்

பாடப்பகுதிகளில் இருந்தும், அலகு வாயிலாக நடைபெறும் ஆசிரியர் மாணவர் கலந்துரையாடலில் இருந்தும் ஒரு சொல் விடைகள், அல்லது வினாடி வினாக்களுக்கான வினாக்கள் தயார் செய்வது பயனுள்ள ஒரு செயல்பாடாகும். நம் கற்றல் நோக்கத்தை சரியான இலக்குடன் அடைந்துள்ளனரா என்று ஆசிரியர்கள் அறிந்து கொள்வதற்கும், நுணுக்கமாகப் பாடத்தை அணுகவும் இச்செயல்பாடு மிகவும் பயன்படும். தேர்வுகளில் அனைத்து வினாக்களுக்கும் விடை எழுதிட ஆழ்ந்த அறிவைத் தரும்.

வினாக்களின் மாதிரிகளை ஆசிரியர்கள் உருவாக்கிக் கொடுக்க வேண்டும்.

எடுத்துக்காட்டாக,

இன்றைய திரைப்படக் கலைக்கு முன்னோடியாகத் திகழும் நாட்டார் கலை வடிவம் எது? (தெருக்கூத்து)

இதுபோன்ற வினாக்களை உருவாக்க வேண்டும். வினாக்கள் தெளிவாக அமைய வேண்டும்.

### நேர்காணலுக்கான வினாக்கள் தயார் செய்தல்

கூத்துக்கலை என்ற பிரிவுடன் தொடர்படுத்தி, ஒரு கலைஞரை நேர்காணல் நடத்திட வினாக்கள் தயார் செய்திட ஆசிரியர் உதவ வேண்டும். கிடைத்த அனுபவங்கள் மூலம் வினாக்கள் உருவாக்கும் அறிவைப் பல்வேறு செயல்பாடுகளின் வழியாக மாணவன் பெறுகிறான்.

நேர்காணலுக்கான வினாக்கள் தரமானதாகவும், வினாக்கள் புதிய அனுபவங்களைப் பெறும் வண்ணமும் அமைய வேண்டும். பேட்டி காண வேண்டிய கலைஞரைக் குறித்துச் சில முன்னறிவுகளைத் தேடிக் கண்டுபிடிக்கவும் அது தொடர்பான வினாக்களை உருவாக்கவும் கவனம் செலுத்த வேண்டும். உங்கள் பெயர் என்ன? ஊர் எது? வயது என்ன? என்ற தேவையற்ற வினாக்களைத் தவிர்க்க வேண்டும். அக்கலைஞர் தொடர்பான செய்திகள் கலைகள், விருதுகள், உயர்வானநிலை, அடைந்த முயற்சி, மறக்கமுடியாத அனுபவங்கள் போன்றவை சார்ந்ததாக வினாக்கள் அமைய வேண்டும்.

### கவனிக்க...

- வினாடிவினா, நேர்காணல் வினா இரண்டுக்குமான வேறுபாடுகளை ஆசிரியர் தெளிவாக விளக்க வேண்டும்.
- வினாக்கள் தயாரிக்கும் முன் ஆழமான அறிவைப் பாடப்பகுதியின் வாயிலாகப் பெற வேண்டும்.
- கலைஞர்களை நேர்காணல் நடத்திட அவர்கள் சார்ந்த சில செய்திகளைக் கண்டறிய வேண்டும்.

### துணைக்கருவிகள்

- கலையும் பண்பாடும் பாடப்பகுதிகள்
- கூத்துக்கலை

| கற்றல் அடைவுகள் | மதிப்புகள் / மனப்பாங்குகள் |
|---|---|
| ❖ கலைகளில் சிறந்த சான்றோர்களை நேர்காணல் நடத்திக் கலைகள் குறித்த செய்திகளைத் தொகுக்கின்றனர். | கலைஞர்களின் வரலாறு அறியும் ஆர்வம். |

### நாடகம் அரங்கேற்றல்

குறிஞ்சிக் கூத்து என்னும் பாடப்பகுதி தெருக்கூத்து நாடகத்தின் வடிவமாகும். இசை வடிவிலான நாடகங்களே பண்டைய கலை வடிவம். பின்னரே அது பாட்டும் உரையும் இணைந்ததாக அமைக்கப்பட்டது.

ஐவகை நிலங்களில் குறிஞ்சி நிலக்கடவுளான முருகப் பெருமானைப் போற்றிக் குறிஞ்சிக் கூத்து நடத்தப்படும்.

நாடகம் உருவாக்கல், அரங்கேற்றல் என்ற செயல்பாடுகள் பன்முகத்திறனை அறிவதற்கான ஒரு செயல்பாடாகும். இது தொடர் செயல்பாட்டிற்கும், மதிப்பீட்டிற்கும் பயன்படும்.

நாடகம் எழுதி, படிப்படியாக அதைச் செவ்வனே அரங்கேற்ற ஆசிரியர் துணை புரிய வேண்டும். கதை, எழுதுதல், கதையை திரைக்கதையாக்கல், வசனம் எழுதுதல், கதாப்பாத்திரத்தேர்வு, ஆடை அமைப்பு

போன்றவற்றை ஆசிரியர் முன் நின்று கவனிக்க வேண்டும். குழுச் செயல்பாடாக வகுப்பில் அளித்து சிறந்த நடிப்பாற்றல் உடையவர்களைத் தேர்ந்தெடுத்துத் தனிக்குழுவாக அமைத்துப் பள்ளிக் கலைவிழாக்களில் பங்கு பெறச் செய்ய வேண்டும். சிறந்த பயிற்சி அளித்து மாவட்ட, மாநிலக் கலை விழாக்களில் பங்கு பெறச் செய்து பரிசுகள் பெற ஊக்கப்படுத்த வேண்டும்.

**கவனிக்க**

- நாடகம் தயாரிக்கும் முன் இசை நாடகத்தை வசனமாக வடிவமாற்றம் செய்ய வேண்டும்.
- பல்வேறு நாடகங்களைக் குறுந்தட்டின் உதவியுடன் கண்டு தெருக்கூத்தின் ஆடை அலங்காரங்களை அமைத்துக் கொள்ள வேண்டும்.

## துணைக்கருவிகள்

- பாடப்பகுதியில் குறிஞ்சிக் கூத்து நாடகப்பகுதி
- வளப்பகுதிக் குறிப்புகள்

| கற்றல் அடைவுகள் | மதிப்புகள் / மனப்பாங்குகள் |
|---|---|
| ❖ படைப்புகளை வடிவமாற்றம் செய்து வெளியிடுகின்றனர்.<br>(இசை வடிவில் அமைந்துள்ளதை வசன நடையில்) நாடகம் அரங்கேற்றம் செய்கின்றனர். | மேடைக்கூச்சம் நீங்கி கருத்துகளை வெளிப்படுத்தும் திறன். |

**பாராட்டுரை தயாரித்தல்**

கலையும் பண்பாடும் அலகின் மூலம் பல்வேறு பண்பாடு, கலைவடிவங்களை அறியும் மாணவர்கள் நங்கையர்க் கூத்துக் கலையில் சிறந்த மார்கி சதி அவர்களை நாடக அரங்கேற்றம் செய்யும் கலைவிழாவிற்கு அழைத்து, அவர்களைப் பாராட்டிப் பேச உரை ஒன்றைத் தயார் செய்யச் சொல்லுதல்.

**கவனிக்க....**

நேர்காணலுக்கு வினாக்கள் தயாரிக்கும் போது கலைஞர்கள் பற்றிய செய்திகளை முன்னரே அறிந்து கொள்வது போலவே , பாராட்டுரை தயாரித்துப் பேசும் முன் பாராட்டப்படுவோரின் திறமைகள், சாதனைகள் குறித்துச் சேகரித்துக் கொள்ள வேண்டும். சொற்பொழிவுக்கான மதிப்பீட்டுக் குறிப்புகள் இதற்கும் பொருந்தும்.

| கற்றல் அடைவுகள் | மதிப்புகள் / மனப்பாங்குகள் |
|---|---|
| ❖ கலைஞர்களின் வளர்ச்சிப்படிகளை உற்று நோக்கிப் பாராட்டுரை தயார் செய்கின்றனர். | கலைஞர்கள் வரலாறுகளைத் திரட்டும் ஊக்கம். |

## குறும்படம் தயாரித்தல்

பல்வேறு செயல்பாடுகளின் வழியாகக் கிடைத்த அனுபவங்கள், நாடகம் அரங்கேற்றலுக்கு முன் செய்த தயாரெடுப்புகள் போன்றவை மாணவர்களுக்குக் குறும்படம் எடுக்கும் திறனைக் கொடுக்கும். கலையும் பண்பாடும் காலமாற்றங்களுக்கு ஏற்ப மாறியுள்ளதை எடுத்துக்காட்டும்படியோ அல்லது கலை, பண்பாடு தொடர்பான செய்திகள் சார்ந்தோ குறும்படம் தயாரிக்க மாணவர்களுக்கு உதவலாம். நாடகத்தின் கதாபாத்திரத் தேர்வு, திரைக்கதை எழுதுதல் போலவே ஆனாலும் கதைக்களம் தேர்ந்தெடுத்தல், மேம்படுத்துதல், கூட்டிச் சேர்த்தல் போன்றவற்றிற்குத் தொழில்நுட்ப உதவிகள் பயன்படுத்தலாம்.

### <u>துணைக்கருவிகள்</u>

- குறும்படம் தயாரிக்கத் தேவையான கருவிகள்
- மாதிரிக் குறும்படங்கள்
- வழிகாட்டி நூல்கள்

| கற்றல் அடைவுகள் | மதிப்புகள் / மனப்பாங்குகள் |
|---|---|
| ❖ நாடகங்கள், குறும்படங்கள் போன்றவற்றைத் தயாரிக்கிறார்கள், வெளியிடுகிறார்கள். | சுயமாக புதிய படைப்புகளைப் படைக்க முடியும் என்ற தன்னம்பிக்கை. |

## மதிப்பீட்டு முறைகள்

ஒவ்வொரு செயல்பாட்டின் முடிவிலும் ஆசிரியர் மதிப்பீடு செய்து பதிவேட்டில் குறித்து வைக்க வேண்டும். படைப்புகளின் தொகுப்புகளை மாணவர்களிடம் பாதுகாக்கச் சொல்ல வேண்டும். தொடர் மதிப்பீட்டிற்காக அவற்றைப் பயன்படுத்த வேண்டும். இவ்வலகில் கொடுக்கப்பட்டுள்ள செயல்பாடுகள் மட்டுமின்றிச் கற்றல் அடைவுகளை அடைய மேலும் ஆசிரியரின் உத்திக்கேற்பப் பல செயல்பாடுகள் அளிக்கலாம். கற்றல் அடைவுகள் சரியான முறையில் சென்றடைய ஆசிரியர் கவனம் செலுத்த வேண்டும். இவ்வலகில் அமைந்துள்ள குழு மதிப்பீடு தனிநபர் மதிப்பீடு கீழ்க்காண்பன.

## குழு மதிப்பீடு / செயல்பாடு

1. தொகுத்து எழுதுதல்
2. வினாடி - வினாப் போட்டி நடத்துதல்
3. நாடகம் அரங்கேற்றல்
4. குறும்படம் தயாரித்தல்

## தனிநபர் மதிப்பீடு / செயல்பாடு

1. சுற்றுலாக் கட்டுரை எழுதுதல்
2. சிறுகட்டுரை எழுதுதல்
3. சொற்பொழிவு உரை தயாரித்தல்

4. ஒப்பீட்டுக் குறிப்பு எழுதுதல்

5. நேர்காணல் நடத்துதல்

6. பாராட்டுரை தயார் செய்தல்.

### பருவ மதிப்பீட்டிற்காக....

கற்றல் அடைவை அடைய நாம் அளித்த அனைத்துச் செய்லபாடுகளையும் மாணவன் பருவத் தேர்விற்காகப் பயன்படுத்திக்கொள்கிறான். ஆசிரியர் பருவ மதிப்பீட்டு மதிப்பெண்ணையும் தமது பதிவேட்டில் குறித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

- கட்டுரை எழுதுதல்
- தொகுத்து எழுதுதல்
- ஒப்பீட்டுக் குறிப்பு எழுதுதல்
- வினாக்கள் தயாரித்தல்
- சொற்பொழிவு உரை தயாரித்தல்
- பாராட்டு உரை தயாரித்தல்

போன்றவை மாணவனுக்குத் தேர்வுக்கு உதவும்.

### தொடர் மதிப்பீடு

படிப்படியாக மாணவனின் வளர்ச்சிக்கட்டங்களைக் கவனித்து அவனது முன்னேற்றத்திற்கான வழிகாட்டுதலை ஆசிரியர் செய்திட வேண்டும். பின்தங்கியதால் அடைய முடியாதவற்றை மேலும் பல செயல்பாடுகளின் வழி அடைந்திடச் செய்ய வேண்டும்.

இவ்வலகில்

- தொகுத்தல்
- குறிப்புகள் எழுதுதல்
- ஒப்பிடுதல்
- பேச்சாற்றல்
- நடிப்பாற்றல்
- வினாக்கள் உருவாக்கல்
- குறும்படம் தயாரித்தல்

போன்ற செயல்பாடுகளால் மாணவனின் தனித்திறனை தொடர்மதிப்பீட்டிற்காகக் கண்டறிய முடியும். ஆசிரியர் இவ்வகையில் அவனுக்குத் தேவையான உதவிகளை அளிக்க வேண்டும்.

## வளப்பகுதி

### தாய்மாமனின் பெருமையைத் தாலாட்டில் பாடுதல்

கண்ணான தம்பிக்கு- நாங்கள்
காதுகுத்தப் போறோமென்று- உன்
பொன்னான மாமனுக்கு- நாங்கள்
போட்டோம் கடிதாசி!

அரும்பான மாலைக்கட்டி- என்கண்ணே
அவசரமாய் வந்தார்கள்
தட்டுகொண்டு பொன்வாங்கி- என்கண்ணே
தராசுகொண்டு நிறைநிறைத்து
அந்திக்காய் வாளிசெய்து- என்கண்ணே
மலர்ந்தநல்ல சிமிக்கிசெய்து
கோடி உடுத்திக் காது
குத்துமென்பார் சுந்தரர்க்கு!

முந்நூறு வெற்றிலையும்- என்கண்ணே உனக்கு
முதல்மாமன் சீரும்வரும்
நானூறு வெற்றிலையும்- என்கண்ணே உனக்கு
நடுமாமன் சீரும்வரும்

கற்கண்டுத் தட்டும்வரும்- என்கண்ணே உனக்கு
கடைமாமன் சீரும்வரும்
மார்நிறைந்த சந்தனமாம்- என்கண்ணே உனக்கு
மடிநிறைய வெற்றிலையாம்!
சேர்நிறைந்த களிப்பாக்கம்- என்கண்ணே உனக்குச்
சீர்கொடுப்பார் தாய்மாமன்!

பூவாய் உதித்தவனோ- நாங்கள்செய்த
புண்ணியத்தால் வந்தவனோ!
அரும்பாய் உதித்தவனோ- நாங்கள் செய்த
அருந்தவத்தால் வந்தவனோ!

### கணவன் பெருமையைப் பாடுதல்

சாப்பிட்டுக் கைகழுவி
சகுனம் பார்த்து நடைநடந்து,
நினைச்சா எடுப்பாங்க
நெருஞ்சிப்பூ அச்சடியை!

சாத்தூரு போவாங்க
ஜவுளிக்கடை பாப்பாங்க

நினைத்தா எடுப்பாங்க
நெருஞ்சிப்பூ அச்சடியை!

சட்டைமேலே சட்டைப்போட்டு
சரிகைத் துண்ட மேலேபோட்டு
போறாங்க எங்க மச்சான்
பொழுதடைஞ்ச நேரத்திலே!
கோர்ட்டாரு முன்பாக
குரிச்சிபோட்டு துரைகளோட
வாதாடி வழக்குத் தீர்க்கும்
வஞ்சிக்கொடி எஞ்சாம்!

இருக்க குரிச்சி உண்டு
எந்திரிக்க சோடு உண்டு
நடக்கக் குடையுமுண்டு
நான் பார்க்கும் சாமிக்கு!

## கல்வெட்டுகள்

ஒரு நாட்டின் கடந்தகால வரலாறு, பண்பாடு, பழக்கவழக்கங்கள் இவற்றை அறியத் துணை நிற்கும் வரலாற்றுச் சான்றுகளுள் முக்கியமானவை கல்வெட்டுகள். பண்டைக்காலத்தில் இன்றிருப்பதுபோல் காகிதங்களின் பயிற்சியோ, எழுத்துவசதிகளோ இருக்கவில்லை. எனவே அக்கால அரசர்கள் முதலானோர் தங்கள் ஆணைகளையும், பொதுமக்களுக்கு அறிவிக்க விரும்பிய பிற செய்திகளையும் கல்லிலும், செப்பேடுகளிலும் ஓலைச்சுவடுகளிலும் பொறித்து வைத்தனர். இவ்வாறு எழுதப்பட்டவற்றை வடமொழியில் ‘ சாசனம்’ என்பர். சாசனங்கள் தங்கம், வெள்ளி, செம்பு முதலிய உலோகங்களில் எழுதப்பட்டன என்றாலும் பெரும்பாலும் அவை கல்லில் வெட்டப்பட்டு வந்ததனால் அவைப் பொதுவாகக் கல்வெட்டுகள் என்றே அறியப்பட்டன. சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட கல்வெட்டுகள் தமிழகத்தில் கிடைத்துள்ளன.

## யக்ஷகானம்

ஏகதேசம் கதைகளிக்கு நிகரான ஒரு நாட்டியவடிவம்தான் யக்ஷகானம். இக்கலை பெரும்பாலும் கர்நாடக மாநிலத்தை ஒட்டிக்கிடக்கும் கேரள மாவட்டமான காசர்கோட்டிலுள்ள கோயில்களில் நிகழ்த்தப்படுகின்றன. கன்னட மொழியின் மிகவும் பழமையானதும் சாதாரண மக்களின் கலையுமான யக்ஷகானம் அதன் வேஷத்திலும் மேளத்திலும் பாட்டிலும் கதைகளியை ஒத்திருக்கக் காணலாம். கதைகளியில் ஆட்டக்காரார்கள் பேசுவதில்லை. ஆனால் யக்ஷகானத்தில் ஆடுபவர்கள் உரையாடுவர். இது ஒரு முக்கியமான வேறுபாடு. இது ஒரு நாட்டுப்புறக் கலையாகவே கருதப்படுகின்றது. கர்நாடக சங்கீதத்தின் அபூர்வ ராகங்களை இந்நிகழ்ச்சியில் கேட்கலாம். காசர்கோடு தாலுகாவில் கும்பள என்ற இடத்தைச் சேர்ந்த பார்த்தி சுப்பையா என்பவர் யக்ஷகானத்தை வடிவமைத்ததாக நம்பப்படுகிறது.

# மதிப்பீட்டுச் செயல்பாடுகள்

## அடைவு

**நாட்டார் வழக்காறுகளில் அமைந்த பண்பாட்டுக் கூறுகளை அறிந்து வெளியிடுகிறார்கள்.**

**ஒரு மதிப்பெண்**

1. பிறந்த இடத்துப் பெருமையைச் சொல்லிப் பாடப்படும் நாட்டுப்புற பாடல் வகை எது?

   அ) விளையாட்டுப் பாடல்கள் ஆ) தாலாட்டுப் பாடல்கள்

   இ) ஒப்பாரிப் பாடல்கள் ஈ) தொழிற்பாடல்கள்

2. வேலைச் சுமை அறியாமல் இருக்கப் பாடப்படுவது.

   அ) ஏற்றப் பாடல் ஆ) தாலாட்டுப் பாடல்

   இ) ஒப்பாரிப் பாடல் ஈ) காதற் பாடல்கள்

3. மக்களின் சிந்தனைகளையும் பழக்க வழக்கங்களையும் உள்ளபடி இணைத்து பாடப்படும் பாடல் வகை

   அ) நாட்டுப்புறப் பாடல்கள் ஆ) திரைப்படப் பாடல்கள்

   இ) காதற் பாடல்கள் ஈ) விளையாட்டுப் பாடல்கள்

**மூன்று மதிப்பெண்**

5. கிராமத்தில் வசிக்கும் உன் தாத்தா வீட்டிற்குச் சென்று வந்ததை உன் நண்பனுக்கு அனுபக்குறிப்பாகக் கடிதம் எழுதுங்கள்.
6. நாட்டுப்புறப் பாடல்களில் வெளிப்படும் வாழ்வியல் கூறுகள் மூன்றினை சிறுகுறிப்பாக எழுதுங்கள்.
7. மதுரை நகரின் அழகினை- கான்சாகிபு கதைப்பாடல் வழி வருணித்து எழுதுங்கள்.

**ஐந்து மதிப்பெண்**

8. " உலகமயமாதலும், நகரமயமாதலும் " பண்டைய தமிழ் பண்பாட்டினை சீர்குலைக்கிறது.- உங்களது பார்வையில் விமர்சனக் கட்டுரையாக எழுதி பள்ளி ஆண்டு மலரில் வெளியிடுங்கள்.
9. நாட்டுப்புறப் பாடல்கள் மக்கள் வாழ்க்கையோடு நெருங்கிய தொடர்புடையது. ஏதேனும் பாடல்வரிகளைக் குறிப்பிட்டு விளக்கக் குறிப்பு எழுதுங்கள்.

**எட்டு மதிப்பெண்**

10. 'அழிந்து வரும் நாட்டுப்புறப் பண்பாடு' எனும் தலைப்பில் தலையங்கம் தயாரியுங்கள்.
11. நாட்டுப்புறக் கதைகளில் வாழ்க்கை நெறிமுறை- பேராசையின் பரிசு- கதையை திறனாய்வு செய்து எழுதுங்கள்.

## அடைவு

**செவ்விலக்கியங்கள் உணர்த்தும் பண்பாட்டினை உணர்ந்து தங்கள் படைப்புகளில் பதிக்கிறார்கள்.**

**ஒரு மதிப்பெண்**

1. மாதவி என்னும் பாத்திரப் படைப்பு அமைந்த காப்பியம்------
2. மூவேந்தர்கள் என்ற சிறப்பில் உட்படாத மன்னன்

   அ) பல்லவன் ஆ) பாண்டியன் இ) சேரன் ஈ) சோழன்

3. " யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்பதில் கேளிர் என்பதன் பொருள்

   அ) கேளுங்கள் ஆ) நண்பர்கள் இ) செல்லுங்கள் ஈ) சான்றோர்கள்

4. அகவாழ்வையும், புறவாழ்வையும் அழகாக விளக்கும் இலக்கியம்
   அ) திருக்குறள் ஆ) ஆத்திச்சூடி இ) புறநானூறு ஈ) அகநானூறு

**மூன்று மதிப்பெண்கள்**

5. யாவரும் ஒன்றே என்ற சிந்தனை உடையவர்கள் நம் மூதாதையர்- இலக்கியச் சான்றுகளுடன் சிறு குறிப்பு எழுதுங்கள்.
6. வீரத்தில் சிறந்தவர்களை போற்றி வணங்குதல் தமிழர் பண்பாடு ‘ நடுகல்’ குறித்து பெட்டிச் செய்தியாக எழுதுங்கள்.
7. விருந்தோம்பல்- சிலப்பதிகாரம் காட்டும் விதத்தைச் சிறு குறிப்பாக எழுதுங்கள்.

**ஐந்து மதிப்பெண்**

8. நாட்டுப்புற பண்பாட்டின் செவ்வியல் வடிவமே இலக்கியப் பண்பாடு, நாட்டுப்புறப் பாடலிலுள்ள திருமணப் பாடலை, அகநானூறு கூறும் திருமணப் பாட்டுடன் ஒப்பிட்டுக் கட்டுரை எழுதுங்கள்.
9. தெருக்கூத்தின் செவ்வியல் வடிவமே நாடகங்களும், திரைப்படங்களும்- ஒன்றுபடும் கூறுகளைப் பட்டியலிடுங்கள்.

**எட்டு மதிப்பெண்**

10 . “ கலைகளும் பண்பாடும் வாழும் சூழலுடன் இணைந்தே வளருகின்றன” தமிழ் இலக்கிய மன்றத்தில் உரையாற்றக் கருத்தரங்கக் கட்டுரை தயார் செய்யுங்கள்.
11. கலைகள் அழகுணர்ச்சியின் வெளிப்பாடே. கூத்துக்கலையில் வெளிப்படும் பல்வேறு அழகுக் கலைகளை விளக்கக் கட்டுரையாக எழுதுங்கள்.

## அடைவு

**கலைகளில் சிறந்த சான்றோர்களை நேர்காணல் நடத்திக் கலைகள் பற்றிய செய்திகளைத் தொகுக்கின்றனர்.**

**ஒரு மதிப்பெண்**

1. நங்கையர் கூத்து
   அ) பெண்களால் ஆடப்படுவது ஆ) ஆண்களால் ஆடப்படுவது
   இ) இருபாலரும் சேர்ந்து ஆடுவது ஈ) தனித்தனியாக இருபாலரும் ஆடுவது.

2 பொருத்துக
   நங்கையர்கூத்து- கபிலர்
   குறிஞ்சிப் பாட்டு- ஒரு நம்பிக்கை
   அல்லியக்கூத்து- மார்கி சதி
   வேலன் வெறியாட்டு - மாதவி

3. குறிஞ்சிக்கூத்து என்னும் இசை நாடகத்தை எழுதியவர்.
   அ) இன்குலாப் ஆ) ஞானக்கூத்தன்
   இ) கண்ணதாசன் ஈ) மு. மேத்தா

4. 1. இசையும், உரையும் கலந்த வடிவமே தெருக்கூத்து.
   2. தெருக்கூத்தின் வளர்ச்சி வடிவமே நாடகம்
   அ) ஒன்று மட்டும் சரி ஆ) இரண்டு மட்டும் சரி
   இ) இரண்டும் சரி. ஈ) இரண்டும் தவறு

### மூன்று மதிப்பெண்

5 நாட்டுப்புறப் பாடல்களில் தேர்ச்சி பெற்ற கலைஞனைப் பேட்டி காண்பதற்கான வினாநிரல் தயாரிக்கவும்.

6. பிற்காலத்தில் நாடக வளர்ச்சிக்கு கூத்துகள் எந்த அளவு துணை புரிந்தன என்பது குறித்துச் சிறுகட்டுரை எழுதுக.

7. உங்கள் ஊரில் வழக்கத்திலிருக்கும் ஏதேனும் ஒரு நாட்டுப்புறக் கலையைப் பற்றிப் பெட்டிச் செய்தியாக எழுதுக.

### ஐந்து மதிப்பெண்

8 உங்கள் பள்ளி விழாவிற்கு வருகை தர இருக்கும் நாட்டுப்புற இசைக்கலைஞனைப் பாராட்டுவதற்காகப் பாராட்டு உரை எழுதுங்கள்.

9. " வாய்மொழி இலக்கியங்கள் மக்களின் உண்மையான பண்பாட்டு நிலைகளை விளக்குவனவாகும்" எனும் கூற்றை அடிப்படையாகக் கொண்டு வானொலி உரை தயார் செய்யுங்கள்.

### எட்டு மதிப்பெண்

10. நங்கையர் கூத்தும் சிலப்பதிகாரமும் ஒப்பிட்டுக் குறிப்புகள் எழுதுங்கள்.

11. நாட்டுப்புறக் கலைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற எண்ணம் கொண்டுள்ள நீங்கள் கலைஞர்களின் நலிவை வெளிப்படுத்தும் சிறு நாடகம் ஒன்றை வடிவமைத்திட, திரைக்கதை ஒன்றை தயார் செய்யுங்கள்.

# 3

# அறிவியல் தமிழ்

## அலகு அறிமுகம்

அறிவியல் தமிழ் என்னும் இவ்வலகு பழந்தமிழ், இளந்தமிழ், வளர்தமிழ் என மூன்று பிரிவாகப் பகுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பகுதியிலும் அமைந்துள்ள பாடங்கள் இலக்கியங்களில் அறிவியல் செய்திகள் ஊடுருவி நிற்பதைச் சுட்டிக்காட்டுகின்றன. பண்டைக்காலம் முதல் இக்காலம் வரை இலக்கியங்களில் நுணுக்கமான அறிவியல் அறிவு வெளிப்பட்டிருப்பதை உணர்த்திடக் கட்டுரைகள், கவிதைகள், உரை நடைகள், கணினி கலைச்சொற்கள், துணுக்குகள் போன்றவை இவ்வலகினுள் உட்படுத்தப்பட்டுள்ளன.

பழந்தமிழ் என்னும் பிரிவில் 'இலக்கியமும் அறிவியலும்,' கட்டுரையும் நெடுநல்வாடை, முக்கூடற்பள்ளு, மற்றும் தொல்காப்பியம் புறநானூற்றுச் செய்திகளும் இடம் பெற்றுள்ளன. அழகுணர்ச்சிக்கும் கற்பனைக்கும் மட்டுமே கவிஞர்கள் முக்கியத்துவம் அளிக்கின்றனர் என்பதன்றி இன்று நிரூபிக்கப்பட்ட பல அறிவியல் உண்மைகளும், தொலைநோக்குப் பார்வையுடன் இலக்கியங்களில் அமைந்திருக்கின்றன. மேலும் மிக மிக நுணுக்கமான அறிவியல் அறிவும் இலக்கியங்களில் உவமையாக கையாளப்பட்டிருப்பது நம்மை வியப்பின் உச்சிக்கே எடுத்துச் செல்லும்.

இவ்வியப்பின் சிலிர்ப்பினை மாணவச் செல்வங்களின் உள்ளத்தில் ஊற்றி மொழியின் பெருமைதனை வரும் தலைமுறைகள் வாயிலாக உலகறியச் செய்திட வேண்டும். இளந்தமிழ் என்னும் பிரிவில் வலைக்குள் வலை, வானிலை தெரிவிக்கும் விலங்குகள், வித்வான் போன்ற பகுதிகள் உட்படுத்தப்பட்டுள்ளன. காலங்கள் மாறினாலும் அறிவியல் செய்திகள் படைப்பாளர்களால் பல்வேறு வடிவங்களில் வெளிப்படுத்தப்படுகின்றன. வளர்ந்து வரும் அறிவியலால் ஏற்படும் நன்மைகளையும் தீமைகளையும் உள்வாங்கி அதற்கேற்ப வாழ்வின் முன்னேற்றப்பாதையை வகுத்துக்கொள்ள வேண்டும். இணையதளங்கள் பல்வேறு செய்திகளைப் பரிமாறிக்கொள்ளப் பயன்படுகின்றன. ஆனாலும் நிழலுக்குப்பின் ஒளிந்திருக்கும் நிஜங்கள் கொடுமையானதாக இருக்கலாம் என்பதும் மாணவர்கள் அறிந்துகொள்ள வேண்டும்.

வானிலை தெரிவிக்கும் விலங்குகள் எனும் பாடப்பகுதி அறிவியல் செய்திகளை நம்மோடு பேசுவதைப் போன்று சொல்லிப் போகும். வித்வான் எனும் குட்டிக்கதை தொலைநோக்குப் பார்வையுடன் விஞ்ஞானத்தால் எதுவும் சாத்தியமே என்பதைக் கற்பிப்பதுடன் மாணவன் கருவிகள் பல ஆராயவும், உருவாக்கவும் செய்திடும் மனப்பாங்கைத்தரும்.

வளர்தமிழ் என்னும் பிரிவில் அவசரத் தேவை, இன்னும் பிறக்காத தலைமுறைக்காக போன்ற கட்டுரைகளும் கணினிச் சொற்பட்டியலும் உட்படுத்தப்பட்டுள்ளன. தாய்மொழி வாயிலாக அறிவியல் நூல்களைக் கற்பவன் சிந்தனையைப் பலமாக்குகிறான். இன்று வளர்மிகு நாட்டில் பிறந்துள்ள நாம் மொழியால், இலக்கியத்தால் எவ்வகையிலும் வளர்ச்சி அடைந்த நாட்டிற்கு இளைத்தவரல்ல என்ற மனப்போக்கையும் மாணவன் பெறுகிறான். மேலும் அறிவியல் வசதிகளும் வாய்ப்புகளும் நம் பண்பாட்டைச் சீரழிக்க, சீர்குலைக்க ஒரு காரணமாகி விடக் கூடாது என்ற மனப்பான்மை பெற்றுச் சமூக மேம்பாட்டிற்காகப் பாடுபடவும் விளைகிறான், அறிவியல் தமிழ் எனும் அலகு இவற்றிற்கு உறுதுணையாகும் என்பதில் ஐயமில்லை.

## கற்றல் அடைவுகள்

- அறிவியல் கருத்தரங்க நிகழ்வுகளில் பங்கு பெற்று உரையாற்றக் குறிப்புகள் தயாரிக்கிறார்கள்.
- . மொழிபெயர்ப்புத்திறன் பெறுகிறார்கள். அறிவியல் படைப்புகளை மொழிபெயர்க்கிறார்கள்.
- இலக்கியங்களில் இடம்பெறும் அறிவியல் செய்திகளைத் தொகுத்துக் கட்டுரை எழுதுகிறார்கள்.
- சமூக மேம்பாட்டிற்காக இணையதளத்தை நன்முறையில் பயன்படுத்துகிறார்கள். செய்யுளின் பொருள் உணர்ந்து நயம் பாராட்டுகின்றனர்.
- புதிய சொற்களை உருவாக்கிக் கலைச்சொல் அகராதி தயாரிக்கின்றனர்.
- இதழ்களில் வெளியிடும் படியான ஆராய்ச்சிக்கூட்டுரைகள் எழுதுகின்றனர்.
- அறிவியலின் ஆக்கம், அழிவு, வளர்ச்சி போன்றவற்றை உணர்த்தும் இலக்கியக் கருத்தரங்கம் / பட்டிமன்றம் நடத்துகின்றனர்.
- பேச்சாற்றல் பெறுகின்றனர்.

## மதிப்புகளும், மனப்பாங்கும்

- தமிழ் மொழியின் இலக்கியத் தரம் உணர்ந்து நேசித்தல்.
- அறிவியல் நூல்களைத் தாய்மொழியில் கற்று உயரலாம் என்ற நிலை அடைதல்.
- தமிழ் மொழியின் சிறப்பினைத் தன்னம்பிக்கையுடன் பேசிடும் மனப்பான்மை பெறுதல்.
- நம் இலக்கியங்களை உலகறியச் செய்திட வேண்டும் என்ற ஊக்கம் கொள்ளல்.
- சமூக மேம்பாட்டிற்கும், பண்பாட்டு வளர்ச்சிக்கும் பாடுபடுவதோடு தவறான பாதையின் செல்லக் கூடாதென்ற விழிப்புணர்வு அடைதல்.

## பார்வை நூல்கள்

தொல்காப்பியம்
புறநானூறு
திருக்குறள்
முக்கூடற்பள்ளு
ஔவையார் தனிப்பாடல் திரட்டு
நெடுநல்வாடை
பாரதியார் கவிதைகள்
பாரதிசான் கவிதைகள்
திரு.வி.க. கவிதைகள்
அறிவியல் சிறுகதைகள் (ஆர்னிகா நாசர்)
நூறு சுவையான தகவல்கள் (தென்கச்சி கோ.சுவாமிநாதன்)
மாலன் கதைகள் (மாலன்)
ஆயிரம் கணிப்பொறி வார்த்தைகள் (சுஜாதா)
அறிவியல் தமிழ் – வா.செ. குழந்தைசாமி
இன்னும் பிறக்காத தலைமுறைக்காக – தியடோர் பாஸ்கர்

அலகுச்சட்டம் (அறிவியல் தமிழ்) அலகு 3

| கருத்துகள்/திறன்கள் | கற்றல் செயல்பாடுகள்/ மதிப்பீடு | கற்றல் அடைவுகள் |
|---|---|---|
| பண்டைய இலக்கியங்கள் அறிவியல் சிந்தனைகளை வெளிப்படுத்துகின்றன. | **தொகுத்து எழுதுதல்**<br>இலக்கியங்களில் அறிவியல் சிந்தனை வெளிப்படும் சில பகுதிகளை நகலெடுத்து மாணவர்களுக்குக் கொடுத்து அதில் எத்தகைய அறிவியல் உண்மைகள் உணர்த்தப்பட்டுள்ளன என ஆராய்ந்து தொகுத்து எழுதச் செய்தல். (குழுச் செயல்பாடு) | பண்டைய இலக்கியங்களில் காணப் படும் அறிவியல் செய்திகளைத் தொகுத்து எழுதுகின்றனர். |
| | **கருத்தரங்கக் கட்டுரை குறிப்பு எழுதுதல்**<br>பழந்தமிழ் எனும் பகுதியில் அமைந்துள்ள ‘இலக்கியமும் அறிவியலும்’ என்ற கட்டுரையினை விவாதிக்கின்றனர். புறநானூறு, தொல்காப்பியம் பகுதிகளையும் ஆராய்கின்றனர். அவற்றுள் அடங்கியுள்ள அறிவியல் செய்திகளைக் கட்டுரை, பட்டிமன்றம் போன்றவற்றிற்குப் பயன்படும் வகையில் குறிப்பேடுகளில் சிறுகுறிப்புகளாக எழுதுகின்றனர். (தனிநபர் செயல்பாடு)<br>**மதிப்பீட்டுக் குறிப்புகள்**<br>கருத்துத் தொடர்பு, சுருங்கக் கூறல், பயன்பாடு, பாடத்தொடர்பு, சான்றுகள் | அறிவியல் கருத்தரங்கு நிகழ்வுகளில் பங்குபெற்று உரையாற்றக் குறிப்புகள் தயாரிக்கின்றனர். |
| | **நயம்பாராட்டுதல்**<br>பாடப்பகுதியில் அமைந்துள்ள நெடுநல்வாடை என்னும் கவிதையினை பொருள் உணர்த்தி அதனுள் அமைந்துள்ள அறிவியல் செய்ததிகளை எடுத்துக்கூறி நயம்பாரட்டச செய்தல். (தனிநபர் செயல்பாடு)<br>**மதிப்பீட்டுக் குறிப்புகள்**<br>1. பாடலின் பொருள் உணர்தல்<br>2. உவமை பாராட்டல்<br>3. சொல், அணி, தொடை, நயம் பாராட்டல் | |
| | **கவிதை எழுதுதல்**<br>முக்கூடற்பள்ளு, நெடுநல்வாடை போன்ற பாடல்களைப் போன்று மழைக்கால காட்சிகளை வருணித்துக் கவிதை எழுதச் செய்தல்.<br>**மதிப்பீட்டுக் குறிப்பு**<br>தலைப்பு, மொழிநடை, கருத்துத்தொடர்பு, கற்பனை | கவிதைகளை இரசித்து நயம் பாராட்டவும், அதைப் போன்ற ஒன்றைப் படைக்கவும் செய்கிறார்கள். |

| கருத்துகள்/திறன்கள் | கற்றல் செயல்பாடுகள்/ மதிப்பீடு | கற்றல் அடைவுகள் |
|---|---|---|
| காலமற்றாத்திற்குத் தகுந்த அறிவியல் செய்திகளை இன்றைய இலக்கியங்களும் வெளிப்படுத்துகின்றன. | **விமர்சனக்குறிப்பு எழுதுதல்**<br>பாடப்பகுதியில் அமைந்துள்ள வலைக்குள் வலை என்ற கதைச் சுட்டிக்காட்டும் அறிவியல் வளர்ச்சியின் மறுபக்கத்தை விவாதிக்கின்றனர். கதையின் தலைப்பு கதையுடன் பொருந்திப் போவதைக் கலந்துரையாடுகின்றனர். விமர்சனக் கட்டுரை உருவாக்கத் தேவையானக் குறிப்புகள் தயாரிக்கின்றனர்.<br>**மதிப்பீட்டுக் குறிப்புகள்**<br>கதைத்தலைப்பு, கதைக்கரு, பாத்திரப்படைப்பு, மொழிநடை, கதைச்சூழல், உத்தி | இதழ்களில் வெளியிடும் வண்ணம் விமர்சனக் கட்டுரைகள் எழுதுகின்றனர். |
| | **பட்டிமன்றம் நடத்துதல்**<br>பழந்தமிழ், இளந்தமிழ் போன்ற பிரிவுகளில் அமைந்தள்ள பாடப்பகுதிகளின் அடிப்படையிலும் செயல்பாடுகளின் வாயிலாக உணர்ந்த செய்திகளின் துணையுடனும் இலக்கியங்களில் மேலோங்கி நிற்பது அழகுணர்ச்சியே / அறிவியல் சிந்தனையே என்னும் தலைப்புகளில் பட்டிமன்றம் நடத்துகின்றனர்.<br>**மதிப்பீட்டுக் குறிப்புகள்**<br>கருத்துத் தொடர்பு, விவாதத் திறன், பேச்சாற்றல், சிந்தனை வெளிப்பாடு, சுருங்கக் கூறல், சான்றுகள் எடுத்துரைத்தல் | தலைப்புகளுக்குத் தகுந்த செய்திகளைக் குறிப்பெடுக்கும் ஆற்றலும், பேச்சுத்திறனும் பெறுகின்றனர். |
| | **நாற்குறிப்பு எழுதுதல்**<br>இயற்கைச் சீற்றங்கள் பலவற்றைக் கலந்துரையாடி மாணவர்கள் அனுபவம் ஒன்றை நாட்குறிப்பாக எழுதிடச் செய்தல். அறிவியல் உண்மைகளுடன் தொடர்புபடுத்தியும், வானிலை தெரிவிக்கும் விலங்குகள் என்ற பாடப்பகுதியில் அமைந்துள்ள மொழிநடை போன்று நாட்குறிப்பு எழுதிடச் செய்தல் வேண்டும்.<br>**மதிப்பீட்டுக் குறிப்புகள்**<br>மொழிநடை, ஒழுங்கு, வடிவம், கருத்துத்தொடர்பு | பல்வேறு இலக்கிய மொழிநடைகள் அறிந்து வெளிப்படுத்துகின்றனர். |

| கருத்துகள்/திறன்கள் | கற்றல் செயல்பாடுகள்/ மதிப்பீடு | கற்றல் அடைவுகள் |
| --- | --- | --- |
| அறிவியல் தமிழாக்கம் இன்றைய மொழியியல் துறையில் தனிப்பட்ட பிரிவாக வளர்ந்து வருகின்றது. | **வினாடிவினா நடத்துதல்**<br>பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச்சொற்களை அறிந்து கொள்ள குழுப்பிரித்து வினாடி-வினா நடத்துதல். ஆசிரியர் வினாக்களைத் தயார் செய்தல். ஆசிரியர் கேள்விகள் கேட்கக் குழுக்களுக்கு மதிப்பெண் அளித்தல் வெற்றி பெற்ற குழுவுக்குப் பரிசளித்தல்.<br>**கலைச்சொல் அகராதி உருவாக்கல்**<br>மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து பிறமொழிச் சொற்கள் அடங்கிய கதை, கவிதை, கட்டுரை, பத்திரிகைச் செய்திகள் போன்றவற்றைக் கொடுத்து பிறமொழிச் சொற்களைத் தொகுக்கச் செய்தல், பின்னர் அவற்றிற்கு இணையான கலைச்சொற்களைக் கண்டறிந்து கலைச்சொல் அகராதி தயாரிக்கின்றனர்.<br>**மதிப்பீட்டுக் குறிப்புகள்**<br>தரம், எண்ணிக்கை, வடிவம், சான்றுகள்<br>**மொழிபெயர்த்தல்**<br>ஆங்கில மொழியில் அறிவியல் செய்திகள் அடங்கிய ஒரு பத்திரிகைச் செய்தியை தமிழ் மொழியில் கருத்து மாறாமல் மொழி பெயர்க்கச் செய்தல். குழுச் செயல்பாடாகவோ, தனிநபர் செயல்பாடாகவோ ஆசிரியரின் உத்திக்கேற்றவாறு செய்யலாம்.<br>**மதிப்பீட்டுக் குறிப்புகள்**<br>மொழிநடை, சொல்பெயர்ப்பு, கருத்தமைவு | பிறமொழிச் சொற்களுக்கு இணையான புதிய சொற்களைத் தொகுத்துத் தலைச்சொல் அகராதி தயாரிக் கின்றனர். |

| கருத்துகள்/திறன்கள் | கற்றல் செயல்பாடுகள்/ மதிப்பீடு | கற்றல் அடைவுகள் |
| --- | --- | --- |
| அறிவியல் வளர்ச்சிக்கேற்பக் தமிழ்மொழியின் சொல்வளமும் பெருகுகிறது. | **விழிப்புணர்வு முகாம் நடத்துதல்**<br>பெற்றோர் ஆசிரியர் குழு உதவியுடன் விழிப்புணர்வு முகாம் நடத்தி அறிவியல் வளர்ச்சியால் ஏற்படும் தீமைகளையும் புரிந்து கொள்ளும் விழிப்புணர்வுக் குறும்படங்கள், கருத்தரங்கம் பத்திரிகைச் செய்திகள், படங்கள் போன்றவற்றைப் பொதுமக்களுக்குக் காட்டிட வேண்டும். இதற்கான ஒத்துழைப்பை ஆசிரியர்கள் மாணவர்களுக்கு அளிப்பதுடன் மாணவர்களின் தனித்திறனுக்கேற்ப மதிப்பெண்கள் வழங்கிட வேண்டும்.<br>**மதிப்பீட்டுக் குறிப்புகள்**<br>- செய்திகளைத் திரட்டுதல்<br>- வகைப்படுத்தல்<br>- நிகழ்ச்சி ஒழுங்கமைப்பு<br>- விளக்கமளித்தல்<br>- தலைமைப்பண்பு<br>போன்றவற்றில் மாணவர்களின் செயல்களுக்குத் தகுந்தவாறு மதிப்பெண் வழங்கப்பட வேண்டும். கற்றல் செயல்பாடுகள் வழித் தமிழ் மொழியின் இலக்கியத்தரம் உணர்த்தி அறிவியல் ஆக்கங்களுக்கு வழிவகுக்க வேண்டும். | அறிவியல் தமிழின் சிறப்பைப் பொது மக்களுக்கு உணர்த்திட விழிப்புணர்வு முகாம்கள் நடத்துகின்றனர். கருத் தரங்கம் நடத்துகின்றனர். |

## அலகுப்பகுப்பாய்வு

**நுழைவுச் செயல்பாடு (குழுக்கலந்துரையாடல்)**

அறிவியல் செய்திகள் பண்டைய இலக்கியங்களில் பரவலாகக் காணப்படுகின்றன என்பதை மங்களாதேவி (கண்ணகி) கதை மூலம் ஆரம்பித்தல். புஷ்பக விமானம் பற்றிக் கலந்துரையாடல். அன்றைய அறிவியல் தொலைநோக்குப்பார்வை இன்று எந்தளவு நடைமுறையில் உள்ளது என்பதை மாணவர்களுடன் உரையாட வேண்டும்.



### குறிப்பு எழுதுதல்

ஆசிரியர் மாணவர்களை சம எண்ணிக்கை உடைய குழுக்களாகப் பிரிக்க வேண்டும். குழுக்களுக்கு ஏதேனும் பெயர்கள் கொடுக்க வேண்டும். உதாரணமாகக் குறிஞ்சி, முல்லை,... போன்றவை. குழுவை கட்டுப்பாட்டில் வைக்கக் குழுத்தலைவர் ஒருவரை ஒவ்வொரு குழுவிலும் தேர்ந்தெடுக்க வேண்டும். ஆசிரியர் மேற்பார்வையுடன் குழுக்கள் செயல்பாடுகளைச் செய்ய வேண்டும். சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி போன்ற இலக்கியங்களில் அறிவியல் சிந்தனைகள் வெளிப்படும் பகுதிகளை நகலெடுத்து ஒவ்வொரு குழுவுக்கும் வழங்க வேண்டும். அதில் வெளிப்படும் அறிவியல் சிந்தனைகளைக் குறிப்புகளாக எழுதச் சொல்ல வேண்டும்.

**கலந்துரையாடலில் இடம் பெற வேண்டியவை : -**

அறிவியல் சிந்தனை என்றால் என்ன?

தொலைநோக்குப் பார்வை என்பது என்ன?

பண்டைய இலக்கியங்களில் அறிவியல் சிந்தனைகள்.

ஒவ்வொரு குழுவும் தாம் கண்டறிந்தவற்றை வாசிக்க வேண்டும். குழுக்கள் குறிப்புகளைத் தமக்குள் மாற்றித் தொகுத்தெழுதிடச் செய்ய வேண்டும். வலைச்சட்டத்தில் கொடுத்துள்ள மதிப்பீட்டுக் குறிப்புகளுக்குத் தக்கவாறு ஆசிரியர் மதிப்பீடு செய்ய வேண்டும்.

### கருத்தரங்கக் கட்டுரைக் குறிப்புகள் எழுதுதல்

முன்னர் செய்த செயல்பாடுகளின் அடிப்படையில் பாடப்பகுதியை ஆராய்ந்தும், வளப்பகுதிகளின் உதவியுடனும் கருத்தரங்கம் நடத்தத் தேவையான குறிப்புகளை எழுதச் செய்ய வேண்டும்.

**துணைக்கருவிகள்**

- பழந்தமிழில் இடம் பெற்ற பாடப்பகுதிகள்.
- திருவாசகம், தொல்காப்பியம், புறநானூறு (உரையுடனான மூலநூல்கள்)
- தொல்காப்பியரின் அறிவு,
- திருவாசகம், தொல்காப்பியம் மாதிரிக் குறிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன.

| கற்றல் அடைவுகள் | மதிப்புகள் / மனப்பாங்குகள் |
|---|---|
| ❖ பண்டைய இலக்கியங்களில் காணப்படும் அறிவியல் செய்திகளைத் தொகுத்து எழுதுகின்றனர்.<br>❖ அறிவியல் கருத்தரங்க நிகழ்வுகளில் பங்கு பெற்று உரையாற்றக் குறிப்புகள் தயாரிக்கின்றனர். | ➥ தமிழ் மொழியின் இலக்கியத் தரம் உணர்ந்து நேசித்தல். |

## நயம் பாராட்டல்

நயம் பாராட்டல் என்பது கவிதைகளின் பொருள் உணர்ந்து அதன் அழகுணர்வை உள்வாங்கி நாம் இரசித்ததை பாராட்டி உரைப்பதே. சொல்நயம், பொருள்நயம், ஓசை அல்லது ஒலி நயம், தொடை நயம் (எதுகை, மோனை, இயைபு, முரண், அளபெடை) அணிநயம் போன்றவற்றை சரியான முறையில் எழுதப் பழகச் செய்தல் வேண்டும். பாடப்பகுதியில் அமைந்துள்ள நெடுநல்வாடைப் பாடலை நயம்பாராட்டி எழுத வேண்டும்.

### துணைக்கருவிகள்

- நெடுநல்வாடை, முக்கூடற்பள்ளு பாடல்கள்
- முக்கூடற்பள்ளு நயம் பாராட்டலின் மாதிரி வடிவம்.

## கவிதை எழுதுதல்

மழைக்கால காட்சி ஒன்றை கவிதையாக எழுதிடும் செயல்பாட்டினை கொடுக்கும் போது பல்வேறு மழைக்காலப் பாடல்களை மாணவர்களைத் திரட்டி பார்வையிடச் செய்யலாம். மேலும் பாடப்பகுதியில் அமைந்துள்ள கவிதைகளையும் துணையாகப் பயன்படுத்தலாம்.

### துணைக்கருவிகள்

- முக்கூடற்பள்ளு, நெடுநல்வாடைப் பாடல்வரிகள்
- பாரதியின் மழைப்பாட்டு

| கற்றல் அடைவுகள் | மதிப்புகள் / மனப்பாங்குகள் |
|---|---|
| ❖ கவிதைகளை இரசித்து நயம் பாராட்டி அதைப் போன்ற கவிதைகளைப் படைக்கவும் செய்கின்றனர். | ➪ நம் இலக்கியங்களை உலகறியச் செய்திட வேண்டும் என்ற ஊக்கம் பெறுதல். |

## விமர்சனக் குறிப்புகள் எழுதுதல்

குறிப்புகள் எழுதுவது பல்வேறு முறைகளில் அமையும் கட்டுரைகள், கருத்தரங்கம் போன்றவற்றிற்கான குறிப்புகள் இலக்கியங்களில் உள்ளதை உள்ளபடி குறித்துக் கொள்ளல். விமர்சனக் குறிப்பு எழுதும் குறிப்புகளில் தமது கருத்தை ஏற்றிச் சொல்வலுதல்.

பாடப்பகுதியில் அமைந்துள்ள வலைக்குள் வலை என்ற கதையினை வாசித்து விவாதித்து, கரு, தலைப்பு போன்றவற்றை விவாதிக்கின்றனர். அறிவியல் வளர்ச்சியின் மறுபக்கத்தை விமர்சிக்கின்றனர்.

**விமர்சனக் குறிப்புகளில் இடம் பெற வேண்டியவை**

- கதைத் தலைப்புப் பொருத்தம்
- கதைக்கரு
- இணையதளத்தால் ஏற்படும் தீமைகள்
- தடுக்கும் முறைகள்

### துணைக்கருவிகள்

- வலைக்குள் வலை கதை, தென்கச்சி சுவாமிநாதன் உரை
- விமர்சனக் குறிப்பு மாதிரிகள்

## நாட்குறிப்பு எழுதுதல்

முன்வகுப்புகளில் பெற்றுள்ள அனுபவங்களுக்கு ஏற்ப மொழிநடையை வளப்படுத்தி நாட்குறிப்பு எழுதச் செய்தல். நாள், நேரம் குறிப்பிடப்பட வேண்டும்.

| கற்றல் அடைவுகள் | மதிப்புகள் / மனப்பாங்குகள் |
|---|---|
| ❖ இதழ்களில் வெளியிடும் வண்ணம் விமர்சனக் கட்டுரைகள் எழுதுகின்றனர். | உலக இலக்கியத்தரத்திற்கு இணையான படைப்புகள் தமிழ் மொழியில் அமைந்துள்ளதை எண்ணி பெருமை கொள்ளல். |

## பட்டி மன்றம் நடத்துதல்

பண்டைய இலக்கியங்களில் வரும் பட்டிமண்டபம் என்ற வழக்கே இன்று பட்டிமன்றம் என்று மருவியுள்ளது. இரு அணிகளாகப் பிரித்து (மூன்று அல்லது நான்கு பேர்) இரு வேறு தலைப்புகளில் குறிப்பிட்ட நேரத்திற்கேற்ப கருத்துகளை எடுத்துரைப்பர். நடுவர் இரு அணியின் வாதத்திறமைக்கேற்பவும், நடுவரின் அனுபவ அறிவிற்கேற்பவும் தீர்ப்பைக் கூறுவார். அணித்தலைவர்கள் முதலில் பேசுவர். முதல் அணியின் தலைவர் முதலில் ஆரம்பத்தால், இறுதியில் தொகுத்து செய்திகள் கூறுவது இரண்டாவது அணித்தலைவராக இருப்பார்.

நமது அலகில் அமைந்துள்ள பழந்தமிழ், இளந்தமிழ் பாடப்பகுதிகளின் துணையுடன் இலக்கியங்களில் மேலோங்கி நிற்பது அழகுணர்ச்சியே / அறிவியல் சிந்தனையே என்னும் தலைப்பில் பட்டிமன்றம் ஆசிரியரின் உதவியுடன் நடத்த வேண்டும். முன்னர் கிடைத்த செயல்பாடுகளின் அனுபவங்களை வாதாடப் பயன்படுத்த வேண்டும்.

### துணைக்கருவிகள்

- பழந்தமிழ், இளந்தமிழ்ப் பாடங்கள்,
- செயல்பாடுகளில் கிடைத்த குறிப்புகள்.
- பல்வேறு பட்டிமன்றங்களின் குறுந்தட்டுகள்.

**கவனிக்க வேண்டியவை**

*- பட்டிமன்ற அமைப்பு*

*- சான்றுகளுடன் எடுத்துரைத்தல்*

*- சமமான நேரப்பகிர்வு*

*- வாதத்திறமைக்கான தீர்ப்பு*

*- பேச்சாற்றல்*

| கற்றல் அடைவுகள் | மதிப்புகள் / மனப்பாங்குகள் |
|---|---|
| ❖ தலைப்புகளுக்குத் தகுந்தவாறு செய்திகளைக் குறிப்பெடுக்கவும், வாதிட்டுப் பேசவும் திறனும் பெறுகின்றனர். | ➯ தமிழ்மொழியின் சிறப்பினைத் தன்னம்பிக்கையுடன் பேசிடும் மனப்பான்மை பெறுதல். |

**வினாடி வினா நடத்துதல்**

வினாடி வினாக்களால் பல்வேறு பன்முக அறிவை மாணவர்கள் பெறுகின்றனர். ஒரு சொல்லில் விடை எழுதுதல், வேகமான சிந்தனை, தேர்வுகளை எதிர்கொள்ளல் என்று சமூகத்தில் பல்வேறு சூழல்களுக்கும் வினாடிவினா என்னும் செயல்பாடு உதவும். ஆகையால் வினாக்களைத் தேர்ந்தெடுக்கும் ஆசிரியர்கள் மிகமிகக் கவனமாகப் பொருளுடனான வினாக்கள் உருவாக்க வேண்டும். தெளிவானதாகவும், ஒரே பதிலைக் கொண்டதாகவும் வினாக்கள் அமைய வேண்டும். பலக் குழுக்களாகப் பிரித்துச் சரியான நேரப்பகிர்வுடன் செயல்பாட்டினைச் செய்திட வேண்டும்.

*நமது அலகின் செயல்பாடு பிற மொழிக்கு இணையான தமிழ் சொற்களைக் கண்டறிதல் என்பதால் வினாக்கள் அதற்குத் தகுந்த வண்ணம் உருவாக்க வேண்டும்.*

**துணைக்கருவிகள்**

- கணினிக் கலைச்சொற்கள்.
- கலைச்சொல் தொகுப்பு, கலைச்சொல்லகராதி

**கவனிக்க**

- வினாக்களில் தெளிவு வேண்டும்.
- பயன்பாட்டுக்கான சொல் தேர்வு
- கடினம் / எளிமை / இடைநிலை போன்ற வினாக்கள் அமைய வேண்டும்.
- குழுக்களுக்கு சம பங்களிப்பு வேண்டும்.

**கலைச் சொல்லகராதி உருவாக்கல்**

மொழிபெயர்ப்பு பகுதிகளைக் கொடுத்தும், மொழி பெயர்க்கச் செய்தும் பல செயல்பாடுகளை மாணவர்களுக்கு அளித்துக் கலைச்சொற்களைத் தொகுக்கச் செய்ய வேண்டும். பின்னர் அவற்றை அகர வரிசைப்படுத்திச் சொல்லகராதி உருவாக்க வேண்டும்.

**துணைக்கருவிகள்**

- பாடப்பகுதி செயல்பாடுகளில் சேகரித்த சொற்கள்
- கலைச்சொல் தொகுப்பு
- கலைச்சொல்லகராதி மாதிரி

| கற்றல் அடைவுகள் | மதிப்புகள் / மனப்பாங்குகள் |
|---|---|
| ❖ பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களைக் கண்டறிந்து தொகுத்துக் கலைச்சொல் அகராதி தயாரிக்கின்றனர். | ↳ அறிவியல் நூல்களைத் தாய்மொழியில் கற்று உயரலாம் என்ற நிலை அடைதல். |

### விழிப்புணர்வு முகாம் நடத்துதல்

மாணவர்கள் அறிவியல்தமிழ் என்ற அலகின் மூலம் பெற்ற கற்றல் அடைவுகளையும், மதிப்புகள், மனப்பாங்குகள் போன்றவற்றையும் பொதுமக்களுக்கும் பெற்றோருக்கும் உணர்த்தும் வகையில் அறிவியல் கருத்தரங்கம், பட்டிமன்றம், குறும்படங்கள் போன்றவைகளும், படத்தொகுப்பு, பத்திரிகைச் செய்திகள், கருவிகள், நூல்கள் போன்றவற்றைத் திரட்டி கண்காட்சியும் சிறுமுகாமும் நடத்துதல். பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் உதவியுடன் மாணவர்களாகவே இம்முகாமினை நடத்திட வேண்டும். மாணவர்களின் செயல்பாட்டினை உற்றுக்கவனித்து தனித்திறமைக்கேற்ப மதிப்பெண் வழங்கிட வேண்டும்.

### துணைக்கருவிகள்

- பல்வேறு செயல்பாடுகளின் வாயிலாக உருவாக்கிய படைப்புகள்,
- சேகரிப்புகள்
- கருவிகள், குறும்படங்கள், கணினி போன்றவை.

**கவனிக்க**

- நிகழ்ச்சி ஒழுங்கமைப்பு
- நடத்தும் முறை
- தலைமைப்பண்பு
- திரட்டுதல் வகைப்படுத்தல், விளம்பரப்படுத்தல் போன்றவை.

| கற்றல் அடைவுகள் | மதிப்புகள் / மனப்பாங்குகள் |
|---|---|
| ❖ அறிவியல் தமிழின் சிறப்பைப் பொது மக்களுக்கு உணர்த்திட முகாம்கள் கருத் தரங்கம் நடத்தும் திறமை பெறுகின்றனர். | ↳ சமூக மேம்பாட்டிற்கும், பண்பாட்டு வளர்ச்சிக்கும் பாடுபடுவதோடு தவறான பாதையில் செல்லக் கூடாதென்ற விழிப் புணர்வு பெறுதல். |

## மதிப்பீட்டு முறைகள்

வலைச்சட்டத்தில ஒவ்வொரு செயல்பாடுகளுக்குக் கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளுக்கேற்ப ஒவ்வொரு செயல்பாட்டையும் மதிப்பிட வேண்டும். ஆசிரியர் தமது பதிவேட்டில் மாணவர்களின் ஒவ்வொரு வளர்ச்சியும் குறித்துக்கொள்ள வேண்டும். தர அடிப்படையில் அவர்களுக்குத் தேவையான முன்னேற்றத்துக்கான வழிகாட்டுதல் அளிக்க வேண்டும். இவ்வலகில் அமைந்தள்ள குழு மதிப்பீடு தனிநபர் மதிப்பீடுகள் கீழ்க்காண்பன.

## குழு மதிப்பீடு / செயல்பாடு

- குழுக்கள் பிரித்து செயல்பாடுகள் செய்யும் போது குழுக்களுக்கு மதிப்பெண்கள் வழங்க வேண்டும். முதல் குழு, இரண்டாம் குழு என ஒவ்வொரு செயல்பாட்டின் முடிவிலும் மதிப்பெண்ணோ தர மதிப்போ வழங்க வேண்டும்.
- கலந்துரையாடல்
- பட்டிமன்றம்
- வினாடி வினா
- கலைச்சொல் அகராதி தயார்செய்தல்
- கருத்தரங்கம், முகாம்கள் / கண்காட்சி போன்றவற்றைக் குழுக்களாக மதிப்பிட வேண்டும்.

## தனிநபர் மதிப்பீடு / செயல்பாடு

ஒவ்வொரு மாணவனும் தனிக்கவனம் பெறும் வகையில் மாணவனின் வளர்ச்சியை ஒவ்வொரு செயல்பாட்டின் முடிவிலும் ஆசிரியர் குறித்துக்கொள்ள வேண்டும்.

- குறிப்பு எழுதுதல்
- விமர்சனம் எழுதுதல்
- கட்டுரை / கவிதை எழுதுதல்
- நயம் பாராட்டுதல்
- நாட்குறிப்பு எழுதுதல் போன்றவை தனிநபர் செயல்பாடுகளாக மதிப்பிடப்பட வேண்டும்.

## பருவ மதிப்பீடு

தனிநபர் செயல்பாடுகள் அனைத்தும் பருவமதிப்பீட்டிற்கு உதவுபவையே. மேலும் படைப்புகளின் தொகுப்பும், குழுச்செயல்பாடுகளில் பங்கு பெற்று சேகரித்து, தொகுத்துக் குறித்த செய்திகள் அனைத்துமே பருவத்தேர்வுக்கும் மதிப்பீட்டிற்கும் பயனுள்ளவையே.

- குறிப்புகள்
- பட்டியல்கள்
- விமர்சனக் குறிப்புகள்
- நயம் பாராட்டல்
- நாட்குறிப்பு போன்றவற்றின் வடிவம், தன்மை போன்றவற்றை ஆசிரியர் கவனித்து மதிப்பீடு செய்தல் வேண்டும்.

## தொடர் மதிப்பீடு

தொடர் மதிப்பீடு என்பது படிப்படியாக மாணவனின் வளர்ச்சியைக் கண்காணித்து அதற்குத் தகுந்தவாறு தர மதிப்பெண் அளித்தலே. எப்போதுமே மாணவனின் தனித்திறனை அறியவும், பின் தங்கிய இடத்தை உணரவும் தொடர்மதிப்பீடு ஆசிரியருக்கு உதவுகிறது.

இவ்வலகில் - குழுக்கலந்துரையாடல்

- தொகுத்தல்
- பேச்சாற்றல்

- தலைமைப்பண்பு
- கருத்தரங்கில் பங்கேற்றல்
- விமர்சனக் குறிப்புகள் எழுதுதல்
- முகாம் நடத்துதல் போன்றவற்றை ஆசிரியர் தொடர் மதிப்பீட்டிற்காக எடுத்துக்கொள்ளலாம்.

## அலகுத்தேர்வு

செயல்பாடுகளின்வழிக் கற்றல் அடைவுகளையும், மதிப்புகளையும் மாணவன் பெற்றுள்ளார என்பதை அறிந்து கொள்ளவும், பருவத்தேர்வுக்கு மாணவனைத் தயார் செய்யவும் தன் முன்னேற்றத்தை மாணவர் அறிந்து கொள்ளவும் அலகுத்தேர்வு பயன்படும். ஆசிரியர் பயன்படுத்திய கற்றல் உத்திகள், கற்றல் அடைவுகளை அடைந்திட வழி செய்துள்ளனவா என்பதை அறியவும் ஆசிரியர் தன்னை உணரவும் அலகுத்தேர்வு உதவுகிறது. தேர்வின் போது தேர்ந்தெடுக்கும் வினாக்களின் மதிப்பெண்கள் மட்டுமன்றித் தொடர் மதிப்பீட்டு மதிப்பெண்களும் சேர்த்தே மதிப்பெண்கள் வழங்க வேண்டும். ஆசிரியர் அலகுத்தேர்வின் மதிப்பெண்களைத் தமது பதிவேட்டில் குறித்துக்கொள்ள வேண்டும்.

# வளப்பகுதி

## மொழி வெளியீட்டு வடிவங்கள்

**நயம் பாராட்டல் (முக்கூடற்பள்ளு)**

ஆற்றுவெள்ளம் நாளை வரத்தேற்று தேகுறி - மலை
யாளமின்னல் ஈழ மின்னல் சூழமின்னுதே
நேற்றும் இன்றும் கொம்பு சுற்றிக் காற்றடிக்குதே - கேணி
நீர்ப்பாடு சொறித் தவளை கூப்பிடுகுதே
சேற்று நண்டு சேற்றைக் குழைத்து ஏற்றடைக்குதே - மழை
தேடி ஒரு கோடி வானம்பாடி ஆடுதே
போற்று திருமால் அழகர்க்கு ஏற்றமாம் பண்ணைச் - சேரிப்
புள்ளிப் பள்ளர் ஆடிப்பாடித் துள்ளிக் கொள்வோம்!

(முக்கூடற்பள்ளு)

### சொல்நயம்

இப்பாடலில் வழக்குச் சொற்கள் இடம் பெற்றிருப்பினும் சொற்கள் பொருட் பொருத்தமுடன் இயற்றப்பட்டுள்ளன. மழை வருவதன் அறிகுறியை அழகுற எடுத்தியும்பியுள்ளதும் இயற்கையை எவ்வளவிற்கு நுட்பமாய் அறிந்திருந்தால், இத்தகைய பாடல் உருவாகியிருக்கம் என்பதற்கும் இப்பாடல் சான்றாக அமைகிறது. மழைக்கான குறியீடுகள் அழகுற அடுக்கப்பட்டுள்ளன. மலையாள நாட்டு மூலையிலும் ஈழ நாட்டு மூலையிலும் ஒரே நேரத்தில் மின்னுவதால் உறுதியாக மழை வரும் என்னும் நம்பிக்கை தருகிறது. இதனடிப்படையிலேயே மின்னுக்கெல்லாம் பின்னுக்க மழை என்னும் சொல்லாட்சி மக்களிடையே வழங்கிற்றுபோலும். நல்ல மழை பெய்தால், பண்ணையில் விளையும் முதல் விளைச்சலை அழகர்க்குக் காணிக்கை யாக்கலாமெனத் துள்ளி மகிழ்வதை இப்பாடல் அழகுற எடுத்தியம்புகிறது. மழைக்குறிச் சொற்களாக மின்னல், காற்று, தவளைச் சத்தம், நண்டு தன் வளையை அடைத்தல், வானம்பாடிகள் ஆடுதல் ஆகியவற்றைக் கூறிச் சொல் நயத்தை வெளிப்படுத்துகிறார். ஆற்றுவெள்ளம், நாளை வர, மலையாள மின்னல் ஈழமின்னல், நேற்றும் இன்றும், கொம்பு சுற்றி, காற்றடிக்குதே, சேற்ற நண்டு, ஆடிப்பாடி ஆகிய சொற்கள் செறிவாய் அமைந்துள்ளன. மேலும் கேணி, சொரித்தவளை, கூப்பிடுகுதே, பண்ணை, சேரி முதலிய வழக்குச் சொற்களும் இடம் பெற்றுள்ளதால், இது மக்களே பாடுவதுபோல் அவர்கள் மொழியிலே பாடுவதாக உள்ளது.

### பொருள் நயம்

மழை வருவதற்கான அறிகுறிகள் அடுக்கப்பட்டு, மழை வந்தால் என்னென்ன பயன்கள் ஏற்படும் என்பதனைச் சொல்லோவியமாக்கி, மழையினால் ஏற்படும் மகிழ்ச்சி வெளிப்படுத்தப்படுகிறது.

### ஒலி நயம்

பள்ளுப் பாட்டு சந்த நயமிக்கது என்பதைச் சொற்பொருத்தமும் ஒலிநயப் பொருத்தமும் காட்டுகின்றன. வல்லினம், மெல்லினம், இடையினம், உயிரினம் ஆகிய நாற்கண எழுத்துகளின் ஒலிகளும் ஒன்றனுக்கொன்று போட்டியிட்டு ஒலிப்பது பாடலுக்கு ஒலிநயத்தைக் கூட்டுகிறது.

#### 1. மோனை நயம்

ஆற்று - யாள; நேற்று - நீர்; சேற்று - சேற்றை; போற்று - பண்ணை - புள்ளி - பள்ளர் ஆகிய சொற்களில் மோனை வந்துள்ளதால் பாடலை நினைவிற்க கொள்வது எளிதாக உள்ளது.

**2. எதுகை நயம்**

ஆற்று - நேற்றும் - சேற்று - போற்று ஆகிய சொற்கள் அடிதோறும் முதலெழுத்து அளவொத்து இரண்டாம் எழுத்து ஒன்றிவருவதால் எதுகைப் பாடலாக இது விளங்குகிறது.

**3. இயைபு நயம்**

மின்னுதே - அடிக்குதே - கூப்பிடுகுதே - ஆடுதே - கொள்வோமே என அடிதோறும் ஈற்றில் ஏகார ஒலி பெற்று வருவதால், இயைபு நயமிக்க பாடலாக இது உள்ளது.

***அணி நயம் - இயல்பு நவிற்சி***

உள்ளதை உள்ளவாறே மழையறிகுறிகளுடன் பாடப்பட்டுள்ளதால், இயல்பு நவிற்சி அணியாக இப்பாடல் அமைகிறது.

இப்பாடலில் வல்லெழுத்துகள் இடையெழுத்துகள் அனைத்தும் கலந்து, எதுகை, மோனை இயைபு ஆகிய தொடை நயங்கள் சிறந்தமைந்து சொல் நயமும் ஓசை நயமும் அமைந்து படிப்போர்க்கும் பாடுவோர்க்கும் கேட்போர்க்கம் பேரின்பம் நல்குவதைச் சுவைத்து மகிழும் போது மண்வாசனை மணங்கமழுகிறது.

## குறிப்பு எழுதுதல்

### தொல்காப்பியம்

தொல்காப்பியம் தமிழ் முதல்நூல், தமிழர் தம்மொழி இலக்கியம், இலக்கணம் பற்றியன மட்டுமல்லாமல் தமிழரின் வாழ்வும் நாகரிகமும் பற்றிய நூல். இத்தகையதொரு நூல் உலகில் என்றும் தோன்றியதில்லை. எழுத்து, சொல், பொருள் என்ற மூன்று இலக்கணங்களையும் கூறும் நூல், இதன் ஆசிரியர் தொல்காப்பியர், தொல்காப்பியப் பொருளதிகாரம் உலகத்தோற்றம் உயிர்களின் வகைப்பாடு, இளமைப்பெயர்கள் என்று பலவும் பேசுகிறது. அறிவியல் நுட்பத்துடனான வெளிப்படுத்தல் ஆச்சரியப்பட வைக்கின்றது. நிலப்பிரிவு முதல் பொழுது, விலங்கு, மனிதர் என்று அறிவியல் அறிவை பறைசாற்றி சிறக்கின்றது.

### உயிர்ப்பாகுப்பாடு

உடம்பால் மட்டும் அறிவன ஓர் அறிவு உயிர்கள். உடம்பாலும், நாவாலும் அறிவன இரண்டு அறிவுயிர்கள், உடம்பு, நா, மூக்கு, மூன்றாலும் அறிவன மூ அறி உயிர்கள், உடம்பு, நா, மூக்கு, கண் இவை நான்காலும் அறிவன நாலறி உயிர்கள். உடம்பு, நா, மூக்கு, கண், காது இவை ஐந்தால் அறிவன ஐ அறி உயிர்கள். இவை ஐந்தோடு மனத்தாலும் அறிவுடையன ஆறறி உயிர்கள் என தெளிவாக அறிந்தோர் நெறிமுறையாக உணர்த்தியுள்ளனர் என்கிறார் தொல்காப்பியர். இக்கூற்றால் தொல்காப்பியருக்கு முன்னரே தழிழர்கள் அறிவியல் அறிவு பெற்று இலக்கியங்கள் வடித்துள்ளனர் என்பதை உணரலாம்.

### புறநானூறு

புறநானூறு சங்க காலத்தைச் சேர்ந்த ஒரு தொகை நூல், எட்டுத்தொகை நூற்களில் ஒன்று. பல புலவர்களின் நானூறு பாடல்களின் தொகுப்பு. புறம் என்னும் காதல் அல்லாத வெளி உலகம் சார்ந்த, வீரம், போர், கொடை, நற்குணங்கள், பரிசு கேட்டல், பெறுதல் போன்றவை பாடு பொருளாக அமைந்துள்ளது. புறநானூற்றிப் பாடல்களில் புலவர்களின் பேரறிவும், அறிவியல் சிந்தனையும் வெளிப்படும் பல பாடல்கள் உள்ளன.

ஐம்பெரும்பூதங்கள் பற்றி மண் நிறைந்த நிலமும், நிலம் ஏந்திய வானமும், வானைத் தழுவும் காற்றும், காற்று வளர்க்கும் நெருப்பும், நெருப்பை பகைக்கும் நீரும் என்று பாடலில் (2.1-6) குறிப்பிடப்படுகிறது. வான், மண், நீர், நெருப்பு, வாயு என்ற பிரிவுகள் அழகாகக் கூறப்படுகின்றன. இப்பாடலைப் பாடியவர் முரஞ்சியூர் முடிநாகராயர்.

## திருவாசகம்

மாணிக்க வாசகர் பாடிய பாடல்களே திருவாசகம் என்று அழைக்கப்படுகின்றது. இவர் பாடிய திருக்கோவை யாரும், திருவாசகமும் பன்னிரு திருமுறைகளில் எட்டாம் திருமுறையாக உள்ளது. மாணிக்கவாசகரின் ஊர் திருவாதவூர். காலம் 9ஆம் நூற்றாண்டு என்று கருதப்படுகிறது. திருவாசகத்துக்கு உருகார் ஒரு வாசகத்துக்கும் உருகார் என்ற பாடலின் மூலம் இந்நூலின் பெருமையை அறியலாம்.

திருவாசகம் 51 பகுதிகளையும், 658 பாடல்களையும் கொண்டுள்ளது. சிவபுராணம், கீர்த்தித்திரு அகவல், திருவண்டப்பகுதி, போற்றித்திரு அகவல் என்னும் நான்கு பெரும் பகுதிகள் கொண்டது. திருவண்டப் பகுதியில் வான இயலின் கருத்துகள் நுட்பமாக வெளிப்படுகின்றன. நம்முடைய சூரிய குடும்பமிருக்கும், பால்வெளி என்பதை காலக்ஸி என்று கூறுவர். இதனை அண்டம் என்று வானியல் அறிஞர் கூறுவர். இதைப்போன்று பல கோடி அண்டங்கள் சேர்ந்து ஒரு கூட்டமாக விளங்குகின்றன. இதை பேரண்டம் என்று அழைக்கின்றனர். இதுவரைக் கணக்காகப் பட்டவை நூறு கோடிக்கும் மேற்பட்ட அண்டங்கள் எனவும் அவை வெகு வெகு தொலைவில் உள்ளன என அறிவியல் சொல்கிறது. இதை மாணிக்கவாசகர் அன்றே கூறி நம்மை வியப்பில் ஆழ்த்துகிறார்.

திருவண்டப்பகுதியில் இறைவனின் சிறப்பை விளக்கிட அண்டம் என்னும் பேருலகத் தொகுப்பின் பகுதியுள்ளது. அதன் உருண்டை வடிவின் தன்மை விளக்கமும், அவற்றின் அளக்க முடியாத தன்மையும், வளமான பெரிய காட்சியும், ஒன்றுக்கொன்று தொடர்ந்து விளங்கும் எழிலும் சொல்லப்போகும் போது அவை அதற்கெல்லாம் அடங்கமாட்டாமல் நூற்றொரு கோடிக்கும் அதிகமாக விரிந்து செல்கின்றன. ஆனால் ஆராயும் போது இவ்வளவு பெரிய அளவும் எண்ணிக்கையும் உடையவை அனைத்தும் இறைவனுடன் ஒப்பிடுகையில் மிகமிகச் சிறியவையாகத் தோன்றுகின்றன. எவ்வளவு சிறியவை என்றால் ஒரு சிறு துவாரத்தின் வழியாக வீட்டுக்குள் நுழையும் சூரியனின் கதிரில் பறந்து மிதந்து தெரியும் நெருங்கிய அணுக்களின் கூட்டத்தைப் போல் அண்டங்கள் இறைவன் முன் மிகமிகச் சிறியன என்கிறார் மாணிக்க வாசகர். அணுக்களும், அண்டங்களின் தன்மையும் வெளிப்படுத்தும் மாணிக்கவாசகரின் பேரறிவு என்னென்பது.

## நெடுநல்வாடை

பாண்டிய மன்னன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு மதுரையைச் சேர்ந்த நக்கீரர் என்னும் புலவரால் இயற்றப்பட்டது. பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்றாகும். சங்க காலத்துப் புலவர்களின் நுண்ணறிவு வெளிப்படும் படி பாடல்கள் அமைந்துள்ளது. மழைக்கால வரவை உணர்த்தும் வையம் பனிப்ப பாடலும் அறிவியல் அறிவுக்கான எடுத்துக்காட்டாகும்.

## விமர்சனக் குறிப்புகள்

ஒவ்வொரு நாளும் காலையில் வானொலியில் பலரும் கேட்டுப் பழக்கப்பட்டது தென்கச்சி சுவாமிநாதனின் குரல். அவரது இயல்பான குரலே ஒருவகை ஈர்ப்புடையதாய் எவரையும் கேட்கத் தூண்டும் அதன் தலைப்பே இன்று ஒரு தகவல்.

– பேராசிரியர். க. அன்பழகன்

தென்கச்சி கோ. சுவாமிநாதன் அலுவலகத்தில் சக அலுவலர். இலக்கியத்தில் என் இனிய நண்பர். பொதுவாக நான் மனிதர்களை வியப்பதில்லை. ஆனால் – தென்கச்சி இதற்கு விதிவிலக்கு.

அவர் மண்ணின் மைந்தன்
அவர் சிந்தனை மக்கள் சிந்தனை
அவர் பேசுவது மக்கள் பிரச்சினை
அவர் மொழி மக்கள் மொழி....!

– எழுத்தாளர். சு. சமுத்திரம்

சாட்டிலைட் (செயற்கைக்கோள்), ஸ்டார் டி.வி., கேபிள் டி.வி, எம் டி.வி என்று கடுமையான போட்டியிருக்கும் இந்நாளில் ஆல் இந்தியா ரேடியோவின் நிரந்திரக் கதாநாயகனாக இருப்பவர் தென்கச்சி – சுவாமிநாதன். முகம் எப்படி இருக்கும் என்று நேயர்களுக்குத் தெரியாது. ஆனால் சொல்ல வரும் அறிவு பூர்வமான விஷயத்தில் – நகைச்சுவையோடு சொல்லும் ஸ்டைலில் ஆயிரமாயிரம் நேயர்களை சம்பாதித்திருக்கிறார். எண்ணி 5 நிமிடத்தில் அரிய கருத்துகளைச் சொல்லி... அசத்தி வரும் தென்கச்சி, எங்களுக்கெல்லாம் ஒரு புதிய உத்வேகம் தந்து கொண்டிருக்கும் அற்புதமான கலைஞன்.

இயக்குநர் கே.பாலசந்தர்

இன்று தொலைக்காட்சி வானொலியோடு போட்டி போட்டுக் கொண்டிருக்கும் காலகட்டத்திலும், ஒரு சுவையான நிகழ்ச்சியைப் பிரதி தினமும் தவறாமல் நடத்தி வருவது மட்டுமல்லாமல், தினமும் தமது சுவைஞர் கூட்டத்தை அதிகரித்து வருபவர் ஒருவர் உண்டென்றால், அதுவும் நம் மத்தியிலேயே இருக்கிறார் என்றால், அது பற்றி நாமெல்லாம் பெரிதும் பெருமைப்பட வேண்டியதுதான்.

இன்று ஒரு தகவல் என்ற நிகழ்ச்சியைச் சென்னை வானொலியில் வழங்கி வரும் தென்கச்சி கோ. சுவாமிநாதன் தான் தமது தகவல் நேரத்தால், தமக்கும் சென்னை வானொலிக்கும், தமிழகத்துக்கும் பெருமை தேடித் தந்து கொண்டிருப்பவர்.

28.11.93 ஞாயிற்றுக்கிழமை ஒலிபரப்பான லண்டன்
பிபிசி தமிழோசையில் தமிழ்நாட்டுச் செய்தி மடலில் இருந்து ஒரு பகுதி.

தென்கச்சி கோ. சுவாமிநாதன் என்பவர் இன்று ஒரு தகவல் என்று ஒன்றைத் தினமும் சொல்லிக் கொண்டு வருகிறார். கேட்டுப்பாருங்கள். இதில் விசேஷம் எனக்குப் பாடுவது, அவர் சொல்லும் விஷயத்தைக் காட்டிலும் அவருடைய பேச்சு நடைதான்.

– மக்கள் தமிழ் வாழ்க – என்ற கட்டுரைத் தொடரில்
கி. ராஜநாராயணன் – ஜூனியர் விகடன் 3.10.90

கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய் வேட்பமொழிவது ஒரு கலை; கணீர் என்ற குரல்; தெளிவான உச்சரிப்பு; சொல்லுகிற லாவகம்; இன்னும் ஒரு தகவல் சொல்லியிருக்கலாமே இவ்வளவு சீக்கிரம் முடித்து விட்டாரே என்று நினைக்கும் அளவிற்கு சுவைபடச் சொல்லுதல்! அகில இந்திய வானொலி நிலையத்தின் புகழ் மகுடங்களில் ஒரு மணிமகுடம் தென் கச்சியார்!

– முத்தாரம் 2.11.90

சென்னை வானொலி நிலையத்தின் ஒலிபரப்பாகும் இன்று ஒரு தகவல் நிகழ்ச்சியின் மூலம் பல்லாயிரக்கணக்கான நேயர்களைத் தன் பேச்சாற்றலால் கவர்ந்து மக்கள் உள்ளங்களைக் கொள்ளை கொண்டவர் தென்கச்சி கோ. சுவாமிநாதன்.

## தொல்தமிழரின் அறிவியலும் இயற்கை விதிகளும் - வெள்உவன்

தொல்தமிழரின் அறிவுச் செழுமை எப்போதும் இயற்கையின் செயல்பாட்டின் அடிப்படையிலேயே அமைந்திருக்கிறது என்பதை அதைக் கூர்ந்து பார்ப்பவர்கள் அனைவராலும் உணர முடியும். இதை மெய்ப்பிக்க சான்றுகள் உண்டு. ஓர் எடுத்துக்காட்டைப் பார்ப்போம். நமது முன்னோர்கள் தமக்குத் தேவையான அளவீட்டு முறைகளை இயற்கையின் விதிகளிலேயே தேடி இருக்கின்றனர். தூரத்தை அளக்க உதவும் அளவை உருவாக்க ஒலியின் வேகத்தை அடிப்படையாக எடுத்துருக்கின்றனர் என்று தெரிகிறது. எப்படி என்று பார்ப்போம். நமது மரபில் நீளத்தை அளப்பதற்கு சிறுசிறு வேறுபாடுகளுடன்

கூடிய 282 வகை முழங்கள் இருப்பதாக விஸ்வகரம் பிராகிசிகை என்னும் வாஸ்து நூல் கூறுகிறது. இதன் மூலம் 282 விதமான கட்டுமானப் பணிகள் இருந்தன என்று தெரிகிறது. பயன்பாட்டுக்கு ஏற்றவாறு இது மாறும்.

இன்றைக்கு அதிகபட்சம் நமக்குத் தெரிய வந்திருப்பது, முழத்தில் உத்தமம், மத்தியமம், அதமம் என்ற வேறுபாடுகள் உள்ளன என்பதே. இவற்றின் அளவும் பயன்பாடுகளுடன் இடத்துக்கு இடம் மாறுபடும்.

ரேணு என்பது ஒரு ரதம் செல்லும் போது எழும்பபும் தூசிப்படையின் ஒரு தூசு! இதை தேரெழுதுகள் என்று சொல்வர். இப்படி கண்ணுக்குத் தெரியாத அளவிலிருந்து நம் அளவீடுகள் ஆரம்பிக்கின்றன. தூரத்தை அளக்க ஒலியின் வேகத்தை தான் அடிப்படையாக கொண்டு உருவாக்கி இருக்கின்றனர். அதனால் தான் காதம் என்று ஓர் அளவுக்கும் கூப்பிடு தூரம் என்று ஒரு அளவுக்கும் பெயரிட்டு இருக்கிறார்கள் நமது மரபில் உள்ள நீளத்தை அளக்கும் ஒரு வாய்ப்பாட்டைப் பார்ப்போம்.

| | |
|---|---|
| 8 அணு | ஒரு தேரெழுது |
| 8 தேரெழுதுகள் | ஒரு பஞ்சிற்று |
| 8 பஞ்சிற்றுகள் | ஒரு மயிர்முனை |
| 8 மயிர்முனை | ஒரு நுண்மணல் |
| 8 நுண்மணல் | ஒரு சிறு கடுகு |
| 8 சிறு கடுகு | ஒரு எள்ளு |
| 8 எள்ளு | ஒரு நெல்லு |
| 8 நெல்லு | ஒரு விரல் |
| 12 விரல் | ஒரு சாண் |
| 2 சாண் | ஒரு முழம் |
| 2 முழம் | ஒரு சிறு கோல் |
| 4 சிறு கோல் | ஒரு கோல் |
| 500 கோல் | ஒரு கூப்பிடு தூரம் |
| 4 கூப்பிடு தூரம் | ஒரு காதம் |

இன்று விளையாட்டுப் போட்டிகளிலும் மற்றும் பல போட்டிகளிலும் நேரத்தை மிக நுணுக்கமான அளவிட நொடியின் பின்னங்கள் பயன்படுத்துகின்றன. ஆனால் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே நம் இலக்கியங்கள் அவற்றைக் கணித்துக்கூறியிருப்பது வியப்பே.

இந்த ஒரு வாய்ப்பாடின்படி ஒரு காதம் என்பது $4 \times 56 \times 4 \times 18 = 16128$ அடி ஆகும். 100 காதம் என்பது 1612800 அடி ஆகும். $(16128 \times 100 = 1612800)$ இது ஒலி ஒரு நாழிகையில் கடந்து செல்லும் தூரம் என்பது நமது மரபு வழி கணக்கீடு.

நாழிகை கணக்கு என்பது

60 தர்ப்பரை - ஒரு வினாடி

60 வினாடி - ஒரு நாழிகை

60 நாழிகை - ஒரு நாள்

இது தான் மரபு வழி நேர கணக்கீடு வாய்ப்பாடு. இன்றும் நமது மரபுவழிக் கணக்கீட்டிற்கு இந்த வாய்ப்பாடு தான் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**அறிவியல் தமிழ்ப் பணி**

தமிழகத்தில் பள்ளிக்கூடங்களில் 1830 ஆண்டு தமிழ்ப்பயிற்சி மொழித்திட்டம் முதல் எட்டு வகுப்பு வரை செயலாக்கப்பட்டது. அறிவியல் நூல்களைத் தமிழாக்கம் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. சென்னை கிறித்துவச் சங்கத்தின் வெளியீடாகத் தமிழ் மகாசின் என்ற முதலாவது அறிவியல் தமிழ் இதழ் 1831 ஆம் ஆண்டு வெளியானது. 1832 ஆம் ஆண்டு இரேனியல் பாதிரியார் எழுதிய பூமி சாஸ்திரம் தமிழில் முதலாவது அறிவியல் உரைநடை நூலாகும். அவ்வாறே, தமிழில் முதன் – முதலாக – வரலாறு, பூகோளம், பொதுஅறிவு நூல்கள் இவரே எழுதினார். பிற்காலத்தில் இத்துறையில் அரும் பெருஞ் சாதனைகள் புரிந்த ஜான் மர்டாக்கு என்பரின் முன்னோடி இவர்.

இலங்கையில் டாக்டர் சாமுவேல் ஃபிஸ்க் கிரீன் என்னும் அமெரிக்கத் திருச்சபை ஊழியரால் முனைவர் கால்வின் கட்டர் எழுதிய உடற்கூறியல் உடலியங்கியல் மற்றும் சுகாதாரம் குறித்த மருத்துவ நூல் 1857 ஆம் ஆண்டு அங்காதி பாத சுகரணவாத உற்பாவன நூல் என்கிற தலைப்பில் மொழிபெயர்ப்பானது அறிவியல் தமிழில் முக்கிய நூல் இது.

## மழை

வெட்டி யடிக்குது மின்னல் –கடல்
வீரத்திரை கொண்டு விண்ணை யிடிக்குது
கொட்டி யிடிக்குது மேகம் – கூ
கூவென்று விண்ணைக் குடையுது காற்று
சட்டச்சட சட்டச்சட டட்டா – என்று
தாளங்கள் கொட்டிக் கனைக்குது வானம்
எட்டுத் திசையு மிடிய – மழை
எங்ஙனம் வந்த தடா தம்பி – வீரா!

அண்டங் குலுங்குது தம்பி – தலை
ஆயிரந் தூக்கிய சேடனும் பேய்போல்
மிண்டிக் குதித்திடு கின்றான் – திசை
வேற்புக் குதிக்குது வானத்துத் தேவர்
செண்டு புடைத்திடு கின்றார் – என்ன
தெய்விகக் காட்சியைக் கண்முன்பு கண்டோம்
கண்டோம் கண்டோம் கண்டோம் – இந்தக்
காலத்தின் கூத்தினைக் கண்முன்பு கண்டோம்

*தத்தரிகிட தத்தரிகிட தித்தோம்.*
*– பாரதியார்*

# மதிப்பீட்டுச் செயல்பாடுகள்

## அடைவு

**அறிவியல் கருத்தரங்க நிகழ்வுகளில் பங்குபெற்று உரையாற்றக் குறிப்புகள் தயாரிக்கிறார்கள்.**

### ஒரு மதிப்பெண்

1. ஆறறிவையும் தெளிவாய் வகைப்படுத்திக் கூறும் தமிழ் இலக்கணநூல்

   அ) நன்னூல் ஆ) தொல்காப்பியம் இ) வீரசோழியம் ஈ) யாப்பருங்களம்

2. 'விசும்பு' என்னும் சொல்லின் பொருள்

   அ) வானம் ஆ) நீர் இ) காற்று ஈ) தீ

3. திருவண்டப் பகுதி இடம் பெறும் இலக்கண நூல்----------

4. திருவாசகத்தின் ஆசிரியர்----------

### மூன்று மதிப்பெண்கள்

5. அண்டம், அணு குறித்து அறிவு பண்டைய இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளன. இரு சான்றுகளுடன் குறிப் பெழுதுங்கள்.

6. பள்ளி ஆண்டுமலரில் வெளியிடுவதற்காகத் தொல்காப்பியர் காட்டும் பரிணாம வளர்ச்சி எனும் கருத்தில் பெட்டிச் செய்தி தயார் செய்யுங்கள்.

7. நெடுநல்வாடை, முக்கூடற்பள்ளு பாடல்களில் வெளிப்படும் மழைக்காலத் தோற்றத்தை ஒப்பீட்டுக் குறிப்பாக எழுதுங்கள்.

### ஐந்து மதிப்பெண்

8. அறிவியல் அரங்கில் உரையாற்ற " வானவியல் அறிவும் பண்டை இலக்கியமும் " எனும் தலைப்பில் சொற் பொழிவு உரை தயார் செய்க.

9. இன்றைய உலகில் முப்பரிமாண உருவ வரைவு(ஹோலோகிராம்) பல இடங்களில் பயன்படுத்தப்படுகிறது. தேர்தலில் சமீபத்தில் பயன்படுத்திய நிகழ்வை அனுபவக் குறிப்பாக எழுதுங்கள்.

10. தமிழ் இலக்கியங்கள் அழகை மட்டும் பாடவில்லை; அறிவியலையும் பாடுகிறது. இலக்கிய மன்றத்தில் பேச விவாதக் குறிப்புகள் தயார் செய்யுங்கள்.

11. அறிவியல் இதழில் வெளியிட வானவில் அழகினை வருணித்துச் சிறு கவிதை எழுதுங்கள்.

### எட்டு மதிப்பெண்

12. பள்ளிக் கருத்தரங்கில் பேசுவதற்காக 'இலக்கியங்களும் வானவில் அறிவும்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுங்கள்.

13. மாணிக்கவாசகரின் வானவில் சிந்தனையுடன் பாரதியின் வானவியல் அறிவை ஒப்பிட்டுக் கட்டுரை எழுதுங்கள்.

14. தமிழில் கணினிப் பயன்பாடு என்னும் தலைப்பில் அறிவியல் இதழுக்கு ஒரு தலையங்கம் எழுதுங்கள்

## அடைவு

**மொழிபெயர்ப்புத் திறன் பெறுகிறார்கள். அறிவியல் படைப்புகளை மொழிபெயர்க்கிறார்கள்.**

### ஒரு மதிப்பெண்

1. கடவுச் சொல்லுக்கு இணையான ஆங்கிலச் சொல்-----

2. கீழ்க் குறித்தனவற்றுள் எது திருக்குறலைச் சிறப்பிப்பது.

அ) பல மொழிகள் மொழி பெயர்களில் பட்டது ஆ) சங்ககால இலக்கயம்

இ) ஏதே புலவரால் படைக்கப் பட்டது ஈ) எல்லாராலும் விரும்பபடட் பழக்கப்படுகிறது.

## மூன்று மதிப்பெண்

1. மொழிபெயர்ப்பாளருக்கு அமைய வேண்டிய திறன்களைக் குறிப்பிடுங்கள்.
2. மொழிபெயர்க்கும் போது கவனிக்க வேண்டியவற்றைப் பட்டியலிடுங்கள்.
3. Data, face book, e-mail போன்றவற்றிற்கான தமிழ்ச் சொற்களை எழுதுங்கள்.
4. புதிய சொற்கள் உருவாக்கல் தேவையா- விவாதக் குறிப்பு எழுதுங்கள்.

## ஐந்து மதிப்பெண்

1. அறிவியல் நூல்களைத் தமிழ்மொழியில் மொழிபெயர்ப்பதால் கல்வித்தரத்தில் ஏற்படும் மாற்றங்களைத் தொகுத்து எழுதுங்கள்.
2. நாம் அன்றாடம் வீட்டில் பயன்படுத்தும் எட்டு பிறமொழிச் சொற்கள் எழுதி அவற்றிற்குப் பொருத்தமான தமிழ்ச் சொற்களை எழுதுங்கள்.
3. அறிவியல் மொழிபெயர்ப்பிற்கும் இலக்கிய மொழிபெயர்ப்புக்கும் இடையேயான வேறுபாடுகளச் சிறு குறிப்பாகத் தருக.

## எட்டு மதிப்பெண்

1. “மெல்லத் தமிழ் இனிச் சாகும்” என்பது போல் தமிழ்மொழி பேச்சுவழக்கிலும், படைப்பிலக்கியங்களிலும் குறைந்து வருகிறது. உங்கள் கருத்தை விமர்சனக் கட்டுரையாக எழுதுங்கள்.
2. கால மாற்றத்திற்கேற்ப அன்றாடப் பயன்பாட்டில் நம்மொழியில் பரவலாகக் கலந்துள்ள பிறமொழிச் சொற்களால் மொழி அழியும்/ வளரும் ஏதேனும் ஒரு தலைப்பில் பட்டிமன்றத்தில் பேசக் குறிப்புகள் தயார் செய்க.

# அடைவு

**சமூக மேம்பாட்டிற்காக இணையதளத்தை நல்லமுறையில் பயன்படுத்துகிறார்கள்.**

## ஒரு மதிப்பெண்

1.‘ வலைக்குள் வலை’ எனும் சிறுகதையின் மையக் கருத்து

அ) கணினி மோசடி ஆ) வலைத்தள விழிப்புணர்வு இ) மின்னஞ்சல் ஈ) விளம்பர விழிப்புணர்வு

2. ஒரு சமூகத் தொடர்பு வலைத்தளம்

அ) முகநூல் ( Facebook) ஆ) e- book இ) e- mail ஈ) e- news

3. உங்கள் கைப்பேசி எண்ணுக்குப் பரிசு கிடைத்துள்ளது எனவரும் வலைத்தளக் குறுஞ்செய்திகள்

அ) சரியானது ஆ) தவறானது இ) சிலது தவறானது ஈ) மோசடி

4. பொருத்துக

| | |
|---|---|
| அ) முகநூல் | sms |
| ஆ) குறுஞ்செய்தி | facebook |
| இ) மின்னஞ்சல் | blog |
| ஈ) வலைப்பூ | e-mail |

## மூன்று மதிப்பெண்கள்

5. சமூக வலைத்தளங்கள் சிலவற்றை எழுதி அவைகளைப் பயன்படுத்தும்போது கவனிக்க வேண்டியதை அறிவுறுத்தலாக உன் தங்கைக்கு கடிதம் எழுதுங்கள்.
6. 'விளம்பரங்கள் பலவும் மக்களைக் கவர்வதற்கே'. சரியானதைக் கண்டறிந்து விழிப்புணர்வு அறிக்கை ஒன்றை தயார் செய்யுங்கள்.

## ஐந்து மதிப்பெண்

7. வலைக்குள் வலை சிறுகதை இன்றைய சூழலைச் சுட்டிக்காட்டுகிறது. விமர்சனக் கட்டுரையாக எழுதுங்கள்.
8. பெற்றோர் ஆசிரியர் சங்கத்தில் பேசிட இணையதளத்தை நன்முறையில் எப்படியெல்லாம் பயன்படுத்தலாம் என்பதை விளக்கிட சொற்பொழிவு ஒன்று தயார் செய்யுங்கள்.

## எட்டு மதிப்பெண்

9. சமூக வலைத்தளங்களில் பலரும் உண்மையான செய்திகளைப் பதிவுசெய்வதில்லை. இதனால் பாதிப்புக் குள்ளாக நேரும் உண்மையை வெளிப்படுத்த சிறுகதை ஒன்றை எழுதித் தலைப்பிடுங்கள்.
10. இணையதளத்தில் நேரும் பாதிப்புகளை எடுத்துரைக்க விழிப்புணர்வு முகாம் நடத்த விரும்பும் நீங்கள் அதன் திட்டமிடலை விளக்கி எழுதுங்கள்.

4

# என்றும் நலமுடன்

## அலகு அறிமுகம்

'அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது' என்று ஔவையார் மனிதப் பிறப்பை அரிதாகப் போற்றிக் கூறியுள்ளார். அம்மனிதப் பிறப்பானது இன்றைய இயந்திர உலகில் முறையான உணவுப் பழக்கமின்றியும் உடற்பயிற்சியின்றியும் விளையாட்டு இன்றியும் பயனற்றுப் போவது நாம் அறிந்ததொன்றே. சுவர் இருந்தால்தான் சித்திரம் வரைய முடியும் என்பது ஆன்றோர் வாக்கு. மனிதனை மகிழ்ச்சியுடனும் ஆரோக்கியத்துடனும் வாழவைப்பதில் உணவிற்கும், உடற்பயிற்சிக்கும் விளையாட்டிற்கும் முக்கியப் பங்குண்டு எனலாம்.

நவீன வாழ்க்கைச் சூழலில் மனிதன் காலத்திற்கேற்பப் பல்வேறு மாற்றங்கட்குத் தம்மை ஆட்படுத்தி வருகின்றான். அவற்றிலும் குறிப்பாக உணவு முறையில் ஏற்படுத்தி வரும் மாற்றம் அவனைப் பல்வேறு நோய்களுக்கு ஆளாக்கி, அவனிடம் ஆரோக்கியமற்ற மாற்றத்தை ஏற்படுத்திவிடுவது உள்ளங்கை நெல்லிக்கனி போன்றதாகும். பலரும் இயற்கை உணவுகளை மறந்துவிட்டு உடலுக்குக் கேடுவிளைவிக்கும் அந்நிய உணவுகள் ஜங்க்ஃபுட் உணவுகள், பாஸ்ட் ஃபுட் உணவுகள் போன்ற நவீன உணவு முறைகளுக்கு மாறி, உடல் நிலையில் அக்கறை செலுத்தாமல் நோயுடன் வாழ்கின்றார்கள்.

உடம்பை வளர்த்தேன்! உயிர் வளர்த்தேனே! திருமூலரின் வாக்கிற்கேற்ப வாழ்ந்த காலம் போய், இன்றைய வாழ்க்கைச் சூழலில் சிக்குண்டும், முறையான உடற்பயிற்சியின்றி வாழ்வதாலும் பல்வேறு மனநோய்கட்கும் ஆளாகி வருகின்றான் மனிதன். இந்நிலையில் உடல்நலனையும், மனநலனையும் தரும் யோகாசனம் மற்றும் விளையாட்டில் ஈடுபாடு செலுத்த வேண்டிய கட்டாயச் சூழலுக்கு தள்ளப்பட்டுள்ளமையும் கண்கூடே.

ஒரு மனிதன் சரியான உடற்பயிற்சியைப் பெற்றுக்கொள்ளாவிட்டால் அவன் எத்தகைய சிறந்த உணவை உண்டாலும் கூட நல்ல ஆரோக்கியத்தைப் பெற்றுக்கொள்ள முடியாது என்பார் டாக்டர் நிக்கோலாய் அமோசோவ். ஓடி விளையாடு பாப்பா, மாலை முழுதும் விளையாட்டு என்று குழந்தைப்பருவம் முதலே விளையாட்டின் மகத்துவத்தை உணர்த்தப்பட வேண்டும் என்பதைப் பாரதியார் பகர்ந்து சென்றுள்ளார்.

மாணவர்கள் விளையாட்டில் ஆர்வத்துடனும், ஒற்றுமையுடனும் ஈடுபடுவதால் அவர்களிடையே ஒற்றுமையுணர்வும் ஒருமைப்பாட்டு எண்ணமும் உருவாகின்றன. ஆழ உழுது மண்ணைப் பதப்படுத்துவதால் பயிர்கள் நன்றாக வளரும். அதைப்போன்றே நல்ல பயிற்சியும் முயற்சியும் வாய்ப்பும் கொடுத்தால் மாணவர்கள் விளையாட்டில் சிறந்து விளங்குபவர். இதனால் விளையாட்டானது அவர்களது எதிர்கால வாழ்வுக்கு வழிவகுப்பதுடன் வாழ்வை வளமுடையதாகவும் மகிழ்ச்சியுடையதாகவும் மாற்றும்.

இந்நிலையில் உணவு, உடற்பயிற்சி, விளையாட்டு போன்றவற்றின் இன்றியமையாமையையும் பயன்பாட்டையும் மாணவ- மாணவியருக்கு உணர்த்தும் பொருட்டு, நலம் நாடி, சுவரிருந்தால், ஆடுவோம் பாடுவோம் என்னும் மூன்று கருத்தலகுகளாக இவ்வலகு வடிவமைக்கப்பட்டுள்ளது.

## கற்றல் அடைவுகள்

- உணவின் முக்கியத்துவத்தைக் குறித்து அறிந்தவற்றைக் குறிப்புகளாக எழுதுகிறார்கள்.
- இயற்கை உணவுகளின் இன்றியமையாமையையும் செயற்கை உணவுகளின் பாதிப்புகள் குறித்தும் ஒப்புமை செய்து விவாதிக்கிறார்கள், ஒப்பிடுகிறார்கள், கட்டுரை எழுதுகிறார்கள்.
- மாறிவரும் உணவுப் பழக்கவழக்கங்கள் பல நோய்கள் வருவதற்குக் காரணமாகின்றன என்பதை உணர்ந்து விழிப்புணர்வுக் கட்டுரை எழுதுகிறார்கள்.
- உடற்பயிற்சியின் அவசியத்தை அறிகிறார்கள். கவிதை நயங்களை அறிகிறார்கள். இரசிக்கிறார்கள். இரசனைக் குறிப்பு எழுதுகிறார்கள்.
- உடற்பயிற்சியின் சிறப்புகளையும் அதனைப் பின்பற்றப்பட வேண்டியதன் அவசியத்தையும் அறிந்து பத்திரிகைச் செய்தி உருவாக்குகிறார்கள்.
- விளையாட்டுகள் அதன் பயன்பாடுகள் ஆகியவை குறித்துக் குறிப்பு தயாரிக்கிறார்கள். பட்டிமன்றக் குறிப்புகள் எழுதுகிறார்கள்.

## மதிப்புகளும் மனப்பாங்கும்

- முன்னோர்களின் இயற்கை உணவு குறித்த பழக்கவழக்கங்களை நாமும் பின்பற்ற வேண்டும் என்ற ஆர்வம் கொள்ளும் மனநிலை
- இலக்கியப் படைப்புகளைப் படித்துச் சுவைக்கும் மனநிலையைப் பெறுதல்.
- உடம்பினைப் பேணும் மனநிலையைப் பெறுதல்.
- உடற்பயிற்சிகளை வாழ்வில் தினமும் பின்பற்றும் மனநிலையைப் பெறுதல்.
- பழமையான விளையாட்டுகளை அறிந்து அவற்றைப் பாதுகாக்கும் மனநிலையைப் பெறுதல்.
- விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கும் மனநிலையைப் பெறுதல்.
- தத்தம் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளும் மனநிலையைப் பெறுதல்.
- அவரவர்கள் திறமைக் கேற்ப படைப்புகளைப் படைக்கும் மனநிலையைப் பெறுதல்.
- மாற்றுத் திறனாளி மாணவர்களை மதிக்கும் மனநிலையைப் பெறுதல்.

## பார்வை நூல்கள்

கவிஞர் கடவூர் மணிமாறன் கவிதைகள்
முனைவர்.கி.நாச்சிமுத்து – உடம்பு
குமரி ஆதவன் – விளையாட்டும் வாழ்வியலும்
கவிஞர் ஜெ. தனுசு – கவிதை
இலட்சியம் தோற்பதில்லை – டாக்டர் எஸ். நவராஜ் செல்லையா
அமுதசுரபி இதழ்
இளைய தலைமுறை – மாதஇதழ்
நூலகப் பயன்பாடு

<table>
<tr><td colspan="2">அலகுச்சட்டம் (என்றும் நலமுடன்)</td><td>அலகு 4</td></tr>
<tr><th>கருத்துகள்/திறன்கள்</th><th>கற்றல் செயல்பாடுகள்/ மதிப்பீடு</th><th>கற்றல் அடைவுகள்</th></tr>
<tr><td>உணவு மனிதனின் அடிப்படைத் தேவைகளில் முதன்மையானது.</td><td>சேகரித்தல்<br>மாணவர்கள் ஆரோக்கியமான உணவு குறித்துக் கலந்துரையாடுகிறார்கள். உணவே மருந்து என்பதை உணர்த்தும் திருக்குறள், பழமொழிகள் போன்றவற்றைச் சேகரிக்கிறார்கள்.<br>மதிப்பீட்டு குறிப்புகள்<br>உணவு தொடர்பானவை, எண்ணிக்கை, கருத்து<br>குறிப்பெழுதுதல்<br>உணவின் அவசியம், உண்ணும் நேரம், சரிவிகித உணவுகளை உட்கொள்ளல், உணவில் சேர்க்கப்பட வேண்டியவை மற்றும் தவிர்க்கப்பட வேண்டியவை போன்றவை குறித்த முந்தைய - இன்றைய உணவுப்பழக்க வழக்கங்கள் குறித்தெல்லாம் கலந்துரையாடிக் குறிப்புகள் எழுதுகிறார்கள்.<br>மதிப்பீட்டுக் குறிப்புகள்<br>கருத்துத்தெளிவு, சுருங்கக் கூறும் திறன், மொழி நடை, தகவல் சேகரிக்கும் திறன்<br>மதிப்பீட்டுக் குறிப்புகள்<br>தகவல் திரட்டும் முறை<br>கருத்துத் தெளிவு<br>வெளியீட்டுத் திறன்<br>விமர்சனக் கட்டுரை எழுதுதல்<br>உணவே மருந்து என்ற கட்டுரையை வாசித்தும் இன்றைய உணவுப் பழக்கவழக்கங்கள் உடல் நலனைச் சீராக வைப்பதில் முக்கியப் பங்காற்றுகின்றமை குறித்து விவாதித்தும் கட்டுரை எழுதுகிறான். இன்றைய வாழ்வில் தொலைக்காட்சியில் வரும் விளம்பரங்கள் மக்களிடம் ஆதிக்கம்</td><td>உணவு தொடர்பான பழமொழிகள், திருக்குறள் போன்றவற்றைத் தொகுக்கிறார்கள்.<br><br>உணவின் முக்கியத்துவம் குறித்தும், இன்றைய உணவுப் பழக்கம் குறித்தும் குறிப்புகள் எழுதுகிறார் கள்.<br><br>மாறிவரும் உணவுப் பழக்கவழக் கங்கள் பல நோய்கள் வருவதற்குக் காரணமாகின்றன என்பதை உணர்ந்து கட்டுரை எழுதுகிறார்கள்.</td></tr>
</table>

| கருத்துகள்/திறன்கள் | கற்றல் செயல்பாடுகள்/ மதிப்பீடு | கற்றல் அடைவுகள் |
|---|---|---|
| உணவுப் பழக்கவழக்கங்கள் பல நோய்களுக்குக் காரணமாகின்றன. | செலுத்திவருகின்றன. அதிலும் உணவு தொடர்பான விளம்பரங்கள், அன்றாட உணவில் ஆதிக்கம் செலுத்தும் தன்மையை உள்வாங்கி மாணவர்கள் விமர்சனக் கட்டுரை எழுதுகிறார்கள்.<br>**மதிப்பீட்டுக் குறிப்புகள்**<br>வடிவம், கருத்துக்கோர்வை, விமர்சிக்கும் திறன், மொழிநடை | |
| உடல்நலத்திற்கு உடற்பயிற்சி அவசியமானது. அஃது உடம்பை நல்லமுறையில் பாதுகாக்கிறது. | **விளம்பரம் தயார் செய்தல்**<br>மாணவர்களிடம் நடைப்பயிற்சியையும், நல்ல உடற்பயிற்சியே உடல் வளர்த்தேன்! உயிர் வளர்த்தேன் என்பன போன்ற விளம்பரங்களை அறிமுகம் செய்வதுடன் மாணவர்களையும் விளம்பரங்களைத் திரட்டக் கூறலாம். பின்பு விளம்பர வாக்கியங்களை உருவாக்கவும் அவற்றை விளம்பரப்படுத்தவும் ஆசிரியர் ஊக்குவிக்கலாம். | உடற்பயிற்சியின் அவசியத்தை அறிந்து விழிப்புணர்வு வாக்கியங்கள் தயார்செய்கிறார்கள். |
| | **சொற்பொழிவு உரை தயார் செய்தல்**<br>உடற்பயிற்சி என்னும் கவிஞர் கடவூர் மணிமாறனின் கவிதையை வாசித்து அதன் பொருளையும் அறிகிறார்கள். ஆசிரியருடன் கவிதை குறித்து கலந்துரையாடல் நிகழ்த்துகிறார்கள். உடலில் உறுதிப்படுத்தும் உடற்பயிற்சிகள் என்ற கருத்தை மையமாக வைத்துச் சொற்பொழிவு உரையொன்று தயார் செய்கின்றார்கள்.<br>**மதிப்பீட்டுக் குறிப்புகள்**<br>வடிவம், கருத்துக்கோர்வை, மொழிநடை | உடற்பயிற்சியின் அவசியத்தை உணர்த்தும் சொற்பொழிவு உரை தயாரிக்கிறார்கள். |
| | **பத்திரிகைச் செய்தி**<br>உடம்பைப் பற்றியும் அவ்வுடம்பின் மேன்மையைப் பற்றியும் உடம்பு எனும் கட்டுரையில் முனைவர் கி.நாச்சிமுத்து வெளிப்படுத்தியுள்ளமையை ஆசிரியர் மாணவர்களிடம் கூறுகிறார். ஒருவன் உடல் நலத்துடன் திகழ்ந்தால் தான் மனநலத்துடன் வாழ இயலும். ஆரோக்கியமான உடம்பிலே ஆரோக்கியமான மனம் இருக்கும் என்பதை வலியுறுத்தி மாணவர்களுக்குப் பத்திரிகைச் செய்தி தயாரிக்க ஆசிரியரும் உதவலாம். | உடற்பயிற்சியின் சிறப்புகளையும் அவசியத்தையும் அறிந்து பத்திரிகைச் செய்தி உருவாக்குகிறார்கள். |

| கருத்துகள்/திறன்கள் | கற்றல் செயல்பாடுகள்/ மதிப்பீடு | கற்றல் அடைவுகள் |
|---|---|---|
| நோயற்ற வாழ்விற்கு வழிவகுப்பதில் யோகாவும் முக்கியப் பங்காற்றுகிறது. விளையாட்டுகள் மக்களின் வாழ்வியலைப் பிரதிபலிக்கின்றன, அர்ப்பணிப்பு மனப்பாங்கை ஏற்படுத்துகின்றன. | **மதிப்பீட்டுக் குறிப்புகள்**<br>செய்தியாக்கம், கருத்து, மொழிநடை<br>**கட்டுரை எழுதுதல்**<br>சுவரிருந்தால் எனும் பகுதியிலுள்ள உடம்பு எனும் கட்டுரையில் சுவரிருந்தால்தான் சித்திரம் வரைய முடியும் என்பதற்கேற்ப இவ்வுலக வாழ்வை வாழ்ந்து அனுபவிக்க வேண்டுமெனில் சுவராகிய உடம்பினைப் பேண வேண்டும். இக்கருத்தின் அடிப்படையில் மாணவர்களையும் கலந்துரையாடிக் குறிப்புகள் எடுக்குமாறு கூற வேண்டும். ஒழுங்கற்ற வாழ்க்கைமுறை பல நோய்களுக்குக் காரணமாகிறது என்பதை உணர்ந்த மாணவர்களிடம் வருமுன் காப்போம் எனும் தலைப்பில் கட்டுரை எழுதச் செய்தல்.<br>**மதிப்பீட்டுக் குறிப்பு**<br>வடிவம் (முன்னுரை, முடிவுரை), கருத்துக்கோர்வை, மொழிநடை, வெளியீட்டு உத்தி<br>**நேர்காணல்**<br>யோகாசனமும் அதன் நன்மைகள் குறித்தும் அறிந்து கொள்ளுமாறு மாணவப்பருவம் முதலே விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டியுள்ளது. மாணவர்களை யோகா குறித்துக் கலந்துரையாடச் செய்தும், ஆசிரியரும் தம் கருத்துகளைக் கூறி மேலும் விழிப்புணர்வு அடையச் செய்யலாம். யோகா குறித்த மாணவர்களது சந்தேகங்களை வினாக்களாகத் தொகுக்கச் செய்ய வேண்டும். அதனை ஆசிரியர் சரி செய்து கொடுப்பதுடன், யோகா வல்லுநர் ஒருவரை நேர்காணல் செய்வதற்குரிய ஆலோசனைகளை வழங்கி வினாக்கள் தயார் செய்யக் கூறலாம்.<br>**மதிப்பீட்டுக் குறிப்பு**<br>வினாக்களின் பொருத்தம், தரமான வினாக்கள், மொழிநடை<br>இவைகளின் அடிப்படையில் ஆசிரியர் மதிப்பீடு செய்ய வேண்டும். | யோக குறித்தும் அதன் நன்மைகள் குறித்தும் அறிந்து ஈடுபடுகிறார்கள். |

| கருத்துகள்/திறன்கள் | கற்றல் செயல்பாடுகள்/ மதிப்பீடு | கற்றல் அடைவுகள் |
|---|---|---|
| | **விளக்கவுரை எழுதுதல்**<br>குமரி ஆதவனின் விளையாட்டும் வாழ்வியலும் என்று கட்டுரையைக் குறித்தும் கலந்துரையாடுகிறார்கள். ஆசிரியரும் நாட்டுப்புற விளையாட்டுகள் குறித்த விளக்கங்களைக் கூறுகிறார். மாணவர்கள் நாட்டுப்புற விளையாட்டு ஒன்றைக் குறித்து விளக்கவுரை எழுதுகிறார்கள்.<br>**மதிப்பீட்டுக் குறிப்புகள்**<br>மொழிநடை, தெளிவு, கருத்து, தொகுத்துக்கூறல் | நாட்டுப்புற விளையாட்டு குறித்த விளக்கக் குறிப்பு தயாரிக்கிறார்கள். நிகழ்த்துகிறார்கள். |
| | **படத்தொகுப்பும் செய்தித்தொகுப்பும்**<br>உடல்நலனை மேம்படுத்துவதற்கும் மனநலனைப் பாதுகாக்கவும், போட்டிகளில் பங்கேற்கவும், பரிசுபெறவும், மாணவர்களை விழிப்புணர்வடையச் செய்யும் விதத்தில் கவிஞர் தனுசுவின் விளையாட்டு வீராங்கனை கவிதையும் இலட்சிம் தோற்பதில்லை என்ற நிகழ்வுக்குறிப்பும் இடம்பெற்றுள்ளது குறித்துக் கலந்துரையாடச் செய்யலாம். மாணவர்கள் விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்ற வீரர்களின் படங்களையும் அவர்கள் குறித்த செய்திக் குறிப்பையும் உருவாக்குகிறார்கள்.<br>**மதிப்பீட்டுக் குறிப்புகள்**<br>தரம், எண்ணிக்கை, கருத்துத்தெளிவு, மொழிநடை | விளையாட்டில் சிறந்த வீரர்கள் குறித்த படத்தொகுப்பு மற்றும் செய்தித்தொகுப்பு உருவாக்கு கிறார்கள். |
| | **நிகழ்வுக் குறிப்பு**<br>மாணவர்களை விளையாட்டுகளைக் கண்டு ரசித்த அவரவர் அனுபவங்களைக் குறிப்புகளாக எழுதச் செய்ய வேண்டும். ஆசிரியரும் தம் கருத்துகளை மாணவர்களிடம் கூறி அவர்களை உற்சாகப்படுத்தலாம். சமீபத்தில் கண்ட ஏதேனும் வீராங்கனை குறித்த நிகழ்வைக் குறிப்பாக எழுதுகிறார்கள்.<br>மதிப்பீட்டுக் குறிப்புகள் | |

| கருத்துகள்/திறன்கள் | கற்றல் செயல்பாடுகள்/ மதிப்பீடு | கற்றல் அடைவுகள் |
|---|---|---|
| | **கருத்துத்தெளிவு**<br>தொகுக்கும் திறன்<br>மொழிநடை<br>**விழிப்புணர்வு முகாம் நடத்துதல்**<br>உடலை ஆரோக்கியமாக வைத்திருந்தாலே மாணவர்கள் தம் படிப்பில் முழு அக்கறையைச் செலுத்த இயலும். உணவு, உடற்பயிற்சி மற்றும் விளையாட்டு போன்றவை குறித்த விழிப்புடையவர்களாக, மாணவப்பருவம் தொட்டே திகழ்ந்து வர வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். இதற்காக, விழிப்புணர்வு முகாம் குறித்த மாணவர் அறியும் விதத்தில் ஆசிரியர் பல்வேறு ஆலோசனைகளை வழங்க வேண்டும். விழிப்புணர்வு முகாமில் உடல்நலன் குறித்த கருத்தரங்குகள், துணுக்குகள், படத்தொகுப்புகள், ஆலோசனை வழங்க துறைசார்ந்த வல்லுநர்கள், பத்திரிகைச் செய்திகள், இணையச் செய்திகள் போன்றவைகள் இடம் பெறும் விதத்தில், முகாமினைத் திட்டமிடல் வேண்டும். மாணவர்கள் விழிப்புணர்வு முகாம் நடத்தத் தயாராகிறார்கள்.<br>விழிப்புணர்வு முகாமில் பங்குபெற்ற மாணவர்கள் அவர்களின் படைப்புகளையும் ஆசிரியர் பாராட்டலாம்.<br>**மதிப்பீட்டுக் குறிப்புகள்**<br>முகாம் ஒருங்கிணைப்பு, செய்திகளைத் தொகுத்தல், வகைப்படுத்தும் திறன், விளக்கம் கூறும் திறன், படங்களுக்கான குறிப்புகள் எழுதி வைத்திருந்தமை | உடல் நலனின் சிறப்புகளையும் அதனை வருமுன் காத்தலோடு பாதுகாக்க வேண்டும் என்பதனை உணர்ந்திடும் விதத்தில் விழிப்புணர்வு முகாம் நடத்துகின்றார்கள். |

# அலகுப்பகுப்பாய்வு

## நுழைவுச் செயல்பாடு (குழுக்கலந்துரையாடல்)

மாணவர்களின் எண்ணிக்கைகேற்ப அவர்களைச் சிறுசிறு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவிற்கும் ஒன்றோ இரண்டோ பழமொழிகளைப் பிரித்துக் கொடுங்கள். பழமொழி குறித்த கருத்துகளைக் கலந்துரையாடச் செய்யுங்கள். ஒவ்வொரு குழுவும் தத்தம் கருத்துகளைக் குறிப்பாக எழுதட்டும். மனிதனின் அடிப்படை நல்வாழ்விற்கு உணவே ஆதாரம் என்பதைக் கலந்துரையாடல் வாயிலாக வெளிக்கொணருங்கள். அக்கருத்துகளைத் தொகுத்து குறிப்புகளாக, மனிதனின் ஆரோக்கிய வாழ்விற்கு உணவின் பங்களிப்பு என்ற தலைப்பில் மாணவர்கள் செயல்பாட்டுக் குறிப்பேட்டில் எழுதிக் கொள்கிறார்கள்.



### குழுக்கலந்துரையாடல்

முன்னோர் உணவுமுறையானது சமச்சீர் உணவாகவும், முறையான உணவுப் பழக்கவழக்கமாகவும் பின்பற்றியமையால் நோயற்ற வாழ்வு வாழ்ந்தமையை உணர்த்தும் உணவே. மருந்து எனும் பாடப்பகுதியை வாசித்துக் கலந்துரையாடச் செய்யுங்கள்.

- இயற்கை உணவுகள் எவை? எவை?
- இயற்கை உணவுகளின் சிறப்பம்சங்கள் யாவை?
- சரிவிகித உணவு என்பது யாது?

என்ற வினாக்களுக்குரிய விவாதங்களுக்குப்பின்பு மாணவர்கள் அவரவர் குறிப்பேட்டில் குறிப்புகளாக எழுதிக் கொள்கிறார்கள்.

இன்றைய உணவுப் பழக்கங்களான செயற்கை உணவுகள் குறித்தும் கலந்துரையாடல செய்யலாம். இவ்விரு உணவுகள் குறித்து ஒப்பிட்டு அறிகிறார்கள். இதனால் இயற்கை உணவின் அவசியத்தையும் செயற்கை உணவுகள் தவிர்க்கப்பட வேண்டியதென்பதையும் பிரித்தறிகிறார்கள்.

### குறிப்பெழுதுதல்

உணவுப்பழக்கவழக்கம் குறித்து மாணவர்கள் கலந்துரையாடுகிறார்கள். உணவு, உணவின் அவசியம், உண்ணும் நேரம், சரிவிகித உணவுகளை உட்கொள்ளல், உணவில் சேர்க்கப்பட வேண்டியவை மற்றும் தவிர்க்கப்பட வேண்டியவை போன்றவை குறித்த முந்தைய - இன்றைய உணவுப்பழக்க வழக்கங்கள் குறித்தெல்லாம் கலந்துரையாடிக் குறிப்புகள் எழுதுகிறார்கள். இன்றைய உணவுப் பழக்கம் உடல்நலனைச் சீராக வைக்கிறதா என்பது குறித்தும் குறிப்பு எழுதச் செய்யலாம்.

### துணைக்கருவிகள்

- உணவு தொடர்பான செய்தித் தொகுப்புகள்
- மருத்துவ இதழ்கள்
- நேர்காணல்கள் பத்திரிக்கை/ தொலைக்காட்சி

| கற்றல் அடைவுகள் | மதிப்புகள் / மனப்பாங்குகள் |
|---|---|
| ❖ இயற்கை உணவு முறை செயற்கை உணவு முறை வேறுபாடு உணர்ந்து கட்டுரை எழுதுகிறார்கள். | இயற்கை உணவு சிறந்தது என எண்ணுதல். |

## விமர்சனக் கட்டுரை எழுதுதல்

- நவீன வாழ்க்கை முறையில் ஏற்பட்ட மாற்றங்கள் எவை? எவை?
- குறிப்பாக உணவு முறையில் உண்டான மாற்றங்கள் எவை? எவை?

என்ற வினாக்களுடன் கலந்துரையாடலை ஆசிரியர் தொடங்குதல். உணவுமுறையில் அடைந்து வரும் மாற்றங்களை (ஜங்க் ஃபுட், பாஸ்ட் ஃபுட் அந்நிய உணவுகள்) விளக்குதல்.

மாணவர்கள் குழுவாகப் பல்வேறு நவீன உணவு வகைகளையும் விவாதித்து வரிசைப்படுத்துகின்றனர். தொடர்ந்து ஆசிரியரும் விளக்கிக் கூறுகிறார். பின்பு மாணவர்கள் நவீன உணவு முறைகளையும் அதன் பாதிப்புகளையும் குழுவாக விவாதம் செய்து குறிப்புகள் எழுதுகிறார்கள்.

## குழுவில் செயல்படும் முறை

உணவே மருந்து என்ற கட்டுரையை வாசித்தும் இன்றைய உணவுப் பழக்கவழக்கங்கள் உடல் நலனைச் சீராக வைப்பதில் முக்கியப் பங்காற்றுகின்றமை குறித்து விவாதித்தும் கட்டுரை எழுதுகிறான். இன்றைய வாழ்வில் தொலைக்காட்சியில் வரும் விளம்பரங்கள் மக்களிடம் ஆதிக்கம் செலுத்திவருகின்றன. அதிலும் உணவு தொடர்பான விளம்பரங்கள், அன்றாட உணவில் ஆதிக்கம் செலுத்தும் தன்மையை உள்வாங்கி மாணவர்கள் விமர்சனக் கட்டுரை எழுதுகிறார்கள்.

### துணைக்கருவிகள்

- அந்நிய உணவு ஆபத்தே- கட்டுரை
- மருத்துவ இதழ்கள்

| கற்றல் அடைவுகள் | மதிப்புகள் / மனப்பாங்குகள் |
|---|---|
| ❖ மாறிவரும் உணவுப்பழக்கங்களால் பலநோய்கள் உருவாகின்றன என்பதைக் கட்டுரை மூலம் வெளிப்படுத்துகின்றனர். | ஆரோக்கியமான உடலைப்பெற உணவில் கவனம் செலுத்த வேண்டும் என்ற எண்ணம். |

## விளம்பரம் தயார் செய்தல்

உடல்நலனைப் பேணுவதில் உடற்பயிற்சிக்கும் முக்கியப் பங்குண்டு என்பது மறுப்பதற்கில்லை. பயிற்சியில் நடைப்பயிற்சியும் முக்கியப் பங்காற்றுகிறது. உடற்பயிற்சியில் இன்று உடற்பயிற்சிக் கருவிகளின் யோகாசனம், தியானம் போன்றவையும் இன்று நீங்கா இடம்பெற்று வருகிறது. உடற்பயிற்சிக் கூடங்களும் ஆங்காங்கே புற்றீசல் போலப் பல்கிப் பெருகியுள்ளன. இஃது ஆண், பெண் என இருபாலருக்கும் தனித்தனியே இடம் பெற்றுள்ளவாம்.

மாணவர்களிடம் நடைப்பயிற்சியும், நல்ல உடற்பயிற்சியே. உடல் வளர்த்தேன்! உயிர் வளர்த்தேனே என்பன போன்ற விளம்பரங்களை அறிமுகம் செய்வதுடன் மாணவர்களையும் விளம்பரங்களைத் திரட்டக் கூறலாம். பின்பு விளம்பர வாக்கியங்களையும் உருவாக்கவும் அவற்றை விளம்பரப்படுத்தவும் ஆசிரியர் ஊக்குவிக்கலாம்.

### துணைக்கருவிகள்

- பல்வேறு விளம்பர மாதிரிகள்
- கவர்ச்சிகரமான விளம்பர வாக்கியங்களின் தொகுப்பு.

## சொற்பொழிவு உரை தயார் செய்தல்

உடற்பயிற்சி என்னும் கவிஞர் கடவூர் மணிமாறனின் கவிதையை வாசித்து அதன் பொருளை அறிகிறார்கள். ஆசிரியருடன் கவிதை குறித்துக் கலந்துரையாடல் நிகழ்த்துகிறார்கள். இன்றைய சூழலில் உடல்நலத்துடன் வாழ வேண்டுமெனில் உணவுப் பழக்க வழக்கங்களுடன் உடற்பயிற்சியும் அவசியமென்பது குறித்தும் கலந்துரையாடிக் குறிப்புகள் தயாரிக்கிறார்கள். உடல் நலன் குறித்த விழிப்புணர்வு மேலோங்கி வரும் இன்றைய சூழலில் மாணவர்களும் அதை உணர வேண்டும். உடலில் உறுதிப்படுத்தும் உடற்பயிற்சிகள் என்ற கருத்தை மையமாக வைத்துச் சொற்பொழிவு உரையொன்று தயார் செய்கின்றார்கள்.

### துணைக்கருவிகள்

- உடம்பு தொடர்பான கவிதைத் தொகுப்புகள்.
- உடற்பயிற்சி முறைகள் நூல்.

| கற்றல் அடைவுகள் | மதிப்புகள் / மனப்பாங்குகள் |
|---|---|
| ❖ உடற்பயிற்சி செய்வது மிகச் சிறந்தது என்பதைச் சொற்பொழிவு மூலம் வெளிப்படுத்துகின்றனர். | உடற்பயிற்சிகளை வாழ்வில் தினமும் பின்பற்றும் மனநிலை பெறுதல். |

## பத்திரிகைச் செய்தி

உடம்பைப் பற்றியும் அவ்வுடம்பின் மேன்மையைப் பற்றியும் அவற்றைப் பேண வேண்டியதின் அவசியத்தைக் குறித்தும் நம் முன்னோர்கள் இலக்கியங்கள் வாயிலாக வெளிப்படுத்திச் சென்றுள்ளமையை உடம்பு எனும் கட்டுரையில் முனைவர் கி.நாச்சிமுத்து வெளிப்படுத்தியுள்ளமையை ஆசிரியர் மாணவர்களிடம் கூறுகிறார். சித்தர்களும், ஔவையாரும், அப்பரும், திருவள்ளுவரும், திருமூலரும் கூறிச்சென்றுள்ள கருத்துகள் குறித்தும் மாணவர்கள் கலந்துரையாடுகிறார்கள். ஒருவன் உடல் நலத்துடன் திகழ்ந்தால் தான் மனநலத்துடன் வாழ இயலும். ஆரோக்கியமான உடம்பிலே ஆரோக்கியமான மனம் இருக்கும் என்பதை வலியுறுத்தி மாணவர்களுக்குப் பத்திரிகைச் செய்தி தயாரிக்க ஆசிரியரும் உதவலாம்.

### துணைக்கருவிகள்

- திருக்குறள், திருமந்திரம்
- பல்வேறு வகையான பத்திரிகைச் செய்திகளின் மாதிரிகள்

| கற்றல் அடைவுகள் | மதிப்புகள் / மனப்பாங்குகள் |
|---|---|
| ❖ உடற்பயிற்சியின் அவசியத்தை உணர்த்தும் பத்திரிகைச் செய்தி உருவாக்குகிறார்கள். | உடற்பயிற்சியின் அவசியத்தை பிறர் அறியச் செய்தியாக வெளிப்படுத்துதல். |

## கட்டுரை எழுதுதல்

சுவரிருந்தால் எனும் பகுதியிலுள்ள உடம்பு எனும் கட்டுரையில் சுவரிருந்தால்தான் சித்திரம் வரைய முடியும் என்பதற்கேற்ப இவ்வுலக வாழ்வை வாழ்ந்து அனுபவிக்க வேண்டுமெனில் சுவராகிய உடம்பினைப் பேண வேண்டும். ஒழுங்கான வாழ்க்கை வாழ்ந்து நோய்த்தாக்குதல்களிலிருந்து தம்மைத்தாமே தற்காத்துக் கொள்ளவேண்டும் என்பதை உய்த்துணர வேண்டும். தகவல் தொடர்பு சாதனங்கள் மது, புகை போன்ற தீய பழக்கங்கட்கு ஒருவன் அடிமையாக வேண்டி ஆளாய்ப் பிறக்கிறது என்பதை ஆசிரியரும் மாணவர்களுக்கு உணர்த்த வேண்டும். மாணவர்களையும் கலந்துரையாடிக் குறிப்புகள் எடுக்குமாறு கூற வேண்டும். இதனடிப்படையில் ஒழுங்கற்ற வாழ்க்கைமுறை பல நோய்களுக்குக் காரணமாகிறது என்பதை உணர்ந்த மாணவர்களிடம் 'வருமுன் காப்போம்' எனும் தலைப்பில் கட்டுரை எழுதச் செய்தல்.

### துணைக்கருவிகள்

- உடம்பு- கட்டுரைப்பகுதி
- உடம்பினைப் பேணும் முறைகள் குறித்தான நூல்கள்.

## நேர்காணல்

இன்றைய இயந்திர உலகில் மனிதன் உடல்நலனில் அக்கறை செலுத்தக் கூட நேரம் இல்லாமல் காலில் சக்கரத்தைக் கட்டியவன் போல் சுழன்று கொண்டிருக்கிறான். இதனால் தன் உடல்நிலையில் மனநலனின்றியும் தவிக்கின்றான். யோகாசனம் அதன் நன்மைகள் குறித்துக் அறிந்து கொள்ளுமாறு மாணவப்பருவம் முதலே விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டியுள்ளது. மாணவர்களை யோகா குறித்துக் கலந்துரையாடச் செய்தும், ஆசிரியரும் தம் கருத்துகளைக் கூறி மேலும் விழிப்புணர்வு அடையச் செய்யலாம். யோகா குறித்த மாணவர்களது சந்தேகங்களை வினாக்களாகத் தொகுக்கச் செய்ய வேண்டும். அதனை ஆசிரியர் சரி செய்து கொடுப்பதுடன், யோகா வல்லுநர் ஒருவரை நேர்காணல் செய்வதற்குரிய ஆலோசனைகளை வழங்கி வினாக்கள் தயார்செய்யக் கூறலாம்.

### துணைக்கருவிகள்

- யோகா விளக்க நூல்கள்.
- மருத்துவ இதழ்களில் வெளியான நேர்காணல்கள்.

| கற்றல் அடைவுகள் | மதிப்புகள் / மனப்பாங்குகள் |
|---|---|
| ❖ யோகாகுறித்தும் அதன் நன்மைகள் குறித்தும் அறிந்து செய்திகள் சேகரிக்கிறார்கள். | ↳ உடம்பினைப் பேணும் மனநிலை பெறுதல். |

## தொகுத்து எழுதுதல்

மனிதனின் ஆரோக்கிய வாழ்வில் விளையாட்டுகளின் பங்கும் குறிப்பிடத்தக்கதாகும். விளையாட்டு குறித்தும், அதன் அவசியம் குறித்தும் மாணவர்களைக் கலந்துரையாடச் செய்யலாம். பின்பு ஆசிரியரும் விளையாட்டு பண்டைய மக்கள் வாழ்வில் இடம்பெற்றிருந்தமையைக் குறித்தும், இலக்கியங்களில் விளையாட்டு குறித்த செய்திகள் குறித்தும் மாணவர்களிடம் கூறி விழிப்புணர்வை ஏற்படுத்தலாம்.

குமரி ஆதவனின் விளையாட்டும் வாழ்வியலும் என்று கட்டுரை குறித்தும் கலந்துரையாடுகிறார்கள். ஆசிரியரும் நாட்டுப்புற விளையாட்டுகள் குறித்த விளக்கங்களைக் கூறுகிறார். மாணவர்கள் நாட்டுப்புற விளையாட்டு ஒன்றைக் குறித்து எழுதுகிறார்கள். விளையாட்டு தொடர்பான பழமொழிகள் குறித்தும் ஆசிரியர் விளக்குகிறார். மாணவர்களும் விளையாட்டு குறித்த பழமொழிகளைத் தொகுத்து எழுதுகிறார்கள்.

உடல்நலனை மேம்படுத்துவதற்கும் மனநலனைப் பாதுகாக்கவும், போட்டிகளில் பங்கேற்கவும், பரிசுபெறவும், மாணவர்களை விழிப்புணர்வடையச் செய்யும் விதத்தில் கவிஞர் தனுசுவின் விளையாட்டு வீராங்கனை கவிதையும் இலட்சிம் தோற்பதில்லை என்ற நிகழ்வுக்குறிப்பும் இடம் பெற்றுள்ளது குறித்துக் கலந்துரையாடச் செய்யலாம். மாணவர்கள் விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்ற வீரர்களின் படங்களையும், அவர்கள் குறித்த செய்திக் குறிப்பையும் உருவாக்குகிறார்கள்.

### துணைக்கருவிகள்

- பல்வேறு விளையாட்டுகள் தொடர்பான நூல்கள்
- இலக்கியங்களில் விளையாட்டுச் செய்திக்குறிப்புகள்.
- விளையாட்டுப் போட்டிகளின் குறுந்தட்டுகள்

| கற்றல் அடைவுகள் | மதிப்புகள் / மனப்பாங்குகள் |
|---|---|
| ❖ விளையாட்டின் நன்மைகள் குறித்து பல்வேறு செய்திகளைத் தொகுக்கிறார்கள். | விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கும் மன நிலை பெறுதல். |

### நிகழ்வுக் குறிப்பு

மாணவர்களை விளையாட்டுகளைக் கண்டு ரசித்த அவரவர் அனுபவங்களைக் குறிப்புகளாக எழுதச் செய்ய வேண்டும். ஆசிரியரும் தம் கருத்துகளை மாணவர்களிடம் கூறி அவர்களை உற்சாகப்படுத்தலாம். சமீபத்தில் கண்ட ஏதேனும் வீரரைக் குறித்து நிகழ்வுக் குறிப்பாக எழுதுகிறார்கள்.

### விழிப்புணர்வு முகாம் நடத்துதல்

உடலை ஆரோக்கியமாக வைத்திருந்தாலே மாணவர்கள் தம் படிப்பில் முழு அக்கறையைச் செலுத்த இயலும். உணவு, உடற்பயிற்சி மற்றும் விளையாட்டு போன்றவை குறித்த விழிப்புடையவர்களாக, மாணவப்பருவம் தொட்டே திகழ்ந்து வர வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். இதற்காக, விழிப்புணர்வு முகாம் குறித்த மாணவர் அறியும் விதத்தில் ஆசிரியர் பல்வேறு ஆலோசனைகளை வழங்க வேண்டும். விழிப்புணர்வு முகாமில் உடல்நலன் குறித்த கருத்தரங்குகள், துணுக்குகள், படத்தொகுப்புகள், ஆலோசனை வழங்க துறைசார்ந்த வல்லுநர்கள், பத்திரிகைச் செய்திகள், இணையச் செய்திகள் போன்றவைகள் விழிப்புணர்வு முகாமில் இடம் பெறும் விதத்தில், முகாமினைத் திட்டமிடல் வேண்டும். மாணவர்கள் விழிப்புணர்வு முகாம் நடத்த தயாராகிறார்கள்.

விழிப்புணர்வு முகாமில் பங்குபெற்ற மாணவர்கள் அவர்களின் படைப்புகளையும் ஆசிரியர் பாராட்டலாம்.

# வளப்பகுதி

## அந்நிய உணவும் ஆபத்தும்!

இந்திய மக்கள் என்றைக்கும் அன்னிய மோகம் பிடித்து அலைபவர்கள். அந்நிய நாட்டு உடைகள், டிரான்சிஸ்டர்கள், ரேடியோ, கைக்கடிகாரங்கள் போன்றவை கள்ளச் சந்தையில் அமோகமாக விற்பனையான காலம் போய் இன்று அவைகளின் இடத்தை உணவுகள், தின்பண்டங்கள் பிடித்துக் கொண்டுள்ளன. வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் நமது பொருளாதாரத்தைச் சீர்குலைப்பதல்லாமல், நம் உடல் நலத்தையும் கெடுத்துக் கொண்டிருக்கின்றன.

நம் நாட்டு இட்லி, தோசா, வடை அமெரிக்காவில் பிரபலமாகிக் கொண்டு வரும்பொழுது, வெளிநாட்டு உணவுகளான பீட்சா, பர்கர், பாஸ்தா போன்றவைகளை நாம் மென்று கொண்டிருக்கிறோம்.

பதனம் செய்யப்பட்ட அன்னிய நாட்டு உணவுகளை இறக்குமதி செய்து சாப்பிட இந்தத் தலைமுறை தயாராகி விட்டது. இந்தப் போக்கில் சமுதாயம் சென்றால் பெண்களுக்குச் சமையலறையில் வேலையே இருக்காது. சூப்பர் மார்க்கெட்டுகளில் இத்தகைய உணவுகள் அமோகமாக விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன. சின்ன ஊர்களில் கூட அமெரிக்காவில், ஆஸ்திரேலியாவில் விளையும் ஆப்பிள், திராட்சை கிடைக்கின்றன. இவைகள் நம் உடம்பில் நஞ்சை சேர்ப்பதோடு இந்தியப் பற்றாக்குறைப் பொருளாதாரத்திற்குத் தீர்வு காணமுடியாத சூழ்நிலையை உண்டாக்கிக் கொண்டிருக்கின்றன.

இன்றைய இளைய சமுதாயம் ஒரு புதிய நுகர்வோர் வட்டத்தை உண்டாக்கிக் கொண்டிருக்கிறது. அந்நிய முதலீட்டாளர்கள் இவர்களுக்குத் தீனிபோடும் வகையில் நச்சுப் பொருட்களை விற்பனை செய்து பணம் பண்ணிக் கொண்டிருக்கின்றனர். வியாபார நுணுக்கமும், விளம்பரங்களும் இந்த ஆடம்பரப் பிரியர்களை ஈர்த்து அன்னிய நச்சுப் பொருட்களுக்கு அடிமையாக்கிக் கொண்டிருக்கின்றன.

பதனப்பட்ட மாமிசங்களான ஆட்டுக்கறி, மீன், பன்றிக்கறி போன்றவை முத்திரை பெற்று இறக்குமதி செய்யப்பட்டுகின்றன. நம்மவரும் முத்திரை இருந்தால் தரம் வாய்ந்ததென்று கருதி சாப்பிட்டு உடலைக் கெடுத்துக் கொண்டிருக்கின்றனர். பாஸ்தா, பாலாடைக் கட்டிகள், கிவிப்பழங்கள் அதிக விலை கொடுத்து வாங்குகின்றனர். ஈமுக் கோழி இறைச்சி உயர்ந்தது, ஆற்றலைக் கொடுக்கவல்லதென்று விளம்பரப்படுத்தி நல்ல லாபம் சம்பாதிக்கின்றனர். கிவிப்பழத்தைவிட நம் சீதாப்பழம் சத்து மிகுந்ததாகும். ஆனால், நம்மவர் ஏமாந்து விலை போகின்றனர். இன்னும் பெயர் தெரியாத உணவுகள் ஆண்டுக்கு 40 பில்லியன் டாலர் அளவில் இறக்குமதி செய்யப்பட்டு நம் அந்நிய செலாவணியை நசுக்கிக் கொண்டிருக்கின்றன. இன்னும் பத்து ஆண்டுகளில் இறக்குமதி செய்யப்படும் உணவு வகைகள் இரட்டிப்பாகி நம்மை கபளீகரம் செய்யும், இதற்கான திட்டத்தை அந்நிய சுறாமீன்கள் தீட்டியுள்ளன.

சில வருடங்களுக்கு முன்பு இத்தகைய உணவுகளை பெரும் பணக்காரர்கள் மட்டுமே உண்டு மகிழந்தனர். இன்று ஒரு புதிய பணக்கார வர்க்கம் உதயமாகி அமெரிக்க, பிரிட்டன் நாட்டிலுள்ளவர்கள் உண்பதை உண்ண வேண்டுமென்ற மோகத்தில் ஆழ்ந்துள்ளது.

விளம்பரங்களால் எவ்வளவு விளைவிக்குமென்பது நிறைய உதாரணங்களை நாம் தரலாம். கிவிப் பழத்தைச் சாப்பிட்டால் டெங்குக் காய்ச்சல் வராதென்று விளம்பரப்படுத்தப்பட்டு ஆது கிலோ ரூ.200 க்கு விற்கப்படுகிறது. மேலும் நம் நாட்டில் பூச்சுக் கொல்லி மருந்துகள் அதிகமாக பயன்படுத்தப்படுவதால் இங்கு விளையும் பழங்கள், காய்கறிகள் உடலுக்கு கேடு, மேல் நாட்டுப் பொருட்கள் விஷமற்றவையென ஒரு விஷமப் பிரசாரம் மேற்கொள்ளப்பட்டு அதை நம் மக்கள் நம்பத் தொடங்கிவிட்டனர். இறக்குமதி செய்யப்டும் உணவுப் பொருட்கள் விஷமற்றவையென சர்டிபிகேட் கிடையாது. அதற்கு ஆதாரமும் கிடையாது. கழிவு செய்யப்பட்ட பொருட்களை இங்கு அனுப்பினால் கூட ஆச்சரியமில்லை. உதாரணமாக மேல் நாட்டில் தடை செய்யப்பட்ட மருந்துகள் இந்தியாவில் நன்கு விற்பனை செய்யப்படுகின்றன. இதற்கு யார் காரணம்? நாம் யோசித்துப் பார்க்க வேண்டும்.

இன்று எல்லாரும் தெரிந்துகொள்ள வேண்டியதென்னவென்றால் உடம்புக்கு கேடு விளைவிக்கும் பாமாயிலில் தயார் செய்யப்படும் பண்டங்கள் தவிர்க்கப்பட வேண்டும். ரொட்டிக் கடையில் வாங்கப்படும் கேக், பட்டர், பிஸ் கட், கையேந்தி பவனில் விற்பனையாகும் போண்டா, வடை, பஜ்ஜி, தோசை போன்றவை பாமாயிலில் செய்யப் பட்டவை. புரிந்துகொள்ளுங்கள்.

பாதாம்பருப்பு, பிஸ்தாப் பருப்பு, உலர்ந்த திராட்சை மற்றும் பல கொட்டைப் பருப்புகள் அத்திப் பழம் போன் றவை உடலுக்கு நல்லது செய்பவை. இவைகளில் இங்கு விளையக் கூடியவைகளை நாம் ஏன் சாப்பிடக் கூடாது? வெளிநாட்டில் விளைந்தால் ஆரோக்கியத்தைக் கொடுக்கும், உள்நாட்டுச் சரக்கு நஞ்சானதென்ற எண்ணம் நம் மைவிட்டு அகல வேண்டும்.

## திருக்குறள்

அதிகாரம் - மருந்து

மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்

வளிமுதலா எண்ணிய மூன்று

பொருள்கோள் : -

நுலோர் வளி முதலா எண்ணிய மூன்று / மிகினும் குறையினும் நோய் செய்யும்.

தெளிவுரை : -

மருத்துவ நூலோர் வாதம் முதலாகச் சொல்லப்பட்ட மூன்றும் (வாதம், பித்தம், சிலேட்டுமம்) உடம்பிற்கு ஒத்த அளவிலன்றி ஒன்றையொன்று மிகினும் குறையினும் நோயை உண்டாக்கும்.

மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந்திய

தற்றது போற்றி யுணின்

பொருள்கோள் : -

அருந்தியது அற்ற போற்றி உணின் / யாக்கைக்கு மருந்து என வேண்டாவாம்.

தெளிவுரை : -

முன்பு உண்ட உணவு செரித்ததை அறிந்து அடுத்தவேளை உணவு உண்பானாயின், அவன் உடலுக்கு மருந்து என்பதே வேண்டுவதில்லை.

அற்றால் அளவறிந் துண்க அஃதுடம்பு

பெற்றான் நெடிதுய்க்கும் ஆறு.

பொருள்கோள் : -

அற்றால் அளவு அறிந்து உண்க / உடம்பு பெற்றான் நெடிது உய்க்கும் ஆறு அஃது.

தெளிவுரை : -

முன்பு உண்ட உணவு செரிந்துவிட்டபின் மறுவேளை உணவினை அளவு அறிந்து உண்ண வேண்டும். பெறுதற் கரிய மனித உடம்பு பெற்றவன் அதனை நெடுங்காலம் பேணிக்காத்தற்குரிய வழி அதுவேயாகும்.

மாறுபா டில்லாத உண்டி மறுத்துண்ணின்

ஊறுபா டில்லை உயிர்க்கு

பொருள்கோள் : -

மாறுபாடு இல்லாத உண்டி மறுத்து உண்ணின் / உயிர்க்கு ஊறுபாடு இல்லை.

தெளிவுரை : -

உடல்நிலைக்கும் காலநிலைக்கும் மாறுபடாத உணவை, உள்ளத்தின் ஆசையை மறுத்து ஒருவன் உண்பானாயின், அவன் உயிர்க்கு எவ்வித துன்பமும் உண்டாதல் இல்லை.

இழிவறிந் துண்பான்கண் இன்பம்போல் நிற்கும்

கழிபே ரிரையான்கண் நோய்.

பொருள்கோள் : -

இழிவு அறிந்து உண்பான்கண் இன்பம்போல் / கழிபேர் இரையான்கண் நோய் நிற்கும்.

தெளிவுரை : -

## ஆறாம் திணை

தொழில்நுட்பங்கள் உச்சத்தில் கோலோச்சும் காலம் இது. வரவேற்கப்பட வேண்டிய பல வசதிகளை இவை தந்தாலும் நம்மை அறியாமல் நம் உயிரையே உறிஞ்சும் ஆபத்தையும் அதே தொழில்நுட்பங்கள்தாம் தருகின்றன.

ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழகப் பேராசிரியர் ரூசல் ஃபாஸ்டர் சமீபத்தில் சொன்ன வார்த்தைகள் அதை உணரச் செய்யும் 'நான்கு மில்லியன் வருட மரபை மதிக்காத திமிர் உள்ள ஒரே உயிரினம் மனித இனம்தான்!' – அவரது ஆய்வு முடிவை இந்த ஒற்றை வரியில் கூறிவிட்டார்.

இரவில் சரியாகத் தூங்காமல் இருப்பவருக்கும் வேலை நிமித்தமாக இரவில் பணிபுரியும் ஊழியருக்கும் சாதாரண வயிற்று உபாதை முதல் மார்பகப் புற்றுநோய் வரை உருவாகும் ஆபத்துகளை, தன் ஆய்வில் விவரித்திருக்கிறார். கூடவே குறைந்த ஆற்றலை எடுத்துக்கொண்டு ஒளியை உமிழும் எல்.இ.டி விளக்கு உள்ள ஸ்மார்ட் போன், டேப்லெட் வகையறாக்கள், தன் ஒளிக் கற்றையில் அதிகபட்ச நீல ஒளியைத் தந்து இரவில் நெடுநேரம் பயன்படுத்துபவர்களுக்கு ஆபத்து விளைவிக்கின்றன என்கிறார். போர்வைக்குள் ஒளிந்துகொண்டு ஸ்மார்ட் போனில் நடுநசி தாண்டி சாட் செய்தால், காதல் வருமா தெரியாது, ஆனால் கேன்சர் வரக்கூடும்.

பல நேரங்களில் இந்தத் தொழில்நுட்பங்கள் நம் பண்டைய மரபின் நீட்சியை ஓரங்கட்டிவிட்டு ஒரு நாளில் அறவே மறந்திடச் செய்வதும்கூட வேதனையான விஷயம்தான்.

# மதிப்பீட்டுச் செயல்பாடுகள்

## அடைவு

**மாறிவரும் உணவுப்பழக்கங்கள் பல்வேறு நோய்களுக்குக் காரணமாகின்றன என்பதை உணர்ந்து விழிப் புணர்வுக் கட்டுரை எழுதுகிறார்கள்.**

### ஒரு மதிப்பெண்

1. திருமூலரின் கூற்று எது?

அ) உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேன் ஆ) மிகினும் குறையினும் நோய்

இ) மீதூண் விடும்போல் செய்யும் ஈ) அறம்றால் அளவிறிந்து உண்து.

2. மீதூண் விரும்பேல் என்பதன் பொருள்

அ) அளவோடு உண்ண வேண்டும் ஆ) சுவையான உணவை விரும்ப வேண்டும்

இ) உணவை விரும்பக்கூடாது ஈ) நல்ல உணவை விரும்ப வேண்டும்.

3. பசியின் கொடுமையினைப் பசிப்பிணி எனக்குறிப்பிடும் நூல்

அ) கம்பராமாயணம் ஆ) மணிமேகலை இ) சிலப்பதிகாரம் ஈ) சீவகசிந்தாமணி

### மூன்று மதிப்பெண்

5. உணவுத் தொடர்பான மூன்று பழமொழிகளை எழுதிச் சிறு விளக்கம் எழுதுங்கள்.

6. " மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின் " இக்குறளின் விளக்கவுரை எழுதுங்கள்.

7. ஃ பாஸ்புட் என்னும் இன்றைய உணவு நாகரிகத்தால் நாளைய தலைமுறைகளின் உடல்நலம்- தீமைகளைப் பட்டியலிடுங்கள்.

### ஐந்து மதிப்பெண்

8 ஜங்க் புட்- கலாச்சாரம்- பத்திரிகைச் செய்தி ஒன்றைத் தயார் செய்யுங்கள்.

9. உணவே மருந்து தொலைக்காட்சியில் இயற்கை உணவினைக் குறித்துத் தினமும் வழிகாட்டும் மருத்துவரைப் பாராட்டி நிகழ்ச்சி தொடர்ந்து ஒலிபரப்பிடக் கடிதம் ஒன்றை எழுதுங்கள்,

### எட்டு மதிப்பெண்

10. பல்வேறு நோய்களும் முறையற்ற உணவுப்பழக்கங்களால் வருவதே உடற்பயிற்சி இன்மையால் வருவதே- ஏதேனும் ஒரு தலைப்பில் விவாதம் புரிய குறிப்புகள் தயார் செய்யுங்கள்.

11. என்றும் நலமுடன் வாழ- உணவு, உடற்பயிற்சி, ஒழுக்கம்- என்னும் தலைப்புகளில் ஆண்டுமலரில் வெளி யிடக் கட்டுரை ஒன்றைத் தயார் செய்யுங்கள்.

## அடைவு

**விளையாட்டு, உடற்பயிற்சி, யோகா போன்றவற்றில் ஈடுபடுகிறாற்கள்.**

1. பின்வரும் விளையாட்டுகளில் நாட்டுப்புற விளையாட்டு

அ) கூடைப்பந்து ஆ) கபடி இ) மட்டைப்பந்து ஈ) களரி

2) இந்தியாவின் தேசிய விளையாட்டுத் தினம்

அ) ஆகஸ்ட் 29 ஆ) ஜனவரி 16 இ) செப்டம்பர் 28 ஈ) மார்ச் 27

3. எந்த விளையாட்டு வீரரின் பிறந்த நாள் தேசிய விளையாட்டு தினமாகக் கொண்டாடப்படுகிறது.

அ) தியான்சந்த் ஆ) சச்சின் டெண்டுல்கர் இ) விஸ்வநாதன் ஆனந்த் ஈ) தன்ராஜ் பிள்ளை

4. வாய்விட்டு சிரித்தால் ---------விட்டுப் போகும்.

## மூன்று மதிப்பெண்கள்

5. ஏதேனும் நாட்டுப்புற விளையாட்டை விளையாடும் முறையினை விளக்கக் குறிப்பாக எழுதுங்கள்.

6. உங்கள் பள்ளியில் நடைபெற இருக்கும் பளுதூக்கும் போட்டி சாதனையாளரை நேர்காணல் நடத்திட வினாக்கள் தயார் செய்யுங்கள்.

## ஐந்து மதிப்பெண் வினாக்கள்

7. " காலை மாலை உலவிதினம்
காற்று வாங்கி வருவோரின்
காலைத் தொட்டுக் கும்பிட்டுக்
காலன் ஓடிப் போவானே " எனும் கவிமணியின் கவிதைப் பொருள் உணர்த்துவதை இன்றைய வாழ்வியலோடு ஒப்பிட்டு எழுதுங்கள்.

8. "ஓடி விளையாடு பாப்பா- நீ
ஓய்ந்திருக்கலாகாது பாப்பா" என்பதைப் போன்று இலக்கியங்கள் கூறும் ஏதேனும் இரண்டு விளையாட்டுகளை சான்றுகளுடன் குறிப்பெழுதுங்கள்.

## எட்டு மதிப்பெண்

9. யோகாசனம் உடம்பையும் மனத்தையும் ஆரோக்கியமாக வைக்கிறது. அறிவியல் மலரில் வெளியிட கட்டுரை ஒன்றை தயார் செய்யுங்கள்.

10. " சாலையிலே தனிவழியே போவோருக்குச்
சரியான உடல்வண்ணம் வேண்டும்- நீண்ட
காலமிங்கே உயிர்வாழும் எண்ணம் மிக்கோர்
கட்டாயம் உடற்பயிற்சி செய்தல் வேண்டும் "
கடலூர் மணிமாறனின் இக்கவிதையினை நயம்பாராட்டி எழுதுங்கள்

5

# சமூகச் சீர்திருத்தம்

## அலகு அறிமுகம்

எல்லோரும் ஓர்குலம் எல்லோரும் ஓர் இனம் என்ற எண்ணத்தைக் காலங்காலமாக மக்களிடையே வளர்க்கின்றனர் சான்றோர்கள். வளரும் தலைமுறைகளிலும் வேறுபாடு பார்க்காத விழிப்புணர்வை ஏற்படுத்தக் கல்வியால் முடியும் என்று நம்புகிறோம். ஆரம்ப வகுப்பு முதலே ஒற்றுமைக்காகப் பாடுபட்டப் பெரியோர்களையும் வேற்றுமை களைந்திட நடத்திய போராட்டங்களையும் கற்பிக்கின்றோம். சமூகச் சீர்திருத்தம் என்ற இவ்வலகும் அந்த நோக்கத்துடனே அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வலகில் திரு. நாராயணகுரு, அய்யங்காளி, காந்திஜி, கைலாஷ் சத்தியார்த்தி போன்ற பெரியவர்களின் அரும் சாதனைகள் இடம் பெற்றுள்ளன. உயர்வு, தாழ்வு என்று பேதம் பார்ப்பதால் ஏற்படும் அவலங்களையும் அடிமைத்தனத்தையும், அநீதிகளையும் மாணவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். மேலும் இளைஞர்களான இம்மாணக்கரே நாளைய தலைமுறைகளுக்கு வழிகாட்டியாகத் திகழவும் வேண்டும். குழந்தைத் தொழிலாளர்களாகவும், குலத்தில் தாழ்ந்தவர்களாகவும், அடிமைத்தனத்துக்கு உட்படும் இளம் சிறார்கள் வளரும்போது இச்சமூகத்தைப் பார்க்கும் பார்வை மாறுபடுகிறது. விட்டுக் கொடுக்கும் மனம் அற்றவர்களாக, சமூக அக்கறை இல்லாதவர்களாக, சமூகத்திற்குத் தீங்கு விளைவிப்பவர்களாகக் கூட அவர்கள் மாறிவிட வழியுண்டு. இந்நிலை மாற வேண்டும். அன்பும், அறமும் பெருக வேண்டும். சமூக உணர்வோடு எல்லோரும் பேதம் மறந்து வாழ வேண்டும். இவ்வகை உணர்வு மாணவர்கள் உள்ளத்தில் ஊன்ற அதற்காகவே இவ்வலகில் சுவடுகள், புத்துணர்வு, எழுச்சி என்ற பிரிவுகள் இணைக்கப்பட்டுள்ளன. கட்டுரைகள், கவிதைகள், வாழ்க்கை வரலாறு உரையாடல் போன்ற பல்வேறு வடிவங்களாகச் சமூகச் சீர்திருத்தச் சிந்தனைகள் வெளிப்பட்டுள்ளதை விளக்கமாக உணர்த்தப்பட்டுள்ளன.

நாடு, இனம், மொழி என்று பேதம் பார்க்காமல் இன்ன தொழிலை இவர்கள்தான் செய்ய வேண்டும் என்ற எண்ணம் கண்டிப்பாக களையப்பட வேண்டிய ஒன்று. யாரும் எத்தொழிலையும் செய்யலாம். குலத்தொழில், பரம்பரைத் தொழில் என்று கல்வியை விட்டு விலக்கும் அடிமைத்தனம் விலக வேண்டும். சமூகத்தில் உயர்வு, தாழ்வு என்று ஒன்றில்லை, பிறப்பால், இறப்பால், உணர்வால் அனைவரும் ஒன்றே என்ற எண்ணத்தை மாணவப்பருவத்திலிருந்தே வளர்த்திட வேண்டும்.

அன்றிலிருந்து இன்று வரை மனிதன் பேதம் பார்த்ததின் மூலம் பிரச்சினைகளை உருவாக்கியுள்ளான். மக்கள் முன்னேற்றத்திற்கும், வாழ்க்கைத் தடையாக இருந்த இவ்வகை சட்டதிட்டங்களை எதிர்த்துப் பல தலைவர்கள் போராடியுள்ளனர். சுவர்களைத் குறித்த செய்திகளும் இவ்வலகில் கூறப்பட்டுள்ளன.

ஆசிரியர் இவ்வலகின் அடிப்படை நோக்கத்தைப் புரிந்து கொண்டு, மாணவ மனங்களில் அன்பு, கருணை, பாசம், நேசம், விட்டுக் கொடுத்தல், மதித்தல், போற்றுதல் போன்ற நன்மதிப்புகளை உருவாக்க வேண்டும். விழிப்புணர்ச்சியும், பகுத்தறிவுச் சிந்தனையும் ஏற்படுத்த வேண்டும். அதற்கு இவ்வலகு துணை நிற்கும்.

## கற்றல் அடைவுகள்

- கவிதை, கதை போன்ற படைப்பிலக்கியங்களில் காட்டப்படும் ஒடுக்கப்பட்டவர்களின் அவலநிலையை விவாதிக்கிறார்கள். விமர்சனக் கட்டுரை எழுதுகிறார்கள்.
- பாடப்பகுதி குறிப்பிடும் வாழ்க்கை விழுமியங்களைப் பாராட்டியும் மேம்படுத்தியும் குறிப்புகள் எழுதுகிறார்கள்.
- மறுமலர்ச்சி நாயகர்கள் பற்றிய செய்திகளைச் சேகரிக்கிறார்கள். வரலாற்றுக்குறிப்புகள் எழுதுகிறார்கள். நடிக்கிறார்கள்.
- பாடப்பகுதி சுட்டிக்காட்டும் நற்கருத்துகளை உள்வாங்குகிறார்கள். அதற்கேற்பச் செயல்படுகிறார்ககள்.
- சமூக சீர்திருத்தவாதிகளைக் குறித்துக் கலந்துரையாடி, அவர்களின் செயல்களைத் தொகுத்து வெளியிடுகின்றனர்.
- சமூக சீர்த்திருத்தத்தின் தேவையைக் கட்டுரையாகவும், சொற்பொழிவாகவும் வெளியிடுகின்றனர்.
- கேரள சமூக ஆர்வலர்கள் குறித்தான செய்திகளைச் சேகரித்து விளக்கத் தொகுப்பு உருவாக்குகின்றனர்.
- மறுமலர்ச்சி நாயகர்களைப் பற்றிய வாழ்க்கை வரலாறுகள் தயார் செய்கிறார்கள்.

## மதிப்புகளும் மனப்பாங்கும்

- ஏற்றத்தாழ்வுகளால் பாதிக்கப்பட்டோருக்காகப் பாடுப்பட்டோர்களை எண்ணிப் பெருமை கொள்கிறார்கள்.
- சமூகத்தில் சீர்திருத்தங்கள் கண்டிப்பாகத் தேவை என எண்ணிச் செயல்படுகிறார்கள்.
- ஒடுக்கப்பட்டவர்களுக்கு உதவிடும் மனப்பான்மை பெறுகின்றார்கள்.
- தாமும் சமூகத்தில் அங்கம்; அனைவரையும் சமமாக கருதவேண்டும் என எண்ணம் கொள்கின்றனர்.
- மறுமலர்ச்சி நாயகர்களைப் போன்று தாமும் சமூகத்தில் சீர்திருத்தம் செய்திட வேண்டும் என மனப் பான்மை அடைகின்றனர்.

## பார்வை நூல்கள்

வரலாற்று கட்டுரை நூல்கள்

இணையதளச் செய்திகள்

கேரளதேச வரலாறு

பாரதிதாசன் கவிதைகள்

கூகை நாவல்

கவிமணிப் பாடல்கள்

சுரதா கவிதைகள்

திரு. நாராயணகுரு வாழ்க்கை வரலாறு

அலகுச்சட்டம் (சமூக சீர்திருத்தம்) அலகு 5

| கருத்துகள்/திறன்கள் | கற்றல் செயல்பாடுகள்/ மதிப்பீடு | கற்றல் அடைவுகள் |
|---|---|---|
| இலக்கியங்களில் சமூக ஏற்றத்தாழ்வுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. | **கலந்துரையாடல்**<br>கைலாஷ் சத்தியார்த்தி, மாலாலா இவர்கள் இருவருக்கும் சமாதானத்திற்கான நோபல்பரிசு கிடைத்ததைக் குறித்துக் கலந்துரையாடல் மக்களின் நலனுக்காகப் பாடுபட்டோர்களின் பெயர்களைச் செயல்களைப் பேசுதல்.<br>**பட்டியல் இடுதல்**<br>சமூக நலனுக்காக நடந்த பல போராட்டங்களையும் அப்போராட்டங்களில் ஈடுபட்ட பெரியோர்கள், தலைவர்கள் போராட்டங்கள் குரித்துத் தமக்குள் விவாதித்துப் பட்டியலாக தொகுத்து எழுதிடச் சொல்ல வேண்டும் (குழுச் செயல்பாடு). போராட்டம் தேவைப்பட்டதின் காரணங்களை ஆசிரியர் சில எடுத்துக்காட்டுகளுடன் விளக்க வேண்டும்.<br>**செய்திகளைத் திரட்டுதல்**<br>பத்திரிகைகளில் வெளிவந்துள்ள பல்வேறு தீண்டாமை, அடக்குமுறை, ஒடுக்கப்பட்டோர் போன்ற செய்திகளைத் திரட்டுகின்றனர். மேற்கண்ட இரண்டு செயல்பாடுகளுக்கும் செய்திகளின் விரிவு, சரியான வெளிப்படுத்தல், முயற்சி, கருத்துத்தொடர்பு போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு மதிப்பெண் வழங்க வேண்டும்.<br>**தொகுத்து எழுதுதல்**<br>சீர்திருத்தங்களுக்காகக் கேரளத்தில் உருவான பல்வேறு இயக்கங்கள் குறிப்பாகக் கேரளத்தில் அதற்காகப் போராடிய தலைவர்கள், போராட்டத்திற்கான காரணம் போன்றவற்றைக் குறித்தான செய்திகளைத் திரட்டி குறிப்பேட்டில் தொகுத்து எழுதுகின்றனர். இச்செயல்பாடுகள் குழுக்களாகச் செய்த பின் குழுக்கள் தமக்குள் செய்திகளைப் பரிமாறிக் கொண்டு அனைத்து செய்திகளையும் இணைத்துக் தொகுத்திட ஆசிரியர் உதவ வேண்டும். | சமூகச் சீர்திருத்தத்தைப் பற்றி விவாதிக்கின்றனர். அதில் ஈடுபட்ட பெரியோர்களின் செயல்களைத் தொகுத்து வெளியிடுகின்றனர். |

<table>
<tr><th>கருத்துகள்/திறன்கள்</th><th>கற்றல் செயல்பாடுகள்/ மதிப்பீடு</th><th>கற்றல் அடைவுகள்</th></tr>
<tr>
<td></td>
<td>
விமர்சனக் கட்டுரை எழுதுதல்
சமுதாயத்தில் சாதியும், மதமும் என்ற கட்டுரையை வாசித்தும் ஆசிரியருடன் விவாதித்தும் பத்திரிகைச் செய்திகளின் அடிப்படையிலும் சாதி, சமயத்தால் ஏற்படும் பாதிப்புகளை உள்வாங்கி, விமர்சனக் கட்டுரை எழுதுகிறான். (தனிநபர் செயல்பாடு)
மதிப்பீட்டுக் குறிப்புகள்
கட்டுரைத் தலைப்பு, மொழிநடை, கருத்துத் தொடர்பு, செய்திகளின் விரிவு
திறனாய்வுக் கட்டுரை எழுதுதல்
‘இருட்டறையில் உள்ளதடா என்ற பாரதிதாசனின் கவிதையை வாசித்தும், ஆசிரியருடன் கலந்துரையாடியும் மாணவர்கள் சமூக ஏற்றத்தாழ்வுகள் எதனால் உருவாகின்றது என்பதை க்குறித்து உரையாடுகின்றனர். இன்னும் வர வேண்டிய மாற்றங்களையும் இன்றளவும் ஏற்றுக்கொள்ளாமலிருக்கும் பகுத்தறிவுச் சிந்தனைகளையும் விவாதிக்கின்றனர்.
இன்னும் சாதி என்ற கட்டிலிருந்து சமூகம் மீளவில்லை என்ற கருத்தைக் கருவாய் கொண்டு திறனாய்வுக் கட்டுரை எழுதுகின்றனர்.
மதிப்பீட்டுக் குறிப்புகள்
தலைப்பைத் தேர்ந்தெடுத்தல், தகவல்கள் சேகரித்தல், ஆய்வு நோக்கில் எழுதுதல், முடிவுகாணல்
சொற்பொழிவு தயார் செய்தல்
கவிமணி காணும் கற்பனை உலகு நனவாக நம் மனதில் ஏற்பட வேண்டிய விழிப்புணர்வைக் குறிப்புகளாகத் தயார் செய்கின்றனர். அவற்றைச் சிறு கட்டுரையாகக் குறிப்பேட்டில் எழுதிவரச் சொல்ல வேண்டும். இக்குறிப்புகளைப் பயன்படுத்திச் சமூகச் சீர்கேடுகளை எடுத்துரைத்து நல்வழிப்படும் விழிப்புணர்வு சொற்பொழிவு ஒன்றை மாணவர்கள் தயார் செய்திடக் கூற வேண்டும்.
உயர்வு, தாழ்வு என்ற நிலைமாறி அனைவரும் ஒன்று என்ற
</td>
<td>
சமூகச் சீர்திருத்தத்தின் தேவையைத் தமக்குக் கிடைத்த செய்திகள், அனுபவங்கள் வாயிலாக விமர்சனக் கட்டுரையாக வெளியிடுகின்றனர்.
ஒடுக்கப்பட்டவர்களின் அவலநிலையை விமர்சித்தும் ஆய்வு செய்தும் கட்டுரை எழுதுகின்றனர்.
</td>
</tr>
</table>

| கருத்துகள்/திறன்கள் | கற்றல் செயல்பாடுகள்/ மதிப்பீடு | கற்றல் அடைவுகள் |
|---|---|---|
| சமூக விழிப்புணர்வுடன் தொடர்பான இலக்கியங்கள் காலத்திற்கேற்ப உருவாகியுள்ளன. | மையக்கருத்தை வலியுறுத்தும்படிச் சொற்பொழிவு அமைய வேண்டும். பேசச் செய்திட வேண்டும், உரை நிகழ்த்திட வாய்ப்பளிக்க வேண்டும்.<br>**மதிப்பீட்டுக் குறிப்புகள்**<br>வடிவம், மொழிநடை, கருத்து, பேசக்கற்றல், விழிப்புணர்வு<br>**வரலாற்றுக் குறிப்புகள் உருவாக்குதல்**<br>புத்துணர்வு என்ற அலகுப் பிரிவுடன் தொடர்புபடுத்தி அமைந்துள்ள (அய்யன்காளியும் காந்திஜியும்) என்ற பாடப்பகுதி (காந்தியுடன் ஒரு தீண்டாமை எதிர்ப்புப் போராளி) ஐக் குறித்து வகுப்பில் கலந்துரையாட வேண்டும். அய்யன்காளியுடன் சமூக உணர்வு, அக்கறை, போராட்டம், சமூக நலன் போன்றவைகள் கலந்துரையாடலில் இடம்பெற வேண்டும். கேரள சமூக இயக்கத் தலைவர்களின் படங்களையும், அதனுடன் தொடர்புடைய செய்திகளையும் தொகுத்துச் செய்தித் தொகுப்பை (ஆல்பம்) உருவாக்கிடச் செய்தல் வேண்டும். இது அவர்களின் படைப்புத் தொகுப்பாக எப்போதும் பயன்படும்படித் தரமாக உருவாக்கச் செய்ய வேண்டும். தொடர் மதிப்பிட்டிற்காக இத்தொகுப்பைப் பயன்படுத்தலாம்.<br>**மதிப்பீட்டுக் குறிப்புகள்**<br>ஒழுங்கு, தெளிவான குறிப்புகள், பயனுள்ள செய்திகள், அரிதான புகைப்படங்கள், அமைப்பு<br>**கவிதை நயம் பாராட்டல்**<br>வேரோடு சாய்ப்போம் என்ற சுரதாவின் கவிதையை எதை வேரோடு சாய்க்க வேண்டும் என்ற வினாவுடன் கலந்துரையாடலைத் துவங்கலாம். உவமைக் கவிஞர் என்று போற்றப்பட்ட சுரதா அவர்களின் கவிதைத் திறனை மாணவர்கள் உணரும் பொருட்டு நயம் பாராட்டல் செயல்பாடு அளிக்கலாம்.<br>அறிவியல் தமிழ் வளப்பகுதியில் அளித்துள்ள முக்கூடற்பள்ளு நயம் | சமூக ஏற்றத்தாழ்வுகள் குறித்து விழிப்புணர்வு சொற்பொழிவு ஆற்றுகின்றனர்.<br><br>கேரளச் சமூகச் சீர்திருத்த வாதிகளைக் குறித்தான படங்கள், தகவல்கள் சேகரித்து விளக்கத் தொகுப்பு உருவாக்கு கிறார்கள். |

| கருத்துகள்/திறன்கள் | கற்றல் செயல்பாடுகள்/ மதிப்பீடு | கற்றல் அடைவுகள் |
|---|---|---|
| வரலாற்றுச் செய்திகளை வெளிப்படுத்துவதில் இலக்கியங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. | பாராட்டலை ஆசிரியர் பயன்படுத்தலாம்.<br>மண் முட்டை, வேரொடு சாய்ப்போம் போன்ற உவமைகள் சொல் நயத்தில் வெளிப்படுத்த ஆசிரியர் கவனம் செலுத்த வேண்டும்.<br>**மதிப்பீட்டுக் குறிப்புகள்**<br>கருத்து, மொழிநடை, வடிவம், பொருள் புரிதல்<br>**வாழ்க்கை வரலாற்றுக் கட்டுரைகள் எழுதுதல்**<br>அய்யன்காளியுடன் காந்திஜி என்ற பாடப்பகுதியில் அளித்துள்ள வரலாற்று குறிப்புகள் எழுதுதல் என்ற செயல்பாட்டின் தொடர்ச்சியாக, குறிப்புகள் பயன்படுத்தித் தனி ஒருவரின் வாழ்க்கை குறித்து வரலாற்று கட்டுரை எழுதிட பயிற்சி அளிக்க வேண்டும். திரு. நாராயண குருவின் பணிகளைத் தொகுத்து எழுதியும், பாடப்பகுதியில் அமைந்துள்ள அவரைக் குறித்தான உரைநடைப்பகுதியை வாசித்தும் வாழ்க்கை வரலாற்றுக் கட்டுரை எழுதிடச் செய்ய வேண்டும். பிறப்பு, வளர்ப்பு, பணிகள் போராட்டங்கள், இறப்பு போன்றவை கட்டுரையில் இடம் பெற வேண்டும். இதைப் போன்று திரு கைலாஷ் சத்தியார்த்தியின் வாழ்க்கைக் கட்டுரை தொடர் செயல்பாடாக வழங்க வேண்டும்.<br>**மதிப்பீட்டுக் குறிப்புகள்**<br>கட்டுரை வடிவம், மொழிநடை, கருத்து, ஒழுக்கு<br>**பேச்சுப் போட்டி நடத்துதல்**<br>சமூகச் சீர்திருத்தம் என்ற அலகில் அமைந்துள்ள கைலாஷ் சத்தியார்த்தியுடன் 84 ஆயிரம் குழந்தைகள் என்ற கட்டுரையை வாசித்தும் கலந்துரையாடியும் குழந்தைத் தொழிலாளர்கள் பற்றி விவாதிக்கின்றனர். மேலும், இவ்வலகினுள் அமைந்துள்ள பாடப்பகுதிகளின் துணைகொண்டு பள்ளிக் கலை மன்றத்தில் | கவிதைகள் வெளிப்பட்ட சூழலைப்புரிந்து நயம் பாராட்டுகின்றனர்.<br><br>மறுமலர்ச்சி நாயகர்களைப் பற்றிய செய்திகள் சேகரிக் கிறார்கள், கட்டுரை எழுது கிறார்கள். |

| கருத்துகள்/திறன்கள் | கற்றல் செயல்பாடுகள்/ மதிப்பீடு | கற்றல் அடைவுகள் |
| --- | --- | --- |
| | ஒரு பேச்சுப் போட்டியை நடத்துகின்றனர். பேச்சுப் போட்டி சிறப்பான முறையில் நடத்திட ஆசிரியர் உதவ வேண்டும்.<br>சிறந்த பேச்சாளர்களைக் கொண்ட ஒரு நடுவர் குழு அமைத்து மதிப்பீடு செய்து முதல் இடம்பெறும் மாணவனைக் கலைவிழாக்களில் பங்கு பெறச் செய்யலாம்.<br>**மதிப்பீட்டுக்குறிப்புகள்**<br>பேச்சாற்றல், சான்றுகள், விழிப்புணர்வு, சமூகச் சூழல், கருத்து வெளிப்படுத்தல், மொழி<br>பேச்சுப் போட்டி தொடர் மதிப்பீட்டில் தனித்திறனை வெளிப்படுத்தும் ஒன்றாகக் கருதி மதிப்பிட வேண்டும். வகுப்பில் அனைவரும் போட்டியில் கலந்து கொள்ளத் தேவையில்லை. இச்செயல்பாடு வகுப்புச் செயல்பாடாக அளிக்காமல் ஆர்முடையவர்களை ஊக்கப்படுத்தும் விதமாகப் போட்டியை நடத்திப் பரிசுகள் வழங்கலாம். | பாடப்பகுதி சுட்டிக்காட்டும் நற்கருத்துகளை உள்வாங்கி செயல்படுகிறார்கள். |

## அலகுப்பகுப்பாய்வு

**நுழைவுச் செயல்பாடு (குழுக்கலந்துரையாடல்)**

கைலாஷ் சத்தியார்த்திக்குக் கிடைத்த சமாதானத்திற்கான நோபல் பரிசு என்ற செய்தி அடங்கிய பத்திரிகையை வகுப்பில் வாசிக்கச் செய்து சமூகச் சீர்திருத்தம் என்ற கருத்துக்குள் நுழையலாம். சமூகத்தில் உள்ள பல்வேறு ஏற்றத்தாழ்வுகள், அதற்காக நடந்துள்ள போராட்டங்கள், உருவான இயக்கங்கள் போன்றவை இவ்வலகினுள் அமைந்துள்ளதால் மேலோட்டமாகக் கலந்துரையாடல் துவங்கலாம்.



### பட்டியல் இடுதல்

மாணவர்களின் முன்னறிவுச் சோதனையாக இச்செயல்பாட்டினை அளிக்கலாம். மாணவர்கள் தங்கள் அனுபவங்களில் அறிந்து கொண்ட சமூக சீர்திருத்தவாதிகள், அவர்கள் நடத்திய போராட்டங்கள், காரணங்கள் போன்றவை இப்பட்டியலில் இடம் பெற வேண்டும். பட்டியலை வகுப்பில் வாசிக்க வைத்து, மேலும் இதுபோன்ற செய்திகளைத் திரட்டச் சொல்லலாம்.

**கவனிக்க...**

- கலந்துரையாடலில் மாணவர்கள் முன் வகுப்பில் கற்ற செய்திகளை வெளிக்கொணர வேண்டும்.
- அனைவரும் ஒன்று என்ற சிந்தனையுடன் உரையாடல் அமைய வேண்டும்.
- சாதி, பெயர்களைக் குறிப்பிடாமல் பேசக் கவனிக்க வேண்டும்.

### செய்திகளைத் திரட்டுதல்

பாடப்பகுதிக்குள் நுழையும் முன் பத்திரிகையில், இணைய தளத்தில், முன் வகுப்பு புத்தகங்களில், நூல்களில் பதிவாகியுள்ள தீண்டாமை, அடக்குமுறை ஒடுக்கப்பட்டோர் போன்ற செய்தி தொடர்பான தகவல்களைத் திரட்டச் செய்திட வேண்டும். விமர்சனங்கள் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகள் போன்றவற்றைத் திரட்டிப் பள்ளி நூலகத்தைப் பயன்படுத்தலாம்.

**துணைக்கருவிகள்**

- சமூகம் தொடர்பான இணையதளச் செய்திகள்
- பாடநூல் பதிவுகள்
- மொழிபெயர்ப்புகள் / வளப்பகுதிகள்

| கற்றல் அடைவுகள் | மதிப்புகள் / மனப்பாங்குகள் |
|---|---|
| ❖ சமூகச் சீர்திருத்தத்தைக் குறித்து விவாதிக்கின்றனர். அதில் ஈடுபட்ட பெரியோர்கள் செயல்கள் குறித்துக் குறிப்பெழுதுகின்றனர். | ↳ ஏற்றத்தாழ்வுகளால் பாதிக்கப்பட்டோருக்காகப் பாடுப்பட்டோர்களை எண்ணிப் பெருமை கொள்ளல். |

### திறனாய்வுக் கட்டுரை எழுதுதல்

‘இருட்டறையில் உள்ளதடா’ என்ற பாரதிதாசன் கவிதையை வாசித்தும், கூகை என்ற சோ. தர்மனின் நாவல் பகுதியை வாசித்தும் இவ்விலக்கியங்கள் சமூக அக்கறையுடன் படைக்கப்பட்டுள்ளதையும், இவ்வகை படைப்புகள் உருவாகக் காரணமான சூழலையும் புரிந்துகொண்டு அவ்வகை இலக்கியங்களை ஆய்வு செய்து

திறனாய்வுக் கட்டுரையாக வெளியிடுகிறான். ஆய்வுக்கட்டுரை என்பது ஆய்வு நோக்கில் அமைந்திருக்க வேண்டும். அதற்குக் கீழ்க்காணும் வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

### படிநிலைகள்

- தலைப்பைத் தேர்ந்தெடுத்தல்
- திட்டமிடல்
- தகவல்களைச் சேகரித்தல்
- தொகுத்தல்
- ஆய்வு செய்தல்
- முடிவு காணல்
- வெளியிடுதல்

போன்ற படிநிலைகளில் ஆய்வுக்கட்டுரை அமைய வேண்டும். ஒடுக்கப்பட்டோர்களின் அவலநிலை குறித்தான கட்டுரை என்பதால் தகவல்கள் சேகரித்தலுக்குப் பல உகந்த வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும். நேர்காணல், ஊடகங்கள், அனுபவங்கள்.... என தேடல் நடத்த வேண்டும்.

### துணைக்கருவிகள்

- இருட்டறையில் உள்ளதடா - கவிதை
- கூகை - நாவல்பகுதி
- வாழ்க்கைக் குறிப்புகள்
- தோள்சீலைப் போராட்டம்

## விமர்சனக் கட்டுரை எழுதுதல்

சமுதாயத்தில் சாதியும் மதமும் என்ற கட்டுரையை வாசித்துக் கலந்துரையாடுகின்றனர். சாதியால் ஏற்படும் பல்வேறு அவலங்களைத் தங்கள் அனுபவங்களாக, நிகழ்வுக் குறிப்பாக வெளிப்படுத்த ஆசிரியர் ஊக்கப்படுத்த வேண்டும். பாடப்பகுதியில் அமைந்தள்ளதைப் போன்று விமர்சனக் கட்டுரை எழுதிட உதவ வேண்டும்.

**கவனிக்க...**

- விழிப்புணர்வு நோக்கோடு கட்டுரை அமைய வேண்டும்.
- தனிப்பட்ட நபரையோ, சாதி, சமயங்களையோ நம்பிக்கைகளையோ, புண்படுத்தும்படி அமையாமல் கட்டுரை அமைக்க வேண்டும்.

### துணைக்கருவிகள்

- சமுதாயத்தில் சாதியும், மதமும் கட்டுரை
- முன் செயல்பாடுகளின் குறிப்புகள்
- சமத்துவம் தொடர்பான பாடல்கள்
- கம்பராமயணச் செய்யுள்

| கற்றல் அடைவுகள் | மதிப்புகள் / மனப்பாங்குகள் |
|---|---|
| ❖ சமூக சீர்திருத்தத்தின் தேவையைச் செய்திகள் அனுபவங்களின் வாயிலாக விமர்சனக் கட்டுரையாக வெளியிடுகின்றனர். | ↳ சமூகத்தில் சீர்திருத்தங்கள் கண்டிப்பாக தேவை என உணர்தல். |

## தொகுத்து எழுதுதல்

சீர்திருத்தங்களுக்காகக் கேரளத்தில் உருவான பல்வேறு இயக்கங்களை, போராட்டங்களை, காரணங்களை செய்தித் தொகுப்பாக எழுதிடச் செய்ய வேண்டும். முன் அனுபவங்களைக் கருத்திற் கொண்டு தெளிவான தொகுப்புகள் உருவாக்க வேண்டும். குழுக்களாக இச்செயல்பாட்டினைச் செய்து தொகுக்கலாம்.

| கற்றல் அடைவுகள் | மதிப்புகள் / மனப்பாங்குகள் |
| --- | --- |
| ❖ ஒடுக்கப்பட்டவர்களின் அவலநிலையை விமர்சித்தும் ஆய்வு செய்தும் திறனாய்வுக் கட்டுரை எழுதுகின்றனர். | ↳ ஒடுக்கப்பட்டவர்களுக்கு உதவிடும் மனப் பான்மை பெறுகின்றார்கள். |

## சொற்பொழிவு தயார் செய்தல்

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையின் விண்ணப்பம் என்ற கவிதையை வாசித்தும், நயம் பாராட்டியும் சமூக சீர்திருத்த விழிப்புணர்வு மாணவர்களின் மனதில் ஏற்படுத்த வேண்டும். உயர்வு தாழ்வு என்ற மையக்கருத்தை வெளிப்படுத்திடவும், கற்றல் அடைவுகள் மாணவனுக்குச் சென்றடைந் துள்ளதா என்பதை சோதித்தறியவும் இச்செயல் பாட்டைப் பயன்படுத்தலாம்.

**கவனிக்க...**

**சொற்பொழிவு தயார் செய்யும்முன்**

- குறிப்புகள் எடுத்துக்கொள்ள வேண்டும்.
- சான்றுகள் திரட்ட வேண்டும்.
- பாடப்பகுதிகள் நன்கு உட்கொள்ள வேண்டும்
- பேசும் முறையினை மாணவனுக்கு எடுத்துக் காட்டுகள் வழி அறிவுறுத்த வேண்டும்.

### துணைக்கருவிகள்

- விண்ணப்பம் கவிதை
- குறிப்புகள்
- முடியரசன் கவிதை
- சங்கேமுழங்கு கவிதை

| கற்றல் அடைவுகள் | மதிப்புகள் / மனப்பாங்குகள் |
| --- | --- |
| ❖ சமூக ஏற்றத்தாழ்வுகளைக் குறித்து விழிப் புணர்வு ஏற்படுத்தும் சொற்பொழிவு ஆற்றுகின்றனர். | ↳ தாமும் சமூகத்தில் ஓர் அங்கம் என்ற நிலையில் அனைவரையும் சமமாகக் கருத வேண்டுமென எண்ணம் கொள்ளுதல். |

## வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகள் எழுதுதல்

சமூகச் சீர்திருத்தம் தொடர்பான பல்வேறு தகவல்கள் செய்திகள், முன்வகுப்பு அனுபவங்கள், படங்கள் போன்றவற்றைத் தொடர் செயல்பாட்டின் செயல்களாகத் திரட்டிடச் செய்ய வேண்டும். இச் சேகிரிப்புகளை ஒழுங்குபடுத்தி விளக்கத் தொகுப்பு உருவாக்க வேண்டும். பல்வேறு சமூக சீர்திருத்தவாதிகள், அவர்களின் இயக்கங்கள், நடத்திய போராட்டங்கள், விளைவுகள், வாழ்க்கை குறிப்பில் உட்படுத்த வேண்டும்.

### துணைக்கருவிகள்

- பத்திரிகைச் செய்திகள்
- இணையதளச் செய்திகள்
- நூலகப் பயன்பாடு (வாழ்க்கை வரலாற்று நூல்கள்)
- பாடநூல் செய்திகள்
- வளப்பகுதிகள் போன்றவைகளைப் பயன்படுத்தி குறிப்புகள் தயாரிக்க வேண்டும். இக்குறிப்புகளும், விளக்கங்களும், அடுத்து வரும் வாழ்க்கை வரலாற்றுக் கட்டுரை எழுதிடப் பயன்படும்.

## வாழ்க்கை வரலாற்றுக் கட்டுரை எழுதுதல்

கேரளச் சமூகத்தில் சீர்திருத்தம் செய்தவர்களைக் குறித்தான குறிப்புகளும், கலந்துரையாடல்களும், செய்திகளும் ஒருங்கிணைத்து வாழ்க்கை வரலாற்றுக் கட்டுரை எழுதிடும் செயல்பாடு ஒன்றை அளிக்கலாம்.

**கவனிக்க...**

- திரு. நாராயணகுரு இன்று தெய்வநிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளார். அது அவருடைய மக்கள் நலன் கருதியே உழைப்பினாபே. இக்கருத்து கட்டுரையில் வெளிப்பட கவனம் செலுத்த வேண்டும்.
- சான்றுகளும், குறிப்புகளும், நம்பத்தகுந்த ஆதாரங்களில் இருந்து எடுத்தாள வேண்டும்.

திரு. நாராயண குரு வாழ்க்கை குறித்தான பாடப்பகுதியை வாசித்து, மேலும் தேடல்கள் நடத்தி வாழ்க்கை வரலாற்று கட்டுரை எழுதிட வேண்டும். ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்ற பரந்த மனப்பான்மையுடன் வாழ்ந்த மேதையின் வரலாற்றைக் கட்டுரையாக எழுதும் போது அதற்கானத் தேடல்கள் நடத்தவும், வாழ்க்கை முறை அறிந்து வரலாற்று நிகழ்வுகளை அறியவும் வழி ஏற்படும். மறுமலர்ச்சி ஏற்படுத்திட தங்கள் வாழ்வினை அர்ப்பணித்ததை உணர்ந்து கொள்கின்றனர்.

### துணைக்கருவிகள்

- திரு. நாராயணகுரு கட்டுரை.
- ஈ.வெ. ராமசாமிப் பெரியார்.
  வாழ்க்கை வரலாற்று கட்டுரை மாதிரி வடிவம்
- நாராயணகுரு கவிதை

| கற்றல் அடைவுகள் | மதிப்புகள் / மனப்பாங்குகள் |
|---|---|
| ❖ மறுமலர்ச்சி நாயகர்களைப் பற்றிய செய்திகள் சேகரிக்கிறார்கள். வரலாற்றுக் கட்டுரை எழுதுகிறார்கள். | மறுமலர்ச்சி நாயகர்களைப் போன்று தாமும் சமூகத்தில் சீர்திருத்தம் செய்திட வேண்டுமென்ற மனப்பான்மை . |

## பேச்சுப்போட்டி நடத்துதல்

சமூகச் சீர்திருத்தம் என்ற அலகில் உட்படுத்தப்பட்டுள்ள பல்வேறு பாடப்பகுதிகளை வாசித்தும் விவாதித்தும் குறிப்புகள் தயாரித்தும் பேச்சுப் போட்டிக்கான குறிப்புகளைத் தயார் செய்கின்றனர்.

கைலாஷ் சத்தியார்த்தியுடன் 84 ஆயிரம் குழந்தைகள் என்ற கட்டுரையை வாசித்தும், இன்றைய நிலையிலும் குழந்தைத் தொழிலாளர்களும், சமூக ஏற்றத் தாழ்வும் அவற்றை எதிர்த்தும் போராடுபவர்களும் உண்டு என்ற அறிவை மாணவர்கள் பெறச் செய்ய வேண்டும்.

வகுப்பில் பேசச் செய்து ஆர்வமுள்ளவர்களுக்குப் பயிற்சிகள் அளித்துப் பேச்சுப் போட்டியை நடத்த வேண்டும்.

பள்ளிக் கலை மன்றத்தில் பேச்சுப் போட்டி நடைபெறும் போது போட்டியில் இடம்பெறும் மாணவர்கள் மட்டுமல்லாது, வகுப்பில் உள்ள அனைத்து மாணவர்களையும் சொற்பொழிவைக் கேட்கச் செய்ய வேண்டும்.

சிறந்த பேச்சாளர்களை நடுவர்களாக அமர்த்த வேண்டும். அவர்களை உரையாற்றக் கேட்டுக் கொண்டு அதை மாணவர்களுக்கு ஒரு முன் மாதிரியாகப் பயன்படுத்தலாம்.

சமூகச் சீர்திருத்தம் என்ற அலகை ஒட்டியே பேச்சுப் போட்டியின் தலைப்பு வழங்கப்பட வேண்டும். முன்னரே தயார் செய்யாமல் போட்டி நடைபெறும் 5 அல்லது 10 நிமிடத்திற்க முன் தலைப்பு வழங்கப்பட வேண்டும். இவ்வாறு அளிப்பதன் மூலம் மாணவர்கள் இவ்வலகின் மூலம் உள்வாங்கிய கற்றல் அடைவுகளைக் கண்டறியலாம். வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கிப் பாராட்ட வேண்டும்.

## வளப்பகுதி

### சமத்துவம்

தெண்கடல் வளாகம் பொதுமை இன்றி
வெண்குடை நிழற்றிய ஒருமை யோற்கும்
நடுநாள் யாமத்தும் பகலும் துஞ்சான்
கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்
உண்பது நாழி; உடுப்பவை இரண்டே;
பிறவும் எல்லாம் ஓரொக் கும்மே;
செல்வத்துப் பயனே ஈதல்;
துய்ப்போம் எனினே தப்புந பலவே.

– நக்கீரர். புறநானூறு

வண்மை இல்லை ஓர் வறுமை இன்மையால்
திண்மை இல்லை நேர் செறுநர் இன்மையால்
உண்மை இல்லை பொய் உரைஇ லாமையால்
ஒண்மை இல்லை பல் கேள்வி ஓங்கலால்.

கல்லாது நிற்பார் பிறரின்மையிற் கல்வி முற்ற
வல்லாரு மில்லை யவைவல்லரல் லாரு மில்லை
எல்லாரு மெல்லாப் பெருஞ்செல்வமு மெய்தலாலே
வல்லாரு மில்லை யுடையார்களு மில்லை மாதோ

– கம்பராமாயணம். பாலகண்டம்

மாரிதான் சிலரை வரைந்து பெய்யுமோ
காற்றுங் சிலரை நீக்கி வீசுமோ
மானிலஞ் சுமக்க மாட்டே னென்னுமோ
கதிரோன் சிலரைக் காயே னென்னுமோ
வாழ்நான்கு சாதிக் குணவு நாட்டிலும்
கீழ்நான்கு சாதிக் குணவு காட்டிலுமோ
திருவும் வறுமையுஞ் செய்தவப் பேறும்
சாவதும் வேறிலை தரணி யோர்க்கே
குலமு மொன்றே குடியு மொன்றே
இறப்புமொன்றே பிறப்பு மொன்றே
வழிபடு தெய்வமு மொன்றே யாதலால்
முன்னோ ருரைத்த மொழி தவறாமல்
எந்நா ளாயினு மிரப்பவர்க் கிட்டுப்
புலையுங் கொலையும் களவுந் தவிர்ந்து
நிலைபெற வறத்தி னிற்பதை யறிந்து
ஆணும் பெண்ணு மல்லதை யுணர்ந்து
பேணி புரைப்பது பிழையெனப் படாது
சிறப்புஞ் சீலமு மல்லது
பிறப்பு நலந்தருமோ பேதை யீரே

- கபிலர் அகவல்

சங்கே முழங்கு
பழைய ஆலமரங்கள்
சாதியம் பேசிய காலமது
கடக்கட்டும்
புதிய விழுதுகள்
சமத்துவ சமுதாயம் படைக்கட்டுமென
சங்கே முழங்கு!

வறுமை கோட்டினை
உழைப்பு கணைத் தொடுத்து
உடைத்து நொறுக்குவோம்
உயர்ந்தவன் தாழ்ந்தவன்
உலகினில் இல்லையென உரக்க கூறுவோமென
சங்கே முழங்கு!

தீண்டாமைக் கொள்கையை
தீயிட்டுப் பொசுக்குவோம்
மேதினியில் பிறந்தார் எல்லாம்
மண்ணில் மைந்தர் என்று
வாய்விட்டு சொல்லுவோமென
சங்கே முழங்கு!

சீருடை அணிந்து, பாடசாலை சென்று
கல்வி அமுதம் பருகவல்ல சிறார்கள்
தொழிற்சாலை அக்னியில்
வாழ்வைச் சாம்பலாக்கும்
கொடுமை தவிர்ப்போமென
சங்கே முழங்கு!

திடமுடன் தீங்குகள் நீக்கி
மாந்தர் நேயம் போற்றி
பாங்குடன் பாரினைப் படைத்திடுவோம்
என சங்கே முழங்கு!

– கவிஞர். மரியதெரசா. சென்னை.

## தோள்சீலைப் போராட்டம்

அன்றையத் திருவிதாங்கூர் மாநிலத்தின் ஒரு பகுதியாக இன்றையக் குமரிமாவட்டம் இருந்தது என்பதை முன் னர் கண்டோம். சதுர் வருண வேறுபாடுகளை மிக அழுத்தமாகத் திருவிததாங்கூர் மன்னராட்சி நடைமுறைப்படுத்தி வந்தது. இதன் ஒர் அங்கமாக அடித்தள மக்கள் பிரிவைச் சேர்ந்த பெண்கள் இரவிக்கை அணிந்தோ. சேலை அணிந்தோ தம் மார்பை மறைக்கும் உரிமையற்றவர்களாயிருந்தனர். மேலும் தோள்சீலை அணியும் உரிமைப் பெற்றிருந்த நம்பூதிரி, நாயர் சமூகப் பெண்கள், உயர் பதவி வகிப்பவர்கள் முன் தம் மரியாதையைக் காட்டும் வழிமுறையாகத் தம் தோள்சீலையை அகற்றித் தம் மார்பைக் காட்டும் அவல நிலையும் நிலவியது. இதே காலத்தில் இப்பகுதியில் சீர்திருத்தக் கிறித்தவம் பரவத் தொடங்கியது. சமூக ஒடுக்குமுறைக்கு ஆளாகி வந்த அடித்தள மக்கள் பிரிவினரே பெருமளவில் சீர்திருத்தக் கிறித்தவத்தைத் தழுவினர். ஞாயிறு வழிபாட்டிற்குத் தேவாலயத்திற்கு வந்த புதிய கிறித்தவர்களில் ஒடுக்கப்பட்ட சமூகப் பிரிவைச் சேர்ந்த பெண்கள் அரை நிர்வா ணக் கோலத்தில் வந்தனர்.

இதைக் கண்டு திடுக்கிட்ட அய்ரோப்பியக் குருக்கள், ‘ சற்று கண்ணியமாக ஆடை அணிந்து வரக்கூடாதா?' என்றனர். மார்பை மறைக்கும் வகையில் ஆடையணியும் உரிமை தங்களுக்கில்லை என்று அப்பெண்கள் கூறினர்.

ஆங்கில அரசின் ரெசிடெண்டின் வாயிலாகக் கிறித்தவ மிஷனரிகள் திருவிதாங்கூர் மன்னரிடம் முறையிட்டு, முக்குவர் மற்றும் இஸ்லாமிய் பெண்களைப் போல் ‘ குப்பாயம்' என்ற பெயரிலான இரவிக்கை அணியும் உரி மையைப் பெற்றுத் தந்தனர். இதன் தொடர்ச்சியாக, குப்பாயத்தின் மேல், துண்டு அல்லது சிறிய துணியை மேலாடை போல் போடத் தொடங்கினர். இம்மோலாடையே ‘தோள் சீலை' எனப்பட்டது.

தோள்சீலை அணிவது அடித்தட்டு மக்களுக்கு மறுக்கப்பட்டிருந்தது. குப்பாயம் அணியும் உரிமையை மட்டுமே 1814 இல் வெளியிட்ட சுற்றறிக்கையின் வாயிலாகத் திருவிதாங்கூர் மன்னர் வழங்கியிருந்தார். இதன் அடிப்படை யில் தோள் சீலையை ஒடுக்கப்பட்ட சமூகப் பெண்கள் அணிவதை ஆதிக்கச் சாதியினர் எதிர்த்தனர். தோள் சீலை அணிவதை எதிர்த்து வன்முறைத் தாக்குதல்களைத் தொடுத்தனர். பெண்கள் அணிந்த தோள்சீலை பறிக் கப்பட்டு குப்பாயம் கிழிக்கப்பட்டது. தாலி அறுக்கப்பட்டது. கிறித்தவர்களான நாடார் சமூகத்தினர் இதை எதிர்த்து ஊக்கத்துடன் போராடினர். மத எல்லையைக் கடந்து இந்து நாடார்களும் இவர்களுடன் இணைந்து கொண்டனர். தொடர்ச்சியான போராட்டங்களின் விளைவாக 1859 ஜூலை 26 ஆம் நாள் திருவிதாங்கூர் அரசு வெளியிட்ட அறிக்கையின் வாயிலாக இந்து நாடார் சமூகப் பெண்களும் தம் மார்பை மறைக்கும் உரிமையைப் பெற்றனர்.

ஈழவச் சமூகப் பெண்களும் தொடர்ந்து போராடியதால் அனைத்துச் சமூகப் பெண்களும் தம் மார்பை ஆடை யால் மறைக்கும் உரிமையை வழங்கும் ஆணை 1865 இல் பிறப்பிக்கப்பட்டது.

1822 தொடங்கி 1865 முடிய உள்ள காலத்தில் மூன்று கட்டங்களாக நடந்த இப்போராட்டத்தில் நாடார் சமூகத்தி னர் முன் நின்றமையால் ‘ சாணார் லகளை' ( ரகளை) என்று திருவிதாங்கூர் அரசு தன் ஆவணங்களில் குறிப் பிட்டது. உண்மையில் இது ஒரு பண்பாட்டு அடையாளப் போராட்டமாகும்.

கிறித்தவ மிஷனரிகள் குப்பாயம் அணியும் உரிமையைக் கிறித்தவப் பெண்களுக்குப் பெற்றுக் கொடுத்ததுடன் நிறைவடைந்து விட்டனர். ஆனால் குப்பாயத்துடன் நிறைவடையாத நாடார்கள் ‘ தோள் சீலை' அணியும் உரி மையைப் பெறப் போராடி பல துன்பங்களை எதிர்கொண்டனர். இறுதியில் இந்து. கிறித்தவர், நாடார், நாடாரால் லாதவர் என்ற வேறுபாடுகளைத் தாண்டி அடித்தள மக்கள் பிரிவைச் சார்ந்த பெண்கள் அனைவருக்கும் கண் ணியமான முறையில் மேலாடை அணியும் உரிமையை இப்போராட்டம் பெற்றுத் தந்தது.

தோள் சீலை அணிவது தொடர்பான தடை குமரிமாவட்டத்தின் வளமான நன்செய் நிலப்பகுதியான அகஸ்தீஸ் வரம், தோவாளை வட்டங்களில் சொத்துரிமையுடன் வாழ்ந்த நாடார்களுக்கு இல்லை. குமரிமாவட்டத்தில் வாழ்ந்த பல்வேறு சாதியினர் மீதும் இத்தடை விதிக்கப்பட்டிருந்தது. தோள் சீலைப் போராட்டத்தில் இம்மாவட்டத்தின் மேற்குப் பகுதியில் வாழ்ந்த நாடார் சாதியினர் மட்டுமே தோள்சீலை அணியும் உரிமையற்றவர்களாக இருந்த

னர் என்ற தவறான கருத்துள்ளது.

ஆதிக்க வகுப்பினருக்கு எதிராக வைகுண்டசாமி உருவாக்கிய எதிர்க்குரல் ஓர் உந்து சக்தியாக இப்போராட்டத் திற்குத் துணை நின்றது.

## சுயமரியாதை இயக்கம்

ஈ. வே. ராமசாமிப் பெரியாரால் தொடங்கப்பட்ட இவ்வியக்கம் சமூக சீர்திருத்தக் கருத்துக்களுக்கான முதல் இயக்கமாகும். இதற்கு முன் வட்டார அல்லது சாதிய. சமய எல்லைக்குள் நிகழ்ந்து கொண்டிருந்த சீர்திருத்த இயக்கங்கள் தமிழகம் முழுவதிலும் குறிப்பிட்டு சொல்லுமளவுக்குத் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. இக்குறையை சுயமரியாதை இயக்கம் ஈடுசெய்தது.

மனித சமூகத்தில் இருந்து வரும் தீண்டாமையையும் பிறவி காரணமாக உள்ள வேறுபாட்டுக் கொடுமைகளை யும் மூடநம்பிக்கைகளையும் அடியோடு ஒழித்துவிட வேண்டும்.

அரசியல் உத்தியோகங்கள், இந்த மாகாணத்தில் உள்ள எல்லா வகுப்பாளர்களுக்கும் அவரவர்கள் ஜனத்தொ கைக்குத் தக்கபடிச் செய்ய வேண்டும்.

மத எதிர்ப்பு, பிராமணிய எதிர்ப்பு. இந்தி எதிர்ப்பு, சொத்தில் பெண்களுக்கு உரிமை வழங்கல், தேவதாசி முறை யொழிப்பு என்பன தொடர்பான கருத்துகள் இவ்வியக்கத்தால் முன் வைக்கப்பட்டன. தொடக்கத்தில் சிங்காரவேல ரின் தொடர்பால் பொதுவுடைமைக் கருத்துகளை ஏற்றுக்கொள்ளும் அமைப்பாக இவ்வியக்கம் காட்சியளித்தது. ஆனால் சிங்காரவேலர் முன்வைத்த செயல்திட்டங்களை ஏற்றுக்கொள்ள மறுத்ததும் 1934 இல் நீதிக்கட்சி வேட் பாளர்களுக்கு ஆதரவு அளித்ததும் சோசலிச சிந்தனையிலிருந்து இவ்வியக்கம் விலகிச் செல்வதை வெளிப்ப டுத்தின.

சாதி. சமயம் என்ற எல்லைகளைத் தாண்டி நின்று பெரியாரும். சிங்காரவேலரும் சமூக சீர்திருத்தம் பேசினர். மத நம்பிக்கை, மூடநம்பிக்கை, பெண்ணடிமை என்பவற்றிற்கு எதிராகக் குரல் எழுப்பினர். பண்பாட்டுத் தளத்தில் நின்று மட்டுமே சமூக சீர்திருத்தத்தை நடைமுறைப்படுத்த முடியாது என்பதை இருவரும் உணர்ந்து பொருளா தார ஏற்றத்தாழ்வுகளுக்கு எதிராகவும் குரல் கொடுத்தனர். ஒரு கட்டத்திற்கு மேல், மிட்டா மிராசுகளின் கூடார மாக விளங்கிய நீதிக்கட்சியுடன் இணைந்து கொண்ட பின், சமூக சீர்திருத்தம் மட்டுமே பெரியாரால் முன்னி லைப்படுத்தப்பட்டது.

# மதிப்பீட்டுச் செயல்பாடுகள்

## அடைவு

**படைப்பிலக்கியங்கள் காட்டும் ஒடுக்கப்பட்டவர்களின் அவலநிலையினை விவாதிக்கிறார்கள். விமர்சனக் கட்டுரை எழுதுகிறார்கள்.**

### ஒரு மதிப்பெண்

1. குழந்தை வேலைக்கு எதிராகப் போராடி நோபால் பரிசு பெற்ற இந்தியர்------------
2. சான்றோரை அவருக்குத் தொடப்புடைய பணியோடு பொருத்துக.

| சான்றோர் | பணி |
|---|---|
| நாராயணகுரு | அகிம்சைப் போர் |
| ஈ.வோரா | அகிம்சைப் போர் |
| அய்யங்காளி | அகிம்சைப் போர் |
| காந்திஜி | வைக்கம் போராட்டம் |

3. மருமக்கள் தாயமுறை பின்பற்றிய அரச பரம்பரை

அ) எட்டு வீட்டுப் பிள்ளைமார் ஆ) திருவிதாங்கூர் மன்னர்கள்

இ) சோழமன்னர்கள் ஈ) பாண்டிய மன்னர்கள்.

4. கவிமணி எழுதிய நாள்

அ) குயில்பாட்டு ஆ) குடும்ப விளக்கு

இ) வெட்டவெளிச்சம் ஈ) மருமார்கள் வழிமான்மியம்

### மூன்று மதிப்பெண்

5. படத்தொகுப்பு வெளியிட விரும்பும் நீங்கள் அய்யங்காளியின் புகைப்படத்திற்கான விளக்கக் குறிப்பு ஒன்றை எழுதுங்கள்.
6. ஏற்றத்தாழ்வு இல்லாத சமூகம் உருவாக உவமைக் கவிஞர் சுரதா உணர்த்துவதைப் பட்டியலிடுங்கள்.
7. ‘ கைமுக்கு’ என்னும் தண்டனை குறித்தான உங்கள் கருத்தினை சமூகப் பார்வையுடன் குறிப்பாக எழுதுங்கள்.

### ஐந்து மதிப்பெண்

8. ‘ இருட்டறையில் உள்ளதடா உலகம்’ பள்ளிக்கலை விழாவில் பேசிட மூடநம்பிக்கைகளுக்கு எதிரான சொற்பொழிவு உரை தயார் செய்யுங்கள்.
9. “நமது நாட்டில் இன்னும் சாதிவெறி ஓயவில்லை
என் சாதி உயர்ந்த சாதி இழிந்த சாதி
என்று சொல நாவுமெழாதிருக்க வேண்டும்” எனும் கருத்து வெளிப்படும் பத்திரிகை தலையங்கம் ஒன்றை எழுதுங்கள்.

### எட்டு மதிப்பெண்

10. “புதியதோர் உலகம் செய்வோம்” என்ற தலைப்பில் சாதி, மொழி, இனம் கடந்த உலகம் வேண்டும் என்னும் கருத்து வெளிப்படும் கவிதை ஒன்றை எழுதுங்கள்.
11. சமூகச் சீர்திருத்தச் செம்மல்கள் என்ற நூலில் வெளியிட திரு. நாராயண குரு அவர்களின் வாழ்க்கைக் குறிப்பினைக் கட்டுரையாக எழுதுங்கள்.

## அடைவு

**வாழ்த்கை விழுமியங்களைப் பாராட்டுகிறார்கள்.**

1. வைக்கம் சத்தியாகிரகப் போராட்டம் எதற்காக நடந்தது.
   அ) தாழ்த்தப்பட்டவர்கள் கோவிலில் நுழைவதற்கு ஆ) அரசியல் மாற்றம்
   இ) தொழிலாளர் போராட்டம் ஈ) இளைஞர்கள் மேம்பாட்டுப் போராட்டம்.
2. கேரளச் சமூகத் சீர்திருத்தவாதி
   அ) நாராயணகுரு ஆ) முகம்மது பஷீர்
   இ) நம்பூதிரிப்பாடு ஈ) பிரேம் நசீர்
3. பாரதி தாசனின் வழி
   அ) இருட்டறையில் உள்ளதாடா உலகம் ஆ) நெஞ்சு பொருக்கவில்லையே
   இ) ...................... ஈ) ......................
4. உங்களுடைய செயல்கள் அனைத்தும் நல்லவைகள் தாம். நானும் உங்களைப் போன்ற ஒரு செயல்வீரனே என்று காந்திஜி குறிப்பிட்ட ஒடுக்கப்பட்டோருக்காகப் போராடிய அந்த நபர் யார்?
   அ) நாராயணகுரு ஆ) அய்யங்காளி
   இ) அய்யா வைகுண்டர் ஈ) சட்டம்பி சுவாமிகள்
5. வாழ்க்கை விழுமியங்கள் கூறும் திருக்குறளைத் தமிழிலிருந்து மலையாளத்திற்கு மொழிபெயர்த்த சமூகச் சீர்திருத்தவாதி
   (அ) குமாரன் ஆசான் (ஆ) அய்யங்காளி
   (இ) நாராயண குரு (ஈ) சட்டம்பி சுவாமிகள்

### மூன்று மதிப்பெண்

6. ஒடுக்கப்பட்டவர்களின் அவலநிலையை உணர்த்தும் முறையில் அமைந்த ஒரு கவிதை எழுதுக.
7. ஏற்றத்தாழ்வு இல்லாத சமுதாயம் உருவாகக் கவிஞர் சுரதா கூறும் கருத்துக்களை அறிக்கையாக எழுதுக.
8. பண்டைய கேரளத்தில் சாதிமத அடிப்படையில் தண்டனை அளிக்கப்பட்டது என்பதை வலியுறுத்தும் பெட்டிச் செய்தி ஒன்றை எழுதுக.

### ஐந்து மதிப்பெண்

9. 'கூகை' கதை உணர்த்தும் ஒடுக்கப்பட்டவர்களின் அவலநிலை குறித்து சிறுகட்டுரை எழுதுக.
10. சமுதாயம் மேம்பாடு அடைய உனது அறிவுரைகள் சிலவற்றை பெட்டிச் செய்தியாகக் கூறுக.
11. "திருப்படித்தானம்" பற்றி பெட்டிச் செய்தி ஒன்று எழுதுக.

### எட்டு மதிப்பெண்

12 திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கத்தில் நடைபெறவிருக்கும் கருத்தரங்கத்தில் பங்கேற்கக் கவிமணியின் கவிதை சுட்டிக் காட்டும் சமூகச் சீர்கேடுகள் என்ற தலைப்பில் சொற்பொழிவு உரை தயார் செய்க.
13. 'சமூக ஏற்றத்தாழ்வுகளும் அவற்றை நீக்குவதற்கான தீர்வுகளும்' என்ற தலைப்பில் திறனாய்வுக் கட்டுரையொன்று தயாரிக்கவும்.